உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தோபா சுவாமிகள் புராண வசனம்

இது

வேத மொழிபெயர்ப்பாசிரியர்

**கா. சிவாநந்த யதீந்ர சுவாமிகளால்**

அருளிச்செய்யப் பெற்று

வடஆற்காடு ஜில்லா வேலூர்

ஐக்ய சங்கங்களின் டிப்டி ரிஜிஸ்தரார்

உயர்திரு. நாராயணசாமி முதலியார் அவர்களின்

நன் முயற்சியால்

வேலூர், தோபாசுவாமிகள் மடாலயத்தலைவர்

சுப்பிரமணிய சுவாமிகளால் பதிப்பிக்கப்பட்டது


குமரன் அச்சு நிலையம்

காஞ்சீபுரம்

1937

காபிரைட் ] [விலை அணா 12.

LIBRARY
MADRAS-1
சென்னை-1,




ஸ்ரீ தோபா சுவாமிகள்.
வேலூர்.

# முன்னுரை

உலகங்கள் கடந்துபழ மறையாக மங்களுமே யுணராதாகி
கலகஞ்செய் சமயங்கள் கண்டறியாக் காட்சியாய்க் கருணையாகி
இலகுஞ்சின் மயமென்னும் எம்மிறைவ னிருந்தருளு மிடமேதென்னின்
பலவுஞ்சொல் சமரசத்தைப் பருதமடி யவரிதயம் பருத்துக்காண்பீர்

ஆன்ம நேயர்காள்!

கடவுள் ஒருவர் உள்ளார் என்று கணக்கற்ற நூல்கள் கதறுகின்றன. பிணக்கற்ற பெரியார்களும் பேசுகின்றனர். பிணக்குற்ற சிறியார்களுங் கூறுகின்றனர். உய்த்து நோக்குழி, கடவுளில்லை யென்னும், நூல்களும், சமயங்களும், பெரியார்களும் யாண்டும் இல்லை என்பது துணிபாம்.

அங்ஙனமாயினும், நாம் அக் கடவுளை உண்மையாய்க் கண்டபாடில்லை. இதனால், கடவுளை இல்லை யென்பதற்கும் நமது கருத்து இசையவில்லை. என்னை? எனக்கு நாவில்லை யென்பதுபோன்று, கடவுள் இல்லை யென்னும் வழக்கே கடவுளுண்மையைச் சாதிப்பதாமாதலினென்க.

ஆலயங்களிலாவது கடவுளைத் தேடிக்கண்டுகொள்ளலாமெனிலோ, மனத்தையே கோளாகக் கொண்டாலன்றி திருக்கோயிலினுள்ளிருக்குந் திருமேனி, தெய்வமாகத் தோன்றவில்லை. அல்லது ஒருவாறு தேடினும் மனத்தின் கண்ணேயே தெய்வ வுண்மை திகழத் தோன்றுகின்றது. ஆதலின், இல்லத்தினுள் வைத்து மறந்த பொருளை, பிறருடைய மனை முதலான விடங்களில் தேடி வேசற்று முடிவில் நமது உள்ளத்திலுதித்தபின் கண்டுகொள்ளுமாறு

தெய்வத்தையும், ஆலயங்கள் முதலான புறவிடங்களில் தேடிக்களைத்து முடிவில் இமைப்பொழுதும் நெஞ்சினின்று நீங்காத கடவுளைக் காணல் வேண்டுமென்பது யாண்டும் யாவர்க்கும் ஒப்பமுடிந்த இரகசியப் பொருளாம்.

• இக் கருத்தையே தெய்வத் திருவருண் மறையதும்

"தேடித் தேடொண்ணுத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்று திகழக் கூறியருளுகின்றது.

அங்ஙனமே, கடவுளைக் கண்ட அடியார் கூட்டத்தைக் கண்டு அன்போடு, இது முத்திநெறி யென்று கொண்டு, வழிபடினும், அவர்கள் காட்டியது, மலமாக நீங்கிய மனத் தார்க்கன்றி இனிது புலப்படாது. புலப்படுதற்குரிய மலநீக்கமே அடியார் கூட்டப் பயனுமென்பது மொன்று. ஆனல், மல நீக்கத்திற்குப் பலதிறப்பட்ட வழிகள் இருக்கினும், அவற்றுள் கடவுளை யறிதற்குச் சிறந்த கருவி நல்லாரிணக்கம் என்பதிற் றடையில்லை.

இதையே,

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

எனவும்,

"அடியார் கூட்டங் காட்டாயேற் செத்தே போவாற் சிரியாரோ"

'நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும்' எனவும், உண்மை நூல்களுங் கூறுகின்றன. சித்துருவாகிய சிவ பெருமான் இனிது எழுந்தருளுமிடம் உண்மைத் தொண்டர்களின் உள்ளமேயாம் என்பது யாண்டும் ஒப்ப முடிந்

தது. என்னை? தெய்வங்களைப் பற்றிய சமயச் சண்டையிடு வாரும், உண்மைப் பெரியாரெனின், அதை விட்டு, அவரை வழி படுகின்றன ராதலினென்க.

அற்றாகலினன்றே உண்மை நூல்களும்
'உள்ளம் பெருங்கோவில்'
'தொண்டருள்ளத் தடக்கம்'
'உள்ளக் குகையில் ஒளித்தான் பரன்'
'ஆய்ந்துவிட் டோரில்லினு மீசனிருக்குமிடம்'
என்னும் தொடக்கத்து மந்திர மொழிகளால் இதை இனிது விளக்குகின்றன.

ஈண்டு, பெரியாரின் வழிபாட்டால் ஆசிரியரை யடைந்தாலன்றி உண்மைநிலை கை கூடாதென்பது திண்ணம். தான் ஒருவாறு கற்றுக் கேட்டு உணர்ந்திருந்த போதிலும் அது பயன் தராதென்பது எல்லா நூல்களின் கருத்தாம். என்னை? கடலைப்போன்று கடவுளிருந்தருளு கின்ற ரெனினும், மேகம் போன்று ஆசிரியரில்லா ரெனின், பயன்படா ரென்பது கண்கூடாமாதலினென்க.

இதையே, ஆயுமாறு ஆய்ந்து ஏயுமாறு இன்பஞான நிட்டையை யெய்ந்த தாயுமானாரும்,

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும்'' என்று, தமது சிவானந்தத்தெள்ளமுதம் ஒழுகும் அநுபவத் திருவாக்கால் அறைந்தருளி யுள்ளார்.

இவ்வாற்றால், நமது நாடு, சித்தர்கள், அறுபத்து மூன்று நாயன்மார்கள், மற்றுமுள்ள சமய சன்மார்க்கர்கள், சமயாதீதச் சுத்தமார்க்கிகள் முதலான எண்ணிறந்த பெரியார்

களின் பெருமை அருமைகளை அடிப்படையாகக் கொண்டே நாளிதுவரை ஒருவாறு பெருமை பெற்று விளங்கி வருகின்றது. இதை, இப்போது, பர்மா முதலான பிற நாட்டிற் காணலாம். இதனாலன்றே நமது மக்களும் நாளிது வரையிலும் பெரியாரைப் போற்றல் வேண்டும் என்னும் நினைவையேனும் மறக்காதிருக்கின்றனர். என்பதையுய்த்துணர்க.

எவ்வாற்றானும் பிறரைப் பழித்தல், மிகுந்த பாதகம் என்று கூறப்படுமாயின் பெரியாரைப் பழித்தலைப்பற்றி யான் சொல்லற்பால தென்னை? ஒன்றுமில்லை.

> புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
> அறங்கூறு மாக்கந் தரும்.

என்ற நமது தமிழ் வேத விதியின்படி பெரியாரைப் பழித்துப் பெருங் கேடடையாது வாழ்த்தி வளமெலா மடைந்து உய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தோபா சுவாமிகளின் பெருமை, இந் நூலை நோக்குவார்க்கே இனிது விளங்கும்.

இனி, தோபா சுவாமிகளின் மடாலயத்தின் தலைமை பூண்டு அம் மடாலயத்தை வளர்த்துவருகின்ற உயர் திரு. சுப்ரமண்ய சுவாமிகள் என்னைக் கேட்டுக் கொண்டதற் கிசைந்து முன்னர், உயர் திருவாளர் பானுகவியவர்கள் செய்துள்ள தோபா சுவாமிகளின் சரித்திரச் சுருக்கத்தையும், மற்றும் பெரியார்களின் உண்மை வாக்குகளையுந் தழுவி இந் நூலை ஒருவாறு எழுதி முடித்தேன்.

மற்றும், பானுகவியவர்கள் செய்துள்ள சரித்திரச் சுருக்கச் செய்யுளையும், தமிழ்ப் புலவர் வீரபத்திர பிள்ளையவர்

கள் செய்த தோபா சுவாமிகளின் ஞான நாயக மாலையையும் இத்துடன் சேர்த்திருக்கின்றேன்.

நிற்க, இந் நூலை இவ்வாறு எழுதி முடித்து அச்சிடு மாறு எனக்கு மனவெழுச்சியை யுண்டாக்கிய உயர் திரு வாளர், தோபா சுவாமிகள் மாடாலயத் தலைவர்க்கு அன் பர்கள் நன்றி பாராட்டுவார்களாக.


மற்றும், இந்நூலை எழுதி அச்சிடுவதற்குத் தூண்டு கோலாயிருந்து வந்த, சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடாதிபதி, பரஞ்சோதி சுவாமிகளின் மாணவர் விசுவ நாதய்யர் அவர்கட்கும் தோபாசுவாமிகள் அருள் புரிவாராக.

இவ்வாறு, இந்நூலை அச்சிடுவதற்குப் பலவகையானும் உதவிபுரிந்த, ஐக்கிய சங்கங்களின் வட ஆற்காடு ஜில்லா டிபுடி ரிஜிஸ்திரார் உயர்திரு. கீ நாராயணசாமி முதலியாரவர் களுக்கு எல்லா நலங்களையும் இறைவனருள் புரிவானாக.

இதை அச்சிடுவதற்கு பொருளுதவி புரிந்த அன்பர் கட்கும் தோபாசுவாமிகள் எல்லா நலங்களையும் அளித் தருள்வாராக.

வேத மொழிபெயர்ப் பாசிரியர்,
கா. சிவானந்தயதீந்திரர்.





ஸ்ரீலஸ்ரீ. காசிவாசி. சிவானந்த யதீந்திர சுவாமிகள்
(வேதமொழி பெயர்ப்பாசிரியராகிய இந்நூலாசிரியர்.

# பதிப்புரை

இறைவன் அருளுருவத்தோற்றம் இவ்வவனி. இந் நிலத்தே பல வேறு மக்கட்டொகுதியும், மக்கட்கு ஆக்கந் தருவனவாய உயிர்களும் எண்ணற்றனவாய் இயங்கு கின்றன. அவைகளுள் மக்களென மதித்தற் குரியவர் புலனுணர்வோடு நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் வாய்க்கப்பெற்றவர்களே யாவர். இவர்கள்தான் உயர்ந்தவ ரென உற்றுநோக்கற் பாலர். 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தொல்காப்பியரது நல்மொழி. ஆதலின் இத்தகையபெரியார்கள் நம்வடவேங்கடந்தென்குமரியிடைப் புகழுடன் பொங்கிக்கிடக்கும் தண்டமிழ் நாட்டகத்தே பலர் இருந்திருக்கின்றனர். அவர்களது உள்ளத்திலே தான் ஆண்டவன் கோயில் கொண்டுள்ளான். 'இறைவன் தொண்டருள்ளத் தொடுக்கம்' என்பது பொன்மொழி. 'வணங்கத் தலைவைத்து வாய் கழல்கள் வாழ்த்த வைத்து, இணங்கத் தன்னடியார் கூட்டமும் வைத்த' இறைவனது உண்மை அன்புருவங்களாய் அடியவர்களைக் கண்டு, வணங்கி, வாழ்த்தி நிற்றல் வேண்டும். இதுவே உண்மை மக்களது உறுதிபயக்கும் கடனாகும்.

மேன்மை வாய்ந்த பெரியோர்களது சரிதங்களை நாம் அறிந்து கொள்வதற்கு ஏற்ற சாதனங்கள் மிகச்சிலவே நம்மிடை நிலவுகின்றன. காட்சி அளவையும், கலை அளவை யும் அம்மிகச் சிலவற்றையும் மேன்மையுறச் செய்வனவாம். காட்சியளவை ஒத்த காலத்துள்ளவர்களிடத்தே பெறப்படு வது. ஆயின் நமக்கு முன்னிருந்து சென்ற ஆன்றோர்

நற் செயல்களும் பொற்பணிகளும் தெற்றென விளங்க வேண்டின் கலைகளே சிறந்தனவாகும். அவ்வாறாய கலைகள் நம்மிடை மிகச்சிலவே உள்ளன. எனவே, நம்நாட்டகத்தே மெய்யடியாராய் மேன்மையாய் வாழ்ந்தவர்களது உண்மைச் சரித்திரம் நன்கறியப் படாமையே சிறப்பாக நம் தமிழ் நாடும் பொதுவாக பாரத நாடும் பிற்போக்கான நிலையில் இருப்பதற்குக் காரணமாகும். இதை உன்னியே சிவஞானம் பெற்றவரும் பெரிய சித்தருமாய் விளங்கிய பெரியாராகிய மகான் தோபா சுவாமிகளுடைய வரலாற்றை யாம் ஒரு நல்லாசிரியரைக் கொண்டு எழுதுவிக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாக எதிர் பார்த்திருந்த எமக்கு இறைவன் திருவருள் கூட்டுவிக்க, வடமொழி தென்மொழிகளில் மிக வல்லுநரும் பல அறிஞர்களாலும் வியாசர் என்று போற்றப்படுபவரும், இதுவரையிலும் தமிழ் மக்களால் நன்கறியப்படாத வேதங்களையும் உபநிடதங்களையும் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தருளிய பெருங்கருணையாளரும், தமிழில் செய்யுளாகவும் உரை நடையாகவும் அநேக நூல்கள் அருளிச் செய்தவரும், தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற ஒப்பற்ற கொள்கையை யுடையவரும், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை யுடையவரும் ஆகிய வேதமொழி பெயர்ப்பாசிரியர் காசிவாசி உயர்திரு.சிவானந்தயதீந்திர சுவாமிகள் யான் வேண்டியதற்கு மறுக்காது தமது வேதமொழி பெயர்ப்புப் பணியுடன் இதனையும் ஒரு பணியாகக் கருதி தோபா சுவாமிகள் சரித்திரத்தை, தமிழ் மக்கள் எளிதில் அறிந்துய்யுமாறு இனிய தமிழ் வசன நடையில் சொற்சுவை பொருட்சுவை நிரம்பவிரித்து, அநேக அரிய ஆராய்ச்சியுடனும் மேற்கோள்களுடனும் அழகாக எழுதியருளினார்கள். அன்னார்க்கு இவ்வுலகம்செய்யக்கூடியகைம்மாறுயாதொன்று

மிலது. அன்னவர்கட்கு என் நன்றியையும், வணக்கத்தை யும் உரிமையாக்கி விடுகின்றேன்.

இனி, இந்நூல் வெளிவருவதற்குப் பல்வேறு வழி களாலும் பேராதரவு புரிந்தவரும், கல்வி, அறிவு ஒழுக்கங்க ளில் சிறந்தவரும், திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்ற திருவிற்கோலமென்னும் கூவம் கீழச்சேரியை உறை விட மாகக்கொண்டவரும், வடாற்காடு ஜில்லா ஐக்கிய சங்கங் களின் டெபுடி ரிஜிஸ்தராரும், சித்தாந்த நூல்களிற் பதிந்த கருத்துடையவரும், திருவிற்கோலத்துறையுந் தீண்டாத் திருமேனிப் பரமனின் பதமலர்களை மறந்தறியாத உள்ளத் தவருமான உயர் திரு. கீ. நாராயணசாமி முதலியாரவர்களின் பேரன்பு என்றும் மறக்கற்பால தன்றும். அன்னார் எல்லா நலமும் பெற்று மேன்மேலோங்க மண்ணும் விண்ணும் ஆக்கிய பண்ணவன் மலரடிப்பரவுதும்.

இந்நூல் எழுதி, அச்சிட்டு வெளிவந்ததற்கு முதற் காரணமாயிருந்தவர், சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்தில் மூன்றாவது பட்டத்து ஆசிரியராக எழுந் தருளியிருந்து மேற்படி மடாலயத்தைத் தமது ஆற்றலால் மேன்மேலும் மிளிரச் செய்தவரும் தமிழ், நாட்டினருக்கும் தமிழ் மக்களுக்கும் அனேக அரும்பெரும் பணிகளைச் செய்தவரும், தேசப்பணியே தெய்வப் பணியாகக்கொண்ட வரும், பெரும் தியாக மூர்த்தியுமாகிய ஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகளின் பிரதம மாணவரும், சிற்சபை பொலியத் திரு நடம் புரியும் அற்புதக் கூத்தனின் அடியிணை மறவாதவரு மாகிய திருமிகு. விஸ்வநாத சுவாமி அவர்கட்கும் எனது நன்றி உரியதாகும்.

இவ்வாறு எழுதி அளித்த பெருநூலை விரைவாகவும், விளக்கமாகவும், கண்ட அளவிலேயே யாவரும் கருதத்தக்க நன்னூலெனை மதிக்குமாறு கண்கவர் வனப்புடையதாகச் செய்து உலகுக்கு உதவிய பெரியார் கச்சிப்பதிமினிர் குமரன் அச்சக உரிமையாளர் திருமிகு த. குப்புசாமி முதலியார் அவர்கள் ஆவார்கள். தமிழன்னையின் நற்பணியில் ஈடுபட்டிருக்கும் இப் பெரியார் பலவளங்களுமுற்றுவாழப் பண்ணவனை வேண்டுகின்றேன்.

இந்நூல் அச்சிடுவதற்குப் பொருளுதவி புரிந்த கீழ்க் கண்டவர் முதலிய பல அன்பர்களுக்கும் எல்லா நலங்களையும் அருளுமாறு தோபா சுவாமிகள் திருவருளை வழுத்துகின்றேன்.

பொருளுதவியாளர்களின் பெயர்.

திருவாளர்கள், மண்டி வேலூர். வெ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்,

தே. கன்னியப்ப முதலியார் அவர்கள், பசுமாத்தூர்,

தே. சின்னப்ப முதலியார் அவர்கள், பசுமாத்தூர்,

இரத்தின முதலியார் அவர்கள், பசுமாத்தூர்.

பிரம்மஸ்ரீ கோ. கிருஷ்ணய்யர், அவர்கள், B. A., போலீஸ் தமிழ் சுருக்கெழுத்தாளர், வேலூர்,

S. M. சுப்புராய செட்டியார் அவர்கள், களம்பூர்

K. C. அண்ணாமலை செட்டியார் அவர்கள், களம்பூர்.

திருவண்ணாமலை, ஜில்லா போர்டு மெம்பர்.

K. S. இராமநாதன் செட்டியார் அவர்கள், களம்பூர்

சங்கரைய நாயுடு அவர்கள், காக்கூர்.

ஜவுளி வியாபாரம், விருப்பாக்ஷி

மு. குப்புசுவாமி முதலியார் அவர்கள், சத்துவாச்சாரி.

விருப்பாக்ஷி நா. சொக்கலிங்க முதலியார் அவர்கள்,

சத்துவாச்சாரி

தி. கா. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், ஜவுளி வியாபாரம், சத்துவாச்சாரி.

சா. நா. சா. மெ. சா. அழகப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி,

வே. பா. கமலநாத முதலியார் அவர்கள், ரோஸ்ராஜேடஜ் வேப்பேரி, சென்னை.

ஆர். கிருஷ்ணசாமி நாயுடுகாரு அவர்கள், B. A. துபாஷ் சௌத்இண்டியன் எக்ஸ்போர்ட் கம்பெனி, 11, செல்ல முத்து சந்து, மண்ணடி, சென்னை.

கா. அ. சண்முக முதலியாரவர்கள், M. L. A. திருப்பத்தூர்.

சி. மு. சு. ஆறுமுகஞ் செட்டியார் அவர்கள், திருப்பத்தூர்.

ஸ்ரீமத். ஸ்வாமி திருவேங்கடாநந்தர், திருவேங்கடாநந்தர் ஆஸ்ரமம், வேலூர்.

வைத்தியம், அப்பாத்துரைப் பண்டிதர் அவர்கள், வேலூர்.

ப. வெ. அ. இராசுச்செட்டியார், அவர்கள், மண்டி, வேலூர்.

யோகாநந்த ஆஸ்ரமத்தார் அவர்கள், வெள்ளக்குட்டை.

திருமலச்சேரி. டி. ஆர். இராஜபாத முதலியார் அவர்கள்.

செம்பிராய நல்லூர். S. R. மாணிக்க முதலியார் அவர்கள்.

வடநாங்கூர் ராவ்பகதூர் V. A. அருணசல முதலியார் அவர்கள்.

வா. மார்க்கண்டேய செட்டியாரவர்கள், வந்தவாசி

இந்நூல் இனிது முற்றுப் பெற்று வெளி வருமாறு செய்து எமது கருத்தை முற்றுவித்தருளிய திருவருளை இறைஞ்சுகின்றனம்.

இங்ஙனம்

இராயவேலூர்
தாது வருஷம் மாசிமீ

சுப்ரமண்ய சுவாமிகள்
தோபா சுவாமிகள் மடாலயத் தலைவர்.

இராயவேலூர்
ஊர்ஹிஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்
சிறைச்சாலை உபந்நியாசகரும் ஆகிய
திருவாளர்

**சிதம்பரம். இராஜாப்பிள்ளை**

அவர்கள் இயற்றிய

# சிறப்புப் பாயிரம்

---

அறுசீர்விருத்தம்

நிலமகளுக் கணிதிலக மெனநிலவுந் தமிழகத்தே
நிலவிச் சான்றோர்
பலர்புகழு மன்றக்காடென் றுயரியசீர்ப் பதிசார்ந்த
ஆயக் காரம்
புலமென்னு நற்பதிசெய் புண்ணியத்தா லக்நகர்வாழ்
சாமித் தேவன்
நலமலியும் மதுரம்மாள் எனுமிவர்கள் நன்குபுரி
தவத்தால் வந்தோன் (1)

வடமொழியுந் தென்மொழியும் வகையுறவே கற்றுணர்ந்த
வாய்மை யாளன்
நடமலியுந் திருத்தில்லை நடராஜன் இணையடியே
நாளும் போற்றுந்
திடமுடைய செம்மனத்தான் சிவானந்த யோகியெனச்
சிறந்த பேரான்
அடல்மிகுந்த வேல்தாங்கும் அறுமுகவன் திருவடியை
அகத்துட் கொண்டோன் (2)


நாவலர்கள் மிகப்பரவு நால்வேத மொழியனைத்து
நன்கு கற்றுத்
தேவமொழி யெனப்புகழு மம்மொழியைத் தெள்ளுதமிழ்
மொழியி லாக்கிப்
பாவலர்கள் புகழ்ராம சாமியெனும் வள்ளலைக்கொண்
டச்சி யற்றி
யாவருக்கும் நன்கொடையா ஈதலெனச் செய்திட்ட
இசைவல் லோனை (3)
மருவுபுகழ்த் திருவொற்றி யூர்ச்சரிதம் மாவளஞ்சேர்
சென்னை யென்னும்
பெருமைபெறு நகர்சார்ந்த வியாசபாடி பிறங்கிடவே
வாழ்ந்த சீலன்
தருவனைய தன்கரமே பாத்திரமாக் கொண்டசிவப்
பிரகாசப் பேர்ப்
பெருங்குரவ னற்சரிதம் பேசுதமி ழின்வசன
நூலாச் செய்தோன் (4)
ஒருவருக்கு முணர்வரிய உபநிடதப் பொருளனைத்தும்
உலகம் போற்றும்
பெருமைபெறு தமிழ்மொழியிற் பெயர்த்திட்ட பேராளன்
பெரியோர் வாழும்
உரிமைமிகு கோவிலூர் வீரதேசி கன்புராண
முரைத்தோன் உண்மைத்
தருமமிகு காசிநகர்ப் பல்லாண்டு வதிந்துணர்ந்த
தகைமை யாளன் (5)
வெல்லரிய புகழ்ச்சென்னை நகரதனிற் பல்லோரும்
வியக்க வாழ்ந்து
நல்லோர்கள் மலிவேலை நகர்க்கோயில் கொண்டருளி
நாடி வந்த

எல்லோர்க்கும் பெருங்கருணை புரிகின்ற எம்பெருமான்
தோப்பா வென்று
சொல்லுதலா லப்பெயரே தன்பெயராக் கொண்டமைந்த
தூய்மை யாளன் (6)

நலமிருந்த கதையெல்லாம் வகுத்தமைத்தோர் நன்னூலாத்
தருக வென்றே
இலகுபுகழ் நல்தோப்பா சாமிமல ரடியிணையை
யினிது போற்றி
வலம்பெறுசுப் பிரமணியப் பேர்முனிவன் தன்னகத்தே
வந்தோர்க் கின்பம்
குலவுமொழி முகமலர்ந்தே கூறிடுவோன் வேண்டியதே
குறியாக் கொண்டு (7)

அந்தமிகு நந்தமிழி னரியதொரு வசனநூ
லாகச் செய்தான்
கந்தவே ளடிமலரே எந்நாளுந் தன்மனத்தே
கனிந்து போற்றும்
இந்துவெனக் குளிர்முகத்தோன் இன்மொழியே மிகப்
இயல்பு மிக்கோன் [போற்றும்
செந்தமிழின் தவப்புதல்வன் சிவானந்த யதீந்திரனுஞ்
செல்வன் தானே (8)

நன்மைமிகு மிந்நூலை அச்சியற்றி நமக்கெல்லாம்
உதவு மாறு
பன்முறையும் மிகவிரும்பி யதற்குரிய பணிகளெலாம்
பரிந்து செய்த
அன்புடைநா ராயணனென் றவனிபுகழ் பெருந்தகையாம்
அண்ணல் தானும்
இன்பமெலாம் பெற்றிந்த நிலவுலகில் எஞ்ஞான்றும்
இனிது வாழ்க (9)



திருவாளர். கீ. நாராயணசாமி முதலியார்
வட ஆற்காடு ஜில்லா ஐக்கிய நாணய சங்கங்களின்
டெப்டி ரிஜிஸ்திரார், வேலூர்.

உ

சென்னை கோவிந்த நாயக்கர் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான்

## சொ. முருகேச முதலியார்

அவர்கள் இயற்றிய

# சிறப்புப் பாயிரம்

---

மன்னுபுகழ்ச் சோணாட்டு மறைக்காட்டி னருகினுறை
அன்னமிகு மாயக்கா ரம்புலமென் றுறைபதிப்பால்
தன்னிகரில் சாமித்தே வன்னென்னுந் தருமநிறை
முன்னவனார் தருமைந்தன் முதிர்தருநற் றவமுதல்வன் (1)

வேறு

தாவாத முத்தமிழின் தன்மையினை அறவுணருந்
தகையா லென்றும்
மூவாத வகத்தியற்கும் முன்னியவா ரியமொழியின்
முடிவை முன்னும்
ஓவாத செயலதனால் உயர்வுடைய பாணினிக்கும்
உவமை கூறிப்
பாவாத புகழ்பரப்பிப் பாவலர்கள் பரிந்தேத்தும்
பண்பின் மிக்கான் (2)

அந்நாளில் ஆரியநல் வேதத்தை அழகுபெற
அணிகள் செய்து
பின்னாளிற் பேருலகிற் பிறங்குகெனப் பிணக்கறநீத்
தருளிச் செய்தோன்

சின்னாளில் அவ்வேதம் சிலரறியா வகைநிலவச்
செயிர்தீர்த் தாய்ந்து
இந்நாளில் இவ்வுலகிற் தமிழ்மொழியி லியற்றியிவண்
இசையுங் கொண்டோன் (3)

வேதத்தை மொழிபெயர்த்து விளக்குதலால் வியாதமுனி
என்றும் மிக்குப்
போதத்தைப் புகுவித்துப் பொய்ம்மைநிலை தனைமாற்றிப்
புவனத் தென்றும்
மாதத்து வத்துறைந்த மகிபரொடு பயிலுதலால்
மாறன் என்றும்
ஓதத்து நீர்புடைசூழ் உலகத்தோர் உவந்தேற்கும்
உரிமை சான்றோன். (4)

முக்திநிலை தனைவிரும்பி முத்தநெறி யடையவழி
முயலு வாரைச்
சித்திநெறி யடையாமற் சித்தநெறி திரிகின்ற
சிறுமை நீக்கிப்
பத்திநெறி யடைவித்துப் பாங்கினொடு பரமனுரை
பயிலு வித்துச்
சத்தியருள் சண்முகநற் சத்தினையங் கருள்செய்யுந்
தகைமை யாளன் (5)

அத்துவித வேதாந்த அகநிலையும் சித்தாந்த
அமைவுங் கற்றுத்
தத்துவநன் னெறியுணருஞ் சங்கரதிக் விஜயமெனும்
சமய நூலும்
புதுவுரையாய்ப் புவனத்துப் புகழ்கரூபாத் திரதேவன்
புகல்மெய்ஞ் ஞான
விக்தருள்நற் சரிதைநிறை வியன்நூலும் விரும்பநனி
விரித்துச் செய்தோன் (6)

திருவொற்றி யூரிறைவன் மான்மியமே முதலாய
செய்ய நூல்கள்
ஒருபற்றும் இல்லாமை உவந்தளிப்பான் ஊழியனு
உவந்தாட் கொண்டோன்
குருவுற்ற தன்மையினைக் குறித்திடுபிள் ளைத்தமிழே
முதலா யான்ற
மருவற்ற நூலனைத்தும் மனத்தெண்ணி யினைத்தென்றிங்
குரைக் கொணுதால் (7)

அன்னவன்றன் இன்னவகை அரியபல நூலியற்றும்
ஆற்றல் கண்டு
பன்னரிய வேலூரிற் பாரியற்று நற்றவத்தாற்
பயிலுந் தோபா
என்னும்எம தஞ்ஞான இருள்கெடுக்கும் மெய்ஞ்ஞான
பானு வானோன்
தன்னுடைய புராணமதைத் தமிழ்மொழியில் இயற்றியெமக்
கருள்கவென்றான் (8)

அன்னவனே யெங்காளுந் தோபாவென் னருள்ஞானத்
தெய்வம் போற்றித்
தன்னுடைய முழுப்பணியும் பிறர்க்கெனவே தகவுதவித்
தலைமை சான்று
மன்னுரிமை கொளற்கொத்த மடாலயத்து மன்னிவரு
மறவோர்க் கெல்லாம்
துன்னியநற் பணிபுரியும் சுப்பிரமணி யப்பெயர்கொள்
தூயோ னன்றே (9)

வேறு

அன்னவன் வேண்டு தற்கும் அரியவிவ் வுலகத் தோர்செய்
துன்னிய வன்பி னுக்குந் தொடர்புகொண் டிந்நூல் செய
மன்னிய புலகிற் றூய்மை மன்னிய வாழுஞ் சீலர் [தான்.
சென்னியின் வணங்கு செல்வச் சிவானந்த முனிவ ரேறே

# தோபா சுவாமிகள் புராணத்தின்

## படல அட்டவணை

### முதலாவது மெய்க்காட்டி யருளிய காண்டம்


| படல எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | நாட்டுப் படலம் | ... | 1 |
| 2. | நகரப் படலம் | ... | 6 |
| 3. | திருவவதாரப் படலம் | ... | 10 |
| 4. | கலைதேர் படலம் | ... | 17 |
| 5. | திருமுறையோது படலம் | ... | 21 |
| 6. | திருவருள்பெற்ற படலம் | ... | 24 |
| 7. | மெய்காட்டியருளிய படலம் | ... | 32 |
| 8. | துறவுப் படலம் | ... | 38 |
| 9. | சித்தராய்த் திகழ்ந்த படலம் | ... | 43 |


### இரண்டாவது காண்டம்


| | | | |
|---|---|---|---|
| 10. | நாட்டுப் படலம் | ... | 65 |
| 11. | நகரப் படலம் | ... | 71 |
| 12. | நகரெய்து படலம் | ... | 79 |
| 13. | திருவருட்செயற் படலம் | ... | 88 |
| 14, | சமாதிநிலயப் படலம் | ... | 99 |
| 15. | இறந்தன உயிர்பெற்ற படலம் | ... | 116 |
| 16. | திருவிளையாட்டுப் படலம் | ... | 110 |
| 17. | மாணவப் படலம் | ... | 122 |
| 18. | முத்தியெய்து படலம் | ... | 127 |
| 19. | திருமடாலயப் படலம் | ... | 132 |

# தோபா சுவாமிகள் புராணத்தின்
## விடய அட்டவணை

### (முதலாவது காண்டம்)


1. வேளாண்மையர் பெருமை ... 10
2. தந்தை தாயரின் மாண்பு ... 14
3. தோபாவின் தோற்றச் சிறப்பு ... 15
4. திருப்பெயரிடல் ... 16
5. மதிவளம் ... 18
6. இளமையில் மன்னர் பாதுகாத்தல் ... 19
7. காலாட்படையிற் சேர்தல் ... 19
8. நல்லுணர்வு தோன்றல் ... 20
9. தமிழ்மறையே சிறந்ததென்று தெளிதல் 22
10. திருஞானசம்பந்தரை யுபாசித்தல் ... 26
11. திருஞானசம்பந்தப் பெருமானாரின் அருளுபதேசம் ... 28
12. திருஞானசம்பந்தரின் திருவருளுபதேசத் திறத்தை யுணர்தல் ... 29
13. தீட்சைத் திருநாமம் ... 32
14. பரசிவன் பரிமேலேறிப் படைக்களஞ் செல்லல் ... 32
15. இறைவன் உருவாய் வருவானெனல் ... 34
16. ஆங்கிலப் படைத்தலைவன் வியப்புறல் ... 36
17. ஆங்கிலத் துரைமகன் இறைஞ்சுதல் ... 37
18. திருவருட்டிறத்தைப் பேணல் ... 38
19. துறவின் பெருமையை கண்டு துறத்தல் 39
20. மகம்மதியன் வெருளல் ... 43

21. சுவாமிகளின் ஆண் குறியின்மீது ஊசியைத் தெறித்தல் ... 43
22. சுவாமிகளின் திருநோக்கால் ஊசிகழலல் 45
23. மகமதியன் சுவாமிகளை வழிபடல் ... 45
24. ஒரு அரசாங்க அதிகாரியின் கை தம்பித்துவிடல் ... 47
25. இதில் மற்றொரு வகை ... 48
26. தம்பித்த கையானது எழாமை ...
27. சுவாமிகள் கள்ளமஸ்தானைச் சபித்தல் ... 48
28. குகையிலிருந்த பெரியார்க்கருளல் ... 49
29. சுவாமிகள் சோதிவடிவாய்த் தோன்றல் .. 50
30. சுவாமிகள் குயவன் மனையை விட்டகலல் 52
31. குலாலனும் அவன் மனைவியும் சுவாமிகளைக் கண்டு பணிதல் ... 52
32. புத்திரப்பேறு உண்டாகும்படி குயவனுக்கு வரமளித்தல் ... 53
33. குயவனுடைய குழந்தை பெரியாராதல்... 54
34. பெரியாரின் பரிகலச் சேடவலி ... 54
35. வறுமையுற்ற குயவன் ... 55
36. சுவாமிகள் வறுமை மிகுந்த குயவன் வீட்டை யடைதல் ... 57
37. வறிய குயவன் நலமுறல் ... 58
38. ஒரு தொண்டனை வலித்து ஆளுதல் ... 58
39. சுவாமிகளுக்கு அளித்த மது பாலாதல் 59
40. கனியீந்து புத்திரப் பேறளித்தல் ... 61
41. பெரியார் செயல் அறிதற்கு அருமையெனல் 63

## இரண்டாங் காண்டம்

42. சுவாமிகள் சென்னையில் சிறைப்படல் .... 80
43. சுவாமிகள் திருவருளால் சிறைப்படுத்தியவன் வீட்டில் இருத்தல் ... 82
44. சுவாமிகளை வேலூருக்கு கொண்டுவந்து சேர்க்க முயலல் ... 83
45. சுவாமிகள் வேலூருக்கு வருதல் ... 85
46. சுவாமிகள் வேலூரில் ஒரு மகம்மதியன் வீட்டை யடைதல் ... 85
47. சிவஞானிகள் துன்பைச் சிவனே நீக்குவான் எனல் ... 87
48. சுவாமிகள் பாலன்போன்று திரிதல் ... 88
49. சுவாமிகள் கடைவீதியில் திரிதல் ... 89
50. சுவாமிகள் கட்டுக்குள் அகப்படாமை ... 89
51. சுவாமிகட்கு விடம் அருந்துதல் ... 91
52. விடமருந்தியவர் இறத்தல் ... 91
53. மலநோயைத் தடுத்தாளல் ... 92
54. சுவாமிகள் மூடத்தைப் போக்கியருளல் 94
55. ஒரு அன்பன் உத்தியோகம் வேண்டித் தொழுதல் ... 96
56. இழந்த உத்தியோகத்தை அருளல் ... 96
57. அன்பன் உத்தியோகத்தையடைதலும் மனை வாங்கி வைத்தலும் ... 97
58. சித்தநாதர் சரணடைதல் ... 99
59. சித்தநாதர் சமாதிநிலயங்கட்ட முயலல் 100
60. சித்தநாதர் பொருளிரத்தல் ... 101
61. சித்தநாதர் ஒரு வைணவரையடைதல் ... 102
62. வைணவர் சித்தநாதரைத் துன்புறுத்தல் 102
63. வைணவர் சுரநோயுறல் ... 104
64. சித்தநாதர் வைணவரின் சுரநோயைப் போக்கல் ... 105
65. வைணவர், சமாதி நிலயம் கட்ட உதவல்... 108

66. அடக்கக் குகையமைத்தல் ... 140
67. சைவன், சுவாமிகட்குப் புலால் கொண்டு வருதல் .... 112
68. சமைத்த ஊன் எழுந்து நடத்தல் ... 111
69. இறந்த பெண் உயிர் பெற்றெழல் ... 110
70. ஒரு வணிகன் கடையை வீழ்த்தல் ... 116
71. அருளமுதச்சுவை கற்கண்டு போன்ற தெனல் ... 118
72. வறண்ட குடங்கள் நிறைதல் ... 117
73. கண்ட யோகங்காட்டி யருளல் ... 183
74. நரசிங்கதாசர் உபதேசம் பெறல் ... 120
75. நரசிங்கதாசர் வரலாறு ... 122
76. நரசிங்கதாசர் வேமன்னரின் அருளைப் பெறல் ... 123
77. இறைவன் குருவாவன் எனல் .... 124
78. நரசிங்கதாசர் தோபா சுவாமிகளைப் போற்றல் ... 125
79. தோபாசுவாமிகள் நரசிங்கதாசருக்கு அருளல் ... 126
80. நரசிங்க சுவாமிகள் முத்தியெய்தல் ... 126
81. தோபாசுவாமிகள் திருமேனியை நீத்தல் ... 127
82. திருமேனி அடக்கம் ... 130
83. சித்தநாதர் முத்தி யெய்தல் ... 132
84 மோட்டூர்ச் சுவாமிகளின் வரலாறு ... 132
85. மோட்டூர்ச் சுவாமிகள் தோபாசுவாமிகளின் திருக்கோவிலை யடைதல் ... 134
86. தெய்வசிகாமணி சுவாமிகளின்வரலாறு 134
87. சுப்பிரமணிய சுவாமிகள் வரலாறு .... 135
88. தோபா சுவாமிகளின் புராணச் செய்யுள் 139
89. தோபா சுவாமிகள் அருட்பத்து ... 169
90. தோபா சுவாமிகள் ஞானநாயகமாலை ... 173

உ

சிவமயம்.

# வேலூர் திருப்புகழ்

அதிக ராய்ப்பொரு ளீவார் நேர்படில்
　　ரசனை காட்டிக ளியார் கூடினும்
　　அகல வோட்டிகள் மாயா ரூபிகள் 　　　　நண்புபோலே

அசட ராக்கிகள் மார்மே லேபடு
　　முலைகள் காட்டிகள் கூசா தேவிழும்
　　அழகு காட்டிக ளாரோ டாகிலும் 　　　　அன்புபோலே

சதிர தாய்த்திரி மாயா வேசிகள்
　　கருணை நோக்கமி லாமா பாவிகள்
　　தருமு பேட்சைசெய் தோஷா தோஷிகள் நம்பொணாத

சரச வார்த்தையி னாலே வாதுசெய்
　　விரக மாக்கிவி டாமூ தேவிகள்
　　தகைமை நீத்துன தாளே சேர்வது 　　　　எந்தநாளோ

மதுரை நாட்டினி லேவாழ் வாகிய
　　அருகர் வாக்கினி லேசார் வாகிய
　　வழுதி மேற்றிரு நீறே பூசிநி 　　　　மிர்ந்துகூனும்

மருவு மாற்றெதிர் வீறே டேறிட
　　அழகி போற்றிய நீறு லாகிய
　　மகிமை யாற்சமண் வேரோ டேகெட வென்றகோவே

புதிய மாக்கனி வீழ்தே னூறல்கள்
　　பகலி ராத்திரி ஓயா வாளைகள்
　　புரளு நாட்டினி லேகான் மாதைய 　　　　ணைந்தமார்பா

B

புகழு நாற்கடல் சூழ்பார் மீதினில்
அளகை போற்பல வாழ்வால் மீறிய
புலவர் போற்றிய வேலூர் மேவிய தம்பிரானே

---

ஆசை நாலுசது ரக்கமல முற்றினொளி
வீசி யோடியிரு பக்கமொடு றச்செல்வளி
ஆவல் கூரமண்மு தற்சலச பொற்சபையும் இந்துவாகு

ஆர மூணுபதி யிற்கொளநி றுத்திவெளி
யாரு சோதிநுறு பத்தினுட னெட்டுஇத
மாகி யேழுமள விட்டருண விற்பதியின் விந்துநாத

ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித்தமுத சித்தியொடு
மோது வேதசா சத்தியடி உற்றதிரு நந்தியூடே

ஊமை யேனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர் [தாராய்
யோக பேதவகை எட்டுமிதி லொட்டும்வகை இன்று

வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கொள்கிரு பைக்கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவி தத்தருண செங்கையாளி

வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிவையென்
மாசு சேரெழுபி றப்பையும றுத்தவுமை தந்தவாழ்வே

காசி ராமேசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர்தேவூர் கச்சிமது ரைப்பறியல்
காவை மூதூரருணக்கிரிதி ருத்தணியல் செந்தில்நாகை

காழி வேளூர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்கதிகழ் [ரானே
காதல் சோலைவளர் வெற்பிலுறை முத்தர்புகழ் தம்பி

---

சேலால மொன்று செங்கண் வேலாலும் வென்று மைந்தர்
சீர்வாழ்வு சிந்தை பொன்ற முதல்நாடி
தேன்மேவு செஞ்சொ லின்சொல் தானோதி வந்தணைந்து
தீராத துன்ப வின்பம் உறுமாதர்
கோலாக லங்கள் கண்டு மாலாகி நின்ற னன்பு
கூராமல் மங்கி யங்கம் அழியாதே
கோள்கோடி பொன்ற வென்று நாடோறு நின்றி யங்கு
கூர்வாய்மை கொண்டி றைஞ்ச அருள்தாராய்
மாலாலு ழன்ற ணங்கை யார்மாம தன்க ரும்பின்
வாகோட ழிந்தொ டுங்க செயல்நாடி
வாழ்வான கந்த முந்த மாறுகி வந்த டர்ந்த
மாசூரர் குன்ற வென்றி மயிலேறி
மேலாகு மொன்ற மைந்த மேனுடர் நின்றி ரங்க
வேலாலெ றிந்து குன்றை மலைவோனே
வேய்போல வுந்தி ரண்ட தோள்மாதர் வந்தி றைஞ்சு
வேலூர்வி ளங்க வந்த பெருமாளே.

---

சத்திமிகு மேழுகட லைத்தேனை
உற்றமது தோடுகணை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு

தக்கமணம் விசுகம லப்பூவை
மிக்கவிளை வாளகடு வைச்சிறு
தக்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்

மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடநிகர் செப்பான தனமீதே

வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வஜ்ரமயில் மீதிலினி எப்போது வருவாயே

சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பனு வற்கார
திக்கினும்ப டாவுபுர விக்கார குறமாது

சித்ரஅநு ராககல விக்கார
துட்டஅசு சேரர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள்

முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைநிகர் தூயவளி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான

முத்தமிழை ஆயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்தலவு வேலைநகர் முத்தேவர் பெருமாளே.

---

இவை: சென்னை சைவசித்தாந்த சமாசத்தாரால் வெளியிட்டிருக்கும் அடங்கவிலைப்பதிப்பு திருப்புகழிலிருந்து எடுக்கப்பட்டன.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஒழிவிலொடுக்கம்

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும்,
சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த
ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி

## சிறப்புப் பாயிரம்

நேரிசை—வெண்பா.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா—னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரேலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருதிற் றியாதோவெனின், இந் நூன்முகத் தாசிரியர் பெயர் முதலியவற் றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற்றெனக.

**வள்ளல்** குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்து என்பது :— வள்ளலா ரென்னுந் திருப்பெயருடையவர், ஞானாசாரிய ரிருபராகிச் சமயவாதிகள் தருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருள் நெறியான் வெற்றிகொண்டு, சீகாழி யென்னுங்

திருநகர்க் கண்ணே, மெய்ந்நெறி விளங்க, வீற்றிருந்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய, மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன் முடியாக அணிந்து. ஓர்ந்து — உள்ளத் — தழிவிலடுக் குந்தேனை யன்பரெலாமுண்ண — வொழிவிலொடுக்கநூ லுரைத்தான் என்பது:— அத்திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்க ளனைத்துஞ் சடமென்றோர்ந்துணர்ந்து, அவற்றைக் கடந்து, தற்காட்சியோடு திருவருட்காட்சியுஞ் செய்து, அங்ஙனம் வாதனையா னசைந்தெழும் போதந் தோற்றுது, அதனை யத்திருவருளொளியி னடக்கி ஆண்டு, மேன்மேலு மெழாநின்ற, சிவானந்தத் தேனைத் தாம் அனுபவஞ் செய்தவாறு, அதன்கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு, அச் சிவானந் தானுபவ அந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டு விளங்க, ஒழிவிலொடுக்கமென்று ஓர் உபதேச முறையை யுரைத்தருளினார்—என்றவாறு.

## வள்ளல் — என்னும் பெயர்:—

ஆசிரியருக்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசாரிய மரபின் வழித்தாய் வந்த காரண வபிடேகச் சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம், பின்னர் ஞானாசாரிய நிலைக்கண், தமதருண் ஞான நோக்கானியைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடண மேற்கொண்டு நின்ற இவ்வள்ளலென்னும் பெயர், ஈண்டவ் விசேடண மிசையெச்ச நிலையினிற்ப நின்றதெனினும் அமையுமென்க.

இஃது வினை, பண்பு முதலிய வடுத்த தொகை நிலைச் சொற்றொடராகாது, தொகா நிலையாய்த் தணைத்தொடர் பயனிலை யண்மைப் பொருளுணர்ச்சி யின்றி யிடையிட்டு

நிற்கத் தான் செய்யுண்முதற்கண் தனித் திருந்தமையின் ஆற்றலின்றாலோவெனின், அற்றன்று:—கொடை மடங் குறித்த குணங்காரணமாக வந்த இவ்வள்ளலென்னும் பெயர் தன்னுறுப்புகளுட் கோடை குணம் புக ழழகு வள மென்னு நல்வகைக் குறித்த பல்பொருட் பகுதியாய வண்மையென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க் குளவாய அக் கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலிற் பொருளாற்றல் உண்டென்க. அல்லதூஉம், இப்பெயர், உயர்பொருட்கிடனாப், உடனிலைக்கூட்டாய், ஒரு நெறி யசைத்தாய், ஓரினந்தழுவிப் பல்வகைக் குறிப் பிற் படர்ந்து, முற்றியைபு வண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலிற் சொல்லாற்றலும் உண்டென்க. ஆயின், இவ் வாசிரியர் பெயர் இச்செய்புளின் இடை கடைகளின் ஒன்றி னிறுத்தாது, முதலடி முதற்சீ ரேதுகைத் தொடைக்க ணிறுத்ததிற் குறித்த தியாதோவெனின், ஒன்றிரண் டெனக் கொண் டுறுமறை யாகம நன்றிருமுடிபி னடுநிலைநடாஅய்ப் புலம்பெறு தத்துவ நியதியிற்போந்து, உண்மலந் தெறு மறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரியர் சன்மார்க்க முதலிய மார்க்க நான்கனுட் டலைமையிற் றலைமையாய வுத்தம சன் மார்க்கத்தினரென்பது குறித்த தென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தின ரென்பதை யாசிரியர் கூறிய "இதுவென்ற தெல்லாம் பொய் யென்றான்" * 1 என்னுந் திருவெண்பா வாற் காண்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

---

* 1. பொதுவிலுபதேசம்: பாட்டு—44.

இதுவென்ற தெல்லாம்பொய் யென்றா னெனக்குப்
பெ[illegible]துவன்றித் தங்குமிடம் போச்சு—அதுநாங்காண்
என்றா னதன்பே ரிரவைப் பகலாக்கும்
ஒன்றோ பரமசுக மோ.

## குருராயன் என்பது:—

திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயராய் நின்று,— ஓதியுணர்ந்து பன்னாட் பல சாதனங்களின் முயன்று முயன்று, ஆசாரியத்தன்மை யொருவாறு அரிதிற் கிடைப்பப்பெற்றும் ஓரோர் காலங்களின் அவத்தை வயப்பட்டு மயங்கு மற்றையாசாரியர் போலாது, ஓதாமல் வேதாகமாதிகளை முற்று முணர்ந்திறைப்போது மோர் சாதனங்களின் முயன்றதின்றி, ஞானசாரிய வருளிலக்கணங்க ளனைத்துந் தாமே தம்பால் நிரம்பிநிற்ப, அமர்ந்தன ரென்பதூஉம்,— ஓதியுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவரவரறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும் ஆசாரியவுருவாய் வெளிநின்று அனுக்கிரகித்தும் நின்றன ரென்பதூஉம்,— திருநோக்கஞ் செய்தன் முதலிய அறுவகை தீக்கையானு மன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெற நின்ற திருவருட் பெருமையரென்பதூஉங் குறித்ததென்றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலியவற்றை யாசிரியர் கூறிய "தன்மையும் முன்னிலையும்" * என்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயன் என்பது, வாதுவென்ற சம்பந்தன் என்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக் குறிப்பாற்

---

* 1. பொதுவிலுபதேசம்: பாட்டு—42.

தன்மையு முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமாய்
என்மொழிவி லின்புமா யின்புமிதீ — என்னுத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றான்
ஓதாமல் வேதமுணர்ந் தோன்,

பிள்ளையார், இவ்வவதாரத்தின் மேனின்ற அவதாரத்திலுங் குமார சற்குருவாய் அரனுர்க்கும் அகத்தியனுர்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையுங் குறித்ததெனக் கொள்க.

"தென்னவ னங்கனஞ் சூழ்காத் திரிகக சூலகரத்
தென்னவ னங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்னவ னங்கநன் னீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்னவ னங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே."

அருணகிரிநாதர், கந்தரந்தாதி, 56.

என்றதனுற், பிள்ளையார் இவ் வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்திற் குமாரசற்குரு வென்பது காண்க.

"உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கினின் றேத்தக் குருமொழி வைத்தோய்
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்

கல்லாடம், பாயிரம் 2.

அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை

சித்தியார்

என்பவைகளால் அரனுர்க்கும் அகத்தியனுர்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை யுணர்க.

ஆயின், குருவேந்தன் என்னுது குருராயன் என்றது எது குறித்தற்கோ வெனின்:—நான்கன் வேற்றுமையானடுத்து மிக்குயர் நெறிப் பொருண்மையின் வந்த காரகச் சிறப் பொருதலைத் தொடர் மொழிப் பெயராய இக்குருராயனென் பதன்கட் குருவென்பதன், முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், ராயனென்

பதின் மூதானிலே யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரிய வியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், வந்து இருவகை யியலுஞ் சேர்தலின், இதனைத் தம்பெயராகவுடைய பிள்ளை யாருந் தமிழ்நூல், வடநூலென்னும் இருவகை நூற்கு முதல்வரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் "மறைப் புலவன் தமிழ்க்குரிசில் சீகாழிச்சம்பந்தன்" † என்றதனால் இருவகை நூற்கு முதல்வரென்பது காண்கவென்க. அல்ல தூஉம், பொருள் வேறுபடாது, சிறிதே வடிவுவேறுபட்டு நின்ற குருராயனென்பது தன்னையுள்ளூன்றி நோக்கினர்க்கு இமைமறை காய்போல் ஞானவென்னு முயிர்மெய்யோ டிருந்த தன் முன் வடிவமுட்கொண்டு விளங்கக் காட்டி நிற்கின்ற தாகலின், இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட் டன்மை வேறுபடாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்ற தம்மை, அன்பான் உள்ளூன்றி நோக்கினார்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர் கொண்டு, அளவிகந்த சூரியர் உதயம்போன் றொளிவீசுந் தம் முன்னுருவாய தெய்வத் திருவுருவுட்கொண்டு, விளங்கக்காட்டி நின்றனரென்று குறித்தற் கென்பதுமா மென்க.

"மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார்."
ஆளுடைய பிள்ளையார் புராணம் 92.

---

1. பொதுவிலுபதேசம்: பாட்டு—11.
சத்தியநிர் வணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்து வழிகாட்டு மறைப்புலவன் — சுத்தன்
தமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பான்
எமக்கருளிச் செய்த திது.

என்று, மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக்கண்டு சீகாழியுள்ளார், வியந்து கூறிய வாறுபவிச் செய்யுளால் உள்ளுநேன்றி நோக்கினர்க்குத் தம்முன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்க வென்க.

இனி இன்றியமையாக் காட்டுளதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகும் என்க.

அல்லதூஉம், குரு என்பத னீற் றுயிர்மெய்யோடு ராயன் என்பதன் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய் நின்றதாகலின், இங்ஙனம் ஆனந்த வடிவராகிய பிள்ளையாருந் தாங்கொண்டருளிய மானிடத் திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பதுமாமென்க.

அல்லதூஉம், குறிலிணைக் கெதிர் நெடில் குறிலெண்ணீடாக நிற்பவு மீற்றி னவ்வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்த மொழியாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப் பொருளாயும், அதிபக்குவர்க்கு அனுபவப் பொருளாயும் இவ்விரண்டினுங் கலவாது அதீதப் பொருளாயு நின்றனரென்று குறித்தற் கென்பதுமாமென்க.

## குரு என்பதின் பொருள்.

இங்ஙனம் குருராயனென்பதில் கு வ்வென்பது—இருள், ரு வ்வென்பது—அருள்,—ராயன் என்பது விளங்கச் செய்கின்றேன்—பொருளாம். இதனால் கு வ்வென்னு மசுத்தாவத்தையில் நின்றோரை ரு வ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ணம் நிறுத்துகின்றோர் குரு ஆவர். இச்சுத்தாவத்தைக்கு ஆதாரனாகியும் அதீதனாகியும் விளங்கி இவ்வவத்தையினின்றும் அக் குருவாயினோர் தாழாத வண்

ணம் அருள் செய்து நின்று அதீதப் படுத்துகின்றோன் ராயன் அவன் ஆகலின், இதனானும் உணர்கவென்க.

எழுந்தாகிப் பல்வகைக் குறிப்பிற் பொருணெறிபற்றி நின்ற நோக்கம், செறிவு, நுட்பம், இங்கிதம், இன்பம், கம்பீரம், சிறப் புறுதி, முதலிய நற்குணந் தழீஇய சொற்புணரிதென்றே, ஆசிரியரும் சரியாதி நான்கினுக்கும்'' * என்னுந் திருவெண்பாவி னிடைக்கட் குருராயனென்று இதன் பெருமை தோன்ற வைத்தனரென்க. இஃது இன்னும் விரிக்கிற் பெருகு மென்க.

## வாது வென்ற சம்பந்தன்

வாதுவென்ற சம்பந்தன் என்பதிற்பொதுவானே வாது வென்ற என்றது என்குறித்தோ வெனின், — எண்வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்க ளொருங்கே கூடித் தென்மதுரைக்கட் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம், அனல்வாதம், புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும், பரசமய கோளரி யென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் தெய்வப் பேரொலி கேட்டு, உளம்பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த்தருக்கமும், புழுத்தலையும், பொடிபட்டழியவும், பின்னருள்ளது போன் றில்ல

* ஒழிவிலொடுக்கம். 3. சத்திநிபாதத் துத்தமரொழிவு 1-ம் திருவெண்பா.

சரியாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருவா றெனக்களித்த வள்ளல்—குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வர்க் குபதேசம்
ஆனத் தையுநிகழ்த்தி னான்.

தைப்பற்றிச் சாக்கியக் குழுவுள் தலைவனுய சாரிப் புத்தன் சிற்சிலவகையாற் செய்த சமயவாதந் தலைதடுமாறவும், செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படும் அறிஞான் வெற்றி கொண்டமையும், திருவோத்தூரின்கண் அரனுக்கிடு பனை ஆண்பனை யாயிற்றே யென்று, அசதியாடிய அமணக் குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட் டொழியத் தாம் திருவாய்மலர்ந்த திருக்கடைக்காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்துவிறல் கொண்டமை யுங் குறித்ததென்க.

அல்லதூஉம், வாது என்ப திலக்கணையாகக்கொண்டு பெருமண நல்லூரின்கண் திருமண நல்விழாவைத் தரிசிப் பான் வந்த மக்கட்கெல்லாந் தொன்றுதொட் டிடைவிடாது உடனிழல்போற் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுகளைத் தும் வென்றதூஉம், — திருப்பாச்சிலாச்சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாதுவென்றதூஉம்,— மருகற்கண் ஓர் வைசியனுக்கு அடுத்த விடவாது வென்றதூ உம்,—இவை முதலியவுங் குறித்த தெனினுமாமென்க. வெற்றி கொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றே னுந் தோன்றக்கூறாது இலேசானே வாதுவென்ற என்றது என்குறித்தோவெனின்,—பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம் மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பலவகையின் முயற்சிசெயினு முற்றாதெனினும், பிள்ளையார்க்குச் செந் தமிழ் பொழியுந் திருவாக்கானே ஆண்டாண்டு அவ்வேறன் முற்றியதென்பது குறித்தென்க. வாது என்பது குருராயன் என்பதனோடுஞ் சம்பந்தன் என்பதனோடுஞ் சாராது நடு நின்றமையின், அத்துவிதத் நெறியினுஞ் சேராது, துவித நெறியினுஞ் சாராதுநின்ற பதிதவாதிகளது பயனில் வாத மெனினு மமையுமென்க.

எதிரேற்கப்பட்டெதிர்வினைக் கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல்லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த வென்ற என்னும் பெயரெச்சஞ் சம்பந்தனென்னும் பெயர் கொண்டு முடிந்து, இங்ஙனம் வெற்றி கொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங் குமாரப் பருவமெனக் குறித்ததென்க. என்னை? எச்சமென்பது இளஞ்சேய் மேற்றாகலின்.

சம்பந்தன் என்பது பிள்ளையார்க்கு மூவகைக்கண் மூவுலகும் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப்பெயராகலின், ஆண்டு பெருமானருளப் பிராட்டியாரளித்த சிவஞானத் தெள்ளமுதருந்தி அச்சிவஞானத்திற்கு உரிமை பூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயின், சிவஞான சம்பந்தன் என்னாது சம்பந்தனென வைத்த தென்கொலோ வெனின்:—சிவஞானமுமன்றிச் சிவானந்த மானந்தாதீதம் என்பவைக்கும் உரிமை பூண்ட தலைமைபற்றியும் அவற்றை உலகுயிர்க்கு இங்ஙனமென்றுணர்த்தி உரிமை செய்விக்குமாட்சிபற்றியும் அங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம், சுருங்கச் சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்தனென வுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமென வைத்த தெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச் சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும் உடையானென்பது பொருட்சிறப்பு வழக்கால் பொன்னுடையானையுங் குறிக்குமாகலினென்க.

## வள்ளன் மலர்த்தாள்

வள்ளன் மலர்த் தாள் என்னும் ஒருவகை வனப்பு, இருவகைச்சந்தி, மூவகைமொழித் தொகைச் சொற்றொடர்க்

கண், வள்ளலென்னுங் குணிப்பெயர் வினைமுதற் றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று, பிள்ளையாரது திருவடிகள் தம்மை யடைந்தோர்க்கு, வரையா வானந்தப் பேற்றையளித்து, அவரைத் தாங்கிக் கோடலைக் குறித்த தென்றுணர்க.

அஃதேல், ஆனந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனம் கூறல் எங்ஙனமெனில்: திருவடிகள் தம்மை வழிபடுவோர்க்கு இரங்கி இன்பமீதற் பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ் வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞான தீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானும், நித்தியானந்தப் பேறு வாய்க்கு மாகலின் இங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமி லருளுங், கோட்டமில் குணனு, மசையா நிலையு, நசையா மனனும், வெகுளாப் பண்பும், விடாப் பேரன்புஞ், செவ்வியின் மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையா தீதல் வள்ளற்றன்மை என்ப வாகலின், இவ் வள்ளற்றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை யடைவித் தருளுங் கருணைபற்றி யங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. அஃதேல் வள்ளற்றன்மை வழங்கு மலர்போலுந் திருவடியென்றன்றோ வுரை விரித்தல் வேண்டும். அங்ஙன மின்றி வள்ளற்றன்மை யுடைய மலர் போலுந்தாளென விரித்திருக்கின்றதே யெனின்; அங்ஙன மடைவித்தலும் வள்ளற்றன்மையே யாகலினு முடைய தொன்றன்றே யுதவப்படு

மாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனம் கூறற்கு மமை தியா மென்க.

அல்லதூஉம் அருளின்றியமையாத வள்ளற்றன்மைக் கவ்வருளே முதற்காரணமா மாகலின், ஆனந்தவடிவ ராகிய பிள்ளையார் அவ்வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன் மைக்கு முதற்காரணமாகிய திருவருட் சத்தியே திருவடி யென்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டு உப சரித்தெனினு மமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்ப மெளிதில் தருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய அருள் விதிப்படி யறிந்து வழிபடின், அவ் வழிபாட்டான் அவ்வீட்டின்பந் தாப்பெறுதல் உண்மையாகலின், அவ்வுண் மை நோக்கி யீண்டு கூறியதெனினும், பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரணமாகலின் அதனை யறிவிக்க ஈண்டு கூறிய தெனினு மமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ள லென்பதூஉம், அடியிணை எதுகைத் தொடையாய் எழுத் தசை சீரொலி பொருளாதிகளா னொற்றுமைக் கொண்டு நின்று பிள்ளையாரது திருவடித்தீக்கைக்கும் ஆசிரிய ரதிபக் குவத் தன்மைக்கும் உள்ள வொற்றுமைப் பொருத்தம் விளக்கினவென்க.

வள்ளல் என்பது, பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக் கொண்டு பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின், இத்துணைச்சிறப்பின்று என்றுமறுக்க என்னெனின், அவயவச் சிறப்பா னவயவிக்குண்ம் வெளிப்படுத்தலே பெரும்பாலு மின்பமாகலினென்க! இதனைப் "போற்றி மாஞன் முகனுங் காணுத புண்டரிகம்" என்பதனுற்

காண்கவென்க. வள்ள மலர்த்தாளெனப் பாடமோதி வள்ளம் போலுங்குவிந்த வாய்மலரென மலர்க்கடையாக வுரைவிரிப்பாரு முளர். அங்ஙனம் விரித்தலின் இத் துணைப் பெரும் பயனின்றென மறுக்க. இங்ஙன மின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலர் என்பது, வள்ளற்றன்மையி னருகு வைத்தமை யின், ஈண்டு நிறைதலுங், குறைதலுமாயுள்ள நீர்நிலைக்கண் தோன்றியும், அழிந்தும், விரிந்துங், குவிந்தும், வாடியும் நின்று,— வண்ணமும், நறையும், வாசமுஞ், சிறிதே சிறு போது கொண்டு, பறித்தலாதிய சிறுதொழிற்படு மலர்களை நீக்கி, ஆண்டு திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண், ஒழியா மலர்ச்சியும், அழியா மணமும்,பொன்னிறப் பொலி வும், இன்னற வொழுக்கும், மேன்மையுந், தன்மையும், வியப் புறு முருவுங், கண்டோர் கண்கவர் காட்சியும், மாட்சியுங் கொண்டு, முக்காலமுங் குன்று மலரைக் குறித்தமை காண்க. என்னெனிற்—பிள்ளையார் திருவடிகள், மெய்ஞ் ஞான விளக்கமாய், அருண்மணம் வீசிப், பொன்னிறம் பொலிந்து, ஆனந்தமொழுக்கி, மெல்லென வுற்றுத்தண்ணெ னக் குளிர்ந்து, தரிசிக்கின்றோர் வியப்புறு முருவாய் அவ ரது விருப்ப நோக்கம் பரவ என்றும் ஒரு தன்மையவா யிருக்கின்றமையினென்க. ஆயின் மலர்போலுந்தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தா ளென்ற தென்னெனின்,— அத்தெய்வத் திருமலர் தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தந் தருதலேயன்றித் திரு வடிபோல் சிவானந்தம் தரமாட்டாச் சிறுமை நோக்கி யென்க.

அல்லதூஉம், சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கு முன் னின்றதனை விளங்குறச்செய்வதாய், மகிழ்வுடையோர் யாரு

மேற்கொண்டணியப் படுவதாய், நிற்கு நன்மலர் போலு மெனக் கூறினு மமையும்; என்னெனின்,—திருவடிகள் அருள்வடிவாய், ஆனந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்ப தாய் அறிவுடையோர் தந்தலைமேற்கொண் டணியப் படுவ தாய் நிற்றலினென்க.

அல்லதூஉம் மலரையடைந்த வண்டுக ளதனது தேனுண்டு களிகொள்ளுதல் போற் றிருவடிகளை யடைந் தோரும் அருளானந்தம் பெற்றிறுமாத்தலினிங்ஙனம் கூறிய தெனினு மமையு மென்க. இதனைத் தொகையுவமை யணி யாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக் கூட்டியற்புதத் தொகையுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாரு முளர். அவர் கூறுங் கூற்றிற் பெறுபயனின் றென மறுக்க இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண் ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும் அதனை வெளிநின் றோருட் சென்று கவரப்படாமைக்குங் காப்பாகக் காப்பினிற் குங் கருவிக்கு மணிதற்கணியி னிருகடையு மிணைத்து நிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனுகி வந்த பல பொருளொரு சொல்லாகலின், திருவடிகள் தம்மையடைந்தோரை யானந்த நிலையுட் சேர்த்தலும் அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டு மவ் வானந்த நிலையினின்றும் போதவசைவு தோற்றி வெளிப் படாமைக்கும் அவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப் படாமைக்குங் காப்பாக அருளுருவாயதன் முன்னிற்றலுஞ் சிவத்துடன் சிவனையிடை நின்று கூட்டுவித்தலுங் குறித் ததுகாண்க. இக்குறிப் புணர்த்தவன்றே மலர்க்கா லென் றது மலர்த்தா ளென்றதென் றுணர்க.

## தலைமேல் வைத்து

தலைமேல்வைத்து என்பது ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளையார் திருவடித்தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டுவினை யெச்சத்தானிருத்தற் பாலதன்றோ வெனின், ஆசிரியர்க்கு அத்திருவடிக்கண்ணேயுள்ள பிரியத்தொடர்ச்சியின் பெருமைதோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங்குறித்ததென்க. இதற்கு இவ்வாறன்றித் தலை மேற்பாவனை யான் வைத்தெனக் குறித்ததென்று கூறுவாரும் உளராலோ வெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானசாரிய ரென்பதும் இவர் ஞானதீக்கை யுடையாரென்பதும் விளங்குதலின்றி மற்றையாசிரியர் போல் எடுத்தநூலினிது முடிதற்பொருட்டுப் பாவனையான் வழிபடு கடவுட் பழிச்சின ரென்றிலேசிற் கருதப்படு மாகலின். அங்ஙனங் கூறன் மரபன்றென்க. தலையில் வைத்து என்னாது தலைமேல் வைத்து என்றமையான், மறை முடிக்கண்ணே வயங்கா நின்ற அச்செல்வத்திருவடியின் சீர்மை தோன்றிற்றென்க.

## ஓர்ந்து

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதிரிட்ட வுணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவது போன்று எதிரிடா துள்ளார்ந்த அப்பொருட்டிறமெதிரிடப்பெயரும் புடைபெயர்ச்சியு மெதிரிட்ட பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தோறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியும் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்த வுணர்ச்சி விகற்பியாது தேறி

நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்ற வன்றோ திருவள்ளுவ நாயனாரும் "ஓர்த்துள்ள முள்ளதுணரின்" * என்றாரென்றறிக.

## உள்ளத் தழிவில்

உள்ளத்தழிவில் என்பதில் உள்ளமென்பதன் பகாப்பத வியற்றுப் பகுப்பதப் பொருளி னிடவாகு பெயராயனும்பொருட்கண் வந்த வுள்ளென்னும் பகுதியுட் புறத்தும் அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

உள்ளம் என்பது வாதனையா னுள்ளெழும் போதத்திற் காகுபெயராயது வள்ளலென்பதுபோன் றெழுகிசையாய் வர வுள்ளவழிவிலென்னுது பொறுத்திசையாய் வரவுள்ளத் தழிவிலென்ற தென்கொலோவெனின், வேற்றுமை வழியாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்க வேண்டுமாகலினும், சாரியையொடு புணர்த்தியங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழியென்னும் பொது வினைப்பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர் காலத்தும் ஓர் இடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்கண் வந்ததாகலின் அப்போத நிகழ்ச்சி பின்ன ரெக்காலத்தும் உட்புறமென்னு மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்ததென்றுணர்க. இங்ஙனமின்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தினசைவற்ற விடத்தெனப் பொருள் கூறுவாரு முளராலோவெனின், மனத்தினசைவுபோத வசைவறிற்றானே யறுமாகலினு மஃதறுத விடத் திஃதெவ்வாற்றானு மறாதாகலினும் அது பொருந்தா

* திருக்குறள், மெய்யுணர்தல் 7

றென்க. இதனை ஆசிரியர் கூறிய "பற்றற போதும் பதறும்" † என்னுந் திருவெண்பாவாற் காண்கவென்க.

## அடுக்குந்தேன்

அடுக்குந்தேன் என்பதில் அடுக்குமென்பது அடுத்த லென்னுந் தொழிற் பெயர்க்கண் தல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க வெதிர்காலப் பெயரெச்ச விடைநிலையும்மை ககரமெய்ச்சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்தி பெற் றுண்டு நின்றிறையு மிடப்பாடு தோற்றாது செறிதற் பெயர்ச்சியும், அடுக்க லென்னுந் தொழிற் பெயர்க்கண் அவ்விகுதி நீங்க அவ்வெதிர் காலப் பெயரெச்ச விடை நிலை யும்மை விகுதி நீங்க நின்று தன் வரவு கண்டோடிய குற்று கரமூர்ந்த மெய்க்கண்ணேறி நின் றிறையு மிடைப்போ தின்மை படாது பன்முறை மேன்மே லுறுதற் பெயர்ச்சி யும் பொருளாகக் கொண் டிருவகைப்பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானுங் காலத்தா னும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மே லெழும் ஆனந்தத் தேனென்று குறித்த தென்றுணர்க.

உள்ளத்தழிவி லடுப்பது ஆனந்தமாகலிற் றேனென் பதை யுவமக் குறிப்பாற் சிவானந்தத் தேனென்ற தென் றுணர்க.

---

† ஒழிவிலொடுக்கம் 3 யோகக்கழற்றி:— 15 வது திருவெண்பா

பற்றற போதும் பதறும் பழக்கமதைக்
கற்றலென் னாகக் கலக்காது சற்றேநீ
நீண்டிவிடிற் றன்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை

• தேனுண்ட வண்டசைவின்றி யத்தேன் மயமா யிருத்தல் போல, ஆனந்தானுபவத்தர் போதவசைவின்றி யிவ்வானந்த மயமா யிருத்தலி னுவமையாகக் குறிக்கப் பட்டதென்றுணர்க.

• இதனை யொப்புமைக்கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாருமுளராலோவெனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையி னொருவா றமையுமென்க. போத வசைவின்கண் தோற்றல் விட யானந்த மாகலில் போதவொழிவின்கண் தோற்றல் சிவானந்தமெனக் குறித்தற்கு உள்ளத் தழிவிலடுக்குந் தேனென்ற தென்றுணர்க. எங்ஙனமெனின், உள்ளத்தழியாமை யினிடாத்தே னென்றெதிர் மறுக்கப் படுதலி னென்க. மதுரம் பற்றித் தேனை யானந்தத்திற் குவமை கூறுவாரு முளராலோ வெனின் அது நாவிடயமா யிறைப்போது நிற்றலின் இத்துணைச் சிறப்பின்றென்க.

## அன்பரெலா முண்ண

அன்பரெலாமுண்ண வென்பதில் அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதுமென்றிடை விடாததனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்த தென்றுணர்க. எலாமென்பது சரிதாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிறநூல்களெல்லாம் பருவ நோக்காது சாதிசமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரை நிறுவியும் அதிகரித்தல் போலாது, அச்சாதி சமயாதிகளி னுயர்ந்தோர் தாழ்ந்தோர் யாரேனும் பருவத்தராயின் இந்நூற்கு உரியராவரென்பது குறித்த தென்றுணர்க..

உட்கொள வென்னும் பொருளுட்கொண்டு பொருட்டுப் பொருளினிற் போந்த உண்ணவென்னும் வினையெச்சம்

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

ஆனந்தானுபவத்திற்கு விடாத விலக்கணை யாயிற்றென் றுணர்க. என்னையெனின் உண்ணலிற் பசிநீங்கல் போல் ஆனந்தானுபவத்திற் பசுத்துவம் நீங்கலினென்க.

பயன் காரணம் பற்றிவந்த ஒழிவிலொடுக்கநூல் என்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கந் தருநூலென விருவழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையில் தன்னை வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்ததென்றுணர்க.

## ஒழிவிலொடுக்க நூலுரைத்தான்

ஒழிவிலொடுக்க நூலுரைத்தான் என்பதில் வேற்றுமை சாரியையுருபு முதலிய வொன்றும் விரியாது நிற்றலின் ஞானசாரமன்றிக் கருமாசாரமொன்றும் விரியாத விந்நூலின் நின்மலத்தன்மை தோன்றிற்றென்றுணர்க. உரைத்தான் என்பது ஒருவர் மதிநுட்பத்தால்தான் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் றன்மையைப் பிறருமறிந்து பயன் கோடற்குக் கட்டளைக் கல்லினுரைத்துக் காட்டல் போல், சுருதி, குருவனுபவத்தாற்று மனுபவித்தறிந்த சிவானந்தப்பேற்றின் றன்மையைப் பக்குவரு மறிந்துபயன் கோடற் பொருட்டு நூற்கணுரைத்துக் காட்டினாரென்று குறிப்புறுத்திற்றென்றுணர்க.

என்னெனி லுரை என்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலினென்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படு பொருளினிறுதியி னியையாது செயப்படு பொருட்குங் கருவிப் பொருட்குமேல் தாடலைமேல்வைத்து என்பத னிறுதியிற் றொடர்ந்து நின்றதென்னெனின், சிவஞானத் தீக்கையுடையரா யுரைத்தாரென்பது மன்றித் தம

தாசாரியர் திருவடி சான்றாகத் தாங்கண்டவனுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதூங் குறித்தற்கென்க. என்னை? தாடலைமேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே யமையுமாகலின்.

தலைமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவதாய ஓர்ந்து என்பது செயப்படுபொருட்பி னிறுதிநிலையாய்நின்றதென்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞானமேவிடுதலுண்மை குறித்தற்கென்க. எங்ஙனமெனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறையாகலினென்க. உள்ளத் கழுவிலடுக்குந் தேனையன்பரெலா முண்ண ஒழிவிலொடுக்க நூலோர்ந்துரைத்தான் எனக்கொண்டு போதவொழிவின் கண் அடுப்பதாய ஆனந்தத்தை யன்பரெல்லா மனுபவிக்கும்பொருட்டு வேதாகமமுடிபான ஞானநெறியை யாராய்ந்து ஒழிவிலொடுக்க மென்றோர் நூலையுரைத்தார் எனப்பொருள் கூறுவாருமுளர்.

அங்ஙனங் கூறின் ஆசிரியர் பரஞானமுடையாரென்பது தோற்றாது அபரஞானமுடையாராகப் பொருள்படுமாகலினும், அபரஞானத்தாற் கூறப்பட்டநூல் மிகச் சிறவாமையானும், அது பொருந்தாதென்க.

இந்நூலியற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப் பாயிரவிலக்கணத்துள் ஆக்கியோன் பெயரேஎன முதனிறுத்தப்பட்ட நிமித்தகாரணச்சிறப்புடைமையும் இச்செய்யுண் முடிபுக்கெழுவாயாந் தலைமையுடைமையும் பற்றி வள்ளலென முதனிறுத்தியதென்க. இந் நூலாசிரியர்க்கு ஆசாரிய ரிவரென்பது தோன்றற்கு அவ்வள்ளலென்பதன் புடை குருராயனென்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம்

ஆசாரியரென்பவர் பிள்ளையார் என்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல்வேண்டுமாகலின் அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய "வாதுவென்ற" வென்பது முன்கூடிச் சம்பந்தனென வதன்புடை நிறுத்தியதென்க.

இரண்டாம் அடிக்கட் பிள்ளையார் தாள்கள் நிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களின் இயற்கையருளென்று குறிக்க வள்ளலென்றும், அதன் வடிவம் ஆனந்தமென்று குறிக்கமலரென்றும் முறையேவைத்து வள்ளன்மலர்த் தாளென நிறுத்தியதென்க. தாள்களன்றியும் பிள்ளையாரும் அருளியற்கையரேயென்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சத்தந்தோன்றியவுடன் வள்ளற் சத்தந்தோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறை நிலை. தாளென்பதற்குந் தலையென்பதற்குமுள்ள சொற்பொருட் சம்பந்தவின்பம் பற்றித்தாடலையென்றும், தலையென்பதற்கும் மேலென்பதற்குமுள்ள உரிமை நோக்கம் பற்றித் தலைமேலென்றும், மேலென்னுமிடப் பொருட்கு வைத்தற்றொழில் சிறந்ததுபற்றி மேல்வைத்து என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்கும் இறுதியு முதலுமினமாதல்பற்றிவைத்துரைத்தானென்றும்முறையே நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறை நிலையும் சொற்பொருண்முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்றுமுறை நிலை கூறப்புகின் மிகப்பெருகுமாகலி னொருவாறு காட்டினம். மற்றையவுமிவைகொண்டுணர்கவென்க.

இச் செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத்திணையுட் சால்பு முல்லைப் பொருளின்

பாற் பட்டதென்க. என்னை? "சால்புமுல்லைப்பொருள் வான்றோயுமலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத் தன்று" என்பவாகலின் இச்செய்யுள் தன்றுட்செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னானுந் தன்னுறுப்புக்களானுங் குறிப்பாற் குறித்து நின்ற நன்றேனுக்குடைச் செய்யுளென் றுணர்க. அங்ஙனங் குறித்தவை யெங்ஙனமெனின்:—

இச் செய்யுள்தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா வென்னு முப்பாவினுஞ் சிறந்த வெண்பா வாகலின், இக் குறிப்பால் இந் நூல் சரிகை நூல், கிரியை நூல், யோக நூல் என்னு முந்நாலினுஞ் சிறந்த ஞானநூல் என்று குறித்ததென்க.

தான் ஈரசையானுசிட் டிருவகைத்தளை தழீஇ யொழு கிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இக் குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேதமுடிவுங்கூறு மிருவகை நெறியு மொருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தாறெழுத்துக் களைக்கொண்டு நிற்றலின், இக் குறிப்பான் இந் நூல் பாச மொன்றடுத்த தத்துவ முப்பத்தாறென்றும் முப்பத்தாறன் றன்மையிவை யென்றும் பகுத்தறிதல் வகையுமுணர்த்துவ தெனக் குறித்ததென்க.

தான் நான்கடுத்த முப்பத்தாறசைகளை யசைத்து நிற்றலின், இக்குறிப்பாலிந்நூல் அத்தத்துவ முப்பத்தா றனையும் நியதிகளைத் தன் முறையே யுணர்த்துவதெனக் குறித்ததென்க. அஃதேதன் முப்பத்தாறன்மே னான்கடுத்த தென்னெனின், ஆன்ம தத்துவத்தின்வன்மை தோன்றற்

கோரசையும், வித்யா தத்துவத்தின் வலிதோன்றற் கோரசையும், நாத தத்துவத்தின் பெருமை தோன்றற் கிரசையு மிருந்தனவென்க.

தான் பதினைந்து சீர்கொள நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் ஆசாரியத்தன்மை, சீடத்தன்மை, பதித்தன்மை, பசுத்தன்மை, பாசத்தன்மை, உபதேசத்தன்மை, பக்குவத் தன்மை, யோகநிவர்த்தி, கிரியைநிவர்த்தி, சரிதை நிவர்த்தி, விரத்திவிளக்கம், துறவுத் தன்மை, அருளவத்தைத்தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னுமிப் பதினைந்தனையுஞ் சீர்பெறக் கொண்டதெனக் குறித்ததென்க.

தானெழுவகைத் தளையி னியைந்த தாகலின், இக் குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம், அருட்டரிசனம், பரைதரிசனம், பரையோகம், பரையோகநீக்கம், போத வொழிவு, இன்பப் பேறு என்னுமெழுவகை நிலையும் அறி விப்பதெனக் குறித்த தென்க.

தான் தனிச்சொல் பெற்று நான்கடியுடன் நடந்ததாக லின், இக்குறிப்பான் இந்நூல் கூறு மொப்பற்ற ஞானமும் சுத்தச் சரிதை சுத்தக் கிரியை சுத்த யோகம் சுத்த ஞானம் என நான்கு பாதத்தோடு நடப்பதெனக் குறித்ததென்க.

தான் ஒரூஉத்தொடையோடு முத்தொடையாணி யன்ற தாகலின், இக்குறிப்பான் இந்நூற் சுருதி குரு அனு பவமென்னு மூன்று மொத்தியன்ற தெனக்குறித்ததென்க.

அல்லதூஉம் இச் செய்யுளடி நேரடியாய் விதித்தவெ ழுத் தெல்லையினிகவாது நிற்றலின் இக்குறிப்பான் இந் நூல் மெய் வீட்டி னெறித்தாய் அவ்வீட்டி னெறிக்கெல்லை

யாய் ஞானத்தி னிகவாது நின்றதெனினுமா மென்க. எல்லை என்னெனில், "பத்தெழுத் தென்ப நேரடிக்களவே, யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே" என்பவென்க. இங்ஙனம் குறித்தற்கன்றே இச்செய்யுளிற்றடியி னாற் பெயரை வேறடைகொடாது தன்மையி னிறுத்தியதென்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயி னப்பாயிரத் திலக்கண மிதனுளிருந்தவா றெங்ஙன மென்னின் வள்ள லென்பதனாலாசிரியர் பெயரும், குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலைமேல் வைத்துரைத்தா னென்பதனான் ஞானாசாரியராகிய பிள்ளையாரருளுபதேச வழித்தெனவுட்கொளப் படுதலின் வழியும், இந்நூற் றொடர் தமிழ்த்தொடராகலினித் தமிழ் வழங்கு நிலமே யின்னூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவிலொடுக்க நூலென்பதனால் நூற்பெயரும், ஒழிவி லொடுக்கமென அன்மொழித் தொகைப் பெயர் மாத்திரையி னில்லாது நூலென விரித்தமையி னிந்நூலுந் தொகைவிரி யுடையதெனக் கருதப் படுதலின்யாப்பும், உள்ளத்தழுவி லென்பதனாற்கருதிய பொருளும் அன்பரெல்லாம் உண்ண வென்பதனால் அன்பரெலா முணர் பொருட்டிஃ தியற்றுக வென் றுள்ளெழுந்தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங் கருணையெனக் கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத் தழிவி லடுக்குந்தேனென்பதனாற் பயனும் புலப்படுமாக லின் அவை யிருந்தவாறிங்ஙனமென்க.

# இந்நூலுக்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்ட நூல்களின் அட்டவணை

1. திருமந்திரம்
2. தணிகைபுராணம்
3. திருவிளையாடற் புராணம்
4. கம்பராமாயணம்
5. மணிமேகலை
6. காஞ்சிப்புராணம்
7. கந்தபுராணம்
8. தனிப்பாடற் றிரட்டு
9. ஏரெழுபது
10. பிங்கலந்தை நிகண்டு
11. குமரேச சதகம்
12. திருக்குறள்
13. நன்னூல்
14. பட்டினத்தார் பாடல்
15. தேவாரம்
16. திருவாசகம்
17. திருவிசைப்பா
18. வைராக்கிய தீபம்
19. நால்வர் நான்மணி மாலை
20. சிவஞான வள்ளலார்
21. பிரமகீதை
22. சசிவன்ன போதம்
23. பகவற்கீதை
24. தாயுமானவர் பாடல்

25. சிவஞான சித்தியார்
26. ஈசுர கீதை
27. அமிர்த சாரம்
28. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா
29. குசேலோபாக்கியானம்
30. கைவல்ய நவநீதம்
31. தொண்டை மண்டல சதகம்
32. வேலூர் சரித்திரம்
33. சிறுபாணாற்றுப் படை
34. திருப்புகழ்
35. வாதவூரடிகள் புராணம்
36. பிரபுலிங்க லீலை
37. வேதாந்த சூடாமணி
38. சிவஞான வள்ளலார்
39. அவிரோத உந்தியார்
40. திருக்கைலாய ஞானஉலா
41. சுத்த சாதகம்
42. கந்தரனுபூதி
43. நாலடியார்
44. திருச்சிராப்பள்ளி புராணம்
45. கல்லாடம்
46. கந்தரந்தாதி
47. ஒழிவிலொடுக்கம்
48. ஆளுடைய பிள்ளையார் புராணம்
49. திருத்தொண்டர் புராண சாரம்
50. மோகவதைப் பரணி
51. கண்ணுடைய வள்ளலார்
52. சிவப்பிரகாசம்

53. சிடாசாரம்
54. வீராகமம்
55. பெரிய புராணம்
56. கொலை மறுத்தல்
57. ஆகமம்
58. பதினெண்சித்தர் பாடல்

---

வேதமொழி பெயர்ப்பாசிரியரும் இந்நூல் ஆசிரியருமாகிய
**காசிவாசி உயர்திரு. சிவாநந்த யதீந்ர சுவாமிகள்**
மொழி பெயர்த்தநூலும் இயற்றிய நூலும்

1. சாமவேதம் 2. வால்யம் தமிழ்மொழி பெயர்ப்பு
2. சாமவேத ருத்திரம்
3. எசுர்வேத ருத்திரம் [பெயர்ப்பு
4. சங்கரதிக்குவிஜய காவிய வசனம் தமிழ்மொழி
5. வீரசேகர ஞானதேசிகர் புராணம்செய்யுள்
6. வீரசேகர ஞானதேசிகர் புராணவசனம்
7. நால்வர்பிள்ளைத்தமிழ்
8. திருவொற்றியூர் மான்மியம்
9. சிவப்பிரகாச சுவாமிகள்சரித்திரம்
10. தோபாசுவாமிகள் புராண வசனம் [பெயர்ப்பு
11. கிருஷ்ணோப நிடதம்உரையுடன் தமிழ்மொழி
12. வச்சிரசூசிகை உபநிடதம் தமிழ்மொழி
13. தாயுமானவர் நன்னிலைத்தீர்ப்பு [பெயர்ப்பு
14. இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்
15. சைவத்தெளிவு
16. அத்வைதத் தீர்ப்பு

# தோபா சுவாமிகள் புராண வசனம்

கிடைக்குமிடங்கள்:—

**சுப்பிரமணிய சுவாமிகள்,**

தோபா சுவாமிகள் மடம்,

சைதாப்பேட்டை, இராயவேலூர்.

❋

**சண்முகசுந்தர முதலியார்,**

சண்முக நிலயம்,

நெ. 36, பாஷியக்கார நாயுடு தெரு,

மின்ட் பில்டிங் போஸ்ட், சென்னை.

உ

திருச்சிற்றம்பலம்

# தேரையர் சுவாமிகள் புராணம்

---

முதலாவது [சென்னை மாநகர்]

## மெய்க்காட்டி யருளிய காண்டம்.

---

அருளிறை வணக்கம்.

ஒன்றெனக்கண்டே யெம்மீச னொருவனை
நன்றென் றடியிணை நானவனைத் தொழ
வென்றைம் புலனு மிகக்கிடந் தின்புற
அன்றென் றருள்செய்யு மாதிப் பிரானே.

அடியார் வணக்கம்.

பாயவா ருயிர் முழுவதும் பசுபதி யடிமை
யாய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கள்
மேய விவ்வண மலது வேறின்றென வுணர்ந்த
தூய மெய்த்தவத் தடியவர் துணையடி தொழுவாம்.

---

நாட்டுப்படலம்.

---

ஆறு செல்வதுஞ் செலாதது மகந்தரு மறத்தில்
சோறு மிக்கது மிகாததுந் துன்னுறு பசித்தீ
நாறு பல்பொழில் நன்மலர் நலங்களு நாளும்
ஏறு பண்ணைகொள் சோழநா டென்பதே யிசைக்கில்.

சிவபெருமான், மலையரசன் பாவையாரைத் திருமணம் புரிந்தருளிய காலத்து, தேவர், முனிவர் முதலாய பல் கணத்தவரும் இமயமலையின்மீது திரண்டிருந்தமையின் தரை பொறையாற்றாது வடபால் தாழ்ந்து, தென் பால் உயர்ந்து நிலை தடுமாறுங்கால், இறைவன், தென்றி சைக் கண்ணுள்ள பொதிகை மலையிற் சென்றிருந்தருளு மாறு அகத்தியனார்க்குப் பணித்தருள, அகத்திய முனிவ ரும், பரசிவனார் திருவாணையைச் சிரமேற்கொண்டு தென் றிசை வருங்கால், தென்னாடு தண்டமிழ் நாடென்றும், அங்குள்ள மக்கள் தமிழ்க் கல்வி மிக்காரென்னுங் கூறப் பெறுவர்; அனையவர் வினவியதற்கு விடை யளித்தல் வேண்டும் ஆதலின், எல்லாம் வல்ல இறைவ! தேவரீர் அடியேற்குத் தமிழ்மொழி யியல்களை அறிவுறுத்தருளல் வேண்டும், என்று குறையிரந்து கொள்ள, அவ்வாறே, சிவபெருமானால் அதை அருளிச் செய்யப் பெற்றுத் தமிழ் நாட்டிற்கு எழுந்தருளினர் என்பது சரிதத்தின் சாரமாம். இதுபற்றியே, அகத்தியனாரைத் தமிழிற்கு முதற்குரவ ரென்ப.

இதன் விரிவை,

"விடைகொடு போவா னென்றை வேண்டினனேகுந் தேயம்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப அந்தநாட்டின்
இடையயின் மாந்த ரெல்லாம் இன்றமி ழாய்ந்து கேள்வி
உடையவரென்பகேட்டார்க்கு உத்தரமுரைத்தல்வேண்டும்"

என்னும் தொடக்கத்திய திருவிளையாடற் செய்யுளானும், மற்றும்,

"தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்"

எனவும்,

"தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துக்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல் லேற்றுப்பாகர்"

எனவும்,

"என்றுமுள தென்றமிழ் யியம்பி யிசை கொண்டான்"

எனவும் விதந்தோதுகின்ற, காஞ்சிப்புராண கம்பராமாய ணத் திருவாக்குகளானுங்கண்டு கொள்க.

இவ்வண்ணமாக அகத்தியனார், தண்டமிழ் நாட்டிற்குப் பண்டொருநாள் வரும் பொழுது தமது திருக்கரத்தி லிருந்த கங்கை நிறைந்த கமண்டலத்தைக் 'கவேரகிரி' என்னும் (தலைக்காவேரி) ஒரு மலையின் மீது வைத்துவிட்டுத் தமது காலைக் கடனைச் செய்து கொண்டிருக்குங்கால், சூரபன்மனுக்கு அஞ்சிச் சீர்காழியை யடைந்த இந்திரன் உண்டாக்கிய நந்தவனம் வாடியதன் பொருட்டுப் பரசிவனார் 'இங்கு ஒரு நதி வரும்,' என்று அருள் புரிந்த வாறே, இந்திரன் விநாயகக் கடவுளை யுபாசித்து வந்தமையின் எந் நாட்டினுஞ் சிறந்ததாகத் தென்னாட்டைச் செய்வதற்குத் திருவுளங் கொண்ட விநாயகப் பெருமானார், காக்கை வடிவாய் அக்கரகத்திலிருந்த நீரைக் கவிழ்த்து விட்டனர்; அந் நீரால் நதியாய்ப் பெருகப் பெற்றதாகிய காவிரி நதியும் தேவ வளங்களையு முடையதாயிற்று. இதை

"அமர முனிவன் அகத்தியன்றனாது,
கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை"

என்னும் மணிமேகலையிற் காண்க.

அல்லது, தவ முனிவருட் சிறந்த கவேர முனிவர் பிரமனைக் குறித்து வரந்தனைக்கோரி அருந்தவம் புரிந்து பிரமதேவனருளால் மாயோனது மாயையே தமக்கு ஒரு

பார்வையாகப் பெற்று முத்தி வீடெய்தினர். பின்னர் அப் பாவையார் பிரமதேவனது ஆணையால் ஒரு நதியாய்ப் பெருகிக், கவேர முனிவரின் கன்னிகை யெனவுமாய்க் காவிரியென வழங்கப் பெற்றது என்று, ஆக்னேய புராணங் கூறுமாறு தோன்றியதும், தவளை, முதலை, பன்றி முத லானவைகட்குஞ் சுவர்க்கமளித்ததுமாகிய காவிரி நதி பாய்ந்து தேவரும் மிக வேண்டத்தக்க எண்ணிறந்த வளங் களை யுடையது சோழ நாடாம்.

மற்றும், இந்நாடு, திஷ்யந்தனது பௌத்திரனாகிய இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி என்னும், சுராதிராச சோழனால் 'சோழபுரம், என்னும் ஒரு தலைநகர் உண்டாக்கப் பெற்றது கொண்டு 'சோழமண்டலம், சோழநாடு, சோழ தேசம் என்பது முதலான பல காரணப்பெயர்களால் வழங் கப் படுகின்றதும்; "பொன்னி, என்னுங், காவிரி நதி பாய்ந் துண்டாகும் எல்லா வளங்களையு முடையதாமாதலின் புனல் நாடு, பொன்னி நாடு, என்பது முதலான திருநாமங்களால் வழங்கப் பெறுகின்றதுமாம்.

இந்நாட்டின் எல்லையோ? மிகப்பெரிதாம். அதாவது இருபத்து நான்கு காதங்களையுடையதாம்.
இதை,

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என்னும் வெண்பாவாற் காண்க.

அஃதன்றியும்,

'சோழவள நாடு சோறுடைத்து' என்னும் ஔவைப் பிராட்டியாரின் அமுத வாக்கிற் கிணங்கப் பிறநாட்டு மக்களையும் பசிப்பிணியால் வருந்தாமற் பாதுகாத்து அன்னை போன்று சோற்றையளிப்பதும்,

ஒவ்வொரு காலத்தில் கருவூர், திருவாரூர், காவிரிப் பூம்பட்டினம் என்னும் நகரங்களைத் தனக்குத் தலைநகராகக் கொண்டுள்ளதும்,

பாடல்பெற்ற நூற்றுத்தொண்ணூறு சிவாலயங்களை யுடையதும், கந்தவேள் கோவில், மாயோன் கோவில்களால் அணியுற்றதும், பல்சமய மடாலயம், சத்திரம், திருவாசல் முதலானவைகளாற் பொலிவுற்றதும்,

எண்ணிறந்த கவிகளாலும் அலங்கரித்துக் கூற முடியாத பல்வகைச் சிறப்புக்களை யுடையதுமாகும் இந்நாடு. இதன் விரிவை, பரக்கக்கூறும் பெருநூல்களிற் காண்க.

அன்றியும், இதுஇவைகளோடு அமைந்ததுடன் முசுகுந்தன், தேவேந்திரனுடைய ஆன்ம பூசைக்கண் உள்ள 'விடங்கர், என்னும் தியாகராசப் பெருமானைக் கொண்டு வந்து தாபித்துள்ள தலங்களையுடையதும்,

சிவபெருமான், இரவில் மதுரைக்குக்கொண்டுபோய்ப் பாண்டியனால் மீன் முத்திரையிட்ட கோயிற் கதவையுடைத்து உமாதேவியாரோடு தரிசனங் கொடுத்தருளி, பின், தனது இடப முத்திரையை வைத்தருளி அருள்புரியப் பெற்ற காடுவெட்டிய சோழன் முதலான பல சோழராசாக்களால் ஆளப்பெற்றதும்,

சேக்கிழாரை, பெரிய புராணம் பாடுமாறு வேண்டிக் கொண்ட அநபாய சோழன் முதலான பல அரசர்களால் திருவருண் மணம், அடியார் கணம், பெரியார் குணம் தழைந் தோங்கப் பெற்றதுமா மென்க.

நாட்டுப்படலம் முற்றும்.

---

## நகரப்படலம்.

"துதித்திடுந் திரிசிரா சொல்லுஞ் சொல்லினன்
மதிச்சடை முடியினன் வரங் கொடுத்தலால்
உதித்திடும் அளகையே யொப்ப தாகும்அப்
பதிப்பெயர் திரிசிராப் பள்ளி யானதே."

—திரிசிராமலைப் புராணம்.

முன்னொரு கால், அனந்தனும், வாயுவும் தம்முள் வல்லான் யாவன் எனச் செருக்குற்று, அனந்தன், மகாமேரு கிரி முழுதையும் தனது உடம்பால் மறைத்துக்கொண்டனன்; அதைக்கண்ட வாயுபகவானும் வெகுண்டு, தனது முழுவன்மையாலும் முடிகளுடன் மகாமேருகிரியைப் பிடுங்கித் தென்றிசைக் கண் வீசினன், அவற்றுள் முதலாவது சிகரம் விழுந்ததே சீகாளத்தியாம். இரண்டாவது திரிசிரா மலையாம். மூன்றாவது திருக்கோணமா மலையாம். இம் மூன்றுந் தென் கைலைகள் எனப்படுவன. பரசிவனார், இம் மூன்று சிகரங்களையும் சிவலிங்கத் திருவருண் மேனிகளாகக் கொண்டு ஆங்காங் கருளுகின்றனர்.

இம் மலையின்மீது, முன்னொரு கால் இராவணன் 'திரிசிரா' என்னும் அரக்கனை இருத்திப் பகைவரைத் தடுக்குமாறு செய்ய, அவ்வாறே திரிசிரா என்னும் அரக்கன் இங்கு வாழ்ந்து வந்தமையின் இம்மலை திரிசிராமலை யென வழங்

கப் பெற்றது. அக்கால், அத் திரிசிரன் அங்கெழுந்தரு ளிய இறைவனைத் தொழுது வருங்கால் அன்பு மேலிட, அச் சிவனார்க்கு, திருக்கோவில், மண்டபம், மதில் முதலானவை களையும் இயற்றி, இம்மலையின் அடிவாரத்தில் ஒரு பட்டி னத்தையும் உண்டாக்கினன். அதனால் அது 'திரிசிரபுரம், எனத் திருநாமமுடையதாயிற்று.

மற்றும், சாரமாமுனிவர் கைலையங்கிரியில் கவலையை நீத்துத்தவஞ் செய்ய அதற்கிரங்கி, பரசிவன் அவருக்குக் காட்சி கொடுத்து, அன்ப! நினக்கு யாது வேண்டுமென அவர்தமக்கு முத்தி வேண்டும் என்றிரக்க, அதற்குப் பரசிவனார், 'அன்ப! நீ தென்கைலை யென்னும் திரிசிராமலை யில் எம்மை வழிபடுவையேல் அப்போது முத்தி அளிப் போம், என்றருளி மறைந்தனர்.

அவ்வாறே சாரமாமுனிவர், திரிசிராமலையை யடைந்து தவஞ் செய்து வருவதுடன் இறைவர்க்குப் புட்பப்பணியை யுஞ் செய்து கிடந்தனர், அக்கால், நள்ளிரவில், என்று மறியாத ஒரு அரிய பெரிய நறுமணங் கமழ்வதை யுணர்ந்து இதென்ன வியப்பு? என்று சிந்திக்கும் நாளில் அவரது கனவில் இறைவர்தோன்றி, "அன்ப! நீ இரவில் மறைந் திருந்து நோக்குவையேல், அதைத் தெரிந்து கொள்வை" என்றருளினர். அவ்வாறே செய்ய நடுவிராப்போது நாக கன்னிமார்கள் எழுவர் வந்து செவ்வந்திப்பூக்கள் கொண்டு அச்சிவபெருமானைப் பூசித்தனர். அப்போது முன்போல் திவ்ய நறுமணங் கமழ்ந்தது. சாரமா முனிவர், அதன் உண்மை யுணர்ந்து நாடோறும் இத்தகைய நறு மலரைக் கொண்டு பூசிக்க வேண்டுமென்று பேரன்புடையராய் அந் நாக கன்னிகைகள் பூசித்துச் செல்லுங்கால் அவர்கள்

முன்சென்று, அவர்களை நோக்கி, நீவிர் யாவர் என்று வினவினர். அதற்கு அவர்கள் "யாம் நாகலோகத்திலுள்ள கன்னியர்கள், இங்குச் செவ்வந்திப்பூக்களால் அந்தியங் கடவுளை யருச்சிக்க வந்தோம் இப்போது பூசித்துக் கொண்டு செல்லுகின்றோம்" என்றனர்.

அதைக் கேட்ட சாரமா முனிவர், அற்றேல், எமக்கும் அத்தகைய செவ்வந்திப்பூச் செடி கிடைக்குமோ என்றனர். அதற்கவர்கள், நாகலோகத்திற்குவரில் கிடைக்கும் என்றனர். அவ்வாறே சாரமா முனிவர் நாகலோகஞ்சென்று செவ்வந்திப்பூச் செடியைக் கொண்டுவந்து திரிசிரபுரத்திற் பயிர் செய்து மிகப்பெருக்கி, நாடோறுஞ் செவ்வந்திப் பூக்களால் தாயுமாகிய தாணுவை இறைஞ்சி வந்தனர்.

அக்கால், உறையூரையாண்ட பராந்தக சோழன், செவ்வந்தி நாதனைத் தரிசிக்க வந்தபொழுது அவன் மனைவி அந்நறுமணத்தைக்கண்டு அச் செவ்வந்திப்பூவை விரும்ப, அவ்வாறே சோழனும், நாடோறும் செவ்வந்திப்பூக்களைக் கொண்டுவருமாறு ஏவலாளரைச் செலுத்தினன். அதைக் கண்ட சாரமாமுனிவர், அப் பணியாளனுடன் முரணுற, அதைக்கண்ட சோழன், அம்முனிவரைத் துன்புறுத்தியதுடன் செவ்வந்திப் பூக்களையும் வலுவில் தனது மனைவிக்குக் கொண்டு வந்து கொடுக்கும்படி ஆணை செய்து விட்டனன்.

அதைக்கண்ட சாரமா முனிவர், செவ்வந்தி நாதரிடஞ் சென்று பலவாறும் முறையிட, அதற்கிரங்கி, இறைவனார் எழுந்தருளி "அன்ப! நீ அஞ்சற்க, ஏழ தினத்தில் உறையூரையும் அழிப்போம் சோழனையும் ஒழிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே, எல்லாம் வல்ல

இறைவனருளால் மண்மாரி பெய்து உறையூரழிந்து விட்டது. அப்போது, தப்பி ஓடிய சோழனும், அவனுடைய மனையாள் ஒருத்தியும் இறந்தனர். மற்று ஒரு மனையாள் காவிரிநதிப் பெருக்கின் வழியே போய் ஓரிடத் தொதுங்கினள். அவள், அக்கால் கருப்பவதியாயிருந்தனள், இருவருளால் அவள் வயிற்றிலிருந்து ஒரு புத்திரன் பிறந்தனன். அவனே, காவில் கரிக்கோடிட் டிருந்தமையின், கரிகாற் சோழன் எனப்பெயர் பெற்றவன். அவனே தஞ்சை இராசராச கோபுரம் எடுத்தவனுமாவன்.

ஒருகால், இத்தலப் பெருமானூர் தனகுப்தன் மனைவிக்குத் தாயாய் வந்து மருத்துவம் பார்த்தமையின் 'தாயுமானூர், என்னுங் காரணத் திருநாமம் பூண்டவராவர். அம்மையார் மட்டுவார் குழலியாவர். இத்தலம், செவ்வந்திபுரம் என்றும் வழங்கப்பெறும்.

மற்றும், இறைவன் முடியை யறிந்து வந்தோம் எனப் பொய்மை கூறியதின் பொருட்டாய்ப் பிரமன், பெற்ற சாபத்தை நீக்கியதும், அகத்தியர், இந்திரன் முதலானோர்க்கு நலம் தந்ததும் இத்தலமாம்.

மற்றும், இது காவிரிநதியின் கரையிலுள்ளதும், சீரங்கம், திருவானைக்கா முதலான அரும் பெருந்தலங்கள் சூழப் பெற்றதும், ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய வரசு, ஐயடிகள் காடவர்கோனாயனூர் முதலானவர்களாற் பாடப் பெற்றதுமாம்.

அஃதன்றியும், விசயரங்க சொக்கநாயகரின் சம்பிரதியாகிய கேடிலியப்பபிள்ளை என்பவர், தாயுமாகிய இத்தனிப்பெருங் கருணைத் தடங்கடலை வழிபட்டு வந்து, அவ்விறைவரது திருவருளால் ஒரு அருமைப் புதல்வனைப்

பெற்றெடுத்தனர். அப்புதல்வன் தாயுமானர் திருவருளாற் றோன்றியதாலும், இளம்பருவந் தொடங்கித் தாயுமான பரசிவனையே வழிபட்டு வந்தமையாலும் அவனுக்குத் தாயுமானவன், என்றே திருநாமஞ் சூட்டினர். இப்புதல்வரே பின்னர் மாதவராய் ஞானநிட்டை கைவரப்பெற்று தமது அநுபூதி ரசந் ததும்ப சமரசப் பெருநெறியை யறிவுறுத்தும் இனிய தமிழ் நூலை இயற்றியருளிய மகானுவர்.

மற்றும், எண்ணிறந்த பெருமைகளையுடையது இத் திரிசிரபுர நகரமாம். இதன் விரிவை, தலபுராணத்திற் காண்க.—திரிசிரபுரம்—திருச்சி.

நகரப்படலம் முற்றும்.

---

## திருவவதாரப் படலம்.

மண்ணிலார் வேளாண் மக்கள் மாண்புற மற்றுஞ் சான்றோர்
கண்ணினோர் சோதி யென்னக் காட்டிட மக்கட் கெல்லாம்
எண்ணிலாச் சீருந் தந்து எம்மையுங் காக்க விங்குப்
பண்ணுமா யோகத்துற்ற பலமென தோபா வந்தான்.

வேளாண்மையர் பெருமை.

---

இமயமலையில் தவம்புரிந்த உமையவளை, பரசிவன் திருமணம் புரிந்தருளிக் கைலையில் எழுந்தருளியிருக்குங்கால், உமையவள், கமலினி, அநிந்தை முதலான சேடியர்களோடு மகளிர் விளையாட்டைச் செய்யும் பொழுது ஒருநாள் சிவனோடு தனித்திருக்குஞ் சமயத்தில் உமையவள், ஐய! வானிற்றிகழ்ந்து இவ்வுலகையும் விளக்கும், சந்திரனும், சூரியனும் யாவர்? என்றுவினவ, அதற்குஇறைவர், அவர்கள் எனது இருகண்களேயாவர் என்றனர். அற்றேல், உமது கண்களை மூடிக்கொள்ளில் உலகம் இருளடைந்து விடுமோ? என,ஆம் என்றருளினர். அதைக்கேட்டமலைமகள், திருவிளையாட்டாக, தனது கரங்களால் எம்பெருமானுடைய திருக்

கண்களைப் புதைத்துக் கொண்டனர். அக்கணமே உலகெலாம் இருண் மயமாயிற்று. அதனால், மூவரும் முத்தொழிலை நடத்த முடியாமல் பரசிவனைப் போற்றினர். அக்கால் பெருங்கருணைப் பரசிவனார், தமது நெற்றியில் ஒரு கண்ணைத் திறந்தருள அது எண்ணிலா இரவிகளெழுந்தனை போன்று சுவாலைகளை வீச, அதனாற் பயமுற்று அம்மையார், தமது திருக்கரங்களை யெடுத்துக் கொண்டனர். அத்தருணம் மலைமகளின் கரகமலங்களில், நெற்றிக் கண்ணின் சூடு தாக்கியதனால் வியர்வையெழ, அது ஒரு கங்கை நதியாயிற்று அத்தகைய கங்கை நதியில், வேளாளர்கள் தோன்றி அம்மையும் அப்பனுமாகிய பரசிவனையும் பார்வதியையுஞ் சூழ்ந்து கொண்டனர்.

இக்கருத்தை,

"கங்கை பெறுங் காராளர் கருவி யெழுபது முரைக்க"

என்றற்றொடக்கத்து ஏரெழுபதின் வாக்கானும்,

"பரப்பு நீர்க் காவிரிப் பாவை தன் புதல்வன்"

என்றற்றொடக்கத்து நாடு காண் கதையாலும்'

மற்றும், ஏரெழுபது, திருக்கை வழக்கம், திருத்தொண்டர் புராண வரலாறு, சேக்கிழார் புராணம் முதலான நூல்களானும் இனிது உணர்க.

## வேளாளர் என்பதின் பொருள்.

ஈண்டு, வேள் எனப்படும் நல்ல நிலத்தை, அதாவது ஐந்திணையுட் சிறந்த மருத நிலத்தை உழுது வளமாக்கி ஆளுகின்றமையாலும், வேள்—விருப்பு, அதை ஆள்பவர், எல்லாரும் தம்மை விரும்புமாறு செய்கின்றவ ராதலாலும், வேள்—நன்றி அதை ஆள்பவர் அதாவது நன்றியாளரென்பதாலும் வேளாளர் எனப்படுவர். மற்றும் வேள்-ஆண்

மகின் எனவே இளங் கோக்கள். இவர்கள் பதினெண் குடிகளையும் தம் வயப்படுத்தி ஆளுகையாலும் வேள்—ஈகை, அதாவது கொடையுடையாராதலினாலும், வேள்—சத்தியம், எனவே சத்திய முடையாராதலினாலும் வேளாண்மையர் எனப் பெறப் படுதலின் வேளாளர் என்னும் பெயர் பெற்றனர் என்பது உணரற்பாலது.

இவற்றுள்; வேளாண்மை—உபகாரம், அதாவது உதவி செய்கின்றவர் என்பதே சிறப்புடைத்தாம் எனக் கொள்க.

எதுபற்றி யெனின்?

"மெய்ம்மையுங் கொடையும் வேளாண்மையாகும்"

என, பிங்கலந்தை நிகண்டும்,

'தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

என, தெய்வப் புலவர் திருமறையும், மற்றும் பிறவுங் கூறுமாற்று லென்க.

அஃதன்றியும்,

மகமேரு மலை, கங்கையாறு, எழுபத்தொன்பது நாடு, ஆயிரத்துத்தொளாயிரம் நகரங்கள், ஐராவதம்—ஊர்தி, உச்சை சிரவம்—குதிரை, செங்குவளை—மாலை, மேழி குயில் சிங்கம் என்பன—கொடி, அலப்படை—கொடை, முரசு, என்னும் தசாங்கங்களையுமுடையவர் இவ் வேளாண்மையர்.

இதன் விரிவை,

'நெடுநீர் வேலிப்புடவி போர்த்த' என்றற் றொடக்கத்துப் புராண சாரத் திரட்டின் பாட்டாலுணர்க.

மற்றும் இதை,

"அரியணை யநுமன்றாங்க வங்கத னுடைவாளேந்த"
என்றற் றொடக்கத்துக் கம்ப நாட்டாழ்வார் கனிவாய் மலர்ந் தருளிய கம்பராமாயணம் திருமுடி சூட்டுபடலத்துச் செய்யுளாலும் தெளிந்து கொள்க.

மற்றும், வேளாண்மையர் இருபத்தொரு சின்னங்களை யும், பதினெண் வகை விருதுகளையும், பதினெட்டுப் பரி வாரங்களையும் உடையவர்களுமாவர். விரிக்கிற் பெருகும்.

---

[வேளாண்மையாரின் பெருமை]

சுருக்கப் பாட்டு,

குமரேச சதகம்.

---

நல்ல தேவாலயம் பூசனை நடப்பதும்
நாடோறும் மழை பொழிவதும்
நாடியத போதனர்கள் மாதவம் புரிவதும்
நவில்வேத வேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல் புவி செழிக்கு நலமும்
சுப சோபனங்களும் கொற்றவர்கள் செங்கோல்
துலங்கு மநுநெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையும் அதிக புகழும்
மிக்க வதிகாரமும் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூரர் வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ வன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடு
மலை மேவு குமரேசனே"

ஈண்டு குமரேசர் என்பவர் சோழவள நாட்டில் திருப்புயல் வாயல் என்னுந் தலத்தில், மலைமேலெழுந் தருளியுள்ள குமரக் கடவுளாவர். இது குமர—ஈசன் எனப்பிரியும். இந்நூலாசிரியர் குருபாத தாசர், இவ்வாறே அறப்பளீசுர சதகத்திலுமுண்டு என்பதையு முணர்க.

தந்தை தாயரின் மாண்பு

புகழ்தற்கரிய பெருமை மலிந்த, சோழவள நாட்டில், திரிசிரபுர மென்னு நகரத்தில், வேளாண் குடியில் இற்றைக்குச் சுமார் நூறு வருடங்கட்கு முன்னர், உடல் வலி, மனவூக்கம், அருள், கொடை, அன்பு, கடவுள் வழிபாடு, அடியார் தொண்டு, கல்வி, கேள்வி, முதலான நற்குண நல்லொழுக்கங்களிற் சிறந்தவரும், சைவத்திலும் தமிழிலும் மிகுந்த பற்றுடையவரும், சைவ சமயமே எல்லா மதங்களினுஞ் சிறந்ததா மென்னுந் தெளிவையுடையவரும், சைவ சமய நெறியில் தவறாது நடந்து கொள்கின்றவருமாகிய "சிவகுருநாதப் பிள்ளை" என்று ஒருவர் இருந்தனர். ஈண்டுச் சைவ சமயமே சிறந்ததென்றதை,

"சைவத்தின் மேற் சமயம் வேறிலை" "சைவ சமயமே சமயம்" என்றற்றொடக்கத்து உண்மை வாக்குகளானுணர்ந்துகொள்க.

அத்தகையராகிய இவர்,

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்னுந் திருவாக்கின்படி, கற்பு முதலிய நற்குணங்களையுடைய ஒரு வேளாண் மரபிற் பிறந்த மாதை மணந்து, காதலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டு இன்புற்று, சிவ

பூஜை, தேவார திருவாசக மோதல் முதலியவற்றிலும் சிவனிடத்தும் பேரன்புடையவராய் இல்லறத்தை வழாது நடத்தி வந்தனர். இவரோ, தவமுடையாருள் மிகச் சிறந்தவர். என்னை?

"ஆற்றினொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து"

எனத் தெய்வத் திருமறை தெளியக் கூறியிருத்தலினென்க.

இச் சிவகுருநாதப்பிள்ளை யென்பவர், அசோகன் முதல் அளவிறந்த மன்னர்கள் ஆண்டு வந்த இந்நாட்டை, மேல் நாட்டு ஆங்கில வணிகர் வட மேற்கு நிலவழி, பாரசீக வளைகுடா வழி, ஏடன் வழியாய் வந்து பண்டம் மாற்றுத் தொழில் காரணமாகக் கைக் கொண்டு ஆண்டு வந்தபோது, ஆங்கில மன்னரின் சேனைகளாக, நமது தமிழ் மக்களும் சேர்ந்து இருந்த காலாட் படையில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராய், படைக்கலப் பயிற்சி செய்து கொண்டு அதனால் வரும் பொருளால் இனிது வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு வாழ்ந்து வருநாளில் சில ஆண்மக்களையும் ஒரு பெண்ணையும் பெற்றனர்.

### தோபாவின் தோற்றச் சிறப்பு

அதன் பின்னர், சில தினம், இவரும் இவர் மனைவியும் தலயாத்திரைகள் செய்து கொண்டு முடிவில் இராமேசுரம் போய்த்தீர்த்தமாடி, இராமன் பூசித்துய்ந்தஇராமலிங்கத்தையும் வணங்கிப் போற்றிக்கொண்டு மகிழ்வுடன் வந்துசேர்ந்து முன் போல் நல் வழியில் ஒழுகி வரும் நாளில், முற் பிறப்பிற் செய்த தவப்பயனாலும், இராமலிங்கப் பெருமானின் திருவருளாலும், அவ்வம்மையார் கருப்பந் தரித்து உரிய

காலத்தில் ஒரு ஆண் மகவைப் பெற்றனர். இக்குழந்தை பிறந்தபோது, மூத்த குழந்தைகள் பிறந்தபோது, முன்னர் தாம் ஒருநாளுங் கண்டறியாத பெருங் களிப்பை இருவரும் அடைந்தனர்.

இது,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்னுந் திருவாக்கிற் கிணங்க எழுந்ததோர் அறிகுறி போலும்?

திருப்பெயரிடல்

இக் குழந்தையின் வடிவம் மிக அழகுற்றிருந்ததுடன் ஞானப்பொலிவிற் கிடமானதை நோக்கி, பிறந்த நாட்சடங்கு களை இனிது செய்து முடித்து முன்னர்இராமேசுரஞ் சென்று வந்ததற்கு அறிகுறியாகவும் இராமேசுரப் பெருமா னின் அருளாற் கிடைக்கப் பெற்றமையானும் 'இராமலிங் கம்' எனப்பிள்ளைத் திருநாமஞ் சூட்டினர்.

இக்குழந்தையைக் கண்டார் பலரும், இதன் முகப் பொலிவு, அகக்குழைவு, மனத்தெளிவு முதலான நற்குணக் குறிகளைக்கண்டு வியப்புற்று, இக் குழந்தை, செயற் கரிய செயலை செய்யத்தகுந்த பெரியார் கொள்கையை யடை யும் என்று தோன்றுகின்றது, இதைக்கண்ட பொழுதே உள்ளங் கவர்ச்சியடைகின்றது. கள்ளந் தவிர்கின்றது, கொள்ள மனமெழுகின்றது. இத்தகைய பிள்ளையை யாம் பெறவில்லையே யென்று மனம் துள்ளுகின்றது, மற்றும், இக்குழந்தையைப் பெற்ற தந்தை தாய்மார்,

"தக்கார் தகவில ரென்பதவரவர்
எச்சத்தாற் காணப்படும்."

என்ற மறைவாக்கின்படி தக்கவர்களே யாவார்கள்; இவர்களும் இவர்களுடைய குலமும் ஈடேறி விடும் என்று பல வாறாக வியந்து போற்றிக் கொண்டாடினார்கள்.

இயற்கையில், இக்குழந்தை பிறந்த பொழுது அவ்வூரில் மங்கலச்சின்னங்கள் பல நிகழ்ந்தன.

திருவவதாரப் படலம் முற்றும்.

---

## கலைதேர் படலம்

### எழுத்தறிவித்தலும் கற்ற சீரும்.

கற்றவன் கல்வியைக் கனவினில் மறந்துபின்
உற்றிடு நனவினி லுணர்ந்துகொள் தன்மையில்
பெற்றவர் குரவர்கள் பெரிதுமுன் வியப்புற
முற்றவக் கல்விகள் முழுதையுங் கற்றனன்.

இக்குழந்தை, அறமுடையாரின் செல்வம் போன்றும், பொறையுடையாரின் ஞானம் போன்றும், நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. வளர்ந்து வந்து, கல்வி கற்கும் இளமைப் பருவம் வந்தவுடன், முறைப்படி எழுத்தறிவித்தவுடனே, கல்விகற்று மறந்தானொருவன், மறித்தும் அக்கல்வியை ஸ்மரித்துக் கொள்ளுமாறுபோல வருத்தமின்றி, உபாத்தியாயர்சொல்லி வைத்தது ஒருகூறும், தன்னாற் கற்றது இருகூறும், திருவருளாற் றிகழ்ந்தது ஒருகூறுமாகத் தமிழ்க் கல்வியை நிறையுமாறு கற்றுக்கொண்டது. மற்றும், பாடங் கேட்குங் காலோ,

"பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத் தொடுபழகி யவன் குறிப்பிற் சார்ந்து
இருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன வார்வத் தனாகிச்

"சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச்
செவிவாயாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து,"

இனிது கற்றுக் கொள்ளும் நன்மாணாக்கரின் முறைப்படி கற்று வந்தது.

மதி வளம்

இளமைப் பருவத்திலேயே இச்சிறுவர்,

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

என்னும் மறைப் பொருளைக் கைவிடாது பற்றிக் கொண்டனர். இதுவே முடிவான பிறப்பின் சின்ன மாம்.

இவ்வாறு 'இராமலிங்க பிள்ளை' என்னும் பிள்ளைத் திருநாமமுடைய இச்சிறுவர் வளர்ந்து கல்வி கற்று இளமைப் பருவங் கழிந்து காளைப் பருவம் வருதற்கு முன், பெற்று வளர்த்த புண்ணிய சீலர்களான தாய் தந்தையர்கள் உயிர்துறந்து இறைவன் கழலை யெய்தினர்.

உண்மை ஞானியாகிய தோபா சுவாமிகள் எனப் பெயர்பெறும் இப்பிள்ளையைப் பெற்றாரின் குலமும் வீடடையுமெனின், இவரைப் பெற்றோர்கள் சிவகதியை யடைந்தாரென்பதிற் சொல்லற் பாலதென்னை?

இதை,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்னுந் தமிழ் வேத மந்திரத்தாலும், பிறவாற்றானுந் தெளிந்து கொள்க.

"ஒருவன், பற்றை யொழித்துப் பரகதி யடைய விருப்புற்றவப்பொழுதே அவனுடைய குலம் புநிதமாய்விட்டது" என்னும் ஆன்றோருரையும் ஈண்டுக் கவனிக்கற் பாலது.

இளமையில் மன்னர் பாதுகாத்தல்

இவ்வண்ணம், தாய் தந்தையர்களை நீத்த இச்சிறுவர் உள்ளத்திற்சிறிதும் நைவின்றி, "அவரவர் வினையின் அவரவர் வருவார். ஆருக்கார் துணையதாகுவர்கள்" என்று துணிவுற்றிருந்தனர்.

அதுகண்ட துரைத்தனத்தார், சேனைக்களத்திலுள்ள காலாட்படையிலுள்ள மக்களுடன் இச்சிறுவரையுஞ் சேர்த்துவைத்து அன்போடு வளர்த்து வந்ததுடன் படைக்கலப்பயிற்சியையும் இவர்க்குப் பயில்வித்தனர்.

அரசர்க்கு, இத்தகைய மக்களைப் பாதுகாத்தல் முறையேயாம்.

இதனாலன்றோ, தெய்வப்புலவர்,

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறை யென்று வைக்கப்படும்."

என்று திருவாய் மலர்ந்தருளியதுடன் நீதியையும் வகுத்தனர்.

ஆதரிப்பாரில்லாத இளைஞரைப் பாதுகாத்தவர் பிதாவெனப்படுவரேனும், ஈண்டு மன்னராதலின் இறைவர் எனப்பட்டனர்.

காலாட்படையிற் சேர்தல்

இச்சிறுவரும், ஆயுதம் பயிலல், பாய்மா வேறல் முதலான போர்த்தொழில்களில் மிக வல்லுநராய் வந்து காளைப் பருவம் கிட்டியவுடன் துரைத்தனத்தார், இவரது தந்தையார்

செய்து வந்த உத்தியோக நிலைமையில் அமர்த்தி அப் பட்டத்தையுமளித்துப் போர்வீரர் படைகளுள் இவரையும் ஒருவராகச் சேர்த்துக்கொண்டனர்.

அத்தகைய இராமலிங்கம் என்னும் பிள்ளைத் திருநாமம் பூண்ட இப்பெருந்தகையார், வெளியில் போர்த்தொழில் பயின்று வந்தாரெனினும், உள்ளில் அஞ்ஞான வேந்தன் படைகளை யழிக்க, அருள், அன்பு, நிலையாமை முதலான ஞான வேந்தன் படைகளையே பயின்று வந்தனர் என்னலாம். இதன் விரிவை அஞ்ஞுவதைப் பரணியிற் காண்க.

நல்லுணர்வு தோன்றல்

இவ்வண்ணம் இவர் மன்னர் படையில் இருந்து வரும் பொழுதே, போன பிறப்புக்களிற் செய்த புண்ணிய விசேடத்தாலும்,

'தொண்டரைத்தானே தூய கதியினிற் செருகுப்பன்' என்ற வாங்கே திருவருளிருந்ததாலும், மனமிகத்தூயராய் உடல் பொருண் முதலியன நிலையாமையை யுடையவைகள், நிலைத்த பொருள் ஒன்று உண்டு, அதை யடையில் ஞானந் தோன்றிப் பந்த மொழிந்து பரபதம் எய்தலாம் என்பது முதலான முத்தி நெறிகளை ஆராயத் தொடங்கினர். அது தொட்டுச் சில நூல்களையுங் கற்றுணர்ந்தனர், அவற்றுள்ளும், தமக்கு உதித்தவாறே,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

எனவும்,

"மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ் செந்தீ
ஐயா நின்மாயை யுருவெளித் தோற்றம்"

எனவும்,

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே"

எனவும்,

"பொத்தையூன்சுவர்ப்புழுப்பொதிந்தொழுகியபொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் படுவேனை"

எனவும்,

"பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே"

எனவும், நூல்களிலும் கூறியிருத்தலானும் முத்தி நெறியில் மனம் இனிது தெளியப் பெற்றனர்.

அறிவுநூல் கற்பதும் அமல வீடடைதற்கு ஒரு கருவியாம்.

இதனாலன்றோ,

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை"

எனவும், பிறவுங் கூறாநின்றன.

கலைதேர் படலம் முற்றும்.

---

## திருமுறை யோது படலம்.

அருள்பழுத்த வாரமுத மளிந்தூறுந் திருமுறையை
இருளொழிப்ப தீதன்றி யில்லையென விதயத்தில்
தெருளுதிக்கத் தோபாவாம் திருப்பெயரான் தினந்தினமும்
மருளிரிக்க மாறாத மனத்தன்பி லோதினனால்.

இவ்வாறு பல வகையாக மனத்தைத் தேற்றிக்கொண்டதுடன்,

எமக்குத் துணையதா யெமைத்தொடர்பரன் றாள் கழல் துணையல்லாது உள்ளைவு செய்திடுவது துணையன்

று' எனத் தெளிந்து பவப்பகையை நீக்க வுபாயந் தேடிக் கொண்டிருக்கும் நாளில்,

"ஒழித்திடும்பவப் பகைவிரைந்து உள்ளமே ஓது
மூதுணர்வோர்முற் பழிச்சு பாடலை அரற்குஅவை
விட்டற்குஇளம் பாவைய ருரைபோலும்"

என்னும்பெரியார் திருவாக்கின் பொருளைத் திருவருள் தோற்றுவித்தருளியது. அது தோன்றியவுடன் ஏனைய நூல்களிலுள்ள பற்றை விடுத்து இடையறாது தமிழ்த்திரு மறைகளாகிய தேவார திருவாசகங்களையே பாராயணஞ் செய்யத் தலைப்பட்டனர்.

தமிழ்மறையே சிறந்ததென்று தேறுதல்.

இவ்வாறு திருமுறைகளைப் பாராயணஞ் செய்து வரு நாளில், வேதாகமங்கள் பரசிவனிடத்து உதித்தனவா மாதலின் 'வேதாகமங்களை யோதினுலன்றோ வீடுகைவரும் தமிழ் மறையை மாத்திரம் ஓதிக்கொண்டிருந்தால் வீடு எவ் வாறும்?

இதனாலன்றோ,

"வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்,
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க,
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற,
வேதத்தை யோதி வீடு பெற்றாரே"

என்றார் திருமூலரும் என்று இவருள்ளத்தில் ஐயம் நிகழ்ந் தது. இது பற்றியே பரஞ்சோதி முனிவரும் 'காயத்திரி இருவகைத்தாம்; அவ்விரண்டு காயத்திரிகளிலிருந்து நான்கு வேதங்களும், பிரணவ முதலிய மந்திரம், சிவாகமம் முதலா னவையும் இறைவன் திருவருளால் உண்டாயின' என்று அருளிச் செய்துள்ளார்.

இதை,

"இன்னவையிரண்டு மிவனருள் வலியா லீன்ற நான் மறையை யங் நான்கும்"

என்றற் றொடக்கத்துத் திருவிளையாடற் செய்யுளாற் கண்டு கொள்க.

மற்றும் இதையே, "வேதமொடாகம மெய்யா மிறைவ னூல்" என்ற திருமந்திரமுங் கூறுகின்றது.

இவ்வண்ணமாக இவர்க்கு ஐய நிகழ்ந்த விடத்து மன முருகி இறைவனையே சிந்தித்துக் கொண்டிருக்குந் தருணம், திருவருள், 'எல்லாவற்றினும் மேம்பாடுடையது தமிழ் மறையேயாம், இறைவன் போன்று முத்தொழில் நடாத்த வல்ல மூவர்கள் திருவாய் மலர்ந்தருளியதால்' என்று மனத்தில் திகழ்வித்தருளியது. அஃதருளிய வாறே:

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும்"

எனவும்,

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமுந் தற்பதமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாது ஆற்றெதிரே யோடும்
என்புக்கு உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றுங்
கரியைவளை விக்குங்கல் மிதக்கப் பண்ணுங்
கராமதலை கரையி லுறக்காற்றுங் காணே."

என்வும்,

வேதமோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசக மிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே"

எனவுங் கூறியவாற்றானும், மற்றும், பிறவாற்றானு முணர்ந்து தெளிந்து கொண்டனர்.

திருமுறை யோது படலம் முற்றும்.

---

## திருஞான சம்பந்தரின் திருவருள் பெற்ற படலம்

ஒருவேதன் றனைச்சிறையிட் டொளிருமெலா
 முணர்வாகி யுண்மை காட்டுங்
குருநாதனென மொழியுங் குகப்பிரமந்
 திருமேனி கொண்டு முன்னர்ப்
புருகூதன் வனம்வளர்த்த பொன்னிசூழ்
 காழிவளர் புனித ஞான
திருஞான சம்பந்தன் றிருவருளைச் சிவனருளாற்
 சேர்ந்தான் றோபா.

இவ்வாறு, இவர், தேவார திருவாசகங்களையே ஓதிய தால் இவரது பவப்பகை யொழியுந் தருணங் கிட்டிய விடத்து இவருள்ளத்தில் மற்றொரு இரகசிய உணர்ச்சி நிகழ்ந்தது.

அதாவது:—

பல நூல்களை யோதி யுணர்ந்து, பன்னாள் பலசாதனங் களைப் பயின்று உபதேச நெறியினின்று ஆசிரியத்தன்மை

கிடைக்கப் பெற்றும், ஒரோர் காலங்களில் அவத்தைகளின் வயப்பட்டு மயங்குவர் ஏனைய ஆசிரியர்கள், நமது சம்பந்தப் பெருமானுரோ,

"யாவருக்குந் தந்தைதாய் எனுமிவரிப் படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான சம்பந்தராயினார்"

என்ற வாங்கே, பாலருவாயராய்த் திகழ்ந்தஅந் நிலையிலேயே ஞான சம்பந்தராய்ச் சைவ சமய முதற் குரவராய்த் திகழ்கின்றவரும், மற்றும்,

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அழுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழு முயலக னகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற்று அரவின்விடம் மருகல் தீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன் மேனியின் வெப்பு விடுவித்தாரே."

ஆரெரியிட் டெடுத்த ஏடு அவைமுன் னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போய் அணைய ஏற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்
காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிகள் ஏற்றி
ஈரமிலா அங்கமுயிர் எய்த ஏற்றி
இலங்குபெரு மணத்தரனை எய்தி னாரே."

என்றவாங்கே திருவருட் செயல்களை நடத்தி இசை வேதம் அருளிச் செய்தவரும்,

'மாறனும் பிணி தீரவஞ்சகர் பீறு வெங்கழு
வேற வென்றிடு முருகோனே'

என்றற்றொடக்கத்துத் திருப்புகழ்களால் அருணகிரி நாதர் திருவாய் மலர்ந்தருளிய வாங்கே முருகக்கடவுளின் அவதாரமாய் எழுந்தருளியவரும்,

"தமிழ் வேதம் பாடினார் தாளம் பெற்றார்"
"ஓதினார்தமிழ் வேதத்தின் ஓங்கிசை"

என்றற்றொடக்கத்துத் திருவாக்குகளுக் கிணங்கத் தேவாரமாகிய தமிழ் வேதத்தை அருளிச் செய்தவரும்,

"கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தர்."

என்றவாங்கே திருமணத்தில் பெருமறையுங் கூறுதற்கரிய முத்தியைக் கொள்ளை விட்டவரும்,

"ஒப்பரிய தவஞ் செய்தேன் ஆதலினால் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யான்."

என்றவாறே, அப்பர் சுவாமிகளால் முத்துச்சிவிகை தாங்கப் பெற்றவரும், மற்றும் பல எண்ணிறந்த பெருமைகளையுடையவருமாவர் என்று தெளிந்து அத்தகைய திருஞான சம்பந்தப் பெருமானாரையே தம்மில் வேறறச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

### சம்பந்தரை யுபாசித்தல்

இவர் இவ்வாறு

"வண்மை நல்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாம்

திருஞான சம்பந்தன் சேவடியே யென்னும்
ஒருஞான சம்பந்த முற்று."

இடையருது,

ஞான சம்பந்தப் பெருமானது திருவடியைத் தியானித்துக் கொண்டே,

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறையெனு மணியே சுருதியி னொளியே வெளியே வந்து
இறையவ னுமையா ளுடன் அருள்தரவெய் தினை"

என்றும்,

மற்றும் பலவிதமாக ஆடிப் பாடுவதுடன் மனத்தை ஒருக்கித் திருஞானசம்பந்தப் பெருமான் றிருமேனியிற் கலக்கச் செய்தனர்.

சம்பந்தர் அருளுருக் கொண்டருளல்

இவ்வாறு இவர், தமது மனத்தைச் சம்பந்தப் பெருமான் திருவடிவாகவே நிலைக்க வைத்தவுடன்,

"மனக்கோ ளல்லது வடிவு நிற்கின்றே"

என்றவாங்கே, இப்பெரியார் பாவித்த வாறே இளம்பருவத் திருமேனி தாங்கியவராய் கண்டார்மனங் கவருமாறும், தொண்டருள்ளந் தூயதாமாறும், அண்டருங் காணு அருட்டிருமேனி கொண்டு ஞானசம்பந்தப் பெருமானர் இவருடைய ஞானநிட்டையி லெழுந்தருளினர்.

எங்கு நிறைந்த பரஞ்சோதியாகிய சம்பந்தப் பெருமானர்,

"அருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமலன்"

"அருவனுயினும் அன்பர்க் குருவனுய்
வருவ னென்பது மாமறை சொல்லும்."

என்றவாறே, அருள் வலியால் ஒரு திருமேனி தாங்கினர் என்பது இழுக்கிலாததாம்.

சம்பந்தப் பெருமானரின் அருளுபதேசம்.

இவ்வாறு எழுந்தருளிய அருட்குரவராகிய சம்பந்தப் பெருமானர், தோபா சுவாமிகட்கு,

"அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டி, "பரவுயிரில் யான் எனதென்பது அறநின்றது அடியாம்" என்பதையும் விளக்கி, மெய்யுணர்வையுந் திடமுறுத்தி யருளினர்.

இவ்வாறு, சிவஞானப்பேற்றை அருள் மோன நெறியாலுணர்த்திய போது அவரருளால் அதைத், தமது தூய திருவுள்ளத்தில் ஐயமற அமைத்துக்கொண்டு, சம்பந்தப் பெருமானரின் திருவடியை வணங்கிப்போற்றி உடலுயிர்களை அப்பெருமானர்க்கு அருப்பித்துப் போற்றிக் கொண்டிருக்கும் பொழுதே சம்பந்தப் பெருமானரின் திருவுருவம், பொய்மலி நெஞ்சத்தார்க்கு மறைவது போன்று மறைந்தருளியது. மறைந்தவுடன்,

"காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே அதனிடை யமுதே,"

என்று பலவாருக அழுது தொழுது மனம் பதை பதைத்துக் கண்ணீர் வார ஆடிப்பாடி அருட்பரவசமுற்றனர்.

ஈண்டு, சராசரங்கட் கெலாம் சிவனருள் மணந் திகழுமாறு செய்தருளும் ஞானசம்பந்தப் பெருமானர், முடிவான பிறப்பையுடையவரும், முற்பிறப்பிற் செய்த பற்பல புண்ணிய விசேடத்தை யுடையவரும், சிவபத்தி அடியார் பத்தியிற் சிறந்தவரும், மற்றும் பக்குவத்தை யுற்றவரும்,

மலமற்றவருமாகிய நமது தோபா சுவாமிக ளென்னும் இவர்க்கு அருளுபதேசஞ் செய்தருளியது வியப்பாமோ? ஆகாது.

இதுபற்றியே, சேக்கிழார் பெருமானும், [ளெலாஞ்,
"தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்க
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்"
என்று கூறியருளினர் என்பதையுணர்க.

ஞானசம்பந்தரின் உபதேச வுண்மையை உணர்தல்.

இவ்வண்ணம் திருஞான சம்பந்தப் பெருமானுரின் திருவருளுபதேசமானது,

"சத்திய நிர்வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன்—சுத்தன்
தமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பான்
எமக்கருளிச் செய்த திது."

இதுவென்ற தெல்லாம்பொய் யென்று னெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு—அதுநாங்காண்
என்று னதன்பே ரிரவைப் பகலாக்கும்
ஒன்றோ பரமசுக மோ.

"தன்மையு முன்னிலையுந் தானுப் படர்க்கையுமாய்
என்னொழிவி லின்பமுமாய் இன்புமிது—என்னுத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றுண்
ஓதாமல் வேதமுணர்ந் தோன்."

"சரியாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்—குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ளல்வர்க் குபதேசம்
ஆனதை யுநிகழ்த்தி னான்."

"பற்றுத போதும் பதறும் பழக்க மதைக்
கற்றுலென் ருகக் கலக்காது—சற்றேநீ
தீண்டிவிடிற் றன்காண் செனன மரணமது
மாண்டுவிடில் நீசிவமா வை."

என்பவைகளால் கண்ணுடைய வள்ளல் கூறியதேயாகு மென்று தெளிந்து,

உண்மையாகிய சிவஞான நிட்டையி லழுந்தியவராய் சிவகர்ணங்க ளனைத்தும் சிவகரணங்களாகித் தனக்கொரு செயலுமின்றி, தஞ்செயல் தனிப்பெருங் கருணை அருட் பரஞ் சோதியாகிய இறைவனது செயலே யென்றீ கண்டு சிவத்தோடு அத்துவிதமாய் ஞான யோக இன்பத்தில் திளைத்திருந்தனர். இதைக்கண்ட அனைவரும் ஈதென்ன மாயமென்று மயங்கி உண்மை யறியாமற் பற்பலவாருய்ப் பகர்ந்து கொண்டிருந்தனர்.

சான்ருேர், இதுவே, சும்மா விருத்தலும் ஞானத்தாற் பூசித்தலுமாகிய நனவிற் சுழுத்தியாம் என்பர்.

இதை,

"எப்பொருள் களுந்தா ஞகி யிலங்கிடு மறிவா மீசன்
அப்படி விளங்கு கின்ற தறிதலே யவன் றனக்கு
மெய்ப்படு பூசை வேருேர் செயலினு லன்று மெய்யே
இப்படி ஞானந் தன்னுல் இறைஞ்சிடப் படுவான் ஈசன்."

எனவும்,

"பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யும்
நேசனும் பூசை கொண்டு நியூதியிற் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசை யான்செய் தேன் எனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி"

எனவும்,

"பூசனையு மதுசகல பொருளு மறி தமையும்
ஈசனையும் வேறதற அறிவதறி வறிவே."

எனவும்,

"சும்மாவிரு சொல்லற வென்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே."

எனவும்,

"வினவிற் பரத்தை யறிவுறுதற்கு
அவத்தைபுலன் வினைமாறியே
நனவிற் சுழுத்தி நிலைவரின்
அப்பொருள் திகழும் நலமாகவே."

எனவும் பிறவுங் கூறுமாற்று னறிக.

இவ்வாறு பலர் பலவகையாகக் கூறினரேனும் இப்பெரியாரிடத்தில் உள்ள ஞானநிட்டையின் உறுதிப்பாட்டைக் கண்டு அன்பர் பயமுற்றவரும் அன்புற்றவருமாகவே யிருந்தனர். பெரியார் நிலையை யறிதல் சாமான்ய மக்கட்கு எளிதாமோ? அவருடைய தவம், குணம், அருள், அன்பு முதலானவைகளைக் கண்டுணர்வார்க்கன்றே, அது ஒருவாறு வெளிப்படும்.

இதனாலன்றோ,

"பொருளுடையோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும், தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவது போல், அருளுடையோரைத் தவத்திற் குணத்தில் அருளில் அன்பில், இருளறு சொல்லினுங் காணத்தகும்."

என்றருளியுள்ளார் முற்றத்துறந்த பட்டினத் தடிகளும்.

இவ்வாற்றாலன்றி ஆடிக் குதித்துத் தலைகீழாய் நிற்பினும் அவருண்மை தெரியாததாகும் என்க.

## தீக்கைத் திருநாமம்

இவ்வண்ணம், ஞான நிட்டையிலிருந்து வெளி வந்ததும் இப்பெரியார் தோ-பா, தோ-பா, என்று கூறிக்கொண்டிருப்பர். இது, தோ-தோலை முதலாகக் கொண்ட (தோடுடைய செவியன்) பா—பாடலைப் பாடத் தொடங்கிய திருஞான சம்பந்தப் பெருமானாகிய தமது அருட் குருவைச் சிந்திப்பது போலும். மற்றும், இது, நான் கெழுத்துக்களையும் இரண்டு சொற்களையுங் கொண்டிருத்தலால், மக்கட் பேறுகளையும், காணப்படுவது காண்பது என்னும் இருபொருளே உண்மை என்பது முதலான பல்வகைப் பொருள்களையுங் குறிப்பாலுணர்த்தும் சங்கேதச் சொல்லாம். இதனால் தோபா சுவாமிகள் என்னுந் திருநாமம் வழங்கப் பெற்றனர்.

**திருஞான சம்பந்தரின் திருவருள் பெற்ற படலம் முற்றும்.**

---

## மெய்காட்டு படலம்

துய்ய மன்னர் துரைமகன் சேனையில்
செய்யச் சொன்ன செயல்தனை யேமறந்
தைய மற்று வகங்குழை யோகத்தில்
உய்ய மெய்யை யொருசிவங் காட்டினன்

**பாசிவன் பரிமேலேறிப் படைக்களஞ் செல்லல்.**

இவ்வண்ணம், தோபாசுவாமிகள் எனக், காரணப் பெயர் பெற்ற இம்மகாநுபாவர்.

"வாங்கி யைம்பொறி நின்ற மனத்தினை
நீங்கி டாவகை நின்னு ளிருத்தியே
தீங்கி யாவையுஞ் சிந்தை செயர்வணம்
பாங்கி யாதந்து வேபயில் வாமரோ," (கீதை)

எனவும்,

"எண்ணங்களெல்லாம் இறந்தவிடத்து அறிவு மயமாகிய சீவன் தனது உண்மை வடிவில் நிலைக்கும்."—(பதஞ்சலி) எனவும், பிற நூல்களுங் கூறியுள்ள நிருவிகற்ப நிட்டையில் அழுந்தியிருக்கின்ற பொழுது,

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டுகின் றவனும்,
................தன்னருள் வெளிக்குளே

அகிலாண்ட கோடி யெல்லாந் தங்கும்படிக்கு இச்சைவைத்துஉயிர்க்குயிராய்த் தழைத்து நிற்கின்றவனும்,

"அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையில்
நீக்கமின்றி நிற்கு மன்றே."

என்றவாங்கே தனக்கன்னியமற அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் சிவஞான நிட்டையி லமிழ்ந்தவரின் யோக க்ஷேமத்தை (யோகம்—அடையாததை அடைதல், க்ஷேமம்—அதைப் பாதுகாத்தல்.) ஏற்றுக் கொள்பவனுமாகிய பெருங் கருணைப் பரசிவப் பெருமான், இம் மகாநுபாவர் தாம் படைக்கலம்பயிலுமிடத்திற்குப் போகாது தனது திருவடிக்கண் மனத்தை நிலைநாட்டிவிட்டனர் என்பதையுணர்ந்து இப் பெரியாரைப்போன்றே ஒரு அருட்டிருமேனி கொண்டு குதிரைமீ திவர்ந்து காலாட்படைக்குட் புகுந்துநின்று பரிமீதேறி, அங்கு செய்ய வேண்டிய படைக்கலப் பயிற்சி முதலான போர்த் தொழில்களை இனிது பயின்றருளி, பரிமாவை மாத்திரம் அங்கு விட்டுவிட்டு, தான் மாத்திரம் மறைந்தருளினன். அம்மம்ம! அன்பர்கட்கிரங்கி, பரவை மனைமீது தூது சென்றவரும், தாயாய்

மருத்துவம் பார்த்தவரும், மண்சுமந்தவருமாகிய எல்லாம் வல்ல இறைவர்க்கு இது ஒரு வியப்பாமோ? இறைவர் அடியார்க்கெளியராய் அடியவரின் குறைகளை நிறைவுபடுத்தியருளலே தமக்கு ஒரு விரதமாகக் கொண்ட பேரருட் பிழம்பராதலினென்க.

அற்றாகலினன்றே,

"சிவனும் இவன் செய்தி யெலாம் என்செய்தி யென்றுஞ்
செய்தது எனக்கு இவனுக்குச் செய்த தென்றும்,
பவமகல வுடனாகி நின்று கொள்வன்"

என்று, கூறுகின்றது சிவஞானசித்தியாரும். மற்றும், உண்மையன்புடையார் சிவயோகத்தால் அன்பு செய்யுமிடத்து, இறைவன் அருளுருக் கொண்டெழுந்தருளலும் இயற்கையாமன்றோ, ஆகையால் இப்பொருளையே பல மறைகளும் இனிது புலப்படக் கூறுகின்றன என்பது ஈண்டு காணற்பாலது.

இறைவன் உருவாய் வருவானெனல்.

இதைக் கொண்டன்றோ,

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழியும்—வல்லதனால்
ஆரேனு மன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா வரன்"

எனவும்,

"ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்து
அருள்வடிவந் தானுமாய் ஆண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு"

எனவும், பிற உண்மை நூல்களுங் கூறு நின்றன.

ஈண்டு, உருவமில்லாத சிவபெருமான் உருவத் திருமேனி கொண்டெழுந்தருளல் முரணுமென்பார்க்கு,

'அருவனாயினும் அன்பர்க்கு உருவனாய்
வருவ னென்பது மாமறை சொல்லுமே'

எனவும்,

"உளனெங்கும் இலனிங்கும் உளனென்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தி னெரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி [கே"
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்

எனவும், மற்றும் பிறவுங் கூறுமாற்றானும் விடையளிப்பதோடு நில்லாது, பல்லாயிரம் உருவங்களைத் தாங்கி, சொல்லொணாத திருவருட் செயல்களைத் தனது சிற் சத்தியால் எளிதிற் செய்தருளலே இறைவனது எல்லாம் வல்ல அருள் வலிப் பொருமையாமெனவும் விளக்குக.

இதுபற்றியன்றே,

"வேறுவே றுருவும் வேறு வேறியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடையீசன் இப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும் வந்தருளி"

என்றற் றொடக்கத்துத் திருவாசகமுந் தெளிவுறுத்தருளுகின்றது.

மற்றும் இதையே,

"கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என அநுபவத்தானும் மணியுரை வள்ளலுந் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். விரிக்கிற் பெருகும்.

## ஆங்கிலப் படைத்தலைவன் வியப்புறல்

இங்ஙனம், போர்த் தொழிற்சாலையில் நடந்த அற்புதச் செயலைக் கண்டு, செப்பரும் வியப்புக்கொண்டு, நிற்பரு நிலையினின்ற துரைமகன், இஃதென்ன மாயம்! இது இந்திர சாலமோ! அல்லது, மந்திரவலியோ! அல்லது, தந்திரச் செயலோ! என்று பலவகையாக இறும்பூதடைந்து, இராமலிங்கபிள்ளையென்னும் பிள்ளைத் திருநாமம் பூண்ட இம் மகாநுபாவரைக் காணவேண்டுமென்னும் பேரன்பைக் கொண்டு, இவர் இருக்குமிடஞ் சென்று பார்க்குங்கால், அவர் சித்திரத் தெழுதிய விளக்கெனச் சிவயோகத் திருத்தலைக் கண்டு, இவரது திருமேனி அசைவற்றிருந்ததுங் கொண்டு, இவர் உயிர் துறந்துவிட்டாரோ? என்று ஐயுற்று, அங்குமுன்னின்றான் ஒருவனை விளித்து, அன்ப! நீசென்று, யான் விளித்ததாக அவருக்குச் சொல்லுவாயாக வென்று ஒருவனை ஏவினன். ஏவிய அவன், இப் பெரியாரிடஞ் சென்று, ஐய! துரைமகன் ஒருவன், தான் வந்திருப்பதாகத் தமக்கு அறிவிக்கச் சொல்லுகின்றான் என்று உரக்கக் கூறினன். அதைக் கேட்ட இப் பெருந்தகையார் அப்போதும் அசைவற்றிருந்ததை ஆங்கிலன் நோக்கி, இவர் கண் விழிக்குமளவும் அவரைச் சோதிப்பான்வேண்டி அங்கேயே காத்துக் கொண்டிருந்தனன்.

இவ்வாறு, சிவஞான நிட்டையிலிருந்த இப் பெரியாரை மனங்கலைத் தெழுப்ப, இவரும்,

"அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினா லறியா தேயறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்"

என்ற திருவாக்கின்படியே சிவானந்த ஞானநிட்டையில் குழைந்து நிலைத்த மனம், மெல்ல மெல்ல வெளிவர, சவிகற்பமுடைய மனத்தராய் விழித்துக்கொண்டனர்.

ஆங்கிலத் துரைமகன் இறைஞ்சுதல்

இவ்வாறு, இங்கு, இப் பெரியாரின் உண்மை நிலையை இனிதுணர்ந்த ஆங்கிலத் துரைமகன், இவர், கடவுளிடத்துப் பேரன்புள்ள உண்மைத் தொண்டரெனத் துணிந்து, இவர் கடவுளிடத்துவைத்த பேரன்பின் பெருக்கால் கடவுளே ஒரு திருமேனி கொண்டு இவர்போல் நமது போர்த் தொழிற் களத்தில் வந்து படைக்கலப் பயிற்சி செய்து மறைந்தருளினரேயன்றி வேறொருவருமல்லர் என்றுஉறுதி கொண்டு இவரை வணங்கிப் போற்றித் தனதிடஞ் சென்றனன்.

ஈண்டு, துரைமகனும் இப் பெரியாரின் அருட்கண் நோக்கால் பாவமொழிந்தவனே யாயினன் என்பதும் உய்த்துணரற்பாலது.

அற்றாகலினன்றே,

"புணர்ந்த பாவ மெலாம்பரி பூரணம்
உணர்ந்த ஞானி விழிபட வோடுமே"

எனவும்,

"அவன்றன் வடிவினைக் கண்ணுறுதன் முதலானவற்றாற் பாவிகட்குப் பாவ இரிவுறும்"

எனவும், பிறவுங் கூறா நின்றன. எல்லாப் பேற்றையும் எளிதிலளிக்கும் பெரியார் தரிசனமே பெரும் பேறாம் என்பது யாண்டும் ஒப்ப முடிந்தது மாதலினென்க.

மெய்காட்டு படலம் முற்றும்.

துறவுப் படலம்

திருவருட்டிறத்தைப் பேணல்

பண்ணிய தவங்கள் முற்றிப் பலந்தரும் பருவத் திங்கு
நண்ணிட நசைகள் விட்டு நவையறு பதத்தை யெய்த
எண்ணியிக் குடும்பக் கட்டி னிகலறு துறவைப் பெற்று
மண்ணினில் முனிவ னென்ன மலைவறு மதிபெற் றானால்

இவ்வண்ணம், இம்மகாநுபாவர் சிவஞான நிட்டையில் அமிழ்ந்திருந்ததை விட்டு வெளிமுகப் பட்டவுடன், அங்கு நடந்த செயல்களைப் பலரும் இப்பெரியார்க்கு அறிவித்தனர். அதைக்கேட்ட இப்பெரியாரும், அம்மம்ம!

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெரும்மறை தேடிய
அரும்பொரு ளடியேனை
அடித்த டித்துவக் காரமுன் றீற்றிய
வற்புத மறியேனே"

எனவும்,

"மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டு
விழக்கட வேனை
எண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட்
டென்னையுந்தன்
சுண்ண வெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே
சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவா
ரச்சோவே"

எனவும்,

"ஒன்றும் போதா நாயேனை
யுய்யக் கொண்ட நின்கருணை
இன்றே யின்றிப் போய்த்தோதா
னேழை பங்கா வெங்கோவே
குன்றே யனைய குற்றங்கள்
குணமா மென்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடா
யெண்டோள் முக்க ணெம்மானே.

எனவும், மற்றும் பலவாறாகவும், திருவருளை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்துஅன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, அருளமுதே! நன்னிதியே! பெருங் கருணைப் பேராறே! என்று மனங் கசிந்து கசிந்து உருகி மண்ணுலகில் விருப்பை யொழித்து அக்கணமே தமது அரசாங்கப் பணியை விட்டு விடக் கருதி,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்ற வேத விதிப்படியே,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
ஆண்டு மஃதொப்ப தில்"

என்னுஞ் செல்வத்தைப் பெற்றிருந்து வாழ்வதுடன் "சிற்றம்பலமேய செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே" என்னுந் திருவாக்கின்படியே திருவருளிலாபத்தையும் பெற்றுப் பெருஞ் செல்வராய் வாழ்ந்துவந்தனர்.

துறவின் பெருமையைக் கண்டு துறத்தல்.

இவ்வாறு, இப்பெரியார் மூவேடனைகளின் மோகம் அகன்று குடும்ப வெறுப்பு மேலிட்டு விவேகம் வளர்ந்தவுடன்,

"துன்பந் தோன்றில் எவருந் துறந்து ஏகாராய்த் தனித்து இன்பந் தேடலியற்கை"

என்ற வாங்கே, இயற்கைத் துறவை யடைய விழைந் தனர். விழைந்தவுடன்,

"ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து"

என்றற் றொடக்கத்துக் குறள்களால் திருவள்ளுவர் இல்லறத்தை வியந்தோதி யிருத்தலின் துறவடைதல் எற் றுக்கு? என்னும் நினைவும் மனத்தில் நிகழ்ந்தது. நிகழவே,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்"

என்றற் றொடக்கத்துக் குறட் பாக்களால் அவர் துற வறத்தைப் பெருமை பாராட்டுவதோடு "நீத்தார்பெருமை" என்னும் ஒரு அதிகாரத்தையும் பாயிரத்திலமைத்துக் கூறினமையின் துறவறமே மிகச்சிறந்ததென்பதே தெய்வப் புலவர்க்கு உட்கிடையாமென்று உற்று நோக்கிக் கொண்ட னர். மற்றும்,

"அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்"

என்று வெளிப்படையாகத் திருவாய் மலர்ந்தருளிய பட்டினத்தடிகளின் கட்டுரையாலுந் துறவே சிறந்ததென்று தெளிந்துகொண்டு, வேடத் துறவுகளை விழையாது இலிங்கங்களைத் தாங்காது, துறவு என்பது விராகத்தையே முதற்காரணமாகவுடைய தன்றி, வேடத்தைக் காரணமாக வுடையதன்றுமென உய்த்துணர்ந்து,

"வீடு நமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திரம் ஓங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ வொருவரு மிங்கில்லையே"

என்றவாங்கே, உண்மையாகிய இயற்கைத் துறவு பூண்டனர். இத்தகைய துறவே மெய்யறிவை விழைந்தார்க்குக் கொள்ளற்பாலதாம்; பிறவன்று.

அற்றாகலி னன்றே,

"இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து"

என்றார் திருவள்ளுவ தேவரும். இவ்வாறு, உண்மைத் துறவு பூண்டு உடை கோவணராய் ஒரு மண் சட்டியில் மனைதோறும் ஐயமேற்றுண்டு, பற்றெலாம் விடுத்துப் பற்றிலான் பற்றைப் பிடித்துத் துறவர்களுள் வேந்தராய்த் திரிந்து கொண்டிருந்தனர்.

இத்தகைய துறவின் பெருமையையே, "சதகோடியுள்ளத்துறவுடையோன்" என்று பட்டினத்தடிகளும் விதந்தோதினர் என்பதையு முணர்க. மற்றும்,

"பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்"

என்றற்றொடக்கத்துத் திருவாக்குகளும், இத்தகைய உண்மைத் துறவையே மிகப் பாராட்டுகின்றன. இதுவே, தமிழ் நாட்டுப் பெரியார் பண்டைக் காலத்தில் கையாண்டு வந்ததுமாம். காவியுடுத்தன் முதலியன இடையிலேற்றுக் கொண்ட பிற மரபாம். இதனுண்மையை நாயன்மார், பட்டினத்தடிகள், மகாராஜா முதலான துறவிற்சிறந்த தூய மாதவரிடத்திற் காண்க.

இதுபற்றியன்றோ சிவஞானிகளின் நிலைமையும் இவ்வாறேயாம் என்று கூறுகின்றன நூல்களும். உண்மைத் துறவே சிவஞானத்திற்குச் சிறந்த கருவியா மாதலி னென்க. இதை,

"திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே."

எனவும்,

"நாயேறி வீழ்ந்தெதன் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—தோயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய் வார்."

எனவும், பிறவுங் கூறுமாற்றாற் றெளிக.

இவ்வாறு கடுந்துறவு பெற்று, விடும் விழைவை விட்டு, அடு மஞ்ஞானத்தையட்டு, இடும் அருள்ஞானக் கொடியை நட்டுத் துறவின் வேந்தராய்த்திரிகின்ற இப் பெரியார், தத்தாத்திரயரைப் போன்று நான்கு நாய்களை மாத்திரம் தம்முடன் திரியுமாறு அன்புபாராட்டி வளர்த்து வந்தனர். இங்கு ஒரு நாயை வைத்திருந்தவர் இல்லறத்தார் என்றவாங்கே இராமல், இவர் நான்கு நாய்களுடன் திரிந்து கொண்டிருந்தும் கடுந்துறவியாய் இருந்தமை வியக்கற் பாலதாம். ஈண்டு இம்மகாநுபாவரிடத்து இருந்த நாய்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்பன புருடப்பேறென் பதையும், மறைகள் நான்கே என்பதையும், மற்றும், சைவ சமய குரவர்கள் நால்வர்களே மிகச்சிறந்தவர்கள் என்பதையும், மற்றும், ஞானக் கருவிகள் நான்கென்பதையும், பிற பல

பொருள்களையுங் குறிக்கின்றன போலும்! மற்றும், மனத்திற்கு உரியவாறே யூகித்துக்கொள்ளினுமாம் என்க.

துறவுப் படலம் முற்றும்.

---

## சித்தராய்த் திகழ்ந்த படலம்

### ஒரு மகம்மதியன் வேதளால்

மூகனு யொருபகல் முனிவனுய் மறுதினம்
யோகனு யொருகணம் ஒருகணம் போகனுய்
ஆகமா ருயிர்களை யகற்றியும் வருத்தியும்
ஏகமாம் பரமென எண்ணில்சித் தாற்றினன்.

இவ்வாறு இப்பெரியார் உண்மைச் சிவஞானச் செல்வராய், பூமாந்தும் வண்டெனப் பொன்னருளைப்பருகி மாந்திக் கிடக்கின்ற நாளில், ஒரு பகல், மகம்மதியர்களிருக்கும் வீதியிற் சென்று கொண்டிருந்தனர். அங்கு மிகுந்த செல்வமுள்ள ஒரு மகம்மதியனுடைய மனைவி, கோவணமு மின்றிப் பாலன் போன்ற செய்கைகளையுடைய நமது சுவாமிகள் செல்வதைக் கண்டு, மிக நாணி வெகுண்டு, தனது கணவனிடத்தில், "இவ்வெறியனை வெளியில் ஓட்டுவீராக" என்று கூறினள், அருளமுதுண்டு ஞானவெறி கொண்டு மக்களைக் கடைத்தேற்றுதற் பொருட்டு நிற்கு மோரிடமு மின்றித் திரிகின்ற இப்பெருந்தகையாரின் ஞானவிளையாட்டைக் கற்றாரும் மற்றாரும் அறியாதிருக்க, புறச்சமயப் பேதையன் ஒருவன் அறிந்து கொள்வானென்பது யாங்ஙனம்?

### சுவாமிகளின் ஆண்குறியில் ஊசியை தைத்தல்

அவன், தனது மனைவியின் சொல்லைக்கேட்டுச், சுவாமிகளின்மீது சீறிவிழுந்து மாறிய எண்ணங்கொண்டு ஏவலா

னின் ஒருவனை விளித்து 'இவ்வெறியனை வெளியில் துரத்துவாயாக, என்று ஆணையிட்டனன். உடனே அந்த ஏவலாளன், நமதுசுவாமிகளை நோக்கி நகைத்து, ஒருகோணி துன்னும் ஊசியைச் சுண்டு விரலால் இவரது ஆண் குறியிற்படுமாறு எறிந்தான். பிரணவமாகிய ஊசியால் பரம் பொருளாகிய குறியை இலக்குவைத்து எய்தல் பேரறிவாளராகிய சான்றோர்கட்கன்றி இம் மகம்மதியன் போன்ற பேதையர்கட்குங் கைகூடுங் கொல்லோ? கூடாது. ஆகையால் அவ்வூசியானது, மெய்யுணர் வென்னும் ஊசியால் பொய்யுணர்வாகிய அறியாமையைப் பிளந்து அருளமுதாகிய இலக்கியப் பொருளைப் பெற்ற இப்பெரியார் திருமேனியிலும் படுமோ? படாது. இத்தகைய தொண்டர்மீது ஊசி படும்வரை திருவருட்குப் பொறுமையும் உண்டு கொல்லோ? உண்டாகாது. ஆதலின் இம்மகாநுபாவரின் திருவுள்ள நோக்க மாத்திரத்தானே அவன் பாய விட்டவூசி அம்மகம்மதியன் உடம்பிலேயே பட்டுப்பாய்ந்தது; உடனே அம்மகம்மதியன் ஓவெனக்கதறி ஆவெனப்பதைத்துப்பட்டவூசியைப் பிடித்து இழுக்க அது வாராததோடு அதனால் வலியும் மிகுந்தது. அதைக்கண்ட மகம்மதியன், இது பெரியார்க்குச் செய்த தீய தொழிலினாலன்றோ வந்தது, இதற்கு மருந்து அவருடைய அநுக்கிரகமேயன்றி மற்றொன்றுமில்லை என்று தெளிந்து, ஓலமிட்டுக் கொண்டு ஓடோடியும் வந்து, இம்மகாநுபாவரின் திருவடியில் விழுந்து, இவருடைய பாததாமரையைத் தனது கைகளாற்பற்றிக் கொண்டு, எந்தாய்; செயற்கரிய செய்யுந் தேவே; அருளையே பொருளாக் கொண்ட அரசே; எளியேன், தெளிவின்றிச் செய்த இத் தீச்செயலைப் பொறுத்தருளவேண்டும். எல்லாமுணர்ந்த தங்கட்கு யான் முகமன் கூறற்பாலதென்னை? இத்தகைய தீத்தொழிலைச்

செய்தல் எம்போன்ற அறியாமை மிக்கார்க்கு இயற்கையா மன்றோ? சிறியோர் செய்த பெரும்பிழைகளையும் பொறுத் தருளுதல் தம்மைப்போன்ற ஞானமிக்கார்க்கு உரியதா மன்றோ? என்று பலவாறாக இப்பெரியாரை வேண்டிக் கொண்டனன்.

சுவாமிகளின் திருநோக்கால் ஊசிகழலல்

எத்தகைய பெருநோய்க்கும் அருளுடைய பெரியா ரின் திருநோக்கம் மருந்தென்பதனா லன்றோ உண்மை நூலும்,

"எத்திமெய்ஞ் ஞானவானை யேயவ னருட்கண் ணாலே
பார்த்தபின் னில்லா பெத்தம் பரிதிமுன் னிருள்போ
[லன்றே"

என்று கூறுகின்றது.

அவ்வண்ணம், அம் மகம்மதியன் வேண்டிக்கொண்டதற் கிரங்கி சுவாமிகள் திருவருட்டதும்பும் திருக்கண்ணால் அதைச் சிறிது நோக்கிய மாத்திரத்தானே அவ்வூசி வெளி யிற்கழன்றுவந்ததோடு அவ்வலியும்நீங்கிவிட்டது. பெரியார் நோக்காற் பெறாததுமொன்றுண்டோ, இல்லை; அடியாரின் முனிவால் அழியாத தொன்றுண்டோ, இல்லை. இதை,

"அருள்வடிவே திருவுருவா யெழுந்துநின்ற ஆசிரியன் என்றேனும் முனிவுற்றானேல், திரிவிதமாம் உலகத்துமம் மான் ஆணை தியக்க மெலாந் தீர்த்தெவருங் காப்பதில்லை'
என்பதனாலும் பிறவாற்றானுமறிக.

மகம்மதியன் சுவாமிகளை வழிபடல்.

இவ்வண்ணம், இம் மகாநுபாவரின் திருவருட்செய லின் திறத்தைக்கண்ட அம் மகம்மதியன்,

"சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவன்"
"குருவின்பேர் சிவனு மன்றே"
"குரவனே குறியேது மிலாச்சிவன்"

என்பன முதலான திருவாக்குகளின்படியே சுவாமி களையே தனது குல தெய்வமெனக் கொண்டு வழிபட்டு உய்ந்ததோடு, தோபா மசூதியென்று சுவாமிகளின் பேரால் ஒரு பள்ளியு மமைத்தனன். அம்மசூதி இது காறும் சென்னையில் அத் திருநாமத்தாலே வழங்கப்பெற்று வருகின் றது. இங்கு, புற மதத்தனும் தனது தெய்வமென்றே வழி பட்டுய்ந்த இம் மகாநுபாவரின் பெருமை சொல்லற் கெளிதோ? எளிதன்று. இச்செயல் அவரது திருவிளை யாடல்களுள் மிகச் சிறியதாமென்க.

ஈண்டு, அம்மகம்மதியன் செலுத்திய ஊசி நமது சுவாமி களின் திருமேனியிற்படினும் எட்டுணையேனும் நோவை யுண்டாக்கா தென்பது திண்ணம். அங்ஙனமாயினும், பெரியாரைப் பழித்துப் பெரும்பாவந்தேடி அருங்கோர நரகில் வீழாமல், மக்கள் உய்யுமாறு செய்தருளும் மறக் கருணையால், ஊசியை எய்தவன்மேற் செலுத்தியதென் றுணர்க. மற்றும், சுவாமிகள் தமது திருவுள்ளத்தில் ஒன்றும் நினையாதிருக்கவும், திருவருளே இவ்வாறுசெய்வித் தருளியதெனக் கொள்ளலே மிகச்சிறப்புடைய அறிஞரின் மரபா மென்க.

### ஒரு அரசாங்க அதிகாரியின் கை தம்பித்தல்

இவ்வண்ணம், இம்மகாநுபாவர் குழந்தைப் பருவத்தர் போன்று ஆடல் புரிந்து கொண்டிருக்கும் நாளில் ஒருநாள், இவரை வீதியிற் கிடக்கக் கண்ட ஒரு காவலன் (உத்தியோ கஸ்தன்) இப்பெரியார் மீது மிக முனிவுற்று, பாட்டையிற்

கிடக்கின்ற ஓட்டைச் சட்டியை யுடையவனே? நீ, நீட்டிப் படுக்க இடமிலாது என் மக்கள் கூட்டங் கூட்டமாய்ச் செல்கின்ற வழியிற் பிணம்போற் கிடக்கின்றனை? என்று பல வாறாக நிந்தித்து, எழுந்திரு, எழுந்திரு என்று சொல்லினன். அவன் பலமுறை சொல்லியும், நமது சுவாமிகள் 'கீர்த்தியும் நிந்தையும் வேறறப்பார்க்கும் பெரியாராதலின், அவனுடைய மொழியைக் காதில் சிறிதும் கேளாது மௌனமாய்ப்பரமானந்த நிலையிலமிழ்ந்திருந்தனர். அதைக்கண்டு அவ்வதிகாரி (காவலன்) மிகவெகுண்டு, தனது கையிலிருந்த பிரம்பைக் கொண்டு சுவாமிகளை அடித்தற் பொருட்டுக் கையை ஓங்கினன், ஓங்கிய அக் கை, மாயோனே முதற் கடவுள் என நிறுவுங்கா லெடுத்த வியாத முனிவரின் கை தம்பித்து நின்றவாறே, அசைவற்று அவ்வண்ணமே தம்பித்து நின்று விட்டது. ஆனால் அவனடித்த அவ்வடியானது அவன் மனைவிமீது பட்டது. இதையுணர்ந்த அவ்வரசாங்கப் பாதுகாப்பாளன், அருள்வலி, ஞானவுறுதி முதலான பற்பல பெருங்குணங்கள் மலிந்த நமது சுவாமிகளை வணங்கி, அடிக்கமலத்தில் விழுந்து, சிவஞானச் செல்வ! பவவூனம் பறித்தோய்! உவமானமற்றோய்! "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் மூதுணர்வாரின் திருவாக்கின் படியே, யான், தங்களுடைய திருவடிக் கமலத்தூசி என்பதையும், தாங்கள் ஞான வேந்தர் என்பதையு முணராது இயற்றிய இப்பெரும் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும் என்று பலவாறாக வேண்டிக் கொண்டனன். அதைக் கேட்ட நமது பெருந்தகையார், திருவுளமிரங்கி அருள்விழி நோக்கியமாத்திரத்தானே அவனுடைய அக் கையானது முன்போல் இயங்கி நலமடைந்தது. இதனால், பெரியாரைப்

பேணில் நலமும், வீணிற் பழிக்கில் துன்பும் வருமெனல் துணிவாமென்பது கொள்ளக் கிடந்தமை காண்க.

இதில் மற்றொரு வகை

ஈண்டு, அவ்வதிகாரியானவர், நமது சுவாமிகளிடம் வீந்துவணங்கிக் கேட்க, அப்படித்தான் அப்படித்தான் என்று திருவாய்மலர்ந் தருளியதால் தம்பித்த கையானது அவனுக்கு அப்படியே நிற்க, அவ்வண்ணமே முப்பிறப்பு வரை அவரது சந்ததியார்கட்கும் இருந்து வந்ததென்பர் சிலர்.

இதனால், இதுவும்,

"வஞ்சர் வேல்கொடு மார்பி னெறியினும்
எஞ்ச வேதழல் மூடி யெரியினும்
நஞ்சி னாரழல் நாக நலியினும்
அஞ்சி டாரது வானந்த மாவதே"

என்னும் கண்ணபிரான் திருவாக்கின்படியே, சிவஞான நிட்டையிற் சிறந்த பெரியார், பவஞானமுடைய அறிவிலார் துன்புறுத்தினும் பொறுத்துக்கொள்ளல் வேண்டும் என்பது நூல் வழக்காமாயினும், இம்மகாநுபாவர் ஞானம், வலி என்னும் இரண்டையு முடையாராதலின், அருள் வலியாற் செய்து காட்டியருளிய மறக்கருணையா மென்பது கொள்ளக்கிடக்கின்றது.

சுவாமிகள் கள்ள மஸ்தானைச் சபித்தல்.

இவ்வண்ணம், சுவாமிகள் ஞான சித்தராய்த் திரிந்து கொண்டிருக்கும் போது ஒரு தினம், மக்கத்திற்குச்சென்று வந்து மகமது நபியின் மதத்தைப் பற்றியவரும், யோகத்திற் சிறந்தவரும், மஸ்தான் என்று பலரால் அழைக்கப் பெற்றவருமாகிய ஒரு மகம்மதியத் துறவி, ஒரு குழிகல்லி அதில் இறங்கிச் சமாதியிலிருப்பவர் போன்று இருந்து

விட்டு, பின்னர் வெளியில் வருவார். வந்து, சில தினஞ் சென்று மீண்டும் அவ்வாறே அப்பள்ளத்திலிறங்கி மூடிக் கொண்டு சமாதியிலிருப்பவர் போன்று இருந்து விட்டு மீண்டும் வெளியில் வருவார். இவ்வாறே பலநாள் செய்து கொண்டிருந்ததால் உலக மக்கள் அவர்மீது மயக்க முற்று அவரைத் தரிசிக்க எண்ணிலார் வந்து கொண்டிருந்தனர். அதைக்கண்ட இம்மகாநுபாவர், பலர்க்கும் அம்மகம்மதியத் துறவியானவர் குழிக்குளிருந்துகொண்டு செய்துகாட்டும் கபட யோகத்தை எடுத்துக்கூறி, அங்கு வந்த மக்களை நோக்கி, அன்பர்களே, இத்தகைய மயக்க மொழிந்து செல்வீர்களாக; இயக்கமற்றிருக்கும் மெய்ச்சமாதியன்று இது; இவர் இப்போது இறந்து விட்டார்; அவரை நீவிர் பார்த்தல் எங்கே? என்று கூறினர். அதைக்கேட்ட சிலர், இவர் கூறுகின்றது உண்மையா? அல்லது பொய் மையா? என்று அப்பள்ளத்தைத் திறந்து பார்த்தனர்; பார்க்குங்கால், அம்மகம்மதிய மாயத்துறவி உள்ளே மாண்டு கிடந்தனன். அதைக் கண்ட எல்லாரும் நமது சுவாமிகளிடத்தில் பேரன்பு கொண்டவர்களாய்ப் பலவகையாகச் சுவாமிகளைப் போற்றுவதுடன் வழிபாடுஞ் செய்துகொண்டு வந்தனர். பெரியாரின்மொழி ஒருகாலும் பிறழாது.

இதை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்னும், தமிழ்மறை மொழியாலுணர்க.

குகையிலிருந்த பெரியார்க்கு அருளல்.

அங்ஙனமே மற்றொருநாள் இம்மகாநுபாவர், வேளைச் சேரி என்னுங் கிராமத்தின் வழியாய் வந்து கொண்டிருந்த

போது, அவ்வூரிலுள்ள சிதம்பர சுவாமிகள் என்னும் ஒரு பெரியார், அங்கு ஒரு மடமியற்றி அதிலோர் குகை செய்து அதற்குள் இருந்துகொண்டிருந்தனர். அவரைக்கண்டு, சுவாமிகள், துறந்தோய்! மண்ணில் வளை கல்லிக் கொண்டிருப்பது எலியேயாகும்; நீ அறிவுடையாய், நீயும் எலியோ? வளைக்குள்ளிருத்தல் எற்றுக்கு? என்று திருவாய் மலர்ந்தருளிக் கொண்டு வழியே சென்று கொண்டிருந்தனர். அதைக்கேட்ட அப்பெரியார், தாம் குகைக்குள்ளிருப்பதைத் தவிர்த்து நமது தோபா சுவாமிகளைத் தொழுது போற்றிச் சிறந்த ஞான நிட்டையை யுடையவராயினர். ஈண்டுச் சுவாமிகள், உள்ளமாங் குகையில் ஒளித்திருக்கின்ற பரம் பொருளை யறியாது, மண்ணின் குகையிலிருத்தல் எற்றுக்கு? என்று அருளிச்செய்தவாறும். இதை,

"உள்ளக் குகையி லொளித்தான் பரன்குரவன்
கள்ளந் தனைத்தவிர்த்துக் காட்டினன்"

என்றற் றொடக்கத்துத் திருவாக்குகளாலுணர்க.

சுவாமிகள் சோதி வடிவாய் நிற்றல்.

சுவாமிகள் இவ்வண்ணம் வேளைச்சேரி யென்னுங் கிராமத்தில் பலவிதமான திருவிளையாடல்களைச் செய்து கொண்டிருக்கும் போது,

"வீடு நமக்குப் புறந்திண்ணை யுண்டு"

என்ற திருவாக்கின்படியே ஒரு குயவனுடைய வீட்டின் புறந்திண்ணைமீது அமர்ந்திருக்கின்ற நாளில், ஒரு நாள், நடு இரவில் உள்ளிருளைத் துலக்கி நள்ளிருளையும் விளக்கி, ஆன்மவொளியைப் பரப்பி, ஓர் ஒளிப்பிழம்பாகத் திகழ்ந்திருந்தருளினர். அப்போது அவ் வில்லக் கிழத்தியானவள் பாதியிரவில் வெளியில் வந்து பார்க்குங்கால் அவ்

வருளொளிப் பிழம்பைத் தனது கண்ணாரக்கண்டனள். கண்டதும் இது யாதோவொரு பூதமென்று பயமுற்று இதைத் தனது கணவனிடங் கூறினாள். அந்தோ! எண்ணில்காலம் மண்ணில் தவம்பண்ணினுங் காணுதற்கரிய அருட்பெருஞ் சோதியைக் கண்ணாரக் கண்டும் ஞானக்கண் திறக்கப் படாமையின், மணியைக் கல்லென்பதுபோல் அவள் மாயமென்றுன்னினாள். அம்மம்ம! இவ்வற்புதம் சொல்லற் கரிதாமெனல் இவளுக்கு மாத்திரமா? மற்றும், நுண்ணிய புலனுடையார்க்கும் ஒத்ததாம் என்க.

அற்றுகலி னன்றோ,

"ஒருவ னென்றுங் கண்டறியாதது கண்
டாற்போ லுணர்ந்திருக்கும்
ஒருவன் என்று முரைத்தறியா ததனை
யுரைத்தாற் போலுரைக்கும்
ஒருவன் என்றுங் கேட்டறியா ததனைக்
கேட்டாற் போலுரைக்கும்
ஒருவன் என்றுங் கேட்டாலு மறியான்
இந்த வுண்மையினை"

என்று, கண்ணபிரான் திருவாய் மலர்ந்தருளினர். மனமாசுடைய மக்கள் அருளொளியைக் காணல் எளிதாமோ?

இதுபற்றி யன்றோ, சைவ சமயத்தின் மெய்ம்மையை நோக்கி,

"ஊனக்கண் பாச முணராப் பதியை"

எனவும்,

"புறச்சமயத் தவர்க்கு இருளாய் அகச்சமயத்து ஒளியாய்"

எனவும், சந்தான குரவர்களின் திருவாக்குகளு மெழுந்தன.

இறைவனார், திருவருளுட் கலந்தார்க்கு ஒளிமயமாய்த் திகழ்வர் என்பது நூற்றுணிபாம். இதை,

"உள்ளொளி யோங்கிட வுயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே
மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
அருளமு தருத்திய வருட்பெருஞ் சோதி"

என்றற் றொடக்கத்து, அருட் பிரகாச வள்ளலாரின் பொருட்சுவை மலிந்த அருட்பெருஞ் சோதி அகவற்பாவா லுணர்க.

## சுவாமிகள் குயவன் மனையிலிருந்து வேறு இடஞ் செல்லல்.

இவ்வாறு நிகழ்ந்த செயலை, நமது கருணாநிதியானவர் கண்டு ஒருவர் நம்மால் கலக்க முறல் எற்றுக்கு என்று, அக் குயவன் மனையிலிருந்து வேறிடஞ்சென்றருளினர். தம்மால் ஒருயிரேனும் பயமுறில், தாமும் பயமுற்று அவ்வுயிர் வருந்தா வண்ணம் பாதுகாப்பது ஞானிகளின் இயற்கை யாகும்.

இதனாலன்றோ,

"நடுங்காம லெவ்வுயிரு நறுக்காது துரும்பனைத்தும்"

என்றும், பிறவுங் கூறுகின்றன நூல்களும்.

## சுவாமிகளைக் குலாலனும் அவன் மனைவியும் தரிசித்தல்

இவ்வாறு, இதைத் தனது மனைவியால் கேள்வியுற்ற அக் குயவனும், அவன் மனைக்கிழத்தியும் தமது வீட்டின் புறந்திண்ணையிலிருந்த தோபா சுவாமிகளைக் காணாமல் மனம் வருந்தி அகங்குழைந்து, அந்தோ! யாம், முற்பிறப் புக்களிற் செய்த புண்ணிய விசேடத்தா லன்றோ இப் பெரி யார் நமது புறந்திண்ணையி லிருக்கப்பெற்றோம், கையிற் கிடைத்த மணியை நழுவவிட்டோமே, பெரியார் திருவடித்

தூளி பட்ட வீடும் திருக்கோவிலன்றோ, பெரியாரைப் பெறும் பேற்றினும் சிறந்த பேறு மற்றொன்று முண்டோ, இல்லையே.

இதனாலன்றே,

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்று, கூறுகின்றது தமிழ் மறையும். என்று இவ்வாறு, மனைவியுந் தானும் ஒரே நினைவாகி இம்மகாநுபாவர் இருக்குமிடஞ் சென்று, இவரைக் கண்டு பணிந்து, தமது குறையைவிண்டு, ஐய! யாம், தங்கட்குச்செய்த பிழையாது? தேவரீர் எம்மால் முனிவு கொள்ளல் தகுமா? தாம் எமது மனையை விட்டு இங்கெழுந்தருளிய காரணம் யாது? எம்மிடத்தில் பிழைகளிருப்பினும் தங்களைப்போன்ற தவப்பெரியார் அவற்றைப் பொறுத்தருளல் கடனன்றோ? என்று பலவாறாக இருவரும் வேண்டிக்கொண்டனர்.

புத்திரப்பேறு உண்டாகும்படி தயவனுக்கு வரமளித்தல்

அதைக் கேட்ட இம் மகாநுபாவர், அன்பர்காள்! நீங்கள் விரும்பியது யாது? என்று வினவியருளியதற்கு, அவர்கள், ஐய! எல்லாம் வல்ல எந்தாய்? தங்கட்குத் தெரியாதது மொன்றுண்டோ? இல்லை. அங்ஙனமாயினும் தமது ஆணையை மறுப்பதற்கஞ்சிச் சொல்லுகின்றோம், அதாவது-

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்று திருமறை விதித்தவாங்கே; எமக்கு இதுகாறும் மக்கட்பேறில்லை யென்பதை முன்னரே திருவருள் அறிந்திருக்கலாமன்றே, ஆதலின், எமக்கு அத்தகைய மக்

கட்பேற்றை யளித்தருளல் வேண்டுமென்று இரந்துகொண்டனர். அதைக்கேட்ட நமது சுவாமிகள், தமது சட்டியில் தாம் அருந்திய பரிகலச் சேடத்தில் ஒரு சோற்றை அக்குயவன் மனைவிக்கு எடுத்துக் கொடுத்து 'இதை யருந்தில் உன் வயிற்றில் ஒரு சித்தன் பிறப்பான்' என்று திருவாய் மலர்ந்தருளி, அதை அருந்தும்படி ஆணையளித்தனர். அவ்வாறே அவ்வம்மையாரும், பெரியார் பரிகலச் சேடமே நமது வேண்டுகோட்கு இனிய மருந்தாமென்று கருதி அன்போடு ஏற்று அருந்தினள். அருந்திய உடனே, தனது கிழப் பருவம் நீங்கிக் கருப்பங் கொண்டு முற்றி ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தனள்.

### குயவனது குழந்தை பெரியாராதல்

அப் புத்திரர், ஓதாதுணர்ந்து பெருந்துறவடைந்து 'ஏகாம்பரசிவ யோகி' என்னுந் திருநாமத்துடன் விளங்கி சங்கராசாரியரால் மதிக்கப்பெற்று மாதவத்தராய் ஞானங் கைவரப் பெற்று முத்தியெய்தினர். பெரியார் பரிகலச் சேடத்தால் பெறுததொன்றுண்டோ, இல்லை.

இதனு லன்றே,

"அடையு நற்சுவைக ளனைத்தையு மிகழ்ந்து இங்கு
அமலநற் சேடமாருதலும்,
இடையறத் திகழும் முத்திசாதனமென் றிசைத்திடு
மெலையிலாரணமே"

என்றற்றொடக்கத்து உண்மை வாக்குகளு மெழுந்தன.

### பெரியாரின் பரிகலச் சேடவலி

ஈண்டு, சித்தந்தெளிந்த சிவஞானியின் பரிகலச்சேடமுண்ணல், முத்தியையுமளிக்கும் வன்மையை யுடையதா

மெனின், இங்குப் புத்திரப் பேற்றையளித்தல் அரிதாங் கொல்லோ? அரிதன்றும்.

இதுபற்றி யன்றே,

"சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று மூலன் மொழிந்ததே"

என்று திருமந்திரமும் இதையே விதிக்கின்றது. இங்கு, சித்தர்காட்டில் அடியார்கள்உண்டுகழித்த எச்சில் இலைகளைப் போட்டதனால், கிணற்றின் உவர்நீரும் நன்னீராகிய சரிதையை நினைத்துக் கொள்க.

மற்றும், திருக்கண்ணோக்க மாத்திரத்தினாலே எல்லாம் வல்ல நமது சுவாமிகள் செயற்கரிய செய்யும் வல்லுநரெனினும் ஒரு சோற்றுப்பருக்கையால் புத்திரப் பேற்றை யளித்தது, பெரியாரின் பரிகலச்சேடத்தின் பெருமையை உலகுக்கு அறிவித்தற்பொருட்டுச்செய்த ஆடல்மாத்திரமே யாம் என்பது உய்த்துணரற்பாலது.

### வறுமையுற்ற துயவன்

இவ்வாறே, அங்குள்ள மற்றொரு குலாலன், காம வயத் தனாய்ப் புற்றீசல்போலப் புதல்வரைப் பெற்று துளையிற் கையிட்டுக்கொண்டு ஆப்பை யசைத்துவிட்ட குரங்கைப் போன்று மாட்டிக்கொண்டு, அம்மக்களையும் பாதுகாக்கவழி யறியாது பரிதவித்துக்கொண்டிருந்தனன். அவ்வாறே

"ஒருமகவுக் களித்திடும்போ தொரு மகவு
கைநீட்டும் முந்திமேல் வீழ்ந்து
இருமகவுங் கைநீட்டும் மும்மகவும்
கைநீட்டும் என்செய் வாளால்

பொருமி ஒருமகவழும் கண்பிசைந்தழும்
மற்றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவு
எங்ஙனஞ் சகிப்பாள் பெரிதுபாவம்"

என்றவாங்கே, அக்குழந்தைகளின் மாதாவும் மிகுந்த துன்பக்கடலுள் மூழ்கியிருந்தனள்.

அந்தோ! கொடிது! கொடிது!! வறுமைமிகக் கொடியதாமன்றே.

இதுபற்றி யன்றோ,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்"*

என்றற்றொடக்கத்து மணிமேகலைவாக்கும்,

மற்றும்,

"தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் அளவாச் சோம்பலை யெழுப்பும்
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திரம் அவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே"

என்ற உண்மை வாக்கும், பிறவும், வறுமையின் கொடுமைகளை விரித்துக் கூறுகின்றன.

இதையே நமது தெய்வப்புலவரும்

"நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன் றுங் கண்பா டரிது"

என்று மிகத் தெளிவாய்த் திருவாய் மலர்ந்தருளினர்.

சுவாமிகள் வறுமை மிகுந்த குயவன் வீட்டை யடைதல்.

இத்தகைய வறுமை நோயால், அக் குழந்தைகளும் அன்னை பிதாக்களும் அளவிலாத் துன்புற்றிருக்கின்றதைத் திருவருளாலுணர்ந்த நமது சுவாமிகள், அக் குயவனுடைய மனையை யடைந்து அவனை நையப்புடைத் தருளினார். இம் மகாநுபாவரால் அடியுண்ட அப்புண்ணிய சீலன் இதுவே சுவாமிகள் நமக்குக்கருணை புரிந்ததாமென்று கருதி, அதே காரணமாய் வெளியூருக்கு ஓடிப்போய் விட்டனன். இப்பெரியார் உடனே அவன் வீட்டுப்புறந் திண்ணையில்,

"இருக்குமிடந் தேடி என்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனேயென் தேகம்
இளைத்தாலும் போகே னினி"

என்று இருந்து விட்டனர். இஃதன்றோ அருளுடைய மெய்ஞ்ஞானிகளின் அறநெறியாம், உயிர்கண்மாட்டுத் தயையின்றேல் ஞானங் கைகூடாத தாகுமாதலினென்க.

இதுபற்றியே,

"நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை"

என்று, தமிழ்மறை வாக்கு மெழுந்தது. இப்பெரியார், சீவர்களிடத்தில் அருள் சிவபத்தி திருந்திய துறவு மெய்ஞ் ஞானம் ஆவதோர் வடிவா யெழுந்தருளியவராதலின், "என்பு முரியர் பிறர்க்கு" என்ற மறைமொழிக்கிணங்க, அங்குத் தமக்கு வந்த பிச்சைச் சோற்றால் அக்குழந்தை களையும், அவைகளின் மாதாவையுஞ் சில தினம் பாது காத்து வந்தனர். இம்மகாநுபாவர் சிவஞான மோன நிலையிலிருந்தவராயினும் உயிர்களிடத்துள்ள கருணையால்

உயிரைக் காக்கும் இறைவனென்ன, பாதுகாக்கும் முயற்சி இவரையறியாது இவர்பால் இயற்கையாகவே எழுந்தது.

ஈண்டு, உணவளித்தலே பேரறமாமென்பதை யுணர்க. அற்றாகலி னன்றே,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்று கூறுகின்றது மணிமேகலை யென்னு நூலும். இதனால், இரக்கமின்றேல் இறைவனருள் பெறல் எவ்வாற்றானுங்கூடாதென்பது பெற்றாம். அருட்பாவில் காண்க.

குயவன் நலமுறல்.

இதைக்கண்ட சில அன்பர்கள், நமது சுவாமிகள் வறுமை மலிந்த குயவன் மனையில் அமர்ந்திருக்கின்ற காரணம் யாதெனக் கருதி, அக்குயவன் மனைவிக்கு வேண்டிய பொருளைக்கொடுத்து உதவிபுரிந்தனர். அதனால் அக்குயவன் செம்மை யுற்றனன். ஈண்டுப் பெரியாரின் திருவடித் தூளி மனையிற் பட்ட மாத்திரத்தானே அங்கு எல்லா நன்மைகளும் உண்டாகுமெனல் எல்லா நூற்கும், எல்லாச் சமயத்தவர்க்கும் ஒப்ப முடிந்ததா மென்பது உணரற் பாலது.

ஒரு தொண்டனை வலிந்தாளல்:

சுவாமிகள், இவ்வண்ணம் திருவருள் புரிந்துவிட்டுத் திரும்புங்கால் சுவாமிகட்கு முன், ஒரு வறியோனாகிய உண்மைத் தொண்டன் வந்தனன். அவனை, சுவாமிகள், தமது திருக்கரத்தாற் பிடித்து ஈர்த்து வடக்கு நோக்கித் தள்ளி விட்டனர். தள்ளவே, அவன் உண்மை யறிவு தோன்றியவனாய் அவ்வாறே வடதிசையையே நோக்கிச் சென்று முடிவில் மாதவஞ்செய்து உய்ந்தனன். இது தெய்வ கதியால் வந்த உபதேச நெறியாம்.

இதை உற்று நோக்கின், குடும்பத் துன்பங்களை விட்டுத் தவஞ் செய்வாயாக, என்று அவனுக்கு அருளியவாறும். என்னை? பண்டைக் காலத்தில் செபஞ் செய்தலுக்கு வடக்கிருத்தல் என்பது நூல் வழக்கு. இதைப் பண்டைக் காலத்திய தமிழ் நூல் மரபுணர்ந்தார் மாட்டுக் கேட்டுத் தெளிக. இது இங்கு வடக்குத் திசையில் தள்ளினமை யாற் குறிக்கப்பட்டதாம். மற்றும், பெரியார், எல்லா வகையானும் உயிர்கட்கு இதஞ் செய்தலையே குறியாக வுடையார் என்பதும் பல்லோர் துணிபாம் என்க.

இவ்வண்ணம், நமதுசுவாமிகள், மெய்ஞ்ஞான நிட்டையில் அழுந்தியவராய், நனவிற் சுழுத்தி நிலையிலிருந்து சிறிதும் வழுவாது, நான்கு நாய்கள் தம்மைச் சூழ்ந்து திரியுமாறு சட்டியொன்றை மொட்டைத் தலையிற் கவிழ்த்துக் கொண்டு ஒருவகை நியதமுமின்றி, பல்வேறு வகைச் சொற்களையும், செய்கைகளையுமுடையவராய், பாலர், பித்தரெனத் திரிந்துகொண்டிருந்தனர்.

சுவாமிகட்கு அளித்த மது பாலாதல்.

இவ்வாறு, தோபா சுவாமிகள் சமயாதீத நிலையையடைந்து,

"நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—றூயார்
பெருமை சிறுமையிலை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய் வார்"

என்றவாறே யாண்டுந் திரியுங்கால், இவர்முன் வருகின்றவர் அனைவரும், சுவாமிகளை வணங்கிப் போற்றிக் கொண்டு செல்வார்கள். அங்ஙனமிருக்கும் போது, ஒரு நாள், சுவாமிகள், பவக்கடலைக் கடந்து ஞானப் புணையால்

வீடாகிய கரையை யடைந்ததைப் புலப்படுத்துவது போன்று, சென்னையிலுள்ள கடற்கரையை யடைந்து கரைவழியாய்ச் சென்று கொண்டிருக்குந் தருணத்தில், அங்கிருந்த ஊணர்கள் கண்டு கைகொட்டி நகையாடிப் பித்தனைப் பெரியானெனப் போற்றும் பேதமையுடைய இம்மக்களை என்னென்று சொல்வோம்! இம் மயக்கந்தொலைய, இவனுக்கு மயக்கமிருந்த மதுவை மிக அருந்தில் இவனைத்தொலைத்து விடலாம் என்று கருதி, கொல்லத்தக்க கொடிய மதுவைச் சுவாமிகளுக்குக் கொடுத்தனர். சுவாமிகளும், அதை அன்போடேற்றுத் தமது சட்டியில் வார்த்தபோதே அம் மரத்தின் பால் ஆவின்பாலாகிவிட்டது. உடனே, தம்மைச் சூழ்ந்து நின்ற நாய்களையழைத்து அவைகளை அதை யருந்துமாறு செய்தருளினர். நாய்களும் அதையருந்தின. அதைக்கண்ட அவ்வூணர்கள் இவன் பித்தன்போன்றிருப்பினும் முத்தன் போன்று மந்திரத்தால் மதுவைப் பாலாக்கிவிட்டான், இது இது, இவனது மாயவித்தையாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டே அவ்வூணர்கள் மற்றொருமுறையும் அத்தகைய மதுவையே கொண்டுவந்து சுவாமிகட்குக் கொடுத்து அருந்தச் சொன்னார்கள். இது, கொடுத்ததையெல்லாம் அருந்தியவனே ஞானியென்னும் மூடக்கொள்கைபோலும்! சுவாமிகள் அம் மதுவையும் அவ்வாறே வாங்கி, தமது சட்டியிற் பெய்து அதைத் தயிராகச் செய்தருளி, முன்போல் தமது நாய்கட்கு அருத்தினர். உண்மை ஞானியரும் மயக்கப் பொருளை யருந்துவரோ? அருந்தார். இது பழிப்பாவதுடன் ஞான நிலைக்கு மிழுக்கா மாதலினென்க.

ஈண்டு,

> "ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
> சான்றோர் முகத்துக் களி"

என்றற் றொடக்கத்துத் தமிழ் வேதம் முதலான பல நூல்களும், பெரியார்களும் பழித்திருத்தலைக் காண்க. இவ் வண்ணமிருக்கு நாளில், நமது சுவாமிகள், சைவ சமயந் தழைத்தோங்குவதன் பொருட்டுத் திருவவதாரஞ் செய் தருளிய ஞானசம்பந்தப் பெருமானாரின் திருவருள் பெற்ற சிவஞானச் செல்வராதலின், மறந்தும் மதுவையுண்பார் எனல் மாறுமன்றோ? யாவரேயாயினும் மது முதலான மயக்கப் பொருளுண்பார் அறிஞராகார் என்பது துணிபாம்.

கனியை யீந்து புத்திரப்பேறநுளல்

அங்ஙனமே, மற்றொரு நாள் சுவாமிகள், வீதியி லெறிந்த எச்சில் இலைகளைச் சேர்த்துக்கொண்டு ஒருவனது வீட்டின் முன் சென்று, அவ் வீட்டிலுள்ளானைப் பலவகை யாகக் கொடுஞ் சொற்கூறி வைதருளினர். அது, அவனுக் குச் செய்த மறக்கருணையென் றறியாமலும், சுவாமிகளின் நிலைமையை இன்னதென்று அறியாமலும், அவன் பல வாறாய் மிக வெகுண்டு, அடே! பிச்சைச் சோற்றின் பொருட்டு எச்சிலையைத் தேடும் பேயா? நீ, எம்மை வைதல் தகுமா? நீ யெங்கே? நானெங்கே? என்று, வைத துடன் சுவாமிகளை அடிக்கவும் எழுந்தனன். சுவாமிகட்கு, அதனால்,

"நாடவர் பழித்துரை பூணதுவாகக்
கோணுதலின்றி" எனவும்,
"பெரியார் பெருநட்புக் கோடல் தாஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ"

எனவுங்கூறியவாங்கே, சிறிதும் முனிவாதிகள் மனத்தில் தோன்றில. அப்போது, சுவாமிகள் இரண்டாய்ச் சேர்ந் துள்ள ஒரு கனியை வைதவனுக்கெதிரில் எறிந்து 'இதை

அருந்தில் பேறுண்டு' என்று திருவாய்மலர்ந்தருளிவிட்டுத் தாம் மறைந்தருளினர். அதைக் கண்ட அவன், இப் போது, இறைவனே இவ் வடிவாய் வந்தருளியுள்ளான் என்று தெளிந்து, அந்தோ! உலகிறந்த சிவன் முத்தர் அல கிறந்த நடையுடையார் என்பதை,

"பால ரொடுஉன் மத்நர் பிசாசர் குணம் வருமே"

எனவும்,

"மான மோடவ மான மடைந்திடாது
ஊன நீங்கி யுவந்த சிறுவனைத்
தேனு லாந்தொடை யோய் முனந் தேர்ந்ததால்
யானு மோகையுற் றேனவை யற்றரோ"

எனவும்,

"மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்பார் ஐயம் புகுந்துண்பார் சிவன் முத்தர்"

எனவும், பிறவுங் கூறும் வகையாலுணர்ந்திருந்தும், யான் மதிகெட்டேனே, துதிவிட்டேனே, நற்கதி தட்டிற்றே என்று பலவாருகத் தனக்குத்தானே வருந்திக் கொண்டு, தோபா சுவாமிகளின் திருவுருவத்தைப் பாவித்து வழி பட்டுக் கொண்டு, அக் கனியை எடுத்துத் தனது மனைவி களிருவரிடத்தும் அளித்தனன். அளிக்கவும், அதை, அவருள் ஒருமாது உபேட்சித்தனள். மற்றொருமாது மாத்திரம், இது பெரியார் பிரசாதமென்று அன்போடு ஏற்று அருந்தினள். அது முதற்கொண்டு அவள் சூலாகி அரிய தோர் ஆண் மகவைப் பெற்றெடுத்தனள். அது தொட்டு, அவ்வன்பனும் பலவகை நலம் பெற்றுய்ந்தனன்.

### பெரியார் செயல் அறிதற்கருமை யெனல்.

இவ்வாறு நமது சுவாமிகள், சென்னன் ஆண்டதால் சென்னை யென்னுந் திருநாமம் பூண்ட சென்னைமா நகரில் செய்துவந்த திருவிளையாடல்களுக்கு ஒரு அளவுமுண்டோ? இல்லை. அல்லது எம் போலிகளால் அவை அறியவுந் தகுமோ? தகாது. அஃதன்றியும்.

"பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே"

என்றதற் கிணங்கவும்,

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"

என்றமறை மொழிப் படியும், பேதைமையையுடைய எம்போல் வார்க்கு, அத்தகைய சிவஞானிகளின் திருவுள்ளக் கிடையைத் தெரிய வேண்டுமெனில், எத்துணைப் புண்ணியம் வேண்டும்? முன்னர்க் கூறியதைக் கேட்டும், சரித்திர நூலைப் பார்த்தும் திருவருள் வலியால் ஒருவாறு சுருக்கி எழுதினேன். விரிக்கில் இம்மகானின் சரிதம் ஏட்டில் எழுதவும் அடங்காது, பாட்டில் பாடவும் அடங்காது என்க.

முதலாவது காண்டம்

முற்றிற்று.

முருகன் துணை.

திருச்சிற்றம்பலம்

# தேரையர் சுவாமிகள் புராணம்

## இரண்டாவது [வேலை மாநகர்]

## திருவருட் செயற் காண்டம்.

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னு
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னாற்
றனைமாற்றி யாற்றத் தருஞானி தானே. (திருமூலர்)

### நாட்டுப் படலம்.

கோட்ட முள்ளது மில்லதுங் குழுமிய சால்போர்
நாட்ட முற்றது மற்றது நலமலா தனபா
ராட்டு கின்றது மறம்வளர் பாவியின் நலங்கள்
பூட்ட நின்றதுந் தொண்டைநன் னாடென்பர் புலவர்.

தண்டமிழ்நாடானது, சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவேந்தர்களால் அரசாண்டு வரப்பெற்றமையின், சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என முப்பகுதியை யுடைத்து. இவற்றுள், தொண்டை நாடென்பது சோழ நாட்டின் ஒரு பிரிவாம். எவ்வாற்றாலெனின், நாகப்பட்டினத்துச் சோழன், நாகலோகஞ் சென்றபோது அங்கோர் நாககன்னிகையை மணந்து, மீண்டும் இங்குவருங்கால், அந் நாககன்னிகைக்குப் புத்திரனுதிப்பனேல், அவனுக்குத்

தனது சோழ நாட்டில் பாதி கொடுத்து விடுவதாகச் சொல்லி வந்தனன். பின்னர், அவ்வாறே அந்நாககன்னிகைக்கு ஒரு புதல்வனுதித்தனன். அப்புத்திரனை, அவள், குறிதோன்றுமாறு ஆதொண்டையிலைகளை யுடுத்திக் கடலின்மீது தெப்பத்திலேற்றியனுப்பினள். அப்புத்திரன், அலைகளாற் செலுத்தப்பட்டு நாகப்பட்டினத் துறையை யடைந்தனன். அப்புத்திரனைக் கண்ட சோழன், அன்போடு வளர்த்து, தான், முன் சொன்னவாறே சோழ நாட்டில் பாதி கொடுத்து, முடிசூட்டி அதற்கு மன்னனாக்கினன். அவன், தொண்டைச் செடியைக் குறியாகக் கொண்டு வந்தமையின், அவனுக்குத் தொண்டைமான் எனப் பெயரிட்டு, அந்நாடு தொண்டை மண்டலம் என வழங்குமாறுஞ் செய்தனன். ஆதலின் தொண்டைநாடென்று வழங்கப் பெறுகின்றது.

இதை,

"முக்கணான் கணநா தர்க்கு முதன்மைத்துண் டீர ணாண்டு
மிக்கதுண் டீர நாடாய்த் தண்டக வேந்தன் றாங்கித்
தக்கதண் டகநன்னா டாய்த் தபனன்மா குலத்துச் சோழன்
றொக்கதார்த் தொண்டை மான்காத் தாயதுதொண்டைநா

என்பதனாலும், மற்றும்வருவனவற்றானுமுணர்க. [டே"]

ஈண்டு, கடப்பந்தழையிற் கிடத்தியவனைக் கடம்பன் என்றும், வேப்பந் தழையானும், அதன் மலரானுந் தொடுத்த மாலையை யணிந்தவனை வேம்பனென்றும் வழங்குவது போல், ஆதொண்டைத் தழைகளை யணிவித்தவனைத் தொண்டன் என வழங்குவதாமெனல் உணரற்பாலது. இவ்வாறே பல பிரபந்தங்களிலுங் காணப்படுகின்றதென்க.

தொண்டை மண்டல மென்பது ஆதொண்டைத் தூற்றையுடைய மண்டலமெனப் பொருள் படுமேயன்றி, தொண்டைத் தழையானும் மலரானும் மாலையணிந்தவனால் ஆளப்பட்ட மண்டல மெனல் பொருளாகாது.

அங்ஙனமாகுமிடத்து, சேரன் மண்டலம்—சேர மண்டலம், சோழன் மண்டலம்—சோழ மண்டலம் என வழங்கப்படுவது போன்றே, தொண்டன் மண்டலம்—தொண்ட மண்டலமென்றே வழங்கப்படல் வேண்டும். தொண்டையன் மண்டல மெனப்படுவது, அன்விகுதி கெட்டுத் தொண்டைமண்டல மெனலுமாம். இதிற் பல வகைகளுண்டு. இதை, இராமலிங்க சுவாமிகளருளிய தொண்டைமண்டல சதகம் என்னும் உரைப்பகுதியிற் காண்க.

இத்தகைமை வாய்ந்த தொண்ட நாடு, மலைமகள், இறைவனைத் தனக்குக் கணவனாக்கித் தழுவிக் கொள்ளுதற் பொருட்டுத் தவஞ் செய்யப் பெற்றதும், பாடல் பெற்ற முப்பத்திரண்டு அரும் பெருஞ் சிவ தலங்களை யுடையதும், திருப்புகழ் பெற்ற முருகக்கடவுளின் ஆலயங்களையுடையதும், விஷ்ணுவின் நூற்றெட்டுத் திருப்பதிகளிற் சில திருப்பதிகளை யுடையதும், வாலி, காக்கை, அணில் என்பவைகள் பூசித்து முத்தி பெற்ற திருக்குரங்கணின்முட்டம் என்னுந் தலத்தை யுடையதும், ஒரு வணிகன், தனது மனையாள் பரபுருடனை யணையக்கண்டு அவளைக் கொன்றுவிட, அவள், மறுபிறப்பில் நீலியென்னும் பேயாய் அவ் வணிகனைக் கொல்லத் துணிய, அவ் வணிகன் பொருட்டு வாக்களித்த எழுபது வேளாளர்கள் தீயில் விழுந்திறந்தனர் என்னுஞ் சரிதப்படி அத்தகைய

வேளாண்மையர் வாழ்ந்திருக்கப் பெற்றதும், மற்றும், சேரநாட்டுப் பெண்ணை வளர்த்துவந்ததால், சேர நாட்டார்களை மைத்துனர்களென்று உரிமை பாராட்டினவர்களான வேளாண்மையர்கள் வசிக்கப் பெற்றதும், காஞ்சியிலுள்ள காம கோட்டத்தில் காமாட்சியம்மையார், தமக்குப் பரசிவனோடு உண்டாகிய காதல் செய் முறைமை நிறையுமாறு முப்பத்திரண்டு அறங்களையுஞ் செய்ததனால் தொண்டை நாடு நீதியுடையது என்று யாண்டும் வழங்கப்பெறும் பெருமையை யுடையதும் இத் தொண்டை நன்னாடேயாம். இதன் எல்லையோ,

"மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு"

என்று கம்பர் கூறியதாம்.

மற்றும், இத் தொண்டை நாடு, கண்ணப்பர், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன், கலியர், வாயிலார், சாக்கியர், மூர்க்கர், பூசலார் முதலானோர் தோன்றி நலம் பெறச் செய்ததும், திருவள்ளுவ தேவர், கச்சியப்ப சிவாசாரியர், இராமாநுசர், ஞானியப்ப நாவலர், கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், இரட்டைப்புலவர், அருணகிரிநாதர், பவணந்திமுனிவர், படிக்காசுப் புலவர், அப்பையதீக்ஷிதர், முதலான சான்றோர்கள் தோன்றியதாலும், மற்றும் பல அறிஞர் தோன்றியதாலும் மிக அழகுற்றதும், அதிகமான், கறுப்பன், சடையப்பன், முதலான வள்ளல்களால் மிகச் சிறப்புற்றதும், நீதி தவறாத பல மன்னர்கள் அரசுபுரியப் பெற்றதுமாம்.

அஃதன்றியும், இந்நாடு வேளாண்மையர்களின் கோட்டங்களையும் நாடுகளையும் உடையதும், நல்லொழுக்கங்கள் நிறைந்த பல்வகைப் பெரியோர்களாற் சூழப் பெற்றதும், மற்றும் பல எண்ணிறந்த பெருமைகளை யுடையதுமாம்.

இதை,

"பூதவஞ் சூத முதலாக நின்ற பொதும்பிற்சந்த
பாதவம் போன்மிக்க வேளாளர் தங்கிய பான்மையினால்
ஆதவஞ் சூழ்தரு பல்கோடி தேச மனைத்தினுமே
மாதவஞ் செய்ததன் றேதமிழ் சேர்தொண்டை
மண்டலமே"

என்றற் றொடக்கத்துத் தொண்டைமண்டலச் சதகப்பாட்டாற் காண்க.

அஃதன்றியும்,

*நந்திமலையென்று வழங்கப்படும் நந்தி துர்க்கத்தில், வசிட்ட முனிவரின் காமதேனு, பரசிவனார் விடையைக் கண்டு விழைவுற்றுப் பால் வற்றியதை வசிட்ட முனிவர் கண்டு, ஒரு தருப்பையை யெடுத்துக் கன்றாக்கி யனுப்ப, காமதேனு, அதைக் கண்டு பாலைப் பொழிந்தது; அப் பால் திரண்டு ஒருநதியாய்ப் பெருகியது கொண்டு பாலாறு எனப்படும் பாலி நதி பாய்ந்து பல வளங்களைப் பெற்றதுமாம் இத்தொண்டைநாடு.

இதை,

"வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ்
சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால்

---

* முன்னொருகால், பரசிவனாலிடப்பெற்ற சாபம் நீங்குதற் பொருட்டு கல்லுருவாய்க் கிடந்த விஷ்ணுவை நோக்கி நந்தி தவம் புரிந்ததால் நந்திமலை யென்பர் சிலர்.

சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ"

என்னும் கந்த புராணச் செய்யுளானும்,

"அன்ன தன்மை வசிட்ட னறிந்து தருப்பையை"

என்றற் றொடக்கத்துக் காஞ்சிப்புராணச் செய்யுட்களானும், பிறவாற்றானு முணர்க.

முன்பொருகால், பத்தினி யாற்றின் தென்கரையிலுள்ள பீஜாசலத்தில் (பள்ளிக்கொண்டையில்) நாராயணனைக் குறித்து அம்பரீஷர் தவஞ் செய்து வேள்வியுஞ் செய்ய, அதை முன்னிட்டுப் பத்தினி நதி பாலைப்பொழிந்தது. அப்பால் அவ் வேள்விக்கு உதவியாயிற்று; ஆதலின் பாலாறு என்னுந் திருநாமங் கொண்டதென்பர் வைணவர்.

இவ்வாற்றால் இந் நாட்டின் பெருமையை ஒருவாறு அறிஞர் உணரினும் உணர்வர்; இந் நாட்டிலுள்ள சான்றோர்களின் பெருமை அறிதற்கரிதாம். இதை,

திருத்தொண்டை நன்னாட்டு நானிலத் தைந்
திணைவளமுந் தெரிந்து காட்ட
மருத்தொண்டை வாச்சியர்சூழ் குன்றைநகர்க்
குலக்கவியே வல்லா னல்லாற்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார்,

என்னுங் காஞ்சிப்புராணச்செய்யுளானும் "தொண்டை நாடு சான்றோருடைத்து" என்னும் ஔவைப் பிராட்டியாரின் அமுதவாக்கானு முணர்க.

நாட்டுப் படலம் முற்றும்.

## நகரப் படலம்

வேலை யாயெழு பவமதை விலக்கவே யென்றும்
வேலை யாயுள விமலர்கள் விளங்கலான் மற்றும்
வேலை யாயுத மெனக்கொளும் வேந்தனும் மலரை
வேல தாகவுஞ் செய்தலின் வேலைமா நகராம்.

முன்னர்க்கூறிய பெருமைகள் மலிந்த தொண்டை நாட்டின் கண், இமயம், ஏமகூடம், கைலை, கந்தமாதனம், நிடதம், நீலம், மந்தாம், விந்தம் என்னும் எட்டுப் பருவதங் களை நோக்க மிக உயர்ந்ததும், மேரு மலையைப் போன்ற தும், மயன் என்னும் சிற்பியாலமைத்த பல் வகைச் சித்திரங்களையுடையதுமாகிய தென்கைலை யென்னும் ஒரு மலை வேலூர்க்கருகில் உண்டு. அதன் அடிவாரத்தில் கைலாய பட்டினம் என்று ஒரு நகரமுண்டு, அந்நகரை கரிகாற் சோழன் ஆண்டு வந்தனன்.

அவன், அதை முறை வழுவாது ஆண்டு வருங்கால், அம் மலைக்கு ஈசான திசையில் ஐந்து நாழிகைவழி தூரத்தில் அரிய பெரிய கற்கோட்டை தங்கிய தருமலிங்க மலையென்று ஒரு மலையுண்டு. அதற்குத் தெற்கில் பால கொண்ட மலை என்னும் ஒரு மலையுமுண்டு, அதற்கு மேற்குப் பாகத்தில் 'வேலைப்பாடி' என்னுமொரு நகரம் உண்டு. (அந்நகரை யாண்ட அரசன் வேலைப் பூசித்து வந்ததால் வேலப்பாடி என்னும் பெயர் வந்தது என்ப.) இது, வேலனைப் பாடிய தால் அல்லது வேலாகப்பாடியதால் இந்நாமம் பெற்றது என்று தோன்றுகின்றது. இந்நகரம் சதுப்பேரிக்கு வடக்கி லுள்ளதாகும். இந்நகரத்திற்கு வடக்கில், நந்தி மலையி லிருந்து பெருகும் பாலாறு மேற்கிலிருந்து கிழக்காய்ச் செல்கின்றது. இதில், கௌண்டில்ய நதியும், பொன்னி

யாறும் வந்து சேர்கின்றன. இவ்வாற்றிற்குத் தெற்கில் சவ்வாது மலை யிருக்கின்றது.

அத்தகைய இந்நதியின் கரையில், இருடிகளும் முனிவர்களும் தவஞ் செய்யப் பெற்றதும், வேல மரங்களடர்ந்ததுமாகிய ஒரு வனம் உண்டு. அவ் வனத்தை கரிகாற் சோழன்வேரறக் களைந்து, அங்கு ஒரு அழகிய பட்டினத்தையுமுண்டாக்கி, அதன் நாப்பண் ஒரு ஆலயத்தையும் மிக வழகாய் அமைத்தனன். அமைத்து விட்டு, அதில் சிவலிங்கத்தைத் தாபிக்க ஒரு அன்பர் முன்னிலை யாதல் வேண்டுமென்று இடையறாது பரமேசுரனையே சிந்தித்துக் கொண்டிருந்தனன்.

அக்கால், பத்திராசலத்திலிருந்த (தெலுங்கு தேசம்) பொம்மைய ரெட்டி, திம்மைய ரெட்டி என்னுமிருவரும் தமது தம்பிமார்களுக்குப் பயந்து கொண்டு மேற்கூறிப் போந்த வேலப்பாடிக்குத் திருவருளால் வந்து சேர்ந்தனர். பின்னர், அவர்கள் கரிகாற் சோழனிடம் ஆணை பெற்றுக் கொண்டு அங்கு இனிது வாழ்ந்து வருங்கால், ஆரணி யென்னும் நகரிலுள்ள குறுநில மன்னர் படை யெடுத்து வந்து வேலப்பாடியைத் தாக்கினர். அப்பகைவரைப் பொம்மைய ரெட்டியார் தமது வலியால் வெற்றி பெற்றனர். அதற்குக் களிப்புற்ற கரிகாற்சோழன், அவருக்கு சதுரங்க சேனைகளைக் கொடுத்து பொம்மைய ரெட்டியை அங்கு ஒரு குறுநில மன்னராக்கி வைக்க, அவரும் இனிது வாழ்ந்து வந்தனர். அதன் பின்னர், பொம்மைய ரெட்டியார், தமது காராம் பசுவானது வேலமரங்களடர்ந்த ஒரு புதருக்குட் சென்று, அங்கு உள்ள ஒரு புற்றின் மீது தனது பாலை நாடோறும் ஒழுகவிடவும், அதை ஐந்து தலை நாகம் ஒன்று

அருந்தவுங் கண்டனர். பின்னர், அவர்க்கு இறைவன் தொண்டரைத் தானே தூயகதியினிற் சேர்க்க விரும்பி, அவருடைய கனவில், "அன்ப! யான் நாகவடிவாய் ஆவின் பாலையருந்துகின்றேன், இங்கு எனக்கொரு ஆலயத்தை யமைத்துவைப்பாயாக" என்று அருள் செய்ததோடு பாலுக் கொண்டராயன் மலையிலிருந்து பெருமாளானவர் திருவேங் கடமலைக்குச் செல்லும்போது அவர் திருவடிவைத்த விடத் திலுள்ள தனங்களை ஏழுநாள்வரை யெடுத்துக்கொண்டு இவ் வாலயத் திருப்பணியைச்செய்வாயாக" என்றும், அவருக்கு அருளுஞ் செய்தனன்.

அவ்வாறே, பொம்மைய ரெட்டியார், அங்கு ஆலயம், மதில்கள், அகழிகள், கோட்டை முதலானவற்றை மிகச் சிறந்த சிற்பங்களமையுமாறு செய்வித்து, இறைவன் ஆணைப்படியே, சலகண்டேசர் என்னுந் திருநாமத்துடன் ஒரு சிவலிங்கப் பிரதிட்டையுஞ் செய்து பெருவிழா முதலிய வைகளையும் நடாத்தி வந்தனர்.

பின், வேலைமாநகரை, பெனுக்கோட்டை பிரபு தேவ மகாராயரின் புத்திரர் வேங்கடதேவ மகாராயர் என்ப வர் ஆண்டு வந்தனர். அவ்வாறே அவர் மரபினர் ஒன்பது பேர்களும் ஆண்டு வந்தார்கள். அதன் பின்னர் கிருஷ்ண தேவராயர் ஆண்டனர். இவர், வண்ணானுக்கும், சக்கிலி யனுக்கும் இரண்டு துர்க்கங்கள் கட்டிக் கொடுத்திருக் கின்றனர். அவை, இப்போதும் வண்ணான் துருக்கம், சக்கிலி துருக்கம் என வழங்கப்படுகின்றன. இவை வேலூ ருக்குத் தெற்கிலுள்ளன.

பின், காணுகான் என்னும் ஒரு மகம்மதியன் வேலூரை ஆண்டுவந்தான்.

பின், வடதேசத்திலுள்ள 'துக்கோசிராவ், என்பவர் சேண்பா (கை)க்கம், சுயம்பு மூர்த்தியாகிய விநாயகப் பெருமானருளால் ஆண்டு வந்தனர். மற்றும், சங்கோசிராவ், சீனிவாசராவ், இராமாராவ் என்பவர்களும் ஆண்டு வந்தனர்.

பின், டில்லியிலுள்ள தாவுத்கானும், அவன் மந்திரி சாதுல்லாகானும் ஆண்டு வந்தார்கள். இவர்களே ஆறு காடுகளை வெட்டித்திருத்தி ஆர்க்காட்டையும் உண்டாக்கினவர்கள்.

பின்னர், ஆங்கிலமன்னர் ஆளுகின்றனர்.

இதை,

"சத்தி மலைச்சாரற் றண்குறிச்சி வேலூர்" என்னும் வேலூர் பிரபந்தப் பாவாலும்,

"மடவன் மீகம் வருவாம தேவன்
ஐவாய் அரவாய் ஆபயம் பருகிய
வைகண்டர் சரிதமு மவராக் கிணைப்படி
பொம்மல் கீர்த்திப் பொம்மிய ரெட்டி
செம்பி விழைத்த சேதி மாண்கதை"

என்னும், வேலூர்ச் சரித்திரச் சுருக்கப்பாயிரத் தாலுங் காண்க.

இவ்வாற்றால், வேல மரக்காட்டை வெட்டிச் சீர் திருத்தியதால் வேலூர் என்பது பெறப்படுகின்றது.

இவ் வேலூர்க்கருகில், நிம்பவனமாகிய வேப்பூரில் வசிட்டரும், சமீவனமாகிய வன்னிவேட்டில் வால்மீகரும், விஷவிருக்ஷவனமாகிய விஷாரத்தில் பாரத்துவாசரும், கொடை

மல்லிகைவனமாகிய குடிமல்லூரில் விசுவாமித்திரரும், சூதவிருக்ஷவனமாகிய புதுப்பாடியில் அகத்தியமாமுனிவரும், அதில் ஒன்பது இலட்சம் மரங்கள் வைத்து வளர்த்தமையின் நவலாக்குத் தோட்டம் எனப் பெயர் பெற்ற நவலாக்குத் தோப்பில் ஆத்திரேயரும் தவஞ்செய்து வந்தமையின் இப்போதும் அவரவர் திருப்பெயரால் அங்கங்கு சிவலிங்கந் தாபிக்கப்பெற்று, அவைகளுக்கு ஆலயங்கள் ஏற்பட்டு, திருவிழாக்களும் நடந்துவருகின்றன.

இவ்வேலூர்க்கு மேற்கில், கௌரிபுரம், விண்டுபுரி, கரபுரி என்று வழங்கப்பெறும் விரிஞ்சிபுரம் என்னும் ஒரு தலமுண்டு. இது பிரமன் பூசித்தமையின் காரணப் பெயராம். அங்கு மார்க்க சகாயப் பெருமான் மரகதவல்லியுடன் எழுந்தருளியுள்ளார். அவ்விறைவருக்கு, பொதி மிளகுக்கு வழித்துணையாய் வந்தமையின் மார்க்கசகாயர் என்னுந் திருநாமம் வந்தது.

மற்றும், இவ்வேலூர்க்கு வடகிழக்கில், நவக்கிரகம், வல்லாளன் பூசித்தமையின் வல்லநாதர், வல்லாம்பிகை என்னும் சுவாமி அம்பாள் எழுந்தருளியுள்ள வல்லம் என்னும் ஒரு தலம் உண்டு. இது சம்பந்தப்பெருமானால் பாடப்பெற்றது. இது திருவலம் எனப்படும்.

இனி வேலூர் என்பதற்கு மற்றொரு காரணம், அளவைகளாற்பெறப்பட்டு வருமாறு:-ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் என்பவனுக்கு, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பவைகளும் முன்னர்ச் சிறந்த நகரங்களாக இருந்தன. இவை, தொண்டைநாட்டிலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுக்குள் மூன்று கோட்டங்களுக்குத் தலைநகரங்களாம். இந்த நல்லியக்கோடன், முன்னொருகாலத்தில் பகைவர்கட்கஞ்சிக்

குகக்கடவுளை, அகக்கமலத்திருத்தி வேண்டிக்கொள்ள, அருளுருவாகிய முருகக்கடவுள், அவனது கனவிற்றோன்றி, "அன்ப! நீ இக்கேணியிலுள்ள பூவைக்கொண்டு பகைவரையொழிப்பாயாக" என்று அருள் செய்தனர். அவன் துயிலினின்றும் விழித்து அங்குச் சென்றுபார்க்க, கேணியிலுள்ள பூக்கள் அனைத்தும் வேற்படையாயிருந்தன. அவற்றைக் கொண்டு முருகனருளால் பகைவரை வென்றனன். இக்காரணத்தால் வேலூர் என்று வழங்கப்பெற்றது என்பது இனிது கொள்ளற்பாலதாம்.

இதை,

"திறல்வே லாதியிற் பூத்த கேணி
விறல்கொள் வென்றி வேலூர்"

எனவும்,

"அந்தண் கிடங்கினவன் ஆழ்ம ரெய்தின்"

எனவும் வரும். சிறுபாணாற்றுப் படையின் பாட்டுகளா லுணர்க.

மற்றும், இவ்வாறே, முருகக்கடவுளின் அருளமுதை நிறையப் பருகிய அருணகிரிநாதரும்,

"ஏமழு மாரண கீத இளைய நாயக சூர
கருணை மேருவே தேவர் பெருமாளே"

என்னுந் திருப்புகழை இளையனார் வேலூர்க்குத் திருவாய் மலர்ந்தருளி விட்டு,

"வேய்போ லவுந்தி ரண்ட தோள்மாதர் வந்திறைஞ்சு
வேலூர் விளங்க வந்த பெருமாளே"

என்று, இவ்வேலூர்க்குத் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருப்புகழாலு முணர்க.

வேலூரில் முருகப் பெருமான் ஆலயம் வெளிப்படையாகத் தோற்றாமையின் அருணகிரிநாதர் திருப்புகழ் எவ்வாற்றாற் பிரமாணமாமெனின், வலூரில், பண்டைக் காலத்திய சண்முகப் பெருமான் ஆலயம் இருக்கின்றதனால் திருப்புகழே சிறந்த பிரமாணமென்க.

இவ்வாலயமுள்ள இடம், வேலூரில் உள்ள தோட்டப் பாளையத்திற்கருகில் இப்போது அறுகந்தன்பூண்டியென்று வழங்கப் படுகின்றது. இது வேலூரில் ஒரு பகுதியாகும். இதில், நவாப்பால் கட்டளை வைத்துள்ள ஒரு அரும் பெருஞ் சிவாலயம் இருக்கின்றது. அவ்வறுகந்தன்பூண்டியில் சைவர்களும் மற்றவர்களும் இனிது வாழ்கின்றனர். அவ் வாலயத்தில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி யிருக்கின்றனர். இவ்வறுமுகப்பெருமானே பண்டைக்காலத்திய முதற்காரண மூர்த்தியாவர். இப்பெருமானுக்கு நெடுநாள் பூசை செய்துவந்தவரும் ஆறுமுகக்கடவுளிடத்து அன்பு மிக்குள்ளவரும், ஆதி சைவ குல திலகருமாகிய ஒரு ஆதிசைவர், முன்னொரு காலத்தில் காசியாத்திரை செய்துவரவேண்டுமென்று விருப்பமிருந்தமையின் ஆறுமுகப் பெருமான் அருளைப் பெற்றுக்கொண்டு காசியாத்திரைக்குச் சென்றபோது உருவம் நன்கமைந்த ஒரு சிவலிங்கத்தை அன்போடு காசியிலிருந்து கொண்டுவந்து தமது மனைக் கண்வைத்துப் பூசித்து வந்தனர். அக்கால், அவ்வர்ச்சகருடைய உடம்பு தீச்சுவாலையாற்சுருக்கப்பட்டது. அதைக்கண்ட அவர் மனந்தளர்ந்து நாம் சிவலிங்கப்பெருமானார்க்கு யாது பிழை செய்தோமோ என்று வருந்திக்கொண்

டிருந்தனர். அப்போது இறைவனார் அவரது கனவிற் றோன்றி, "அன்ப! எம்மை மனையில் வைத்துப் பூசித்தல் நலமன்று. ஆதலின் எம்மை ஆறுமுகன் ஆலயத்தில் பிரதிட்டை செய்து முறைப்படி பூசிப்பாயாக" என்று அருளிச் செய்தனர். அவ்வாறே, அவ்வர்ச்சகர் அச் சிவலிங்கப்பெருமானை ஆறுமுகக்கடவுளின் ஆலயத்தில் மூலத்தானமாய்ப்பிரதிட்டை செய்து பல அன்பர்களைக் கொண்டு ஆலயமு மமைத்துக் கும்பாபிடேக முதலானவைகளையும் முடித்து முறைப்படி பூசை விழாக்களையும் நடத்திவந்தனர்.

பின்னர், தாரகேசுரர் என்னுந் திருநாமம் பூண்டு அபயாம்பிகையுடன் வீற்றிருந்தருளும் அப் பரசிவனாரின் சிற்சத்தி வெளிப்பட்டு உலக மக்கட்கு எண்ணிறந்த அநுக்கிரகங்களைச் செய்துவந்தமையின் கணக்கற்ற வைபவங்கள் விளங்கின. அதைக் கண்டு வேலூரையாண்ட மகம்மதிய மன்னன் பூசைக் கட்டளைக்குச் சிறிது தனம் நியமித்தனன். அவ்வாறே நடந்து வந்தது. இப்போதும் ஆங்கில அரசரிடமிருந்து பூசை முதலானவற்றிற்குத் தனம் கிடைத்துவருகின்றது. பூசை விழாக்களும் குறைவின்றி நடந்தேறிவருகின்றன. இதுவே வேலூர்க்குப் பழமைமிக்க ஆலயம். இது முன்னர் ஆறுமுகன்பூண்டி என்று வழங்கிவந்ததாகச் சொல்லுகின்றனர்.

ஈண்டு, சிறுபாணாற்றுப் படையிலுள்ள வேலூர் என்னுஞ் சொல், இந்த ராய வேலூரை யுணர்த்தா தென்று மயங்குவார்க்கு, நல்லியக் கோடனுக்கு, வேலூர் போல் ஆமூரும் நகரமா யிருந்தமையாலும், ஆமூர் என்பதனால் வேலூர்க்கடுத்த ஆமூர் (ஆம்பூர்) என்னும் நகரமே கொள்ளக் கிடத்தலானும், திருப்புகழில், 'இளைய நாயகனூரான்'

என்னும் அடை கொடுத்து, இளையனூர் வேலூரைக் குறிப்பிட்டு விட்டு, இங்கு வேலூர் என்று தனிச் சொல்லாகச் சொல்லி யிருத்தலானும், 'அறுகந்தன் பூண்டி' என்று ஒரு பகுதி இன்றும் வேலூரில் அவ்வாறே வழங்கப்பட்டு வருதலானும், அங்குள்ள சுப்பிரமணியரின் ஆலயம் இன்றும் பூசை முதலியன நடத்தப் பெற்று வருதலானும், முன்னும், வேலப்பாடி என்னும் காரணப் பெயரிருந்தமையானும் இவ் வேலூரே வேலூர் என்பதனுல் கொள்ளற்பாலது என்று நிறுவி அவருடைய மயக்கத்தைப் போக்குக.

மற்றும், இவ்வேலூரில், பல சிவாலயங்களும், விஷ்ணு வாலயங்களும் இருக்கின்றன. பல மடாலயங்களும் உள.

அஃதன்றியும், பிண்ணுக்குச் சுவாமிகள் என்னும் காரணத்திரு நாமம் பூண்ட அமுத சித்தர் என்னும் அமிர்த லிங்க சுவாமிகளின் சீவ சமாதியும், வேமன்ன என்னும் மகானின் திருவருள் பெற்றவரும், வரகவியும், இம்மகாநு பாவராகிய தோபா சுவாமிகளை, தெலுங்கு கீர்த்தனைகளாற் புகழ்ந்துள்ளவருமாகிய நரசிங்க சுவாமிகளின் சமாதியும், மற்றும் பல சமாதிகளும் இருக்கின்றன.

நகரப்படலம் முற்றிற்று.

---

## நகரெய்து படலம்

சீர்மலி காழி வேந்தர் திருவால வாயை முன்னர்ப்
பேரெழ வெய்ந்த போன்று பிறங்கவ னருளைப் பெற்று
ஓர்குரு வாய தோபா வும்பரும் விழையும் நல்ல
ஏர்பெறு வேலூ ரிதை யெய்தினு னியைய மாலோ.

## சுவாமிகள் சென்னையிற் சிறைபடல்

மேற்கூறிப் போந்தவாறே, தோபா சுவாமிகள், சிவோ கம்பாவிக்குமத்தாற் சிவனுமாவர்'' என்றவாங்கே சிவவடிவராய் எண்ணிறந்த அற்புதச் செயல்களைச் செய்தருளிய பின்னர், ஒருநாள் திருஞானசம்பந்தப் பெருமானின் திருவருள் பெற்ற சிவஞானச் செல்வராகிய இந்த ஞான சித்தர், வீதியில் விரைவாய் ஓடிச் சென்று கொண்டிருக்குங்கால், உடம்பெங்கும் மூடிக்கொண்டிருக்கும் ஒரு மாதோடு வண்டியின் மீதேறிக்கொண்டு செல்லும் அதிகாரச் சிறப்பை யுடைய ஒரு மகம்மதியன், உடை கோவணமுமின்றி வெற்றுடம்புடன் ஓடிக்கொண்டிருக்கும் நமது தோபா சுவாமிகளைக்கண்டு இவன் வெறும்பித்தனெனத் தனதுளத்திற் கொண்டு முனிந்து தனது ஏவலாளரை விளித்து,இப்பித்தன் வீதியிலிருத்தல் கூடாது, ஆதலின் இவனை இப்போதே வெளியில் அகற்றுவீர்களாக என்று கட்டளை யிட்டனன். அதைக் கேட்ட அக்காவலர்கள் இப்பெரியாரை வெருட்டியும் சுவாமிகள் அகலாமல் அங்கேயே பாலன் போன்று ஞானப்பாலுண்ட பாலனது அருளைச் சிந்தித்துக் கொண்டு அசையாது நின்றனர். அதைக் கண்ட ஏவலாளர், அந்த அதிகாரியை நோக்கி, ஐய? இவர், காமமென்பது சிறிதுமில்லாதவர், காமனை முனிந்த கடவுளின் உண்மைத் தொண்டர், உலகவுணர்ச்சியில்லாத உத்தமர், உடம்பில் அபிமானம் ஒரு சிறிது மில்லாத மெய்ஞ்ஞானி, இவர் நமது ஏவலிற் போகார், இவரால் நமக்கு இடையூறு எட்டுணையுமிராது என்றனர். தீயானது எல்லா உலோகங்களையும் பேதிக்கினும் வாழையையும் மண்ணையும் என்செய்யும்? பெரியார் தரிசனம், பக்குவமிலார்க்கு முக்குணச் செயலைப் போக்காது. ஆத

லின் அவ்வதிகாரியானவர் மிகவெகுண்டு சுவாமிகளை விலங்கிட்டுக்கட்டிச் சில ஏவலாளரிடம் ஒப்பித்து, இவனைக்கொண்டு போய்ச் சிறைச்சாலையில் அடைத்து விடுங்கள், இவனுடைய வன்மையை யான் பார்க்கின்றேன் என்று சொல்லிவிட்டு, இரதத்தின்மீதேறித் தனதிடஞ் சென்றனர். அவ்வாறே, ஏவலாளர், நமது சுவாமிகளைக் கொண்டுபோய் ஒரு சிறைச் சாலையில் இரவில் அடைத்து விட்டனர். எந்தைபாராகிய நமது சுவாமிகள், உலகனைத்தையும் தமது அருள் வெளியிலடைத்து வைத்திருக்கின்ற பாசிவனாரையே தமது உள்ளமாகிய சிறைச்சாலையில், ஓங்காரமாகிய தூணிற் கட்டி வைத்திருக்கின்ற தவப் பெரியாராதலின், இவரைச் சிறையிலடைத்து வைத்தல் எங்ஙன் கூடும்? பாசக்கட்டெல்லாம் ஈசனருள் வாளால் அறுத்துவிட்டு, முத்தி வீட்டில் வாழும் நமது சுவாமிகளைத் தளைப்படுத்தலும் எவ்வாறும்?

ஈண்டு, பெரியார் தமது உள்ளச்சிறையில் பாசிவனையடைத்து வைக்கின்றனர் என்பதை,

"காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக்
கவின்றகல் லாடைமேற் புனைந்து
யாமெலாம் வழுத்துந் துறவியென் றிருந்தும்
ஒருத்திதன் னிளமுலைச் சுவடு
தோமுறக் கொண்டா னெனச்சிறை யிடல்போற்
சுடர்மனக் குகையுளே கம்பத்து
ஓமொழிப் பொருளை யடக்கியா னந்த
முறுநர்வா ழிடம்பல வுளவால்"

என்னும், காஞ்சிப்புராணப் பாட்டா லுணர்க.

மற்றும்,

"இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்

எனவும்,

"துரியஞானிக ளுள்ளத்திற் றாங்குவன் இருந்தெப்
போதும்"

எனவும், பிறவுங்கூறுமாற்றானு முணர்க.

### சுவாமிகள், திருவருளால் சிறைப்படுத்தியவனுடைய வீட்டில் இருத்தல்

இவ்வாறு, சுவாமிகளைச் சிறைப்படுத்திய அம் மகம்மதியன், இரவில் எப்போதும்போல் தனது மனையாளோடு படுக்கையறையை யடைந்தனன். அப்போது, சுவாமிகள் அங்கு, அப்பள்ளியறையில் எழுந்தருளியிருந்தனர். அதைக் கண்ட அவ்வதிகாரியானவன், மனம் நடுக்குற்று, உடல் திடுக்கிட்டு, அம்மம்ம! யான் நேரில், சங்கிலியாற் கட்டிச் சிறையிலிட்ட இவன் இங்கு வந்திருத்தல் என்ன அதிசயம்? இது உலகில் இல்லாத வேடிக்கைச் செயலாயிருக்கின்றதே, இதை இன்னதென்றுணர்ந்திலேனே, இவர் பெரியீரென்று தெரிந்திலேனே, யாது செய்வேன்? எங்கு செல்வேன் என்று பலவாறாய்ப் பரிந்து கூறி, இனி இப்பெரியார் திருவடியையே சரணடைதல் வேண்டுமென்றுகருதியவனாய், சுவாமிகளின் திருவடியைப்பற்றிக் கொண்டு பன்முறை மிக வணக்கஞ் செய்தனன். வணங்கி எந்தாய்! எனது பெரும் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். தமது பெருமையை உண்மையிலுணராதோன் யான் என்று பலவாறு வேண்டிக்கொண்டனன். அங்ஙனம் ஆயினும், அவன் இடையில் உள்ளத்தில் ஐயமுற்றோனாய்த் தான் முன்னர் அடைத்துவைத்த சிறைக்களஞ் சென்று, அவ்வறைப் பூட்டையும், மற்றும், மதில் சுவர்களையும், மற்றுஞ்

சிலவிட்டத்தையும் இனிது நோக்கினன், அவைகள் முன்னுள்ளவாறே யிருந்ததோடு சிறிதும் இடை வெளியேனும் யாண்டு மில்லை என்பதையுங்கண்டு, முன்னிலும் மிகத் தளர்ந்தவனாய் வந்து, அந்தோ! அந்தோ!! பெரியவர்க்குப் பெரும் பிழை செய்தேன், அருந்தவர்க்குத் தீங்கிழைத்தேன், மெய்ஞ்ஞானிக்கு அஞ்ஞானச் செயலை யாற்றினேன், இஃதல்லாமலும்,

"ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவர் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே"

என்றற் றொடக்கத்துப் பல்லாயிரம் நூல்கள், ஞானிகட்குத் தீங்கிழைக்கில் மிகக் கேடென்று சொல்லியிருப்பனவாகப் பெரியார்கள் சொல்லுகின்றார்களே என்று மனம் வருந்துவதோடு, சிவனடியார் செயல் அரும் பெருஞ் செயலாமென்பதையும் யான் உற்று நோக்கிலேனே, எனவும் பல வாறாகத் தேம்பித் திரிந்தனன்.

### சுவாமிகளை, வேறூரிற் கொண்டுவந்து சேர்க்க முயலல்

அவ்வதிகாரி இவ்வாறு ஆராய்ந்து தெளிந்துகொண்டு, இனி, இத்தகைய பெருமைவாய்ந்த இப்பெரியாரை, இப் பட்டினத்தினின்றும் அகற்றி ஓர் சிறிய கிராமத்திலேனும், அல்லது ஒருவனத்திலேனும் கொண்டுபோய்ச் சேர்த்தலே யாவர்க்கும் மிக நலமாமென்று கருதி, அங்குள்ளார் பலரையுமழைத்து அவர்கட்குத் தனது கருத்தைத் தெரிவித்தனன். அவர்களும் அதற்கிசைந்தனர். அங்ஙனமாயின், கோவணமுமின்றித் திரியும் இந்த ஞான சித்தராகிய மகானை நீங்கள் வேறோர் ஊருக்குக் கொண்டு போவீராக என்று

வேண்டிக் கொண்டனன். அதற்கு அவர்கள், ஐய! தாம் கூறுவது உண்மையே. ஆயினும்,

"எவ்விடத் தில்லை நல்ல ஞானிகளாம்
ஈர்ங்கனி மலர் குளிர் சோலை
அவ்விடங் கானல் மேடதாம்"

என்றும்,

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்"

என்றும், கூறுமாற்றால், சிவஞானிகளை யாம் கை விடோம் என்றனர்.

அதைக்கேட்ட அவ்வதிகாரியானவன், அன்பர்காள்! நீவிர் கூறுவதும் உண்மையே, ஆயினும், இப் பெரியாரைக் கண்டு எனது மனைவி பயமுற்றனள். மற்றும், ஆங்கிலர் கட்குச் சிறிது இடையூறுமாகும். அதனால், நமது பெரியார்க்கும் சிறிது மனங் கிலேசமடையும். ஆதலின், அவ்வாறே செய்தல் யாவர்க்கும் நலம் என வற்புறுத்தினன். அவர்களும் பின்னர் அதற்கு ஒருவாறு இணங்க, உடனே ஒரு வண்டியைக் கொண்டுவந்து சுவாமிகளின் திருச் சந்நிதியில் நிறுத்திக்கொண்டு அவ்வூணன் பணிந்து, எந்தையே! அடியேன் சொல்லுதல் தமக்கும் எமக்கும் மற்றும் எல்லா மக்கட்கும் நலமாம். அஃதென்னையோவெனின்? தாங்கள் தயவு செய்து இவ்வண்டியின்மீது எழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, எல்லாவற்றையுமுணர்ந்த நமது சுவாமிகள், பலவகை நலங்களையுங் கருதி அவ் வண்டியின் மீது எழுந்தருளினர். அப்போது அவன், அங்குள்ளாரை நோக்கி, அன்பர்காள்! நீவிர், இப்பெரியாரை ஒரு சிறிதுந்

துன்புறுத்தாது கூடவே இருந்து வேறோரிடத்திற் கொண்டு போய்ச் சேர்த்து, சுவாமிகட்கு அங்கு வேண்டிய வசதிகளையுஞ் செய்து வைத்துவிட்டு வருவீர்களாக என்று கட்டளையிட்டுத் தனதிடஞ் சென்றனன்.

## சுவாமிகள் சகடத்தில் வேலூர்க்கு வருதல்

பின்னர், அவ்வாறே அன்பர்கள் சிலர் சுவாமிகள் எழுந்தருளியிருந்த சகடத்தைச் செலுத்திக் கொண்டு சென்னைக்கு மேற்குத் திசை நோக்கி வந்து, இடையி லுள்ள பல சிற்றூர்களை சுவாமிகட்கு, இது இன்னவூர் இது இன்னவூர் என்று தெரிவித்தனர். அதற்குச் சுவாமி கள் மறுமொழி ஒன்றுமின்றி யிருந்தருளினர்.

பின்னர், கந்தகோட்டம் விளங்குகின்ற காஞ்சிமா நகரை யடைந்தபோது, இது, முத்தித் தலங்களில் ஒன் றாகியதென்றும், சிவகாஞ்சி விஷ்ணுகாஞ்சி யென்னும் இருபகுதியாயுள்ள சிவாலய விஷ்ணு வாலயங்களையும், காமாட்சி பீடத்தையும், மற்றும், எண்ணிறந்த ஆலயங் களையும் மடாலயங்களையும் உடையதென்றும் சுவாமிகட்குத் தெரிவித்தனர். அதற்கும் சுவாமிகள் ஒன்றும் அசையா திருந்தருளினர்.

அதன்பின்னர், வாலாஜா நகரையும், ஆர்க்காட்டையுங் காட்டியதற்கும் சுவாமிகள் முன்போல் அசைவற்றிருந் தருளினர்.

## சுவாமிகள் வேலூரில் ஒரு மகம்மதியன் வீட்டை யடைதல்

பின்னர், வேலூருக்கருகில் வண்டி வரும்போது, சுவாமிகள் கீழே திடுக்கெனக் குதித்து, அன்பர்காள்! நீங்கள்போவீர்களாக எனக்கு இதுவே இனியவூர் என்றருளி

விட்டு விரைவிற்சென்று அங்குள்ள ஒரு மகம்மதியன் (கோஷா) வீட்டுக்குட்புகுந்துகொண்டனர். இது, வேலூர், மாதவஞ் செய்யத் தகுந்த சில அரணியங்களையுடைய தென்பதையும், அங்குள்ளார் தவஞ் செய்வார்க்குச் செய்யத்தக்க பணிகளைச் செய்வதற்குரியாரென்பதையும், மற்றும், பல மகான்கள் வாழ்ந்துவந்தன ரென்பதையும், பல வளங்களுண்டென்பதையுங் குறிப்பிக்கின்றது போலும்! பெரியாருள்ளங் குளிர்தல் எளிதாங்கொல்லோ? மகம்மதியனுடைய அம்மனைக்குள், சுவாமிகள் உடை கோவணமுமின்றிப் புகவே, அங்குள்ள துருக்கர்களனைவரும் சுவாமிகளைத் தடிகொண்டு புடைத்தனர். சிலர் கைகளாற் பிடித்தனர். சிலர் வாயால் வைதனர். பலர் அடிப்பதற்கு ஓடிவந்தனர். இவ்வாறு எண்ணில்லாதவர்கள் சுவாமிகளைக் காக்கைகள் போற் சூழ்ந்துகொண்டார்கள். அந்தோ! பெரியாரைப் பிழைத்தல் பெருந்தீமையென்று அறியாத பேதையர் அவனியிற் பல்லாயிரவரன்றோ இருக்கின்றனர்? அறிந்தும் இகழ்கின்றவர்கள் கயவரல்லரோ? உலோபத்தாற் பழிப்பவர்உலுத்தராகாரோ? இவ்வாறு, கயவர்கள் செய்த பயமிலாச் செய்கைகளனைத்தும் அங்குள்ளார்களை அடைந்தனவே யல்லாது சுவாமிகளின் திருமேனியில் ஒரு அடியேனும், பிடியேனும் இல்லை. அடிஞானத்தால் ஆன்மாவைக்கண்ட சிவனடியார்கள் சிவமேயாதலின் அவர்மேல் அடிவிழல் யாங்ஙனங் கூடும்?

அற்றுகவி னன்றே,

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே"

எனவும்,

"சிவோகம் பாவிக்கு மத்தாற் சிவனுமாவர்"

எனவும், பிறவும் கூறுகின்றன.

சிவஞானிகளின் துன்பைச் சிவனே நீக்குவா னெனல்

இவ்வாறு அவர்கள் செய்ததற்கு மாறாய், அவ்வடிகள் அனைத்தும் அடித்தவர்கள் மேலேயே விழுந்தன. பிடித்ததும் பிடித்தவர் கையையே பிடித்தது. என்னை? சிவபாவனை முதிர்ந்து சிவமாய் எல்லாவுயிர்களிடத்தும் ஞானியின் உண்மை வடிவம் நீக்கமின்றி நிற்றலினென்க.

இதை, •

"தார்மேனின் றிலங்கு புய வழுதி மேலும்
தன்மனை மங்கையர்மேலும் அமைச்சர் மேலும்
ஆர்மேலுஞ் சென்றுபொருஞ் சேனை மேலும்
அயன்மேலு மான்மேலு மறவோர் மேலும்
தேர்மேல்வெம் பகன் மேலும் மதியின் மேலும்
சிறந்துளஇந் திரன்மேலுந் தேவர் மேலும்
பார்மேலுங் கடன்மேலு மரங்கண் மேலும்
பட்டது அரன் மெய்யில்அடி பட்ட போதே"

என்ற, வாதவூரடிகளின் புராணத்தாலுணர்க.

இத்தகைய அதிசயச் செய்கைகளைக் கண்ட அம் மகம்மதியர்கள், இவர்யாரோ ஒரு பெருமாதவர் என்று தெளிந்து, சுவாமிகளைப் போற்றிப் பணிந்து, ஐய! யாங்கள் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும் என்று பலவாறாக வேண்டிக் கொள்வதுடன், அவர்கள் அனைவரும் குருவென்று சுவாமிகளைக் கொண்டாடிக்கொண்டிருந்து உய்ந்தனர்.

நகரெய்து படலம் முற்றிற்று.

திருவருட் செயற் படலம்

அருளுரு வாகி யகிலமுத் தொழிலை
யாற்றிடு மரனடி யதனின்
தெருள்சிவ ஞான மடைந்திடுஞ் செல்வர்
சிவமலாற் சிவரு மலரே
திருவரு ளாற்றுஞ் செய்கையைச் சிவஞா
னியுமெளி தாகவே செய்வன்
மருவுமா யோக வலியெனின் மதியும்
மாறுத லடைந்திடு மாலோ.

சுவாமிகள் பாலன்போன்று திரிதல்

இவ்வண்ணம், சுவாமிகள் வேலூரில் சிலநாள் வசித்து வரும்போது, அங்குள்ள ஆங்கில மன்னரின் காலாட் படைகள் தங்கும் அரணுக்குள் ஒவ்வொரு நாள் விளையாட்டாகச் சென்றருளுவர். அங்குள்ளார்களுட் சிலர், சுவாமிகளை அன்போடு தரிசித்து அடிபணிந்து போற்றுவர். சிலரோ, இவன் யாரோ ஒரு பித்தனென வெறுப்படைவர், சிலர் பெரியாரென்று கருதி கனிகளைக் கொடுப்பர், சிலர் திருவமுதருந்துவர், சிலர் பூவைக்கொண்டு சுவாமிகளின் பொன்னடியைப் போற்றுவர். சிலர் தூற்றுவர், மற்றும் பல்வகைச் செய்கைகளையுஞ் செய்வர். சுவாமிகள் அவைகட்குச் சிறிதும் மனங்கோணுமலும், பெரிதும் மனமகிழாமலும் அனைத்துஞ் சமமென்றெண்ணி அகமகிழ்ந்திருப்பர். இதுவே உண்மை ஞானிகளின் நல்லொழுக்கமாம்.

இதை,

"வையினும் வாழ்த்தினு மலர்கொ டேத்தினும்
வெய்யவா ரெரியிடை வீழ நூக்கினும்

எய்யினு மெறியினு மியாது செய்யினும்
நைவொடு மகிழ்வில ஞானி சீலமே"

என்றற்றொடக்கத்துத் திருவாக்குகளாலுணர்க.

சுவாமிகள் கடைவீதியிற்றிரிதல்.

மற்றும், இவ்வாறே சுவாமிகள் ஞான சித்தராய்ப் பாலன் போன்று ஒவ்வொரு வேளை கடை வீதிகளிற் செல்லுவர். அப்போது அங்குள்ள வணிகர்கள், இம்மகாநுபாவரின் திருவடிப்பேற்றால் தமது பண்டங்களின் விலை இலாபத்திற்கு இரட்டித்தலையுணர்ந்து, ஐய! தாங்கள் எமது கடைக்கு எழுந்தருளுவீராக என்பார் பலர். சிலர், எமது பண்டங்களைத் தமது திருக்கண்ணால் நோக்கக்கூடாதா? என்பர், மற்றுஞ் சிலர், எமது பண்டங்களுள் யாதேனு மொன்றைத் தங்கள் திருக்கரத்தால் தொடலாகாதா? என்பர். இவ்வண்ணம் பலவாறாகச் சுவாமிகளை வேண்டிக் கொள்ளுவர். சிலரோ எந்தையார் எமது கடையைத் தமது திருக்கண்களாலும் நோக்கிலர், அந்தோ! யாம் முற்பிறப்பில் என்ன பாவஞ் செய்தோமோ என்பர். மற்றும் பலர் பலவாறு கூறுவர். இவ்வாறே வேலூரில் உள்ளார் அனைவரும் சுவாமிகளின் நல்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். சிவஞானியின் வரவு சிவன் வரவு போன்றது என்பதைக் காண்க.

சுவாமிகள் கட்டுக்குள் அகப்படாமை

இவ்வண்ணம், இப்பெரியார் சிவஞானந்தெளிந்த சித்தராம் அருள் விளையாட்டைச் செய்தருளிக் கொண்டிருக்குங்கால், அங்குள்ள சில துட்டர்களும், கெட்டவர்களும் ஒன்று கூடி, நமது சுவாமிகளை ஒரு கயிற்றாற் கட்டி, வழியில் இழுத்தெறிந்து விடலாமா? அல்லது, விடத்தைக் கொடுத்துக்

சொல்லலாமா? என்று, தம்முட் பேசிக்கொண்டு வந்து கூடி சுவாமிகளைக் கட்டத்துணிந்து, கிட்ட வந்து பட்டப்பகலில் சுவாமிகளை எட்டிப் பிடித்தனர். சுவாமிகள், அவர்களுடைய கைக்குட்சிக்காமல் வான்போல் வெளியாய் நின்றருளினர்.

அம்ம !

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்குமொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தங் கக்கத்தில் வைக்க

நினைத்ததுபோன்று செய்யின், சித்துருவாய்த்திகழும் நமது சுவாமிகள் கட்டுக்குள் அடங்குவர் கொல்லோ, ஞானக் கண்ணில்லார்க்கு உருவுடையரே யன்றி, அறிவால் உற்று நோக்கில் அருவத் திருமேனியரலரோ? சிவயோகிகளின் திருமேனியும் சித்துருவிலொற்றித்து நிற்றலின் கட்டுக்கு அகப்படாததாம். இதை,

"அணுமயங்குமின் னுழைகதி ரெறிந்தவா ளாக
விணைமயங்குமெய்ப் படாதுவாள் வறிதுபோ யிற்று
பணைமயங்குதோள் மாயைதன் படாமுலை படாத
மணமயங்குதண் சோதிமேல் வாள்பட வற்றோ"

என்னும், பிரபுலிங்கலீலை வாக்காற் றெளிக. மற்றும், சமயாசாரியர்களின் திருமேனிகள், சித்திற் கலந்திருக்கின்றன என்ற சரிதையாலும் ஐயப்பா டொழிக. இதுவே சிவமாய் நின்ற சிவனருட் செயலாளர்களின் திருவருளின் திறமையாமென்பதும் உணரற்பாலது. அற்றாகலினன்றே,

"தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்"

எனவும்,

"அவனேதானே யாகிய வந்நெறி
ஏகனாகி"

எனவும், பிறவும் சிவஞானி சிவமேயாதலைக் கூறு கின்றன.

சுவாமிகட்கு விடமருத்துதல்.

அதைக் கண்ட அக்கொடியர்கள் இனி நமது சுவாமிகளை, விடத்தை யூட்டியேனுங் கொல்லுவதே சரியென்று கருதி, உண் பொருள்களில் விடத்தைக் கலந்து, இவ்விடமுண்ட கண்டனுடைய தொண்டனென்பான் விடமுண்டுஞ் சாவாதவனுயின் நாம் அவனுக்கே அடிமையாவோம், அஃதன்றி இதனுல் மடிவானெனின், படியில் ஒரு குழிகெல்லித் திடீரெனப் புதைத்து விடுவோம் என்றெண்ணிக் கொண்டு, சுவாமிகளின் திருச்சந்நிதியிற் சென்று அவ்வவரும் வணங்கிப் போற்றி, சுவாமிகளின்மீது அன்பு மிகுந்தார் போன்று அபிநயங்காட்டி நமது சுவாமிகள் திருவமுதுண்ணும் சட்டியில் விடங்கலந்த சில சிற்றுண்டியைப் போட்டுவிட்டனர். சுவாமிகள், அவர்கள் செய்கைகள் இன்னவை யென்று உண்ணோக்கால் நன்குணர்ந்தவராயிருந்தும், மனமகிழ்ச்சியுடன் அதைத் தாம் புசித்ததோடு தம்மைச் சூழ்ந்து நின்ற நாய்களையும் வயிறுநிறைய இனிது அருந்தச் செய்தருளினர். நஞ்சும் அமுதும் சிவஞானிக்கு ஒன்றேயாமென்க.

விட மருத்தியவர் இறந்தல்

இவ்வண்ணம் நடந்தசிறிது நாளுக்குப் பின்னர், சுவாமிகட்கு விடமருத்திய அவர்கள் மல நோயாற் சூழப்பட்டு வாந்திபேதி மிகக்கொண்டு இறப்பதற்குத்தக்க தருணத்தையெய்தினர்.

அதிற்சிலர், இது என்ன தீமை? தெரியவில்லையேயென்று ஆராய்வதற்குள் அவருட் பலர் இறந்தனர்.

அந்தோ! பெரியார்க்குப் பிழை செய்தவர் மாளாது பிழைப்பரோ, பிழைக்கார்.

இதை,

"பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கிடச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்திய மீது சதாநந்தி ஆணையே"

என்று, ஆணையிட்டுக்கூறிய திருமூலர் திருவாக்காலுணர்க.

மல நோயைத் தடுத்தருளல்

இவ்வாறு, பலர் இறந்தவுடனே ஏனையோர்கள் அதைக்கண்டு பயந்து, இது நாம் முன்னர் பெரியாருக்கு விடமளித்த தீச்செயலால் வந்ததேயன்றி வேறல்லவென்று துணிந்து அவருள் சிலர் தம்முட் சேர்ந்துகொண்டு அன்பர்காள்! 'நாம் அத்தகைய பெரியாரைத் தேடிக்கண்டு வணங்கிப் போற்றலே இம் மலநோய்க்கு மருந்தா மன்றி மற்றெவையும் மருந்தாகா' என்றனர். அவர்களும் அதற்கிசைந்தனர். இசையாவிடத்து அதற்கு வேறோர் மருந்துமுண்டாங்கொலோ? இல்லை. பெரியார் அநுக்கிரகமே எல்லாவித நோய்க்கும் மருந்தாவதுடன் பவப்பிணிக்கும் சிறந்த மருந்தாம்.

இதை,

"ஆற்றிய விறைவன் அருள்தரு நீரால்
அப்பிழைச் சேறு நீக்கிடுவான்"

எனவும்,

"ஆற்றவங் கமலன் அருளினை முழுக்கில்
அக்கணந் தீருமப் பிழையே"

எனவும்,

"ஆற்றவங் கதனைத் தீர்த்திடற் குபாயம்
ஆய்ந்திடத்து ஒன்றினு மில்லை"

எனவும், பிறவும், கூறுமாற்றானுமுணர்ந்து கொள்க.

மற்றும்,

"பரமாகிய ஞானிகள் கண்ணுறலே
பரமாவிழ்த மென்று பகர்ந்தனனே"

எனவும்,

சசிவன்ன போதமும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது; என்று இவ்வாறு ஆராய்ந்து துணிவடைந்துகொண்டு, அனைவரும் நமது எந்தையாராகிய சுவாமிகள் எழுந்தருளியிருக்குமிடத்தைத் தேடிக்கண்டு, சுவாமிகளின் திருவடிக்கமலங்களின்மீது தண்டம்போல் விழுந்து, அண்டருந் தொழற்குரிய பெரியோய்! விடமுண்ட கண்டற்குத் தொண்ட! கண்டவரேத்துங் கற்பகமே! தமக்கு, உண் பொருளில் விடமிட்டதீயோர் பலர் மாண்டனர். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? வாரார். அவர் அவ்வாறே ஒழிவாராக. எஞ்சி நின்றோர்களாவது உயிர் பிழைத்திருக்குமாறு அருளமுதையருள் செய்வீராக என்று பலவாறாக ஓலமிட்டழுதனர்.

அதைக்கண்ட கருணைத் தடங்கடலாரும், நீர்கிழிய வெய்த வடுப்போல ஒரு கணப்போதுள்ள சினத்தையுடையவரும் குணக் குன்றேறி நிற்கும் சான்றோருமாகிய நமது சுவாமிகள், அக்கணமே அவர்கள் மீது தயை மிக்குண்டாகி, 'அன்பர்காள்! இனி அஞ்சற்க, நீவிர் மலநோய் நீங்கி நலம் பெறுவீர்கள்' என்று, தமது திருக்கரத்தால் அபயமளித்துச் சாந்தங்காட்டி யருளினர்.

அதன் பின்னர், எஞ்சினோர்கள் மல நோய்ப்பட்டு மாளாது பிழைத்து இனிது வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமக்கு உடனே மல நோய் நீங்கினமை கண்டு இப்பெரியார் எல்லாஞ் செயவல்லார், என்னை? எல்லாம் வல்ல இறைவ னோடு அத்துவிதமானார்க்கு எல்லாஞ் செய்தல் கூடாதோ, இறைவனருளாற் கூடும் என்பது எல்லா நூல்களின் துணி பாம். இதை,

"தன்னை யறிந்த தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே"

என்னுந் திருமந்திரத்தாலும்,

"எல்லாம் செயல்கூடும் என்னாணை யம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே யேத்து"

என்ற,

அருட்பிரகாசவள்ளலாரின் அருட் பாவாலுமுணர்க.

## சுவாமிகள் மூடத்தைப் போக்கி யருளல்

இவ்வாறு, சுவாமிகள் ஞான சித்தராய் எண்ணிறந்த அருள் விளையாட்டைச் செய்தருளிக் கொண்டிருக்குங்கால், முன்னர், சுவாமிகளின் திருவருட் பேற்றால் புத்திரப்பேறு கிடைத்தும், அக்குழந்தை மூடமாயிருந்ததைக்கண்ட அத னுடைய தாய் தந்தையர்கள், யாம், புத்திரப்பேறின்றி யிருந் ததே நலம், என்னை? எமக்குப் புத்திரனுண்டாகியும் அப் புத்திரனை நோக்க நோக்க ஏம்து மனந் துன்புறுதலி னென்க. என்றிவ்வாறு மிக வருந்திக்கொண்டிருந்தனர். அற்றாகலினன்றே,

"பெற்றா னினைப்பெற் றவர்போற்
பெறலும் பிறப்பதுண்டேல்
நற்றா ரணியில் நினைப்போற் பிறப்பது
நல்லகண்டாய்"

என்றார், கவிஞர் வேந்தராகிய சிவப்பிரகாச சுவாமிகளும். இவ்வாறு, அப்புத்திரனுடைய தாய் தந்தையர் மிகவருந் தினவர்களாய்ச் சுவாமிகளிடத்தில் அப்புத்திரனைக்கொண்டு வந்து சுவாமிகளின் திருவடிக் கமலத்திற் கிடத்தி, எந்தையே! காலில்லாத இக்குழந்தை பிறந்தும், எமக்குப் பயனென்னே? தனமிலா மங்கை தாரணியிலிருந் தென்ன? மணமிலாப் பூக்கள் மலர்ந்தென்ன? குணமிலாக் கல்வி கற் றென்ன? பணமிலா மக்கள் பாரிலிருந்தென்ன? என்றிவ் வாறு சுவாமிகள் சந்நிதியில் பரிந்து பேசிக்கொண்டு கண் ணீர் பாயக் கதறி யழுதனர். அதைக்கண்ட சுவாமிகள் திருவுள்ளமிரங்கி, தமதிடத்திருந்த நாயடியார்களை விளித் தருளினர். உடனே அந் நாய்கள் வந்து தமது நாவினுல் அக்குழந்தையின் கால்களை நக்கின. நக்கிய அக்கணமே அக்குழந்தையின் முழந்தாளின் முடம் நீங்கி அக்குழந்தை எழுந்து நடந்தது. அதைக்கண்ட தாய் தந்தையர், நமது சுவாமிகளை, ஆக்கியளித்தழிக்கவல்ல அரசே! நீக்கமற நிற் கும் நித்தியப் பொருளே! ஏக்கங்கெடுத்தாண்ட எந்தாய்! நோக்கத்தாற் பிணி போக்கவல்ல தவநோன்புடையோய்!. என்று பலவாறாகப் போற்றிப் பணிந்து சுவாமிகளின் திரு வருட்டிறத்தையும், தயையின் நிறைவையும், கருணையை யும் நினைந்து மனமுருகினவர்களாய் அப்புத்திரனை யழைத் துக் கொண்டு தமதிடஞ் சென்று நலம்பட வாழ்ந்திருந்த னர்.

ஈண்டு, அகத்தியமா முனிவரிடத்திலிருந்த நாய், கவிபாடிய சரிதையால், பெரியாரிடத்திலுள்ள நாயடியார்கள் தூய வறிவு மிகுந்த தொண்டர்களென்பது கொள்ளக்கிடக் கின்றது.

ஒரு அன்பன் உத்தியோகம் வேண்டித்தொழல்

அவ்வண்ணமே, மற்றொரு அன்பன், தான் ஆங்கிலக் கல்வி நிறையக் கற்றிருப்பதுடன் பல வன்மைகளையு முடையவனாயிருந்தும் முன்னிழந்த அரசாங்க உத்தியோ கப்பணி கிடைக்காமைபற்றி மிக மனந்தளர்ந்தவனாய் ஞான சித்தராகிய நமது சுவாமிகளின் திருவருட் செயலையுணர்ந்து நாடோறும் சுவாமிகளுடைய திருச்சந்நிதிக்கு வந்து, பணிந்து போற்றி, தனது வேண்டுகோளைத் தனது மனத் திலேயே எண்ணிக்கொண்டு வாழ்த்திப் போதல் வழக்கம். ஆனால், இறைவனுக்குச் செய்தபணி பலனின்றி வழுக்கி னும் வழுக்கும், சிவஞானிக்குச் செய்தவழிபாடு வாளா ஒழியாது என்னும் உறுதி மாத்திரம் இவனுக்கு உண்டு. இதுவேபெரியார் துணிபும், நூல்களின் துணிபுமாம்.

இதுபற்றியன்றே,

"இப்பரி சிறைவன் திருவுளம் பிழையாது இலங்கிய
ஏவலின் வலியால்
எப்பரி சுள்ள சித்திகள் வலிகள் இசைந்திடா
நிற்குமங் கவர்பால்"

என்றற்றொடக்கத்துத் திருவாக்குகளு மெழுந்தன.

இழந்த உத்தியோகத்தை யருளல்.

இவ்வாறு, நாடோறும் ஆதரவுடன் சுவாமிகளை வழி பட்டுவரும் நாளில், ஒரு நாள், சுவாமிகள் கருணை கூர்ந்து அவ்வன்பனைத் தமது அருட்கண்ணால் ஆமைபோல் நோக்கி,

நாளைக்காகும் என்றருளிச்செய்தனர். அதைக் கேட்ட அவ் வன்பன் கணக்கிலாக் களிப்புடையவனாய்த் தனது இல்லத் தையடைந்து தனது இல்லாளுக்கும் இதைக்கூறி, அரசாங்க வேலையிலிருந்து தள்ளப்பட்டு ஒருவருடமாயிற்று; இனி அவ் வேலை கிடைக்குமோ, என்று ஐயுற்றிருந்தேன்; எந்தையா ராகிய நமது தோபா இவ்வாறு அருளியுள்ளார்; அவர் திரு வாக்கின்படியே உத்தியோகம் வருமாகில் இரண்டு திங் களில் வரும் பணங்களைச் சுவாமிகளின் திருவடிக்கு அருப் பித்து விடுவேன் என்று மனையாளுடன் அளவளாவிக் கொண்டு சுவாமிகளின் திருவாக்கில் பூரண நம்பிக்கையுட னிருந்தனன். பெரியார்மொழி அரிய உண்மைமந்திர மாதல் யாவரும் ஒப்ப முடிந்ததன்றோ? மறை மொழியாகிய நிறைமொழி, பயனை யளிக்காது வாளாவொழிதல் யாண்டும் இல்லை.

அற்றாகலினன்றே,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்"

என்று கூறா நின்றது தமிழ் மறையும்.

அன்பன் உத்தியோகத்தை யடைதலும்,
சுவாமிகட்கு மனை வாங்கி வைத்தலும்.

இவ்வண்ணம், அரசாங்க ஏவற்காரனாகிய அவ்வன்பன், சுவாமிகளின் திருவருளை, குளவி யெடுத்த புழுப்போன்று சிந்தித்துக் கொண்டேயிருக்கும்போது, ஒருதினம் சுந்தர மூர்த்திநாயனாரைத் தடுத்தாட்கொள்ள ஓலை வந்தது போன்று அரசாங்கக் காகிதம் ஒன்று வந்தது. அதைப் பெற்று, திருவருட்டிகழும் ஒரு பொழிலிடத் தேகித்

திரிந்து நோக்க, சுவாமிகளின் திருவருளாணைப்படி உத்தி யோகத்திற்கு உத்தரவு பிறப்பித்திருந்ததைக் கண்டு, அம்ம! சிவஞானியால் செயற்கரியதும் ஒன்றுண்டோ? சிவஞானியின் வழிபாட்டால் பவக்கடல் கடப்பரென்றால், உடலையோம்பு நிமித்தம் இந்த அரசாங்கப்பணி கிடைத்தல் அரிதாங்கொல்லோ? என்று திருவருளை வியந்து போற்றி அவ்வாறே உத்தியோகத்தைச் செய்து, அதனால் வந்த பொருளில் ஆயிரம் வெள்ளியைக் கொண்டுவந்து சுவாமி களின் திருவடியிலருச்சித்து அத் திரவியத்தால், முன்னர், சுவாமிகள் சென்னையம்பதியிலிருந்து வந்து இறங்கியவுடன் ஓடிப்போய்ப் புகுந்துகொண்ட அம் மகமதியன் வீட்டையே வாங்கிப் பழுது பார்த்து, அதில் சுவாமிகளிருப்பதற்கு வசதியுஞ் செய்து கொடுத்தனன். அவ்வாறே சுவாமிகள் அம்மனையிலெழுந்தருளி யிருந்தனர். அப்போது சுற்றாரும் மற்றாரும் வந்து சுவாமிகளை வழிபட்டு அருள் பெற்றுய்ந் தனர்.

ஈண்டு அக்காலும், ஆணவமலமற்ற அருந்தவச் செல்வரும், நாகப் பூணினன் திருச்சரணமே யுயிர்க்கெலாம் புகலிடமென்று சிவத்தோடு அன்னியமின்றி அரன் கழலில் அணைந்து நிற்கின்றவரும், வேண்டாமை யென்னும் விழுச் செல்வம் பெற்றவருமாகிய நமது சுவாமிகள், உடலிது நம திடமல வென்று கருதி, யான் எனது என்பதற்று, நித்திய பர வெளியே தாம் வாழும் உறைவிடமாய் நின்று, தமது நிலையிற் சிறிதும் தளராது முன்போன்றிருந்தருளினர் என்பது உய்த்துணரற்பாலது.

இதை,

"புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு"

எனவும்,

"வாங்கிகின் றனிவீட் டுறைகுவான் விரும்பி வந்தனன்"

எனவும்,

"சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ"

எனவும், பிறவுங் கூறுமாற்றா லுணர்க,

திருவருட் செயற்படலம் முற்றும்.

---

## சமாதி நிலயப்படலம்.

அத்தனு ரமரு மாலய மாகு
மடியரி னகங்குளிர் மேனி
முத்தியா மதனை மூலமாய்த் தொழுதல்
முனிவரும் மன்னுசீர் நாடு
நத்திறு னலமு நாடுமா பயனும்
நயக்குமென் றெண்ணியே சீடச்
சித்தநா தனுந்தன் தேசிகன் கோவில்
சித்திரத் திறம்படச் செய்தான்.

### சித்த நாதர் சரணடைதல்.

இவ்வண்ணம், சுவாமிகள் ஞான சித்தராய், திருஞான சம்பந்தரின் திருவருளால் ஞானமுதத்தை நிறையவுண்டு மாந்தி, வேலைமா நகரில் சுழன்று கொண்டிருந்து பல்லோர்க்கும் அருள்புரிந்து வருங்கால், குடும்ப வாழ்வில் துன்பந் தோன்றித் துறந்து ஏகராய்த் திரிகின்றவரும், வீட்டின்ப மொன்றிலேயே விழைவுற்றவரும், விஞ்ஞான கலராய் விளங்குகின்றவரும், சத்திநிபாதமுடையவரும், சிவஞான பக்குவியுமாகிய, சித்தநாதர் என்னும் ஒரு பெரியார் வந்து

நமது தோபா சுவாமிகளின் திருவடியைச் சரணடைந்து, அருள்பெற்று மல நீங்கிச் சிவஞானம் ஓங்கப் பெற்று, நமது சுவாமிகளை முக்கரணங்களாலும் வழிபடுவதோடு ஆசிரியரே கடவுளென்றும் பாவித்துக் கொண்டிருந்தனர். கற்புடையாளுக்குக் கணவனே தெய்வமாவன்; அது போன்றே பக்குவ மாணுக்கர்க்கும் ஞானாசிரியரே கடவுளாவர். இதை

"குருவே மெய்யாக் கண்டசிவ மெனநம்பு மதுவே சத் பாவம்"

எனவும்,

"குரவனை குறி யேதுமி லாச்சிவன்"

எனவும்,

"தேசிகனை யாவிபொரு ளாக்கை யாலே
தினந்தினமும் பூசிக்க வேண்டு மாணு"

எனவும்,

கூறுநின்ற உண்மைவாக்குகளாலுணர்க. இவ்வாறு சித்தநாதர் சத்பாவப் பணியில் தலைப்படவே, தவமும் ஞானமும், முன்னிலும் மேலாய்த்தழைத்தோங்கப் பெற்றனர்.

சித்தநாதர் சமாதி நிலயங் கட்ட முயலுதல்

இவ்வாறு, சித்தநாதர் நமது தோபாசுவாமிகளை முக்கரணங்களாலும் உண்மை வழிபாடு செய்து வருங்கால், நமது ஆசிரியரின் திருமேனியானது ஏனையோரின் மல உடல்கள் போன்றதன்று. மற்றோ, ஒரு சிவாலயமாம்.

இதை,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்போ ராலயமாம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்,,

என்றவாங்கே, பலநூல்களுங் கூறுகின்றன. இவ்வாற்றால் இது சிவன் கோவிலா மாதலின், இதை உலகம் நலம் பெறும்பொருட்டுச் சமாதிநிலயத்தில் அடக்கி வைத்து அதன்மேல் சிவலிங்க நிறுவிப் பூசை செய்வித்தல் வேண் டும் என்று மனத்துட் கருதினர். சிவஞானியின் சமாதியில் சிவலிங்கம் வைத்துப் பூசித்தல் வேண்டுமென்பது நூல் வழக்கும் பெரியார் மரபுமாம்.

அற்றாகலினன்றே,

"அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே"

எனவும்,

"சரீரம் பஞ்ச தத்வாக்யம் தத்வம் தத்வேன யோஜயேத்
தத்ராபி ப்ருதிவீ தத்வே யோஜனம் மோக்ஷ சாதனம்"

எனவும், திருமந்திரம், ஆகமம் முதலிய எல்லாப் பெருநூல்களுங் கூறா நின்றன.

### சித்த நாதர் பொருளிரத்தல்.

இவ்வாறு, சித்தநாதர் கொண்ட கருத்து, "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்றவாங்கே, தனத்தால் முடிவு பெறத் தக்கதாமாதலின், சமாதி நிலய மமைக்கப் பல்லூர் திரிந்து சில பொருள் தேடத் தொடங் கினர். தொடங்கின விடத்தும், பல்லோர் பழித்தலைக் கண்டு, சிறிது மனங் கலங்கி,

"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்று, திருவள்ளுவ தேவரும்,

"மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயாது
ஏந்திய கைகொடு இரந்தவர் எந்தாய்"

என்று, கம்பநாட் டாழ்வாரும்,

'ஏற்பதிகழ்ச்சி' யென்று ஔவைப் பிராட்டியாரும் திருவாய் மலர்ந்தருளியவாறே வருந்திஞரேனும், தமது ஆசிரியரிடத்திலிருந்த அன்பு மிகுதியால் எடுத்ததை விடாது இரந்து பொருளீட்டி வந்தனர்.

### சித்த நாதர் ஒரு வைணவரை யடைதல்

சித்தநாதர் இவ்வண்ணம், பல வூர்களிற் சென்று பொருளீட்டி வருங்கால், காஞ்சிமாநகர் எல்லாவற்றினுஞ் சிறந்த ஒரு முத்தித் தலமாமென்பதை யுணர்ந்து அங்குச் சென்று ஒரு வைணவ சமயத்தரின் இல்லையடைந்து, ஐய! எமது குரு, தோபா என்னும் திருநாமம் பூண்ட பெரிய ஞான சித்தர், அவர் வேலூரில் எழுந்தருளியிருக்கின்ருர், அவர்க்குச்சமாதித்திருக்கோயிற்றிருப்பணியின் பொருட்டு நீர் இயன்ற பொருள் கொடுத்து உதவி புரிவீராக என்றிரந்தனர்.

### வைணவர் சித்தநாதரைத் துன்புறுத்தல்.

அதைக் கண்ட அவ்வைணவர், "உருத்திரர்களுள் சங்கரன் நாஞ யிருக்கின்றேன்" என்று கண்ணபிரான் றிருவாய் மலர்ந்தருளிய உண்மையுணராது அபிமான மாத்திரம் மிக்குடையவனும், கண்கள் சிவக்க, சித்தநாதரை நோக்கி, அழுகின்றவனும், தமோ குணத்தனுமாகிய பாசுபத மதத்தன் நீ யாரடா உள்ளில் வந்தவன்? உடனே வெளியில் போடா என்பது முதலாகப் பல நிந்தை வார்த்தைகளைப்

பேசி, இவரைப்பிடித்து வெளியே தள்ளி விட்டனர். அந்தோ! அடியார்க்கு உற்றதைப் பரசிவன் நோக்கானோ? நோக்கானேல், எல்லாமுணர்ந்தவனும் அடியார்க்கெளியவனுமாகிய சிவன், சிவஞானிக்குச் செய்ததைத் தனக்குச் செய்ததாக் கொண்டு பாதுகாத்த லெங்ஙனம்? நம்பினோரைக் காக்கும் நாதன் என்றலும் எவ்வாறும்?

ஆகையாலன்றோ,

"இசழ்ந்ததும் பெற்றதும் ஈச னறியும்"

என்று, திருமந்திரமுங் கூறுகின்றது.

அஃதன்றியும், இராமன் பூசித்ததாலும், மாயோன் தனது கண்ணையெடுத்து அணிந்ததாலும், கண்ணனுக்கு மகப் பேறளித்ததாலும், நரசிங்க மூர்த்தியின் வல்லமையைக் குறைத்ததாலும், மோகினியானபோது அவனைப் புணர்ந்து ஐயனாரைப் பெற்றதாலும், பத்தவதாரத்திலும் சிவனை அருச்சித்ததாலும், அன்னமும் பன்றியுமாய் அடிமுடி தேடியதாலும், மற்றும் பல நிமித்தங்களாலும் சிவனே முதற் கடவுள் என்பதை இவ்வைணவன் உணராததென்னை? மற்றும், வியாத முனிவர் மாயோனே முதற் கடவுளென்று நிறுவுமிடத்து, அவருடைய கைதம்பித்துப்போக,மாயோன் றோன்றி, 'முனிவ! எல்லாவற்றிற்கும் இறைவன் யான்; எனக்கு இறைவன் பரசுமேசுரன்' என்று கூறியருளியதையேனும் சிறிதும் உற்று நோக்கிலன். மதப்பேய் பிடிக்கில் மனம் மாறுபடல் இயற்கையன்றோ?

அதுநிற்க,

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்"

எனவும்,

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள"

எனவும், நமது தெய்வத் திருமறை கூறும் இனிய நீதி வழியையேனும் அறிந்தனனு? இல்லையே! மற்றும், அவ் வைணவன் கடிந்து பேசியது,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்றவாங்கே தீமையே யாயினும், உற்று நோக்கின் முடிவில் நலமேயாம். இது, இராமனைப் பழித்துத்தள்ளிய இராவணன் செயல் போன்றதேயாம். என்னை? ஈற்றில் முத்திக்கே ஒரு காரணமாய் இருத்தலினென்க.

### வைணவர் சுர நோயுறல்

இவ்வாறு செய்ததை ஈசனறிதல் ஒருபுறமிருக்க, வேலைமா நகரில், பாலன் போன்று எழுந்தருளியுள்ள நமது தோபா சுவாமிகள் காஞ்சியில் நடந்தவற்றை யெல்லாம் மெய்ஞ்ஞானக் கண்ணுலுணர்ந்து, இது அஞ்ஞானத் தழுந்தியவன் செய்கையாமென்று, அங்கு, தமக்கருகிலுள்ளாரிடம் மழலைச் சொல்லால் தெரிவித்துக்கொண்டிருந்தனர். இப் பெருந்தகையார், இங்கு, அவ் வைணவன் செய்கையைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, கலிக்காமநாயனுருக்குச் சூலை நோய் வந்தது போன்று, அவ் வைணவனுக்கு மிகுந்த சுர நோயுண்டாயிற்று. இறைவர் ஏழை பங்காளர் என்றலும் பொய்யாமோ? பொய்யாகாது. அஃதன்றியும்,

"ஆண்டான் அடியவர் ஆர்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்

ஆண்டான் அடியரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காமே"

என்னும் ஒருமந்திரமாகிய திருமந்திரமும் பொய்க்குமோ? பொய்க்காது.

சித்தநாதர் வைணவரின் சுரநோயைப் போக்கல்

இவ்வாறு, அவ் வைணவனுக்குச் சுரநோ யுண்டாகி, அதனால் அவன் படாத பாடுபட்டு, எண்ணிறந்த வைத்தியர்களைக் கொண்டுவந்து, பல வகையான மருந்துகளை முறையாய் அருந்திப் பத்தியமிருப்பினும் சுரநோய் சிறிதும் நீங்காததோடு மிகுந்துகொண்டே வந்தது. அடியார்க்குச் செய்த பிழையால் வந்தநோய் வேறொன்றால் விலகுமோ? விலகாது. இதை,

"வேற்றுள குற்றம் யாவையுந் தீர்க்கும்
விமலமாம் இறையரு ளொன்றால்
ஆற்றவங் குற்ற பிழையைநீக் குவதும்
அவனரு ளன்றிவே றுண்டோ"

என்பதனாலுணர்க.

இவ்வாறு அவ் வைணவனுக்கு நாடி பார்த்து வந்த வைத்தியர்களுள் ஒருவன் பூத நாடி சலிப்பதைக் கண்டு அவ் வைணவரை நோக்கி, ஐய! நீர் இதைச் சுரநோயென்று கருதவேண்டாம்; மற்றோ, இது எவரோ ஒரு பெரியாரின் சாபமாம்; மற்றெதுவுமில்லையென்று உறுதிபடக் கூறினான். அதைக் கேட்ட வைணவர், ஆம்! ஆம்!! சில தினத்திற்கு முன் ஒரு பண்டாரம் வந்தான், அவனைத் துன்புறுத்திய தாற்றான் வந்திருக்கலாம் என்று நினைத்து, தோபாசுவாமிகளின் சீடராகிய சித்தநாதரைத் தேடத் தொடங்கினன். அவரைப் பலவிடங்களிலுந் தேடிக் காணாது, முடிவில் ஒரு

சோலைக்குள் இருக்கக்கண்டனன். கண்டு வணங்கி, உண்மைத் தொண்டரே! யான் உமது மகிமை யறியாமல் இகழ்ந்து ஒதுக்கினேன். அவற்றைப் பொறுத்து, எனது சுரநோய் தீருமாறு அருள் புரிவீராகில் நீர் வேண்டிய தனங்களைத் தருகின்றேன் என்று, சித்தநாதரை இரந்து வேண்டிக்கொண்டனன். உண்மையை நோக்கில் சமயச் சண்டையுமுண்டுகொலோ? இல்லை. இதை,

"வருணம் நெறிசார் மதத்து அம் மதம்மெய்ப்
பொருள்உணர்வூடுஇறும் உந்தீபற
பொன்றுதது ஒன்றே யென்று உந்தீபற".

என்னும் அவிரோத உந்தியாரின் அருமை வாக்காற் றெளிந்து கொள்க. உண்மைப் பொருளைப் பெற்று மெய்ம்மை யுணர்வை யடைந்தார்க்கு எட்டுணையேனும் வேறுபாடில்லை. சமயக் கட்டுப்பாடுகள் சண்டையிடுவதற் கன்று. மற்றோ, தத்தமது சமய நெறிகளின்மீது மனம் உறுதிப்படற்காம்.

இவ்வாறு அவ்வைணவன், சித்தநாத சுவாமிகளை வேண்டிக்கொள்ளவே, அவர், திருஞானசம்பந்தப் பெருமானின் திருவருள் பெற்ற செல்வராகிய தோபா என்னும் மகாநுபாவர் எனது ஆசிரியராவர், அவர் தமது திருவுள்ளத்தில் என்ன நினைத்தனரோ? வாக்கால் யாது சொல்லினரோ? திருவருட் செயல் வகை ஒன்றும் யான் அறியேன், ஆதலின் அத்தகைய தோபா சுவாமிகளே எனது தெய்வம், யான் அவரொழிந்த பிற தெய்வங்கண்டிலேன், இது உண்மையாயின், அன்ப! நீ, அவரது திருநாமத்தை யோதி, யான் இப்போது தரும் திருநீற்றை மருந்தாக உண்பையேல், உடனே உனது சுரநோய் நீங்கும் என்றனர். அவ்

வைணவன் அதற்கிசைந்தனன். உடனே சிந்தநாதர், தோபா, தோபா, என்று ஐந்து முறை கூறித் திருநீற்றை யெடுத்து அவ்வைணவனுக்குக் கொடுத்தனர். அதை வாங்கி அவ்வைணவன் இதுவே மந்திரமும் மருந்துமா மென்று அணிந்து உட்கொண்டனன். அதன் பின்னர், சித்தநாதர், அன்ப! நீ, இனி உனதிருப்பிடஞ் செல்வாயாக என்றனர். அவ்வாறே அவன் ஏகுங்கால், அப்போதே சுரநோய் முழுதும் நீங்கி மிக இன்புற்றனன். பெரியாரின் திருநாமம் அரிய மாமறை மந்திரமாம். அதனால் அடையப் படாததொன்றில்லை. அது, எல்லா நலன்களையுமெளிதி லளிக்கும்.

இதுபற்றியே,

"உற்றான் அலன்தவம் தீயில்நின்
றான்அலன் ஊண்புனலா
அற்றான் அலன்நுகர் வும்திரு
நாவுக் கரசெனும் ஓர்
சொற்றான் எழுதியுங் கூறியுமே
என்றுந் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி
யென்னும் பெருந்தகையே"

என்று கூறுகின்றது உண்மை நூலும்.

திருநீறு எல்லாம் வல்லதென்பதை,

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு"

என்றற்றொடக்கத்து இசை வேதத் திருநீற்றுப் பதிகத்தாலுணர்ந்து கொள்க.

ஈண்டு, நமது தோபா சுவாமிகள் திருஞான சம்பந்தப் பெருமானாரின் திருவருளைப் பெற்றவர் என்பதும், சிந்த

னாரும், தோபா சுவாமிகளின் திருவருளைப் பெற்றுய்ந்தவ ரென்பதும், இம்மரபு சைவ சமய சந்தான மரபாய்த் திகழ் கின்ற தென்பதும், சம்பந்தப் பெருமானார் போன்று இவ் வாறு திருநீற்றால் சுரநோய் தீர்த்தமையினாலே இனிது கொள்ளக்கிடக்கின்றன. இதுவே மரபிற்குப் பொருத்தமு மாம். சம்பந்தப் பெருமானார் சுரநோய் நீக்கியதை,

"திருமுகங் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றாற்பிள்ளையார்போற்றிப்பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியு நீங்கி வழுதியு முழுதும் உய்ந்தான்"

என்னும் பெரிய புராணத்தின் அரிய மொழியால், உல கில் தெரியாதவர் உளரேல் தெரிந்து கொள்க.

### வைணவர் சமாதியநிலயங்கட்ட உதவல்.

இவ்வாறு, சுரநோய் நீங்கப்பெற்ற அவ்வைணவர் உடனே வேலைமா நகரையடைந்து நமது சுவாமிகளைக் கண்டு பணிந்து, முன்னர், தாம் உடல் நோய் நீங்க அருள் பெற்றதோடு அப்போது பவப்பிணியும் நீங்க அருள் பெற் றுக்கொண்டு, சுவாமிகளின் சமாதி நிலயம் கட்டுவதற்கு வேண்டிய பொருளையு முதவி, சுவரெடுத்தல் முதலானவற் றையுஞ் செய்தனர்.

### அடக்கக் குகையமைத்தல்.

அக்கால், சித்தநாதர் தாம் எடுத்துக்கொண்டது, தமது ஆசிரியரின் திருவருளால் நிறைவேறியது கண்டு, மனக்களிப்புடன், தாமும் அவ் வைணவருடன் கூடநின்று, சுவாமிகட்கு வலிய கற்றிருப்பணியாக ஒரு சமாதிநிலயம் அமைத்து அதற்குள்ளே சுவாமிகளின் திருமேனியடக்

கத்திருக்குகையும் அமைத்து வைத்துவிட்டு, சுவாமிகளின் திருமுன் போய்ப் பணிந்து, சுவாமின்! தமக்குக் குகை யொன்று அமைத்திருக்கின்றோம், அதை நேரில் தமது திருநோக்குக்கு வருமாறு செய்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். சுவாமிகளும் அதற்கு மனமிரங்கி அங்கு வந்து அக் குகைக்குள்ளிறங்கி, இனிது பார்வை யிட்டு, அன்ப! இதுஎன்ன? எலி நுழையும் வளைபோன்றிருக் கின்றதே என்று திருவாய் மலர்ந்தருளினர். இது, முறையா மாறு அமைக்காததாமென்க.

அதைக்கேட்ட சித்தநாதர், உடனே அக்குகையை மாற்றி, மற்றொரு குகை ஆகம முறைப்படிச் செய்யத் தொடங்கி,

"நவமிகு சாணுலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணகக் கோட்டி
தவமிகு குகைமுக் கோணமுச் சாணுக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே,,

என்றற்றொடக்கத்துத் திருமந்திரங்களால் விதித்த முறையாகவே குகையை இனிதமைத்துவிட்டு, தோபா சுவாமிகளிடம் வந்து பணிந்து, சுவாமின்! இப்போது, நல்ல குகை ஒன்று தமக்கு அமைத்துள்ளேன், கருணை கூர்ந்து அதன்மீது திருநோக்களித்தருள்க என்றனர். அவ்வாறே, சுவாமிகள்வந்து குகையில் இறங்கி நாற்புறமும் இனிது பார்த்து, அன்ப! இதுதான் மனிதன் இருக்குங் குகை யென்றருளினர். அதைக் கண்ட சித்தநாதரும் களிப்புற்று, முன்போல் பலநாள் சுவாமிகட்குத் தொண்டு செய்து வந்தனர்.

சமாதி நிலயப் படலம் முற்றிற்று.

இறந்தன உயிர் பெற்ற படலம்

மந்திரத்தினால் மணியினால் மற்றுந் தன் மதிசெய்
தந்திரத்தினாற் செத்தன தழைத்தெழு மென்னில்
புந்தியுஞ்செலாப் பெருளதாய்ப் பொலிந்திடு புநிதர்
சிந்தையுன்னினா லுயிர்ப்பித்தல் சிதைத்திடல் வியப்போ.

சைவன் சுவாமிகட்குப் புலால் கொண்டுவருதல்

மற்றும், இவ்வாறே சுவாமிகள் சிவஞான சித்தராய்ச் சுழன்றுகொண்டு அருள் விளையாட்டைச் செய்துவருங்கால், ஒரு சைவன் வந்து சுவாமிகளை வணங்கி, இல்லறத்தானுக்கு, பெரியவர்க்கமுதளித்தலாகிய பேறன்றி மற்று யாது பெறும் பேறும்? இல்லை.

இதுபற்றியே,

"மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்"

எனவும்,

"பெரியவர் அமுது செய்யும் பேறு"

எனவும், பெரிய புராணங் கூறுகின்றது.

என்றிவ்வாறு முறையாய்க் கூறுவதுடன், சுவாமின்! யான் ஒருநாள் தங்கட்குத் திருவமுதும் அளிக்க விரும்புகின்றேன் என்றனன். அதைக்கேட்ட எந்தையார், அவனைப் பரிசோதித்தருளத் திருவுளங்கொண்டு, அன்ப! அங்ஙனமாயின், ஊனுடன் உணவளிக்கில் இனிது உண்பேன் என்றருளினர். அதைக் கேட்ட அவ் வன்பன், இஃதென்ன தீய முறைமை? இவர் உண்மைப் பெரியார் எனின் இவ்வண்ணங் கூறுவரோ? கூறார். என்னை?

"மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை
யெழுப்புகின்ற வுறுவ னேனுங்
கருவாணை யுறவிரங்காது உயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே"

என்று உண்மைப் பெரியார் திருவாய் மலர்ந்தருளியிருத்தலின் என்க. என்றிவ்வாறு பலவிதமாய்த் தன் மனத்தில் எண்ணிக்கொண்டு, ஒருவாறு தெளிந்து, அங்ஙனமாயினும், பெரியார் வார்த்தைப்படியே நாம் செய்தல் வேண்டும், நாம் வேண்டியது புண்ணியமேயாம். அது பெரியார்க்கு ஒரு பிடி அன்னமளிக்கில் எளிதிலுண்டாகும்; ஆதலின், இவர் திருவாய் மொழிப்படியே நாஞ் செய்தல் வேண்டும். மாறு கூடாது.

இதனாலன்றோ,

'மலர்ந்த வாசகம் மயற்பிணி மருந்தாகும்'

என்றற் றொடக்கத்து உண்மை நூல்களும், பெரியாரே நமது தெய்வமென்றும், அவர் திருவாய் மலர்ந்தருளியதே நமக்கு வேதம் என்றுங் கூறுகின்றன என்று ஆராய்ந்து, ஒருவாறு மனந்தேறியவனாய், ஐய! அவ் வண்ணமே யான் ஊன் சமைத்துக் கொண்டுவருகின்றேன் என்று ஆணை பெற்றுக்கொண்டு தனது வீட்டையடைந்து, தனது மனைவியிடம் இதைச் சொல்ல, அவள் மிக வெருண்டு ஈதென்ன விபரீதம், இப்படியும் ஒரு பெரியார்

இருப்பரோ? உம்மைப் போன்று ஒரு அன்பரும் உளரோ? என்று கூறுவதுடன் யான் எவ்வாற்றானும் புலாலைச் சமைக்கமாட்டேன் என்றனள். அதைக் கேட்ட அச் சைவன், அன்பின்மிக்காளே! நாம் நமது அதை உணவின் பொருட்டுச் செய்யின் பாவமுண்டு, ஒரு பெரியார் திருவாக்கின்படி அவர் அருந்திக் களித்தற்பொருட்டுச் செய்வதால் பாவம் எவ்வாறாம்? சிறுத்தொண்டர், கண்ணப்பர் முதலான நாயன்மார் பரசிவனாருக்கே ஊனருத்தினரென்பது உனக்குத் தெரியாதோ? என்று இனிது கூற, அதைக் கேட்ட அச் சைவனுடைய மனைவியும், பெரியாரின், ஆணை நமது கணவனுக்கு உளதெனல் ஒரு புறமிருக்க, நமது கணவன் வார்த்தை, நமக்கு ஒரு மந்திரமல்லவா? அதை மறுத்தல் கற்புக் கழகன்று என்று தெளிந்து, அதை ஒருவாறாக ஒப்புக்கொண்டு, அருவருப்புடன் புலாலைச் சமைத்துக் கொடுத்தனள். அதை வாங்கிக் கொண்டு அவ்வன்பன் பெரு மகிழ்ச்சியோடு வரும் வழியைக்கடந்து சுவாமிகளின் திருமுன்பு கொண்டு வந்து வைத்தலும், அதைக்கண்ட நமது சுவாமிகள் எல்லாம் உணர்ந்த அருட்பெருக்கில் மூழ்கியவராதலின், தம்மனத்தில்,

"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு"

எனவும்,

"கொலையாதி நெறியகன்ற ஞான மாகும்"

என்றற்றொடக்கத்து உண்மை நூல்களின் கருத்தை இனிதுணர்ந்த மெய்ஞ்ஞானிக்கு இது இழுக்காமாதலின்,

அவன்மீது கல்லையெடுத்தெறிந்து, கொடுமைச்சொல்களையும் பல சொல்லி, இனி இங்கு நிற்பையேல், உன்னை உதைப் பேன் என்று பலவாறாக வெருட்டித்துரத்திவிட்டனர். புலா லுண்ணல், மது அருந்தல் முதலான தீச்செயல்களை, மறந் தும் பெரியார் செய்வரோ? செய்யார். போலி ஞானிகள் செய்வர். அவர்கள் உண்மை ஞானிகளல்லர்; வீட்டையு மடையார்.

ஊன் எழுந்து நடத்தல்

இவ்வாறு, சுவாமிகளால் துரத்திபடிக்கப்பட்ட அச் சைவன், மிக வியப்புற்று, சுவாமிகள் நம்மைச் சோதித்தற் பொருட்டுச் செய்த நீதிச்செயல் இது என்று சுவாமி களின் திருவருளை நினைந்து நினைந்து அன்புமிக்குடைய னாய், தான் கொண்டுவந்த அவ்வூனைப் பார்த்தனன், அப் போது அப்பிராணிகள் உயிர் பெற்றெழுந்து நடந்து சென் றன. அம்மம்ம! சிவனருள்பெற்ற உண்மைஞானிகள் எதைத் தான் செய்யார்கள்! மற்றோ, செயற்கரியதையுஞ் செய் வார்கள். கருமவினைகளையும் போக்குவர். மற்றெல்லாவற் றையுஞ் செய்வர்,

இதை,

> "தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
> முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
> பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
> சென்னியில் வைத்த சிவனரு ளாலே"

என்னுந் திருமந்திரத்தானும், அறுபான்மூவரின் அருட் பெருஞ் செய்கைகளானும் உய்த்துணர்க. பெரியார்பால் அன்பிருக்கின் உண்மையானது தெற்றென விளங்கும். அன்பி லார்க்கு, பெரியாரும் இலர், அவரது அரிய செயல்களுமில்லை யென்க.

## இறந்தபெண் உயிர்பெற்றெழல்

மற்றும், அவ்வண்ணமே, குப்பம் என்னும் ஒரு கிராமத்திலிருந்த பதினோராண்டு நிறைந்த ஒரு பெண், புளியம் விதை வைத்திருந்த பாண்டத்தில் கையிட்டனள். அப்போது அங்குள்ள அரவு தீண்டியிறந்தனள். அதைக்கண்ட அப்பெண்ணின் தாய் தந்தையர், நமது தோபா சுவாமிகளின் திருவருள் விளையாட்டைக் கேள்வியுற்றவர்களாய், உயிர் துறந்த அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு சுவாமிகளின் திருச்சந்நிதியிற் கிடத்திவிட்டு, எந்தையே! எமது பந்துவே! அன்பர்கட்குச் சொந்தமே! சமரச சுத்த சைவந் தழைக்கவந்த தாணுவே! எல்லாம் வல்ல ஞானசித்தரே! என்று பலவாறாகப் போற்றிப் பணிந்து, இம் மகள் எமது அருமைப் புதல்வியாவள் "கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கள்மேற் காதல்'' என்றால், யாம் அறியாமை மிக்குடையோமாதலின், எவ்வாறு புத்திரக் காதலை யொழிப்போம்? ஆதலின், தாங்கள் தயை கூர்ந்து, இப்பெண் உயிர் பெற்றெழுமாறு திருவருள் பாலித்தல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அதைக்கேட்ட நமது சுவாமிகள் திருவுள்ளமிரங்கி, அப்பெண்ணின் உடலை, திருவருள் ததும்பிய தமது திருநோக்கால் இனிது பார்த்தவுடன், அப்பெண் துயின்றெழுந்தவள் போன்று எழுந்தனள். விடமுண்ட கண்டனின் விமலவடியார் விடத்தைப் போக்கல் வியப்பன்று. மற்று, எல்லாஞ் செய்ய வல்லர் என்க. பெரியார் புராணங்களும் இவ்வாறே கூறுகின்றன. பண்டைக்காலத்திய சித்தர்களின் செயலும் இவ்வாறேயாமென்று புலப்படுகின்றது.

இதை,

"ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்"

என்றற்றொடக்கத்துத் திருமறையாலுணர்ந்து கொள்க. மற்றும், கருடனைப் பாவித்த ஒருவன் விடத்தைப் போக்குவனென்றால், சிவமேயாகிய சிவஞானச் செல்வர், விடம் போக்குவார் என்பதில் சொல்லற்பாலதென்னை? இதிற் சிறிதும் ஐயமின்றாமென்க. விடம்பட்டிறந்த வுயிர், உடலுக்குள் தம்பித்து மூன்று நாள் வரை நிற்குமென்ப. அதற்குள் உயிர்பெற்றெழல் எளிதிற் கூடும்.

இவ்வாறு, தமது குழந்தை உயிர்பெற்றெழுந்ததைக் கண்ட அவர்கள், இப்பெரியார் ஆக்கியளித்தழிக்கவும் வல்லார், இவரே எமக்குக் கடவுளும், குல தெய்வமும், குருவுமாவர் என்று, சுவாமிகளைப் போற்றிக்களித்துப் புகழ்ந்து கொண்டு தமது ஊரையடைந்து இன்புற்றனர்.

மற்றும்,

"பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தாம்—உயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன் சம்
பந்த னியம்புதிருப் பாட்டு"

என்னும், நால்வர் நான்மணி மாலை வெண்பாவும், பிறவும், இதையே வலியுறுத்துகின்றன.

மற்றும் இவ்வாறே,

"பாரி லெதிர்ந்த பல்விடங்கள் தீர்த்தருளினார்" என்று ஞானசம்பந்தர் திருவுலா மாலையுங் கூறுகின்றது.

இறந்தன உயிர் பெற்ற படலம் முற்றும்

திருவிளையாட்டுப் படலம்

தலையிற் பால நற் றண்மதி சூடியின்
கலையிற் றோன்றிய கருணைகொள் ஞானியும்
நிலையில் மாறிடா நின்றிவண் பாலனில்
அலகி லாவிளை யாட்டையு மாற்றினர்.

**வணிகன் கடையை வீழ்த்தல்.**

இவ்வாறே, ஞான சித்தராகிய நமது தோபா சுவாமிகள், ஒருநாள், வணிகர்வீதியில் வந்தருளினர். அதைக்கண்ட அனைவரும் அன்போடு அடி பணிந்து போற்றினர். அப்போது சுவாமிகள், நெல் முதலான பண்டங்கள் நிறைந்த ஒரு வணிகனுடைய கடைக்குட் புகுந்து, அங்குள்ள கற்கண்டுக் கட்டியைக் கையிலெடுத்தருளினர். அதைக்கண்ட உலோபகுண மிகுந்த அவ்வணிகன், சுவாமிகள் எடுத்த கற்கண்டை மறித்துப் பிடுங்கிக் கொண்டனன். உடனே சுவாமிகள் வெளியில் வந்து விட்டனர். வரவும், அந்தக்கடையும், ஈகையிலார் செல்வம் போன்று உடனே முழுதும் இடிந்து விழுந்துவிட்டது. அதைக்கண்ட அவ்வணிகனும், மற்றும் பலரும் மனநடுக்குற்று, அம்மம்ம! பெரியாரின் அரிய செயல் நம்மாற் சொல்லுதற்கும் அரிதாம். மற்றும், எந்த நூல்களாலும் எடுத்துக் கூறொணாததுமாம்.

இதுபற்றியே,

"தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" எனவும்,

"அவன்பா லணுகியே அன்புசெய் வார்கள்
சிவன்பா லணுகுறச் செய்யவும் வல்லர்
அவன்பா லணுகியே நாடும் அடியார்
இவன்பாற் பெருமை யிலயம தாமே"

எனவும், மற்றும், பிறவுங் கூறுகின்றன என்று உய்த்துணர்ந்து கொண்டு, போற்றிப்பணிந்து, சுவாமின்! தேவரீர் எம்மீது தயைபுரிவீராக, ஏழைகள்பால் இனி கருணை நோக்குடையராதல் வேண்டும், முனிவடையற்க, யாம் செய்த பிழையனைத்தையும் பொறுத்தருளவேண்டும் என்று பலவாறாகச் சுவாமிகளைப் போற்றினர்.

அருளமுதச் சுவை கற்கண்டு போன்றதெனல்

இங்குச் சுவாமிகள், கற்கண்டை எடுத்தருளியதை நோக்கில், பரசிவன் கற்கண்டுபோன்ற சுவைவடிவன் என்பதைக் காட்டியருளுவதற்குப் போலும்! என்னை? சுவையானாய், என்று தெய்வமறை கூறுதலின் என்க.

இதை,

"கந்தாவென் றுரைப்பவர்தங் கருத்துள் ளூறுங்
கனிரசமே கரும்பே கற்கண்டே நற்சீர்த்
தந்தாளுந் திருத்தணிகை மணியே சீவ
சாட்சியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே"

என்றற்றொடக்கத்துப் பெரியார் அநுபவத்தி லெழுந்த அருட்பாக்களாற் காண்க.

மற்றும், சிவஞானிகள் கற்கண்டையொத்த அருள் அமுதைப் பருகுகின்றனர் என்னுங் குறிப்பெனினுமமையும். பரசிவனுடைய அருளே பரவமுதமாமாதலின்.

இதை,

"அனமதும் பாலுஞ் சருக்கரை கண்டு
மங்கனி வகைகளுந் தேனும்
இனமவை யொன்றாய்க் கூட்டிய ருசியின்
இதயநின் றிடைவிடா தூறும்

• கனபிரணவ வமுதத்தையே யருந்திக் களிப்பவர்,,

என்னுஞ் சுத்த சாதக வாக்கானும், பிறவாற்று னு முணர்க.

வறண்ட குடங்கள் நிறைதல்

அங்ஙனமே, மற்றொரு நாள், சுவாமிகள், வணிகர் வீதியிற் சென்று அங்கு எண்ணெய்க் குடங்கள் நிறைந்துள்ள ஒரு கடையுட்புகுந்து, அவ்வணிகனை நோக்கி அன்ப! நீ சிறிது எண்ணெய் எமக்குக் கொடுப்பாயாக என்று திருவாய் மலர்ந்து கேட்டருளினர். அதற்கு வஞ்சம் நிறைந்த மல வுள்ளத்தனாகிய அவ்வணிகன், ஐய! எண்ணெய் முழுதும் விற்றுவிட்டது. இப்போது ஒரு சிறிதும் கடையில் இல்லையென்று சுவாமிகட்குப் பொய்யுரை கூறிவிட்டனன். அந்தோ! மாதவர் வினவ வாய்மை தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலமிலாத அவ்வணிகன், பெரியார் பால் பொய்யுரையாடல் எத்துணைத் தீமையென் றறிந்திலனே! இவன்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்ற தமிழ் மறைவாக்கிற்கு மாறாய்க் கூறினனலனோ?

மற்றும்,

"போற்றுகை தவிர்தல் நாதன்
பொருளினைப் புசித்த லீதல்
ஆற்றுதல் கோடந் தன்னைச்
சொன்னவை மறுத்தல் பொய்கள்
சாற்றுதல் குலமுங் கல்வி
தனத்தபி மானம் பண்ணல்
மாற்றுதல் கொடுத்தல் தன்னை
மற்றிவை குருவோ டாகா."

என்று உண்மை நூல்களும், இத்தகைய செயல் பெரியார் முன் செய்யத் தகாதவையென மறுத்திருக்கின்றனவே, அதையேனுங் கருதினை? இல்லை, அறியாமையின்பெருமை மேலிட்டதேயன்றி, அறிவுடையார் பெருமை மேலெழவில்லையே! இது முற்பவத்தின் வினைப்பயனும் என்க. இவ்வாறு, கள்ள நெஞ்சுடைய அவ்வணிகனது சொல்லைக் கேட்ட நமது பெருந்தகையாராகிய சுவாமிகள், திடீரென அக் கடைக்குட் புகுந்து, அங்கு எண்ணெய் ததும்ப இருந்த எண்ணெய்க்குடங்களைக்கண்டு, அவற்றிலுள்ள எண்ணெயை மொண்டு தமது திருமேனியின் மீது நிறைய ஊற்றிக் கொண்டேயிருந்தனர். சுவாமிகள் திருமேனியிற் பட்டு வழிந்த தைலமெல்லாம் ஒரு அருவியாய்ப் பாய்ந்துவெளியிலோடிக் கால்வாயிற் சென்றது. அதைக்கண்ட அனைவரும், சுவாமிகளிடம் வந்து எல்லாமுணர்ந்த பெரியோய்! ஏழையின் பொருளை இவ்வாறு வீண்படுத்தல் நினது திருவருட்கு அழகாமோ? என்று பலவாறாக வருந்தினர். அதைக்கேட்ட நமது தோபா சுவாமிகளாகிய அருள் வள்ளலார், அன்ப! யான் செய்த தென்னை? ஒன்றுமில்லை. உன் பொருள் உன்பால் இருக்கும் என்றருளிச் செய்தனர். அதைக்கேட்ட அவ்வன்பன் இஃதென்ன வியப்பு என்று கடைக்குள் நுழைந்து பார்க்க, எண்ணெய்க் குடங்கள் அனைத்தும் முன் போன்றே எண்ணெய் நிறைந்திருந்தன. அதைக்கண்ட வணிகன், சிவஞானிகளின் செயல் இதுவெனத் தெரியாது பெரியாரைக் குற்றங்கூறிய எனது அறியாமை என்னே! மெய்ஞ்ஞானிகள், அஞ்ஞானிகளைப் போன்று இருப்பர் என்னுஞ் சொல்லையும் மறந்தேனே, என்று பலவகையாய்த் தனக்குத்தானே வருந்திக்கொண்டு

சுவாமிகளின் திருவடிக் கமலங்களில் விழுந்து வணங்கி னன். சுவாமிகளும் திருவுள்ளமிரங்கி யருளினார்.

கண்டயோகங் காட்டியருளல்

இஃதன்றியும், சுவாமிகள் சித்தியும் ஞானமும் ஒன் ருய்த்திகழ்ந்து விளங்கப் பெற்றவராதலின், இரவில் ஒரு சமயம், சுவாமிகளின் திருமேனி தனித்தனி யுறுப்புக்களாக ஆக்கப்பட்டுத் துண்டம், துண்டமாகக் கிடப்பதைக் கண்ட சில அன்பர்கள், அந்தோ! நமது ஆண்டவர் தோபாவை யாரோ வெட்டி வெட்டித் துண்டந் துண்டமாகச் செய் தனரே, இனி எங்கு யாம் இத்தகைய சைவசமயச் சன் மார்க்கத் தலைவரும், சுத்தசமரச சைவப் பெருநெறியை ஒழுகிக் காட்டியவரும், ஞானசித்தரும், யோகமுற்றவரும் கிடைக்கப்பெற் றுய்வோம்! என்று வருந்திக்கொண்டிருந் தனர். பின்னர், சுவாமிகள், விடியற்போதில் முன்போன்றே அழகிய திருவுருக்கொண்டு அனைவருக்குங் காட்சியளித் தருளினர். இதை, கண்டயோகம் என்பர் யோகியர். மற்றும், பாலர், உன்மத்தர், பிசாசரைப் போலும், மற்றும் பலவகையாகவும் மெய்புணர்வுடையார்கள் இருப்பர்கள் என்று உண்மை நூல்களும் ஆன்றோர்களுங்கூறுமாறே, சுவாமிகள், நாய்களும், பாலர்களும், மற்றும், பலரும் தம்மைச்சூழ, ஒருபோது பித்தர்போன்று பலவாறுப் பிதற்றிக்கொண்டும், ஒருபோது தனித்து மௌனியாயும், மற்றொருபோது, சுடுகாடுகளில் திரிந்தும், ஒருபோது சோலையிற்றங்கியும், மற்றொருபோது வீதிகளில் திரிந்தும், சிலபோது ஊமையன் போன்றும், மற்றும், இவ்வாறே எண்ணிறந்த நடைகளையுடையவராய், யாவரும், தோபா தோபா என்று சொல்லும் வண்ணம் பன்னிரண்டு ஆண்டு வேலைமாநகரில் இனிது வாழ்ந்தருளினர்.

இம் மகாநுபாவர், இவ்வாறு வேலைமா நகரில் வாழும் நாளில் அங்கு, மழைவளம் முதலான எல்லா வளங்களும் நிறைந்திருந்தன. எவ்விடத்திற் பெரியார் வாழ்கின்றனரோ, அவ்விடம் சுவர்க்கமாமெனின், வளம் மலிந்து இருக்குமென்பதில் சொல்லற்பாலதென்னை? ஒன்று மில்லை.

அற்றாகவினன்றே,

"சிவயோக ஞானி செறிந்தவத் தேசம்
அவயோக மின்றி யறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே"

என்று திருவாய் மலர்ந்தருளினர் திருமூலரும்.

அஃதன்றியும், சிவஞானிகட்கு முத்தேவரும் தொண்டு புரிவரெனின், அவர் பெருமை எவராற் சொல்லற்பாலதாம்? எக் கவிகளாலும் இனிதெடுத்துக்கூறலும் மிக அரிதாமென் றுணர்க.

இதுபற்றியே,

"ஈசனும் ஞானி யிருந்துள விடத்தே
யிருப்பது முத்திதான் அந்தத்
தேசிகன் ஏவல் செய்பவன் கால்என்
சென்னியி லிருப்பது மன்றி
மாசிலாப் பரம ஞானியா முனிக்கு
மகேசனும் ஒப்பலன் மதிக்கில்
ஆசிலா வரியும் ஒப்பலன் நானும்
ஒப்பலன் எவரொப் பாரோ"

என்று நேரே திருவாய் மலர்ந்தருளியுள்ளார் எல்லாம் படைக்கும் வல்லவராகிய பிரமதேவரும். மற்றும், இவ்

வாறே யூகித்துணர்ந்துகொள்க. இவ்வாறே, தொண்டரின் திருவடியானது தேவரின் திருமுடிமேல் நின்றமையை, குமாரதேவரின் திருச்சரிதையாலுணர்ந்து கொள்க.

இவ்வுண்மையை வெளியாக்குதற்கே,

"ஞானியை நரன்சுரன் எனுதுஒழிக
ஞாலமுய நாதன் அருளால்
மேனியது கொண்டுதனை நல்கவரும்
என்றறையும் வேத முடிவே"

என்ற திருவாக்கு மெழுந்தது.

திருவிளையாட்டுப் படலம் முற்றிற்று.

---

## மாணவப் படலம்.

எல்லாஞ்செய்வல்லானே யாவருக்கு மெழிற்குரவன்
எவருஞ் சீடர்
வல்லாரும் வழிபாட்டின் வலியினுற் குருவாவர்
வானோர் போற்றும்
கல்லாலின் நிழலமருங் கடவுளரின் கருணையினுல்
கனிந்து வந்தார்க்
கல்லாமல் தோபாவுங் குருவாகான் அவனிமிசை
அருளின் சீரே,

மகான் வேமன்னரின் அருள் பெற்றவரும், வரகவியுமாகிய
நரசிங்க தாச சுவாமிகள்
ஞானோபதேசம் பெறல்

---

### நரசிங்க தாசர் வரலாறு

சித்தூரிலுள்ள ஒரு தனிகனுக்குப் புத்திரன் இருந்தனன். அப்புத்திரன் செல்வச் செருக்கால் இளமையில்

கல்வி கற்காமல் மந்த மதியுடையனாக இருந்தனன். அப்புத்திரனைப் பெற்றவர், கல்வி கற்குமாறு அவனைப் பள்ளிக்கூடத்திற்குச் செலுத்த, அவன் அங்குச்சென்று இனிது கல்வி கற்காததோடு பள்ளிக்குப் போகின்றேனென்று சொல்லிவிட்டு எங்கேனும் மறைந்திருந்துவிட்டு உணவுப்போது மாத்திரம் வந்து கொண்டிருந்தனன். அதைக்கண்ட தந்தையார், ஒரு நாள், அவனைப் பள்ளிக்குச் செல்லவில்லையென்று துன்புறுத்திப் பள்ளிக்கனுப்பினர். தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய பேருதவி கல்வி பயிற்றுவித்தலன்றி மற்றென்னை?

அற்றாகலினன்றே,

> "தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"

என்று திருவள்ளுவ தேவரும் திருவாய்மலர்ந்தருளினர். மற்றும், பிறவும் இவ்வாறே கூறுகின்றன என்பதையுமுணர்க.

இவ்வாறு, அவ் விளைஞன் தந்தையாரால் தண்டிக்கப் படவே, மனம் வெறுத்து சித்தூர்க்கருகிலுள்ள ஒரு மலைக் குகையிற்போய் ஒளித்துக் கொண்டிருந்தனன். அவ்வாறே இரண்டு மூன்று தினம் உணவு முதலியன இன்றி அங்கேயே இருந்து விட்டனன். அவனுடைய தாய் தந்தையர் அவனைப் பலவிடத்துந் தேடிப்பார்த்தும் அவன் அகப்பட்டிலன். இது, முற்பிறப்பிற்செய்த புண்ணியத்தின் பலனும் என்பது பிற்போக்கால் யூகித்துக் கொள்ளற்பாலதாம்.

### நரசிங்கதாசர் வேமன்னரின் அருளைப் பெறல்

இவ்வண்ணம், அச் சிறுவன், மலைக்குகைக்குள் இருக்கும் போது, திருவருண்மேலீட்டால் சிவமே ஒரு ஆசிரிய

ராய் வந்தது போன்றே வேமன்னர் என்னும் மகாநுபாவர் அவ்வழியாய்ப்போய்க்கொண்டிருந்தனர். அப்போது, அவர் மலைக்குகையிலிருந்த இச்சிறுவனைக்கண்டு, இவனுடைய முகப் பொலிவையும், அகத்தெளிவையும் நோக்கி, இச்சிறுவன் ஒரு அருமைப் புதல்வனாவன் என்று கண்டு, அவனை நோக்கி இளைஞ! நீயார்? ஏன் இங்கிருக்கின்றனை? என்று வினாவியருளினர். அதற்கு அச் சிறுவன், தனக்கு நல்லணியாகிய பணிவோடு, சுவாமின்! யான் இங்குள்ள ஒரு பொருளாளியின் புதல்வன்; எனக்கோ, கல்வி கற்பதில் நுண்ணிய அறிவுஇல்லை; ஆதலின், மிகமுயலினும் கல்வி எனக்கு இனிது வரவில்லை; இதையறியாத எனது தாய் தந்தையர் என்னை மிகத் துன்புறுத்துகின்றனர்; யான் செய்வதென்னை? எங்குச் செல்வேன்? யாரிடஞ் சொல்வேன்? என்று இரங்கிக்கூறினன். அதைக்கேட்ட வேமன்னர், அவன்மீது தயைமிக்குடையராய், குழந்தாய்! இங்குவருவாயாக என்று விளித்து அச் சிறுவனுடைய நாவில் கலைமகளின் பீசமந்திரத்தை யெழுதியருளிவிட்டு, சிறுவ! இனி, உனக்குக் கல்வி நன்றாய் வரும், நீ பயப்படாதே என்று திருவாய்மலர்ந்தருளிவிட்டு ஏகிவிட்டனர்.

அது தொட்டு, அச்சிறுவன், வரகவியாய் தெலுங்கில் எண்ணிறந்த கீர்த்தனைகளையும் பாடல்களையும் இயற்றி, விஷ்ணுவைப்போற்றி, நரசிங்கதாசர் என்னும் வைணவப் பெரியாராய் தாய் தந்தையர்கள் களிக்கவும், உலகம் மதிக்கவும் சிறப்பைப் பெற்றிருந்தனன் என்பர்.

இறைவன் குருவாவா னெனல்

இங்கு,

“பண்டைநற் றவத்தாற் றோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணுந்

தொண்டரைத் தானே தூய
கதியினிற் றொருப்பன்"

என்ற திருவாக்கிற்கியைய அச் சிறுவனுக்கு இறைவனே ஆசிரியராய் அருளுருக்கொண் டெழுந்தருளினன் என்பது கொள்ளக்கிடக்கின்றமை காண்க.

அற்றாகலினன்றே,

"எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லா ருள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரு முய்யக்கொண் டிங்கே யளித்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே"

என்று திருமந்திரமுங் கூறுகின்றது.

மற்றும், இவ்வாறே, முருகக் கடவுளின் திருவருளமுதுண்டு தேக்கித் திளைத்த அருணகிரி நாதரும்,

"உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

## நரசிங்கதாசர் தோபாசுவாமிகளைப் போற்றல்

இவ்வாற்றால், வரகவியாய் எழுந்தருளிய நரசிங்கதாசர் என்னும் அறிஞர், சித்தூர் முதலிய பல விடங்களிலும் எழுந்தருளியிருந்து உலகிற்கு அறிவையூட்டிக்கொண்டு, முடிவில் வேலைமா நகரை யடைந்து, நமது தோபாசுவாமிகளின் பெருமையைக்கேட்டுத் தேடிவந்து, சுவாமிகளைத் தரிசித்து வணங்கிப் போற்றி உண்மை ஞானத்தில் விருப்

புற்றவராய்ச் சரணடைந்து, தோபாசுவாமிகளின் அநுக்கிர கத்தைப் பெற்றுக்கொண்டு,

"ஸ்வாமி உபதேசிஞ்சவ்வதேமி நன்னு கன்ன
தோபாஸ்வாமி உபதேசிஞ்சவ்வ தேமி"

என்றற் றொடக்கத்து எண்ணிறந்த தெலுங்கு கீர்த்தனை களால் சுவாமிகளைப் போற்றிக் கொண்டிருந்தனர்.

தோபாசுவாமிகள் நரசிங்கதாசருக்கு அருளல்

இவ்வாறு பல்வகை இசைகளுடன் பாடிக்கொண்டிருந்த சுவாமிகளின் அன்பராகிய நரசிங்கதாசரை, சுவாமிகள் ஒரு நாள் நோக்கி, திருக்கரக் குறியைக்கொண்டு தம்பால் விளித்து, மனம் வாக்குகட்கெட்டாத மாபரம்பொருளைச் சுட்டாமலறிதற்குரிய நெறியைக் குறிப்பாலுணர்த்தி யருளி னர். இதுவே இருந்தபடி இருந்து காட்டல் என்பதும், சின் முத்திரையாலுணர்த்தல் என்பதுமாம். மறை முடியிற் றிகழும் உண்மைப் பொருளுமிதுவேயாமென்க.
இப்பொருளை,

..............................

"வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை"

என்னும், பரஞ்சோதி முனிவரின் அருள் நீதிவாக்கியத் தாலுணர்ந்து கொள்க. தீவிரபக்குவர்க்குரிய மாபெரும் உபதேசமு மிதுவேயாம்.

நரசிங்கதாசர் முத்தியெய்தல்

இவ்வாறு, நரசிங்கதாசர் என்னும் பெரியார், நமது தோபா சுவாமிகளிடத்தில் அருட்குறிப்பால் சிவஞானத்

தெளிவாகிய உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு, மாதவராய் மும்மலம் நீங்கிச் செம்மலர்ச் சிவனடி நிழலில் அத்துவித மாய்க்கலந்து விதேக முத்தி யெய்தினர்.

அத்தகைய நரசிங்க சுவாமிகளின் திருமேனியை வேலைமா நகரிலுள்ள அன்பர்கள் குகையிலடக்கஞ் செய்து ஆலயமமைத்துச் சிவலிங்கந் தாபித்து முறையாய்ப் பூசை செய்து வருகின்றனர். உலகத்தாரும் வழிபட்டு நலமடைகின்றனர். இச் சமாதி நிலயம், வேலைமாநகரில், சலவன் துரை வசித்ததால் சலவன்பேட்டை என்று வழங்குமிடத்தில் நரசிங்கசுவாமி கோவில் என வழங்கப்பெற்று விளங்குவதுடன், குருபூசை முதலானவைகளும் இனிது நடந்தேறி வருகின்றன.

மாணவப்படலம் முற்றிற்று.

---

## முத்தியெய்து படலம்.

உடலி ருக்கினு மூலந்து வீழினுந்
திடம தூற்றவர் திகழ்வர் வீட்டினில்
இடமி ருக்குமிவ் வுலகம் போற்றிடப்
படம்வி ரித்திடு பணியி னீத்தனன்.

### சுவாமிகள் திருமேனியை நீத்தல்

இவ்வாறு, நமது தோபாசுவாமிகள், முருகக் கடவுளின் திருவவதார ராகிய திருஞான சம்பந்தப் பெருமானாரின் திருவருள் பெற்று, பரசிவனால் மெய்காட்டி யருளப்பெறும் பெரும் பாக்கியத்தையுமடைந்து சிவஞான சித்தராயும், வடிவால் முருகன் போன்ற பால விளையாட்டை யுடையராயும், எண்ணிறந்த அருள் விளையாட்டைச் செய்தருளி, அதனால்

உலகத்தை யீடேற்றிவிட்டு, சுவாமிகளின் உண்மை மாணவ ராகிய சித்தநாத யோகியாருடன் கூடவே இருந்துவரும் நாளில், ஒருநாள் தமது அருளுருவத் திருமேனியை விட்டுச் சிவ வுருவாகத் திருவுளத் தெண்ணி, சித்த நாதரையும், மற்றுமுள்ள சில அன்பர்களையும் நோக்கி, அன்பர்காள் நான் போகின்றேன் நீங்களும் வருகின்றீர்களா? என்று! அடிக்கடி திருவாய் மலர்ந்துகொண்டு, சமாதி நிலையத்திற்கு மேற்கிலுள்ள ஒரு கால்வாய்வரை, போவதும் வருவது மாக இருந்தருளினர். அதைக்கண்ட சித்தநாதர் முதலா னோர் வியப்புற்று, இது என்ன? சுவாமிகளின் திருவருள் விளையாட்டை ஒன்றையும் அறிகிலோமே! என்று மயங்கி னார்கள். உடலை நீக்கத் திருவுளத் தெண்ணியது ஏனை யோர்க்கு உணரவும் படுமோ? உணர முடியாது. இவ்வாறு செய்துவிட்டு நான் போகின்றேன் என்று திருவாய்மலர்ந் தருளிக் கொண்டே முன்னர்க் கட்டியிருந்த சமாதி யடக்கக் குகையுட் சென்று, பத்மாசனத்தராயமர்ந்து, ஆன்மா வைச் சிவனோடு கலக்கச் செய்து பரவெளியாய்,

"வாக்கது மனத்திடை வைக்கும் அம்மனம்
போக்கிடும் புந்தியுட் புந்தி மாணிலே
ஆக்கிடும் அந்தமான் இவை யனைத்தையும்
தாக்கறு சாந்தமாந் தன்னிற் சாந்தமாம்"

என்ற இலய நெறியிற் சென்று உடலை நீத்துச் சிவ மேயாயினர். சிவஞானச் செயலுடையார், சிலர் அருட் சோதியுட் கலந்தனர், சிலர் நேரே கைலைக் கேகினர், சிலர் நித்திய தேகம் பெற்றிருந்தனர், சிலர் சிரஞ்சீவியா யிருந் தனர் என்பது நூல்களிலுங் கூறப்பெற் றிருக்கின்றது.

ஆனல், அது பேரருளாளரின் செய்கையாம். முத்தியிலோ வேறுபாடில்லை என்பதை யுய்த்துணர்க.

இதை,

"காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார்"

எனவும்,

"மாசில் வெண்மைசேர் பேரொளி யுலகெலா
மலர்ந்திட வளர்மெய்ம்மை
யாசி லன்பர்தஞ் சிந்தைபோல் விளங்கிய
வணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும் புரவியு மிழிந்து
சேணிடைச் செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடை பலகடந்
தெய்தினர் மணிவாயில்"

எனவும்,

"மண்முதலா முலகேத்த மன்னுதிருத்
தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே
னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி
வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவரசு
அமர்ந்திருந்தார்

எனவும்,

"நின்றபுகழ்ப் புலியூரர் நேசமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனின் அம்பலமெய்தி
ஒன்றியவித் தமிழ்மாலைப் பொருள்இவரென் றுரைசெய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனர்அங்கு அவர்காண"

என்வும்,

"சாகா வரந்தந்த தாரகப் பாதம்
சச்சி தானந்த சதோதய பாதம்

எனவும்,

"வினையினி லெடுத்த இவ்வுடல் மேலும்
வினையுள தெனின்இங்கே யகலும்,
வினையில தெனில்இங் கிவ்வுடல் தானே
வினையறும் ஓம்மய மாகி,
வினையுள வுடல்போல் தோற்றன் மாத்திரமாய்
விளங்கியே வெந்துறு புரிபோல்,
வினையிலாப் பரம முத்தியில் வெளியாய்
விமலநல் லருளதாய் விடுமே"

எனவும் கூறுநின்ற உண்மை நூல்களாலும், மற்று முள்ள சித்தர் வாக்கியங்களாலு முணர்க.

அங்ஙனமாயினும், ஈண்டு, சைவ சந்தான குரவர்களின் முறைப்படி நமது சுவாமிகளும் திருமேனியைத் துறந்தருளினர் என்க. மேற்காட்டியவைகள், முற்பிறப்புக்களில் பல பிறப்புத் தொட்டு வந்த சுத்த தேகிகட்கும், அருள் மேனி கொண்ட அவதார புருடர்களுக்குமே அமையுமென்பது கொள்ளற்பாலது.

திருமேனியடக்கம்.

இவ்வாறு, தமதிச்சைப்படியே ஞானயோக வலியால் விடப்பெற்ற சுவாமிகளின் திருமேனிக்கு, ஆகம முறைப்

படி, சித்தநாதரும், மற்றுமுள்ள எண்ணிறந்த அன்பர்களும் திரண்டுவந்து, பல வாத்தியங்கள்முழங்கவும், பசனை யொலிக ளெழும்பவும், பால், பன்னீர், தேன், இளநீர், பஞ்சாமிருத முதலானவைகளால் அபிடேகமாட்டி, சோடசவுபசாரங்களுடன் நைவேத்திய தூபதீப அருச்சனை முதலானவற்றால் பூசித்து அடக்கக்குகையில் அமர்த்தி,

"மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தெர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீது மூன்றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே"

என்றீ, திருமந்திரம் விதித்தவாறே அக்குகையைத் திருநீறு முதலியவைகளைக் கொண்டு நிரப்பி, அதன் மீது,

"ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போது மிரண்டினில் ஒன்றைத் தாபித்து"

என்றவாறே சிவலிங்கப்பிரதிட்டையுஞ்செய்து, தினம் மூன்று காலம் பூஜை நடத்தி வந்து, ஆகம விதிப்படி அச் சமாதிநிலயக் கோவிலுக்குக் கும்பாபிடேகமுஞ் செய்து வைத்தனர்.

இங்கு, உய்த்துணரற்பாலது ஒன்றுண்டு. அதாவது,

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்"

என்று, நாலடியார் கூறியது ஞானியின் நோக்கால் என்பதும், மேற்கூறியது அன்பர்களின் நோக்கால் என்பதுமேயாம். இவ்வாறு, ஷோபாசுவாமிகளின் திருவருளால் இது ஒருவாறு எழுதி முடிந்தது.

முத்தியெய்து படலம் முற்றிற்று.

திருமடாலயப் படலம்

சித்தநாதர் முத்தியெய்தல்

அற்றவரின் பசியகற்றி யடியர் கூட்டம்
நிற்றிடலின் உயர்பெரியர் நிலய மாகக்
கற்றவர்கள் கருதிடலின் கன்னி ராலே
முற்றுறுமவ் வில்லமதை மொழிந்திடுவர் மடமாக.

அதன் பின்னர், சித்தநாதரும், தமது ஆசிரியராகிய தோபாசுவாமிகள் சிவலிங்கத் திருமேனிகொண் டெழுந்தருளி யிருந்தவிடத்திலேயே இருந்துகொண்டு சிலநாள் சுவாமிகளை வழிபட்டுக்கொண் டிருந்து, தமது இச்சைவயத்தால் முடிவில் திருமேனியை நீத்துச் சிவனோடு அத்துவிதமாயினர்.

அன்பர்கள், அத் திருமேனியையும் தோபா சுவாமிகளின் சமாதி நிலையத்திற்குப் பக்கத்தில் சமாதிவைத்துப் பூசித்து வந்தனர். இப்போது அச்சமாதி மறைந்திருக்கின்றது.

மோட்டூர் சுவாமிகளின் வரலாறு

பின்னர், மோட்டூர் சுவாமிகள் என்னும் ஒருபெரியார், முன்னர் தாமிருந்த இல்லறம், துன்பமெனத் தோன்றியதால், இனி நாம் முத்தித்தலமாகிய காசிமா நகரையடைந்து வீடெய்தலா மென்னுங் கருத்துடன், வேலமா நகரையடுத்த ஆர்க்காட்டின் வழியாய்ப் பாலிநதிக்கரையி லிறங்கிக் கரையேறிச் செல்லுங்கால், அங்குள்ள குமாரசுவாமிகள் என்னும் ஒரு பெரியார் ஒரு புறந்திண்ணையில் இருந்து கொண்டிருந்தனர். அப்பெரியார் இம் மோட்டூர்ச் சுவாமிகள் என்பவரைக் கண்டு, இவரது உள்ளக்கருத்தை ஞான நோக்கா லுணர்ந்து, அன்ப! நீ, காசிக்குச் சென்று

கருமங்களைத் தொலைத்து மாசில் முத்தியடைவதைவிட, வேலைமாநகரில் சிவலிங்கத் திருமேனி கொண்டெழுந் தருளியிருக்கும் தோபா சுவாமிகளின் திருவடிக்குப் பணிசெய்துகொண்டு உபாசித்து வருவையேல், எளிதில் முத்தியும் சித்தியுங் கிடைக்கும் என்று அருளியதுடன், அக் குமாரசுவாமிகள் தாம் அருந்திக் கொண்டிருந்த மொச்சைக்கொட்டையில் ஒரு பிடி கொட்டையைத் தமது கையால் எடுத்துக் கொடுத்து, முத்துக்குமாரசுவாமியை, தோபா சுவாமிகளின் திருக்கோவிலையடையுமாறு செய் தருளினர். காசி முதலான தலங்கள் முத்தியைக் கொடுத்தலால் முத்தித்தலமாமன்றி முத்தியுலகமாகா; பெரியார் உறைவிடமோ, முத்தியுலகாகிய பரமபதமேயாம்.

இதை,

"சிவயோக ஞானி செறிந்தவத் தேசம்
அவயோக மின்றி யறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடும் நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே"

என்னும் திருமந்திரத்தானும் பிறவாற்றானு முணர்க.

அங்ஙனமே, தீர்த்தம், தெய்வம் முதலானவைகளும் பெரியார் பாலே அமைந்து கிடக்கின்றன என்பதையு முணர்க.

இதையும்,

பலன்கள் வேண்டிய பரிசெலாம்
பலித்திடும் பரம தத்துவஞானி
நலங்கொள் நாமமாம் மந்திரஞ் செபித்திடு
நயந்தவ நீராடும்

சலங்கொள் தீர்த்தமாம் அவன்றிரு மேனியே
சகல தெய்வமுஞ்செவ்வாய்
மலர்ந்த வாசகம் மறுபிறப் பெனவரும்
மயற்பிணி மருந்தாகும்.

என்றற் றொடக்கத்து உண்மை வாக்குகளாலுணர்க.

## மோட்டூர் சுவாமிகள் தோபா சுவாமிகளின் திருக்கோவிலை யடைதல்

இவ்வாறு, மோட்டூர்ச் சுவாமிகள், குமார சுவாமிகள் என்னும் பெரியார் அளித்தருளிய மொச்சைக்கொட்டையை அன்போடுவாங்கி அருந்திவிட்டு, இதுவேநமக்கு ஆசிரியரின் திருவருட்பேறு என்றுதெளிந்து மனந்தூயராய், வேலைமா நகரிலுள்ள தோபா சுவாமிகளின் திருக்கோவிலையடைந்து, வலம் வந்து பணிந்து போற்றி, என் கடன் பணி செய்து கிடப்பது என்று தமது வாழ்நாள் வரை தோபாசுவாமி கட்குப்பணி செய்து கிடந்து, முடிவில் உண்மை ஞானத்தைப் பெற்று வீடெய்தினர். இப்பெரியாரே சுவாமிகளின் சமாதிக் கோவிலுக்குச் சில வருவாய்களைத் தேடி வைத்தவராவர்.

## தெய்வசிகாமணி சுவாமிகளின் வரலாறு

அதன் பின்னர், சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகளின் மாணவரும், தேவாரத் திருமுறைகளையே நாடோறும் பாராயணஞ் செய்கின்றவரும், துறவற நெறியிற் சிறிதும் வழுவாதவரும் சிவாலயங்கட்கு, சந்தனம் அரைத்துக் கொடுப்பதையே தமது பெரும் பணியாக வுடையவரும், மற்றும் பல நற்குணங்கள் அமையப் பெற்றவருமாகிய தெய்வசிகாமணி யென்னும் திருநாமமுடைய ஒரு

பெரியார், மேற்கூறிய மோட்டூர்ச் சுவாமிகளின் ஆணையைப் பெற்று, தோபாசுவாமிகளின் திருக்கோவிலுக்குப் பணி செய்து கிடந்து, அதைப் பரிபாலித்துவருவதுடன், தோபா சுவாமிகட்குப் பூசைமுதலியவைகளையும் வழுவாது நடத்திக் கொண்டு வந்து, தோபா சுவாமிகளின் திருவருட்பேற்றால் சிவஞானத்தை யடைந்து முத்தி யெய்தினர்.

### சுப்பிரமணிய சுவாமிகளின் வரலாறு

அதன்பின்னர், சைவத்தில் பற்றுடையவரும், திருஞானசம்பந்தப் பெருமானையே தமக்கு வழிபடு கடவுளாகக் கொண்டவரும், உலகவழக்கில் மிக வல்லுநரும், இப்போது தோபா சுவாமிகளின் மடாலயத்திற்குத் தலைவராயிருக்கின்றவருமாகிய சுப்பிரமணிய சுவாமிகள் என்னும் பெரியார், முன்னிருந்த தெய்வ சிகாமணி சுவாமிகளின் திருவாணையை அரசாங்கமுறைக் கையொப்பக் காகிதத்துடன் தோபா சுவாமிகளின் திருக் கோவிலை ஒப்புக்கொண்டு, இரண்டுகாலம் முறைப்படி சுவாமிகட்கு நைவேத்திய ஆராதனைகளையுஞ் செய்வதுடன், குருபூசையையும் மிக விரிவாய் உலகம் புகழுமாறு செய்து கொண்டு வருகின்றனர். மற்றும் இக் கோவிலுக்கு, மடைப்பள்ளி, மடாலயம், மகா மண்டபம் முதலானவைகளையும் தமது முயற்சி யொன்றானே செய்துவைத்தனர். வேலைமா நகரில், இம்மகானுடைய சமாதி நிலையத் திருக்கோவி லொன்றே கண்போற் சிறந்து விளங்குகின்றது.

இப்படி, காண்பார்க்குப் பாவநீக்கமும், நினைப்பார்க்கு நீண்ட பொருளின் ஆக்கமும், தொழுவார்க்கு முழுமலங்களைப் போக்குதலும், மற்றும் பலவாறாய் வேண்டுவார்க்கு வேண்டிய பயன்களை யளித்தலுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது இத்தோபாசுவாமிகளின் ஆலயமேயாகும். இவ்வா

றிருக்கும் நாளில், வட தேசத்திலிருந்து இரண்டு ஆரியத் துறவிகள் இராமேசுர யாத்திரை செல்வான் விரும்பித் தென்றிசையை நோக்கி வருங்கால், இடையில் இவ் வேலமா நகரையடைந்து, அங்கு, பாலாற்றங்கரையின் அருகிலுள்ள ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தனர். அங்கு அவ்விருவரும் இரவில் நிட்டையிலிருக்குங்கால், பால வடிவும், பவளச் செவ்வாயும், நீண்ட புயமும் நிறைந்த சடையும், மற்றும் பல முனிவர் சின்னங்களுடன் தோபாசுவாமிகள், அவ்விருவருள் ஒருவரது திருக்கண்ணுக்குப்புலப்பட எழுந்தருளி மறைந்தனர். அதைக்கண்ட அவ் வாரியப்பெரியார் இவ்வூரில் யாரோ ஒரு சித்தர் இருக்கின்றனர் என்று எண்ணிக்கொண்டு, அங்கு இராக்காலத்தைப் போக்கி விட்டு, விடிந்தவுடன் வேலமாநகருக்குள் வந்து அங்குள்ளார் பலரையு நோக்கி, ஐயன்மீர்! இங்கு, பாலன் போன்ற சித்தர் எவரேனும் உளரோ? என்று வினவிக் கொண்டு அவ்வூர்ச்சைதையில் (சைதாப்பேட்டையில்) உள்ள தோபா சுவாமிகளின் திருக்கோவிலுக்கு வந்து, அப்போது மடாலயத் தலைவராகிய சுப்ரமணிய சுவாமிகள் என்னும் பெரியாரைக்கண்டு, வணக்கமாய், இம்மகானைத் தரிசிக்க விரும்பி வந்தோம் என்றனர். அவ்வாறே அவர் அபிடேக ஆராதனைகள் செய்து தரிசனைபண்ணிவைக்கவும், இனிது தரிசித்துப் போற்றி, தோபா சுவாமிகளின் அருட் பெருமையை தமதுமாதவ வலியாலுணர்ந்து களித்து, சுவாமிகளின் திருக் கோவிலின் கருப்பக்கிருகத்தைத் தமது கையால் அளந்து கணக்கெடுத்துக் கொண்டு, தென்றிசை யாத்திரைகளை முடித்துக் கொண்டு மீண்டும் காசிமாநகரை யடைந்து, தோபாசுவாமிகளின் சமாதிநிலயக் கருப்பக்கிருகத்தின் அளவிற்கு அமையுமாறு சிற்பநூல் முறைப்படியே பொருத்த



ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள்

ஸ்ரீ தோபா சுவாமிகள் மடாலயத் தலைவர்.

மாகிய ஒரு பாணலிங்கத்தைத்தேடியெடுத்து இங்கு அனுப்பி வைத்தனர். அதை, சுப்ரமணிய சுவாமிகள் என்னும் இம்மடாலயத் தலைவர் அன்போடேற்று, அக்கோயிலையும் புதுப்பித்துப் பிரதிட்டை செய்து எண்ணிலாச் சிறப்புடன் கும்பாபிடேகமுஞ் செய்து வைத்தனர். அது முதற் கொண்டு அக்கோவிலின்கண், தோபா சுவாமிகளின் திரு வருள் நிகழ்வு மிகவுண்டாகி உலகிற்கு இனிது அநுக்கிரக மளித்து வருகின்றது.

இவ்வாறே, மற்றொரு அன்பர்வந்து தோபா சுவாமி களின் திருக் கோவிலை யடைந்து, எனக்குச் சித்தியை யளித்தாலன்றி நீட்டிய இக் கையை மடக்கமாட்டேன் என்று சபதங் கூறிக்கொண்டு, ஒருகையை உயரநீட்டிக் கொண்டே அச்சந்நிதானத்திற்கு முன்னர் நின்று கடுந்தவம் புரிந்தனர். மற்றும், தோபா சித்தி யளித்துவிட்டனர் என்று நம்பிக்கை யுண்டாவதற்கு எனது கையில் ஒரு வளையலும் வந்திருத்தல்வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டனர். இவ்வாறே மூன்றுநாள் இடைவிடாது தோபாசுவாமிகளையே வழிபட்டு வந்தனர். முடிவில் நான்காநாள், சுவாமிகள் திருவருள் பாலித்து, அவ்வன்பருக்கு, சித்தியையும் அருளி, அவர் கேட்டுக்கொண்டவாறே அவரது கையில் ஒரு வளையலையும் போட்டருளினர். அதைக்கண்ட அவ் வன்பர் பல சித்திகளையுமடைந்து ஞான சித்தரானார்.

மற்றும், அங்ஙனமே, பழநித் தலத்தில் பலவருடங் களாகப் பழநி யாண்டவர்க்குப் பணிவிடை செய்தவரும் உடை கோவணமும், தலையில் ஒரு சட்டியைக் கவிழ்த்துக் கொண்டு திரிந்ததால் சட்டிச்சாமி யென்று வழங்கப் பெற்ற வருமாகிய ஒரு பெரியார், தமது கண்ணில் மாசுபடர்ந்து

தெரியா திருந்தமையைக் கண்டு, வேலூமா நகருக்கு வந்து தோபா சுவாமிகளின் சமாதிக் கோவிலை யடைந்து, திருச்சந்நிதியில் நின்று கொண்டு, தோபா! தோபா! என்று அலறியழுது எப்போது எனக்குக் கண்களைக் கொடுத்தருள் வையோ? கண்ணைக் கொடுக்கா விடில் மண்ணுக்கிரையாய் உன்னுடைய திருமுன்பு யான் உயிரை விடல் திண்ணம் என்று கடுந்தவம்புரிந்து ஊன் உறக்கமின்றி சுவாமிகளையுபா சித்து வந்தனர். இதைக் கண்ட தோபாசுவாமி யென்னும் ஞானசித்தர், அருளால் திருவுருக்கொண்டு தோன்றி 'அன்ப! உனக்குக் கண்ணைக் கொடுத்தோம்' என்றருளி மறைந்தனர். உடனே ஒருகண், பழநிசட்டிச்சுவாமிகட்கு இனிது பார்வை யுண்டாயிற்று.

இவ்வாறே தோபாசுவாமிகளின் சமாதி நிலையத்தை வழி பட்டவர்கள் அடைந்த நலங்கள் எண்ணில்லாதவைக ளாகின்றன. இப்போதும் அவ்வாறே பலர்க்கும் அருள் புரிந்து வருகின்றனர்.

இச்சரிதத்தைக் கேட்டவரும், படித்தவரும், இரண்டு உலக நன்மைகளையு மடைந்து முடிவில் சிவஞான சித்தராய் முத்தியடைவர்.

திருமடாலயப் படலம் முற்றும்

எந்தை காழி வந்த நாத னிணைச்ச ரணங்கள் வாழியே
அந்த நாத னருளை யுற்ற வண்ணல் தோபா வாழியே
அந்தி வண்ண னோடை வன்ற னடியார் வாழி வாழியே
ஐந்து வன்னமோடு நீறமர்ந்த கண்டி வாழியே.

தோபாசுவாமிகள் புராணம்

முற்றிற்று

---

# தோபாசுவாமிகள் புராணைச் செய்யுள்

முத்தமிழ் ரத்ஞகரம்
பாநுகவியவர்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ தோபா சுவாமிகள் சரித்திரம்

## பாயிரம்

விநாயகர்.

திருவளர் மார்பின் வனமல ரலங்கல்
சேர்த்திய வரிமுத லமரர்
பெருவளங் களையூண் பொருளெனப் பேணுப்
பெருமித வுளத்திடைப் பிறங்கும்
ஒருவனை யுகத்துக் கொருதிருப் பெயரா
ரும்பலே யம்பிகை யளித்த
கருமுகி னிறத்த கசானனப் பரனைக் கைதொழூஉ
வணங்கி வாழ்த்திடு வாம். (1)

பரமசிவம்.

முத்திறப் புவனமாக்கள் முதிர்வினுக் கேற்பவன்னர்
பத்தியின் பயனை யீயும் பரமனைப் பிரம ஞாதி
வித்தகர்க் கருளுங் கைலை விமலனை யுலக மீன்ற
சத்திமத் தகத்தின்மேவுந் தலைவனை நினைந்து வாழ்வாம். (2)

பராசக்தி.

மலரிடை மணம்போலெந்தை மாட்டமர் கருணைவெள்ளம்
பலரிடைப் பரவச்செய்யும் பவளவா யமுதையின்சொற்
கலரிடை யளியினெய்து மன்னையைப் பின்னையாதி
சிலரிடையன்றியாண்டுஞ்செறிபராபரையைத்தாழ்வாம் (3)

நடேசர்.

அலைசெறி யளக்கர் சூழ்ந்த வவனியே முதலவாக
நிலைபெறு புவனம்யாவு நிறுத்திய வாணை யோர்பாற்
கலைமகள் முதலோர் போற்றக் கண்டுள மகிழநின்ற
நிலைபெய ராமலாடு நிமலனை நினைந்துவாழ்வாம். (4)

சிவகாமி.

தேன்பிலிற்றுங் கடுக்கையந்தார்ச் சடைமௌலிச் சிவபரனைச்
சிந்திப் பார்க்குக்
கான்பிலிற்று பொன்னலரார் கற்பகமும் புட்பகமுங்
கருதார் சென்னி
பூன்பிலிற்றுஞ் சச்கரமு முதலபல வுதவியவர்க்
குவப்பு நல்கு
வான்பிலிற்று புகழாளைச் சிவகாம சுந்தரியை
வணங்கி வாழ்வாம். (5)

கணபதி.

இருதிணை யுயிரும் பணியிறை தானே
யென்பதை யுணர்த்தவீ ருருவும்
ஒருதிரு வடிவிற் கூட்டிநின் றுலகை
யுஞற்றிய வொருவனைப் பொருவில்
திருமறை முதலா யிலங்கிய தேவைச்
சிந்தியார்க் கூறிழை செய்கை
யொருவனை நினையா வலர்கரத் தேந்தி
யுஞற்றுபூ சனையுடன் பணிவாம். (6)

கந்தர்.

வெள்ளியை யார்ந்திடு வேத்தியல் சூரை
யுள்ளியை யாம லொழித்துயர் சிகியிற்

கொள்ளியை வெய்ய கிராதர் குலத்து
வள்ளியை யார்ந்த வளத்தனை யார்வாம். (7)

நந்திகேசுரர்

சிந்தையி லிறையை யுள்ளிச் சென்னியிற் கரங்கள் கூப்பி
வந்தியை யமராராதி வானவர் தொகையின் மோலி
தந்திரு வடியின் முன்னந் தாழுறு பெரும்பே றுற்ற
நந்தியெம்பெருமான்றனை நயந்துநம் பிறவிதீர்ப்பாம். (8)

திருஞானசம்பந்தர்

அமிழ்தினு மினிய தமிழ்மொழி செய்த
வருந்தவப் பேற்றினு லிந்த
விமிழ்திரை யுலக வளாகத்தி லெய்தி
யெண்ணிலற் புதங்களை யியற்றித்
தமிழ்மறை யெமக்குத் தந்தமெய்ஞ் ஞானத்
தலைவனை யுமையவ ளளித்த
குமிழ்முலை யமுதங் கொண்டசெங் கனிவாய்க்
கொண்டலை வணங்கிவாழ்த் திடுவாம். (9)

திருநாவுக்கரசர்

எத்தகை யுயிரு மிறைதிருப் பெயரா
லிலங்குமைந் தெழுத்தினு லன்றிச்
சித்தியும் பிறவுஞ் சேர்கலா வென்னல்
தெரித்திடப் பிறமதக் கொடிய
மத்தர்கள் பிணித்த கற்றுணை புணையா
மறிகடல் கடந்தவாகீச
வித்தகன் செய்ய வடிமல ரிணையை
விரும்பிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம். (10)

சுந்தரமூர்த்திகள்

எண்ணுவா ரெண்ண மியாவையு மளிப்பா
னிளமதிக் கண்ணியஞ் சடில
வண்ணமே லென்று வலைகட லுடுத்த
வவனியோ ரறிதர வவனை
வண்ணவார் கூந்தன் மடந்தையரிடத்து
மருவிட விடுத்தவன் றனையே
நண்ணியார் நாவ னம்பியை யெமையாள்
நாதனை வழுத்திவாழ்த் திடுவாம். (11)

மணிவாசகப்பெருமான்

ஒருவா சகத்தும் பிறவு மென வுரைப்பார் குழுவு
மூவைபொய்யே
மருவா சகத்தும் பிறவுமிறை மாட்டே யென்று
மதிப்பாரும்
பொருவா சகத்துக் குறுகாட்டாப் போந்தவீசன்
றிருவுருவாந்
திருவா சகத்துக் கதிபதியாந் தேவை நினைந்து
பணிகுதுமால். (12)

அடியர்

கடிகொள் கொன்றையான் கமல மேதிக
ரடிகள் வாழ்த்திடு மறிவ றிந்தநம்
மடிகள் பாதமென் னகனி லன்றியும்
முடிகொள் மோலியாய் முடுகி நிற்கவே. (13)

தோபா

வண்டமிழ் மறைக டந்த வள்ளலெங் காழி வேந்தைக்
கண்டருள் பெற்று வையங் கைதொழக் கருத்தி லையன்

எண்டைச் சித்து மேவ வியற்றநல் வேலையுற்ற
வண்டர்கள் புகழுந் தோபா வடியிணை முடிமேல் வைப்பாம்.

விபூதி

ஆதிநால் வேதத்தானு மளப்பரு மமலன் செய்ய
சோதியா ருருவிற்பூத்த தூய்மையார் பொருளாய்வேதம்
நீதியாற் புகழ்ந்து கூறு நீள்புக ழுற்ற வெண்மைப்
பூதியார் பொலிவையெண்ணிப் போக்குதும்பிறவியெல்லாம்.

கண்மணி.

விண்மணி யங்கியிந்து விளங்கருள் விழியாய்க்கொண்டான்
கண்மணியாகிப்பூண்டார் கவலைக ளனைத்தும் போக்கும்
எண்மணி யன்றி மற்றை யெண்மணி யென்னே யென்று
உண்மணி மந்திரத்தா ருறுமணி யுயர்வினிற்பாம். (16)

ஆசிரியன்.

பந்தமும் வீடும் மற்றைப் பற்பல திறமுமோரா
வெந்தனுக் குணர்த்தி வேண்டு மியனிலை பலவுமீந்த
தந்தையைச் சிவஞா னப்பேர் சார்தரு குரவன்றன்னை
நிந்தையில் திருவோத்தூரார் நிமலனை நினைந்து வாழ்வாம்.

இச்சரிதையை இயற்றுதற்குக் காரணம்.

ஒண்டமிழ்நாட்டின் முன்னு ளுற்றவர் தம்மிற்பல்லோர்
கொண்டசீ ரிறந்து பட்ட குறியுணர் புலவர் பின்னாள்
வண்டமிழ்ப்பாவில் வைத்தார் வான்புக ழுடையார்காதை
கண்டவர் கேட்டோர் கூறக் கருதி யன்னதனையானும். (18)

நலமலிகாழி வேந்தி னல்லருள்பெற்ற தோபா
நிலமலி புகழைப் பல்லோர் நிகழ்த்திட வறிந்தமட்டில்
இலையிதென் றலாவண்ண மின்றமிழ் விருத்தப்பாவால்
நிலமுறப் புகன்றேனோர நின்றவருவகையார. (19)

கற்றறி திறமிலாத கவியெனக் களையார் நல்லோர்
குற்றமும் புகலாரென்னைக் குறிக்கொளா ரெனினுமுன்னுள்
உற்றதையுணரத்தக்க வொருபெருங் கருவியென்னச்
சொற்றிட நிற்குமென்னுந் துணிபினை யெவருங்கொள்வார்.

பண்டுளா ரான மேலோர் பரப்பின புகழ்களெல்லாம்
கண்டுளார் கவியிலாக்கிக் காப்பியமுறையில் வைத்தாற்
கொண்டுளார் மகிழ்ச்சிநிற்கக் கூறலா மறந்தேமாயின்
விண்டுளார்சரித மெங்ஙன் விளங்குற வுரைப்பதம்மா. (21)

பற்றிலாப் பரமன்பாதம் பற்றிய பெரியோரான
நற்றவர் தோபாவென்னு நல்லவ ரவதூதப்பேர்
பெற்றவர் சரிதமென்றுற் பேசலாந் தகைத்தன்றேனும்
உற்றவெ னுசையாலீ துரைப்பதற் குற்றேன்மாதோ. (22)

பாயிரம் முற்றிற்று.

---

## தோற்ற முரைத்த சரிதை.

அவனியிற் கொடியோ ரான வரட்டரை யடக்கி யிந்நாட்
புவனியை யொருகோ லோச்சிப் புகழுற வாளு மேன்மைத்
தவனிலை யுடைய மன்னன் தங்குடி வணிகர் கூடிப்
புவனியை யாண்டதாகப் புகலுறு நாள்க டம்மில் (1)

கும்பினிக் கால மென்னக் குவலயத் தவர்கள் கூறு
மிம்பரி லன்னார் தங்க ளிணையறு பொருந ராக
வைம்பதி னுயி ரத்துக் கதிகமா யிந்நாட் டாரைத்
தம்படைத் துணையாக்கொண்ட சரிதமா ரறியார் மன்னே (2)

அவ்வூருளோர் வீரன்மைந்த னருந்தவ முன்னர்ச்செய்தோன்
றவறிலா மனைவியோடுஞ் சைவநற் சார்பாய் நின்றே
னுவரிசூ ழுலகிற் பாடை யுயர்தமி ழாகவுள்ளோ
னெவரினு மேம்பட்டானா யிருந்தன னிருக்குநாளில். (3)

இறைவிழி மணியுநீ றுமிலங்குட லவன்றன்பாரி
நிறைதரு சூலுற்றண்ணல் நீள்பெருங் கருணையாலே
குறைவிலை நமக்கென்றெண்ணங் குலவிடப் பற்பன்மைந்தர்
பிறைநுதல் பயந்தாள் பின்னைப் பெய்வளை யொருத்திபோந்
தாள். (4)

இல்லற முடையார்க்கம்ம வெழின்மக விலையாகிற்
சொல்லற நிலையுமில்லை துயராறு வழியு மில்லை
யெல்லையின் மகப்பெற்றோருக் கென்குறை நிற்கப் பின்றை
வல்லியென் னிடையாள் மீண்டும்வாய்த்தனள்கருப்பமாதோ

வல்லியு மதனனானும் வாள்விழி யிமையே யென்னப்
புல்லியும் பிரிந்து முற்ற புகழ்நல வுவகைக் கேற்ப
நல்லிய லோரை தன்னி னங்கையு மிறையையுள்ளி
யெல்லியை யுவரியீன்ற தெனமகப் பயந்தாளன்றே. (6)

மகன்வரு தோற்றங்கண்ட மதரரிக் கருங்கட்செவ்வாய்
இகலறு முளத்தாள்சால விறும்பூது படைத்தா ளன்னான்
றகவுறு மழகுமாமைத் தன்மையு நோக்கித் தந்தை
இகழறு சடங்குமுற்று மியற்றின னிருந்தபின்றை. (7)

சயரத துரகனுக்குக் காசினி முழுதுமாண்ட
தயரத குமாரனுட்டு தானுபேர் புகுத்திப் பிள்ளைக்

சயமுனி யனையதோற்றக் காளையை வளர்ப்ப வன்னோன்
மயலறக் கலைகளாதி மாணவருடன் கற்றனால். (8)

இளமதி வளர்ச்சியென்ன விலங்கிய தோற்றத் தின்னோன்
உளமகிழ் தரப்பாடங்க ளொப்பித்தல் கண்ட வாசா
னிளகிய மனத்தனாகி யிலக்கண முதல சொற்றான்
களவற விவனுங்கற்றான் கடந்தது வாலரூபம். (9)

கட்டழகுடையான் பின்னைக் காவல ருவப்பமள்ளர்
கொட்டொடு பயிற்றுபோரின் குறியெலா முணர்ந்துபாய்மா
விட்டிடு வீரனாகி விளங்கின னிவனைப் பெற்றோர்
விட்டிறை யடியிலுற்றார் வீரனை யரசர்கொண்டார். (10)

கும்பினிக் குழைத்தார் மைந்தர்குழுவிடை யிவனைவைத்தார்
நம்பியைப் பிணித்தபாச நழுவிடத் தக்ககாலம்
இம்பரி லடைய வின்னோ னெய்துமுற் றவத்தின் பேற்றால்
வெம்பவக் கொடுமையெல்லாம் விளங்கிய திவனுளத்தில்

ஆவவோ விந்தப்பொல்லா வளற்றிடைப் பட்டாரெல்லாம்
வீவினி லொழிந்துபோவார் வியன்றனு மீட்டுமார்வார்
நோவலா விதனில் வேறு நுணுகிய பொருளின்றின்னல்
போவதார் வழியிலென்னுப் புந்தியு ணினையுங்காலை. (12)

மண்ணிடைப் பிறந்தார் தம்மை மணவழி யிறைவன்றனை
நண்ணிட வொருங்குசெய்த நாயகன் காழிவேந்தை
யெண்ணிடைக் கொண்டன்னானை யிறைஞ்சினான் மனத்தால், [வாக்காற்
பண்ணிடைக் கொண்டவேதம் பாடினான் பன்னாளோர்நாள்.

இன்னமென் பாசம் போக்க வெய்திலன் குரவனென்னா
வன்னவ னுருவை யுள்ளி லாக்குற வவன்றன் செய்ய
பொன்னடி முழுந்தாளாதி பொருந்திய தலையின்காறு
முன்னின னுன்னினார்க்கங் குற்றதோ ருருவமம்மா. (14)

கண்டவருளத்தை யீர்க்குங் கவினிளங் குஞ்சிமீதி
லொண்டர ளத்திற் செய்த வொளிமணிச் சுட்டிதாழ்ந்து
புண்டர நுதலிற் றுலங்கப் பொலிகர மலரின்மீதே
கொண்டபாற் கிண்ணத்தோடுங் குலவுமோர் குமாரற்கண்
டான். (15)

நினைவிடைத் தோன்றி மீண்டு நிலத்துற நின்றான் றன்னை
இனைவறக் கண்ட போதே யெழுந்தடி பணிந்து வாழ்த்தி
அனைதிரு முலைப்பா லுண்ட வையனே யடியேன் பாச
வினையிரி வகையெவ் வாறோ விளங்கிலே னருள வேண்டும்.

உள்ளுவா ருள்ளத் துள்ளா யொளிர்பர சிவமே நாயேன்
எள்ளுவார் தம்மிற் பட்டே னென்னினு மேழை யேனைத்
தள்ளுவா யல்லை வேறோர் சரணிலை யடியேற் கென்னாக்
கள்ளுவார் மலர்த்தாரானைக் கான்மலர் பணிந்துசொற்றான்.

தொண்டர்கண் மெய்யினாளுந் துலங்கிலக் கணங்களெல்லாங்
கொண்டவின் னவன்றனன்பைக் குறித்துணர்ந் தமலமூர்த்தி
எண்டவி ரன்ப வேண்டு மிதயத்தை யுரைத்தி சோறும்
உண்டபோ கத்தோ முத்தி யுயர்விலோ விருப்பே துற்றாய்.

கரைமதி யன்ப வென்னக் கழறலுங் கண்ணீர் வாரா
வுரைநனி நடுங்க விந்த வுலகுறு போகம் வேண்டேன்
விரைமல ரவன்றன் வாழ்வும் விரும்பிடேன் விமல நின்னைத்
தரையிடைக்கண்டும் பொய்மைவாழ்வினிற்றருக்குவேனோ.

இனிப்பிற வாம னின்னை யிறைஞ்சிநின் னடியிற் சேர்த்தி
தனித்துற விழைந்தே னெற்குன் றாண்மலர்நினைவை யன்றிப்
பனிப்புறத் தக்க வொன்றும் பகரலென் பிரம மூர்த்தி
சனிப்பிலார் விருப்பமார்ந்தேன் றரையிலென் றுரைத்த
போதில். (20)

உள்ளகங் கசிந்தெம் மையன் உணர்த்தினன் பொருள்கண் [மூன்றுங்
கள்ளமற் றதனை யோர்ந்தான் காலிணைவணங்கப் பின்னர்
வள்ளலு மருட்க ணாட்டி வாவிரென் றருளி யன்பிற்
றுள்ளிய வெழுத்தைந் தாலுந் துலக்கினன் சமாதி தன்னை.

அன்னது முணர்ந்தா னைய னதன்பின்ன ரமல மூர்த்தி
இன்னவா றிருத்தி யென்ன வேகலு மைய னஞ்சிச்
சொன்னதென் கனவோவன்றித் துலங்கிய நினைவோபின்னை
என்னவீ தென்ன நாடி யெழுமிறும் பூத னாகி. (22)

பொன்னணி வள்ளத் தோடும் போந்தகல் குரவன் றன்னை
யுன்னினா னுன்னி யுன்னி யுளங்கசிந் துருகி வாடி
உன்னையான் மறவே னம்ம வொருவரு மறியா வொன்றை
யென்னிடை யளித்தா யெங்ங னேகினை யென்று நைந்தான்.

நைந்துபின் றெளிந்தீ தெல்லா நான்மறை முடிவாய் நின்ற
இந்துசே கரனைப் பாடு மெம்மிறை யான காழி
வந்தருண் மெய்ம்மை ஞானப் பாலறா வாயர் செய்த
விந்தையே யென்று நாடி விழிமலர் குவித்துற் றானால். (24)

உத்தமர்க் குள்ள மேன்மை யுயர்வெலா மளிக்கு நாலாஞ்
சத்திநி பாதந் தன்னைச் சார்ந்தவ னாத லாலே

வித்தக ஞான மூர்த்தி விளக்கிய படியி னின்றே
யொத்துறு சமாதி தன்னி னுயர்பர சிவனோடுற்றான். (25)

நீருறு பாலும் பாலி னிறையுறு சுவையும் போல
வாருறு மின்ப வீட்டி லையனை யணைந்தா ரின்பச்
சீருறு நிலைய னாகிச் சிவமென வறிவான் மன்னி
ஏருறு பரமா னந்த வின்னமு துருவ மானான். (26)

தத்துவ மெல்லா நீங்கித் தனிப்பர சிவத்தோ டொன்றா
மத்து விதத்தை யங்ங னடைதிரி புடியு நீங்கி
வித்தக னமலா னந்த விபூதியே வடிவ மாகி
உத்தம சிவச மாதி யுள்ளனு பவத்த னானான். (27)

சிவகர ணத்தி னின்ற சீரியோர் திறங்க ளெல்லாம்
பவமறப் பரமா னந்தப் பரம்பொருள் செயலா மென்ன
உரைமறை முடிவின் வண்ண முற்றவன் செயல்க ளெல்லாம்
தரையிடை யவனைசெய்தான் சாந்தருக் கெவரேசெய்வார்.

தனக்கெனச்செய லொன்றின்றித் தம்பிரான் செயலேயாகி
வனத்திடை யிருப்பான் போல வாட்படை வீர ரோடும்
உனற்கருஞ் செயல னாகி யுற்றன னுறுமந் நாளின்
மனக்கிடை யூறிலாதான் மாண்பினை யுணர்ந்தார் பல்லோர்.

என்னிவ னம்போ லன்றி யிருக்கின்றா னிருகண் மூடிப்
பொன்னிவன் மேனிக் கொவ்வாப் பொருளதே யிளமை
[மிக்கான்
என்னினு மடவா ராசை யிடத்திலா னிவன்மெய் நோக்கில்
துன்னிய பேடியல்லன் சூரனே யாவன் மன்னோ. (30)

துறவெய்து சரிதை.

என்றெணி யச்சத் தோடு மிருக்குநா ளொருநாட் காலைப்
பொன்றிணி கவயத் தோடும் போர்த்திறப் பழக்கங் காண
நின்றுள தலைவன் செய்கை நேரிலா னுணரா னாக
வன்றவ னுருவாய்ச் சென்று னதியம் பரம மூர்த்தி. (31)

ஒருவிகற் பழுமங் கின்றி யூணர்கோ மகன்முன் னெய்தி
நிருவிகற் பத்தி லுற்றான் நீள்செய லனைத்துஞ் செய்து
பொருவிகற் பத்தின் மிக்க புகழ்ப்பரி மாவை நீங்கி
வருவிகற் பத்தி னானும் வாண்மினி னகன்றான்மாதோ. (32)

கண்டவவ் வூணர் கோமான் கைபுடைத் தென்னீதென்றான்
மண்டெரி விழியின் வீரர் மற்றவர் பெரியோ ராண்டே
யுண்டவர் சமாதி தன்னி லுற்றவர் பரனே யென்னக்
கொண்டவாச் சரியத் தோடுங் குறுகினா னவர்தம் மாட்டே.

சென்றிவ னேக்குங் காலைச் சித்திர விளக்க மென்ன
வொன்றின னைய னேரி லுற்றவ னுயிரி லாமை
என்றினத் தவர்க்குக் கூறி யெதிருளா னொருவன் றன்னைச்
சென்றியான் விளித்ததாகச் செப்புதி யிடகர்க்கென்றான். ()

அவன்மொழிப் படியே சென்றே னழைத்திட வந்தவூணன்
இவர்திறம் பலவாற்சோதித் திருந்தனன் யோகத்தென்னத்
தவரென வறிந்து வாளா சார்ந்தனர் தத்தம் மில்லிற்
புவனமே லானார் மீட்டும் புக்கனர் சவிகற் பத்தில். (35)

விழித்தது கண்ட வீரர் விரைந்துசென் றடியிற் றாழாப்
பழிச்சின ராகி முன்னர் நிகழ்ந்தன பகரக் கேட்டே

இழிச்சவென் றனக்கோவெம்மா னெய்தினனென்னநாணி
விழைச்சிலார் வேலை நீங்கி விருப்பகன் றுற்றார் பன்னாள்.()

துறவற முறையி லெய்தித் துரியனைக் கூடி யின்ப
நிறைவினி லுறலும் பாச நீங்கிய தாகத் தேகத்
துறையபி மானத் தோடு முறுகுண மறந்த வந்நாள்
அறைகழல் வடுகன் போல வாயினா னமல மூர்த்தி (37)

தன்னுட னெதிருங் காணாத் தனிநிலை யுற்ற மேலோன்
முன்னுடைக்குணங்கணீங்கிமுக்கணெம்பெருமான்போலத்
துன்னுறு நிலைமை யோரார் சொல்பரி யாச மாதி •
யன்னவர் தமக்கே யாக வாக்கின னனாதி சைவன். (38)

சிவன்றிற மீதென் றோராச் சிறியர்கள் நிற்க வொப்பி
லிவன்றிற முணர்ந்தாரெல்லா மிணையடி பணிந்துவாழ்ந்தார்
தவன்றிரி தெருவில் யாருந் தாழ்வுரை புரியா ராகி
யிவன்றனைக் காண வார்வா ரிங்ஙன நிகழு நாளில். (39).

துருக்கரி லொருவன் மிக்க துடுக்கினன் பணத்தான் மிக்
[கோன்
இருக்குமத் தெருவினூடே யெய்துமின் னவரையோர்நாள்
முருக்கிதழ்க்கனிவாய்வெண்மைமூரலாளொருத்திகாணூஉ
வெருக்கியின் னவனை யோட்டென் றிசைத்தனள் கணவன்
மாட்டே (40)

ஆண்டவன் றானென் றோரா வசடனு முனிவுற் றாளைத்
தூண்டின னவனுங் கோணி துன்னழு சியினான் மேலோர்
நீண்டமெய்ம்மறையைப்போழவெறிந்தனனெறிந்தவத்தை
பூண்டிறைவிலக்கிப்பொல்லான்மேனியிற்படுமாசெய்தான்.

இழுக்கினும் வாராதாகி யிசைந்தது மன்றி நோவு
மழுக்கடை மனத்தாற் கம்ம வதிகரித் திடலு மோடிக்
கழுக்கடைக் கையன்றெண்டன் காலிணை பணிந்துநாயேன்
இழுக்குடைச் செயலை மன்னித் தின்னருள் புரிதியென்றான்.

கண்ணினாற் சிறிது நோக்கக் கழன்றதவ் வூசி பின்னர்
எண்ணினு லறியான் போரா லிவனொரு மருதி யாக்கி
உண்ணிலா வியமெய் யன்போ டுற்றன னொருநாள் வீதி
நண்ணியே கிடப்பக் கண்ட காவல னடுங்கச் சீறி. (43)

வழியினிற் கிடத்த லொல்லா வண்டிக ளுடனே போவார்க்
கிழிசெயல் செய்ய லேடா வெழுந்திரென் றிசைத்தா னும்
மொழியறி பரம ஞானர் மோனமாய்க் கிடத்தல் காணூஉ
விழியிணை செவந்துமெல்ல வீசினன் பிரம்பாலோங்கி (44)

அடிப்பதற் கெழுந்த கைமுன் னசைகிலா தாக வுள்ளத்
திடிப்புடன் வணங்கமுன்போ லிசைந்தது கரம்பினன்னான்
மடிப்புறு தலைய னாகி மடங்கின னிவரும் பின்னைத்
தடிப்புறு நிழல்போ லெங்குஞ் சரித்தனர் சரிக்கு நாளில் ()

மக்கநாட் டுதித்துச் சீர்த்தி மதீனர சரிமை பூண்டோன்
தக்கவா றியற்றி விட்ட சமயத்தா னாகி யோகிற்
புக்கவ னாகப் பல்லோர் புகல்மஸ்தா னென்பான் பன்னாள்
சக்கடைத்திருந்தான்மீட்டுஞ்சார்ந்தனன்வெளியிற்பின்னை. ()

அடிக்கடி யிவ்வாறாக வமைதலு மொருநாட் டோபா
படிக்கிடைக் குழியி லின்னான் பாறிய திறத்தை வாயால்
முடக்கிடா துரைத்தா னாகு முன்னுயிர் துறந்த தென்னாக்
கடிக்குகை திறந்து பார்த்துக்கண்டனர் பிணத்தையம்மா. ()

பின்னொரு தினத்தில் வேளை பிறங்கிய பெரிய ஞானி
தன்னொரு மடத்திற் கட்டுந் தனிக்குகை யகத்தி லாரு
முன்னெடுமோர்ந்தான்போலவுவன்வளை யெலியேயென்ன
வன்னதை யறிந்தமேலோ னணைந்திறையடியிற்றாழ்ந்தான்.

இறைபணி பலவும் வேளைச் சேரிபி லியற்றி யாண்டே
மறைவறப் பரமா னந்த மாகட லதனி லாழ்ந்தான்
பிறையணி சடில மில்லாப் பெரியவன் பின்னு மங்ஙன்
உறைவதோர்குலாலன்றிண்ணையிடத்ததாவுற்றதோர்நாள்.

அம்மனைக் குயத்தி பாதி யாகிய விரவி லெய்தி
யிம்மனை வெளியிற் சோதி யிலங்கிய தென்ன வில்லோன்
விம்மித மெய்திக் காண விழைதலு மறைந்து போகி
யெம்மிறை யுருவாய் நின்றோ னேகினு னவண்விட் டம்மா.

கண்டிலன் றிகைத்தா னென்னே காரண மறியே னந்தோ
வண்டினார்க் கருளு மூர்த்தி யருட்கடை விழியா னோக்கில்
உண்டியான் மைந்த னென்ன வுறுவனே மாதே நின்னாற்
கண்டிலா தவரே யானார் கருணையார் தோபா வென்பார். ()

என்றவன் கழற வன்னா ளிடருறு விடிந்த பின்னை
மன்றினி லிருந்த யோக மாதவ னருகிலெய்தி
என்றவக் குறையை நீக்கி யின்னருள் புரிதியைய [தாள்.
வொன்றும்யான் குற்ற நின்பாலுஞற்றிலேனென்றுதாழ்ந்

பேரிளம் பருவத் துற்ற பெண்மொழி கேட்ட வையன்
கூரிள முறுவல் காட்டிக் கொடியிடை மடவாய் வெந்தை
பாரிதி லுளவோ வென்று பகர்தலுந் தடாவு னோக்கி
நீரியை வல்சி சில்ல வெடுத்தனள் நெடுங்க ரத்தால். (52)

காட்டின ளையற் கத்தைக் கவர்ந்தனன் மீட்டும் வாயி
லூட்டின னுண்டா ளென்று ளூற்றனள் கருப்ப மன்றே
வீட்டிய லுணர்ச்சி மிக்க வியனிலை யொருவன் பத்தாய்க்
காட்டிய மாதத் தன்னுள் கருவினின் றுதித்தா னன்றே. ()

உதித்தவன் கலைக ளோரா வுயர்துற வறத்த னாகிப்
பதிப்பொரு ளுணர்ந்து வீட்டைப்பற்றினன் ஞானிசேடத்
துதித்தவன் பிறவி வாயி லுறுவனே யொருமா வோடு
மதித்துள சிவயோ கிப்போர் மன்னினே னின்னே னன்றே.

ஈதிவ ணிற்கப் பின்னு மெய்தி யோர் குயவன் றன்னை
மோதின னவனுஞ் ஞான்றேமுடுகினன் வெளியூர் தன்னில்
ஆதியி னுருவ மானே னவன்மனை மகாரைக் காப்பான்
தீதிலவ் வீட்டின் முன்னர்ச் சேர்ந்திருந்திட்டா னன்றே.

சக்கிரி மனையி லுற்ற தம்பிரான் செயலை யோர்ந்தார்
தக்கவா றவட்கு வேண்டுந் தனமறைந் தளித்த போதிற்
றுக்கமி லமலன் வேறோர் சூழலிற் புகுந்தா னாகி
மிக்கசீ ரடியார் துன்பம் நீக்கியே மிளிர்ந்தான் மாதோ. ()

சுணங்கனுங்கரமுந்தம்மைச்சூழ்ந்துறத்தலைமேலோடொன்
றிணங்குறச் செல்லுங் காலை யெதிர்வரு பவர்க ளெல்லாம்
வணங்கின ராகப் போவார் வாரிதி யோரத் தோர்நாள்
குணங்கடந் துற்ற யோகி குறுகினன் குறுகும் போதில். ()

கண்டவ ரான வூணர் கைகொட்டி நகையா வந்தோ
வொண்டவர் குடிக்கக் கூடா வொருவித மதுவை யீந்தார்
தண்டலின் றிவரு மத்தைத் தாங்கிய வோட்டி லாக்கிக்
கொண்டரு குற்ற நாயைக் குடியெனக் குடித்த வம்மா. ()

சூரக ருண்ணும் போதிற் சூழ்ந்தவர் கண்ணுக்கெல்லாம்
சீரிய பாலாய் நின்ற சிவபரஞ் சுடரின் மேன்மைக்
காரிய முணர்ந்த பின்னுங் கடையர்கள் மதுவை யீந்தார்
ஆரிய னதுவு நாய்க்கே யருந்தயி ராக்கி விட்டான். (60)

ஐவகைப் பாவ நாப்ப ணமர்வது கள்ளே யாக
வெவ்வமில் யோக ரெங்ங னிசைந்ததை நுகர்வ ரந்தோ
தெய்வமில் லென்று நிற்குஞ் சிறியரே மதுவுண்பார்கள்
ஔவிய மவித்தோ ருண்ண லாகுமோ வாகா தன்றே. (61)

---

வேலூருற்ற சரிதை.

இன்னணம் பலவா றுக வியலிறும் பூதை யெல்லா
முன்னவ னிவனாய் நின்று முறைமையாற் புரியுங் காலைத்
தென்னவன் கூனை நீக்குந் தேசிக னருளைப் பெற்ற
முன்னவன் வீதி மாடே முடுகினன் முடுக லோடும். (62)

முகமன்றி மற்றை யாவு மூடிய வொருத்தி யோடுந்
தகவொன்று மிரத மீதாய்ச் சார்தரு மூண னொக்கா
மிகவென்ற னதிகாரத்தின் மேன்மையைக் கெடுத்த பிச்சன்
தகவிங்ங னுறுதல் கூடா சடுக்கென வகற்றீ ரென்றான். (63)

காவலர் முடுகி யையன் காதன்மை யில்லா மூர்த்தி
யேவலிற் போகா னென்ன விசைத்தலுங் கடுத்தவ் வூணன்
நாவலர் புகழ்மே லோனை நல்லயத் தளையி லாக்கிக்
கூவினன் சிலரைக்கொண்டுபோகெனக் குறித்துப்போனான்.

போனவன் சிறைக்க ணெந்தம் புனிதனை யடக்கி யிந்த
மானவன் பெருமை மேலிற் காண்டும்யா மிங்கே யென்னு

வீனமார் மொழிகள் கூறி யேசினான் பரிதி மேலோன்
நானகல்கின்றேனென்று நடத்தல்போன் மறைந்தானன்றே.

இனன்மறை வாக யாண்டு மிருள்மலி வாயிற் றம்ம
மனமரு ளிடையி லின்றேன் மற்றிரு ளன்றி யின்மை
தனமுணர் முறையிற் காட்டச் சார்ந்தன தீப சாலம்
கனமகல் மதத்தோர் தங்கள் கடவுளர் நிலைமை போல. (66)

பின்னரின் மதியத் தோடும் பிறங்கிய வுடுக்கள் வானிற்
றுன்னின வாக யாருந் துஞ்சின ராணன் பையத்
தன்னெழின் மனையா ளோடுந் தகவுறப் படுக்கை வீட்டிற்
றுன்னின னோக்க வங்ஙன் றாயவ ரிருக்கக் கண்டான். (67)

கரும்பொன்சங் கிலியை யிட்டுக் கட்டியான் சிறைக்க ணிட்
[டோன்
வரும்படி யேது மோரேன் வையகத் தில்லாச் செய்கை
தரும்பெரி யவனென்றோரேன் சார்ந்தடி பணிவேனென்று
விரும்பின னாகி யெய்தி வேணவா வணங்கி னானல். (68)

புகழறி யாத மூடன் புரிந்தன பொறுத்தி யென்று
விகழறி யாத வூணா னிசைத்தனன் சிறைக்க ணெய்தித்
திகழறி வாள னாகித் தெரிந்தனன் புதவின் பூட்டை
யகழறிவானேனந்தோ வருந்தவர்ப் பிழைத்தேனம்ம. (69)

அடைகத விருக்க வேறு யகல்பவர்த் தடுத்தென் விந்தை
புடைகதச் சுவரும்மற்றைப் புறங்களு மேலு மோர்ந்தேன்
இடைவெளி காணே னெங்ங னெய்தினா னிந்து மார்க்கத்
துடையவர் செயலிதேகொ லொன்றும்யா னறிகி லேனே. ()

எனப்பல வெண்ணி யிந்த வியலனை யிவ்வூர் நீக்கி
வனத்திடையேனு மன்றி வலிதலா வூரிலேனுங்
கனத்துடன் விடுத லேநற் காரிய மென்ன வோராச்
சனத்திடைப் பலரைக் கூவிச் சாற்றின னிந்த மாற்றம். ()

கோவண வுடையு மின்றிக் குலவுமிம் மேலோன்றன்னை
நாவணமொழியான்மெல்ல நயந்திவ்வூர் புறத்திற்சேர்த்திர்
ஏவண விழியா ளாமென் னில்லவள் பயந்தாள் சால
வாவண மெதற்குப் போதி ரையனைக்கொண்டென்றுனல். ()

உடன்படர் சகட மொன்றை யுத்தமர் முன்ன ராக்கி
மடன்படுமடியேஞ்சொல்லு மார்க்கத்தில் வருதல் வேண்டுந்
திடன்படு மிவணீ ருற்றுற் சேர்துறை மார்கட் கெல்லாம்
இடஞ்சலா மதனு னீரு மேகுதி ரென்றூர் வீரர். (73)

என்றவர் வணங்கிக் கூறி யிரத்தலு முனிவர் கோமான்
நன்றெனச் சகட மொன்றி னண்ணின னுடனே யன்னோர்
முன்றொடர்ந் ததனை யோட்டி முறைமுறை யூர்கள் காட்டி
நின்றனர வற்றி லொன்று நேர்ந்தில னிறங்க வையன். (74)

கார்பெறு பொழிலின் மஞ்ஞைகந்தவே ளிருப்பிதென்னுச்
சீர்பெறு மகவல் காட்டிச் சிறந்துறக் குறிஞ்சி யாண்டு
மேர்பெறு மவன்வி ழாவுக் கிசைதல மிதுவே யென்னப்
பார்பெறு புகழ்வே லூரின் பக்கமாய் நணுகுங் காலை. (75)

தன்பொரு ளோடுமையன் சடக்கெனக் குதித்துப் போதிர்
என்பொருட் டிருத்தல் வேண்டா வெனக்கிவ்வூர் தக்க தெ
[ன்னுத்

துன்பமில் பெரியோன் வந்தோர் துலுக்கன்வீட் டகத்துப்
[புக்கான்
அன்பிலா ராகி விட்டோ ரடித்தனர் தடிகள் கொண்டே.(76)

அடிதடி வருத லெல்லா மவர்மிசை யன்றி யில்லை
பிடிபிடி யென்று போவார் பிடிப்பர்வேற் றவரை யிங்ஙன்
கடிபிடி தமதே யாகக் கால்கர மொடிந்தோ ராகி
யிடியிடிவகையிற்கூவி யிரைந்தனர் சூழ்ந்தார் பல்லோர்.(77)

கண்டன ராடை யின்றிக் கடுந்துற வெய்தி நின்ற
தொண்டரை வேலை யுள்ளார் தூயமா பெரியோ ரென்று
வண்டினர் துலுக்கர் மாடே யறைந்தனர் பற்பன் மாற்றம்
பண்டவர் கொண்ட சீற்றம் பாற்றின ராணூர் பின்னை. (78)

அடிகளவ் வூரிற் டன்று ளமர்ந்தனர் சுழலுங் காலை
கடிகொளுந் தும்பை சூடுங் காவலர் படைஞர் பல்லோர்
கொடிகொளு மிஞ்சி யுள்ளே குடியிருந் துள்ளா ரங்கன்
படிகொளும் புகழெம் மையன் படர்குவன் பற்பல்காலும். ()

சிலரடி பணிவர் பல்லோர் சீயென வெறுப்பர் பொல்லாச்
சிலரவ மான மாகச் சீறுவர் சிலரோ வென்னில்
அலரடி யிறைத்துப் போற்றி யன்பொடு வழிபா டாற்றிக்
கலரகல் வண்ணஞ் செய்து கனியமு தருத்து வார்கள். (80)

சீருறு கூல வீதி செல்லுநா ளைய னன்பால்
வாருறு தவசஞ் சேர்த்த வாணிப னிலாபம் விஞ்சி
ஆருறு முறையை யோர்ந்தா ரையனெங் கடைவ ராமற்
சாருறு பாவஞ் செய்தேந் தரணியி லென்பா ராணூர். (81)

வேறு

தூர்த்தருங் கொடியருந் தூய்மை யில்லராய்
ஆர்த்தொரு புறத்திலார்த் தறைவ ரின்னணம்
நார்த்தொடுத் தீர்த்துமோ நல்விட மார்த்துமோ
பார்த்திவ னுரைமினோ பையநாஞ் செய்யவே. (82)

வேறு

கொடுவிட முண்டு சாவாக் கொள்கையோ னவ னுயின்
அடிமைநா மவற்கே யாவோ மன்றெனிற் புதைப்போ மென்னு
வடிசுடர் வாளார் பல்லோர் வாங்கினர் விடத்தை யூணிற்
பொடிபடுத் தமைத்தார் கொண்டு போந்தனர் குரவன் முன்னர். (83)

அன்பொடு வணங்கு வார்போ லபிநயம் புரிந்தேயோட்டிற்
றின்பொரு ளிட்டா ரையன் றிருமுக மலர்ச்சி காட்டி
யின்பொடு கரமு நாயு மிணங்குறப் புசித்தலோடு
முன்பவர் கொண்ட வாழ்வு முடிவுற மலநோ யுற்றார்.

வேறு.

பேதியும் வாந்தியும் பெருகிப் பாவிகள்
ஏதினிச் செய்வதென் றெண்ணு முன்னரே
ஆதியி னேவலா லடைந்த காலனும்
போதிர்நீ ரெமபுர மென்னப் போயினார். (85)

ஒட்டுற வாகவே யுற்ற வர்க்கெலாம்
விட்டில வுயிரிதென் விரைந்து பேதியேன்
கிட்டிய தெனவினுய்க் கிடந்த மாந்தருக்
கெட்டின விடம்பெரி யோருக் கேய்த்ததே. (86)

கூடினர் பலரினிக் கொடுமை நம்மையுந்
தேடிவந் தணையுமுன் றெய்வ மன்னவன்
பீடியல் பாதநாம் பிடித்தல் வேண்டுமால்
வாடிய வுள்ளினீர் வம்மி னென்றனர். (87)

சென்றனர் கண்டனர் திருவ டித்துணை
நன்றென வணங்கினர் நயந்தெம் மையனே
சென்றனர் பலர்நினைச் செறுக்க வெண்ணினோர்
நின்றவர் தம்முயிர் நிறுத்த னின்கடன். (88)

என்றவர் புகல்மொழி யேற்ற வையனும்
தன்றிருக் கையினாற் சாந்தங் காட்டினான்
நின்றவ ருயிருட னிலைத்திட் டார்பினர்ச்
சென்றனர் வந்தவர் திருத்த னுற்றனன். (89)

பற்பல ரொருதினம் பாறல் கண்டவ
ரற்புத மெய்தினா ரகத்தி லையனைப்
பொற்பொடு போற்றினர் புகழ்ந்து வாழ்த்தினர்
உற்பவ மகல்வதற் குறுதி சூழ்ந்துளார். (90)

இன்னண முற்றநா ளிவர்வ ரத்தினால்
முன்னரே பிறந்தவோர் முடக்கு ழந்தையை
யன்னதன் றந்தைதா யடைந்து முன்னிடாச்
சின்னவன் காலிலான் செய்வ தென்னென. (91)

அடிபணிந் திருவிழி யருவி கான்றிட
நெடியவன் முன்னரி னின்ற காலையில்
படியுறை சுணங்கனைப் பைய வென்றனர்
கொடியவான் ஞமலியக் குழவி பாலதாய். (92)

காற்றுணை நாவினாற் கவிந்து நக்கலும்
ஆற்றலுற் றனபதக் கவனை ழூந்தனன்
காற்றிய துன்புடன் கண்ட தந்தைதாய்
சாற்றினர் துதிபல தாய னான்முனம். (93)

போதிரென் றோதினான் புனித மாதவன்
சோதியை வணங்கியே தூயர் சென்றனர்
ஈதிவா றாதலு மெய்தி யோர்மகன்
நீதியில் வழுத்தியே நேரில் நின்றனன். (94)

வேறு.

நின்றவன் றன்னை நோக்கி நெடுந்தகை யருட்கண் கோட்டிச்
சென்றுநின் வேலை நாளைச் செய்மதி யெனவு மன்னான்
நின்றில னில்லத் தேகி நீள்குழன் மனைவி யோடு
மொன்றின னிவ்வா றாக வுரைத்தன னுவகை விஞ்சி. (95)

வெள்ளியைந் நூறு மாதம் விளங்கயா னரசாங் கத்திற்
கொள்ளுத லுடையே னானேன் குற்றத்தாற்கடிந்தாரன்னார்
தள்ளியோர் வருட மின்று சாய்ந்தது தகவி லாதேன்
எள்ளிய நிலைய னானே னிருந்தது முண்டு தீர்த்தேம். (96)

எற்றினிச் செய்வதென்னா வெண்ணியான் தோபாமுன்போய்
நிற்றலு மந்த மேலோ னேரிலாய் நாளை வேலை
யுற்றனை பார்த்தி யென்னா வுரைத்தன னுறுமேல் ஞானம்
பெற்றவர்க்கிரண்டு மாதம்பெறும்பண மளிப்பேனென்றான்.

அரசினர் கடிதத் தோடு மடைந்தன னொரு வனத்தில்
உரைசெய்த முனிவன் வாக்கி லுற்றதே யிருக்கக் கண்டு
நிரையவன் முன்னர்ச் சொன்ன நேர்மையிற் பின்னராகி
விரையவத் துலுக்க னில்லம் வேண்டியே வாங்கி னால்:

ஆயிரம் வெள்ளி பெற்றே யகன்றனன் யவனன் பின்னர்த்
தூயவற் காக வத்தைத் துலக்கினு னின்றே னத்தின்
மேயினர் முன்னிற் போல மேதையோ ரடைந்து போற்ற
லாயின ரந்நாள் வந்தாங் கடைந்தன னொருமா யோகி. (99)

உத்தம வதிகா ரத்தோ னொப்பிலாத் துறவிற் கன்னோன்
சித்தநன் ஞதைப் போராற் சிறந்தவ னறத்தி னிற்போன்
சுத்தநற் ரூபா வுக்குத் துலங்குநற் சமாதி யொன்றை
யெத்திற மேனும்யானே யியற்றுதல் வேண்டுமென்னு(100)

ஊர்பல திரிந்து பற்ப லொண்பொருள் சேர்ப்பான் காஞ்சி
யூர்பல திறத்து மேன்மை யுற்றதென் றவனுற் றங்க
ஞர்தக சில ஞன வரிமதத் தோன்பா லெய்தி
நீர்நம தோபா வுக்கு நெடும்பொருள் தருதி ரென்ருன். ()

அவன்விழி செவந்து நோக்கி யாரடா வங்கே யிந்தச்
சிவன்மதப் படிறன் றன்னைச் சேர்வெளியென்னவந்தோர்
தவன்நிலை யுணரா ராகிச் சாடினர் தள்ளி விட்டா
ருவன்மன நனிவ ருந்தி யுற்றனன் சூழ லொன்றில். (102)

காஞ்சியி னடப்பதெல்லாங் கருணையார் தோபா மூர்த்தி
வாஞ்சித வேலூ ருற்று வாயினுற் புகன்று நின்ருர்
மாஞ்சில னேனு மந்த மறையவன் சுரநோ யாகி
யேஞ்சவா றெதனைச்செய்து மேகிலதாயிற் றந்நோய். (103)

ஆயுணா ளிலார்ந்தோ னெய்தி யவன்கர முதல நோக்கி
நீயிதைச் சுரமென் றெண்ணேல் நேரிலா ராமோ நின்னை
வாயினுற் சபிக்க வந்த வகையன்றி வேறின் றென்ரு
ஞயபோ துணர்ந்தா னன்னு னருந்தவன் றனைத்தேடுற்ருன்.

நீடியெஞ் சுரநோய் நும்மால் நேர்ந்ததா வறிந்தேனித்தை
வீடிடப் புரிதி ராகில் வேண்டுவ தருவ னென்றான்
றோடியல் மொழியானன்பன் சொல்வின னொன்றுமோரே
னேடியல்தாரராய் தோபா வென்பவரெனது தெய்வம். (105)

அவர்பெயர் கூறி நீற்றை யளிப்பனீ யுண்ணிற் போநோய்
கவர்படிற் போகா தென்னாக் கழறினன் நீறு சாத்தி
யிவறிநீ போதி யென்றா னேகின சுரநோ யந்நாள்
உவகையுற்றவன்வேலூரையுற்றடி பணிந்துபோற்றி. (106)

முன்னவன் கோயிற் கான முயற்சிகள் பலவுஞ் செய்து
பின்னவ னகன்றா னிற்கப் பெரியவர் சுகச மாதி
தன்னினின் றகலா ரானார் சாட்டியா லடித்தோன் பாரி
பொன்னொளி மகவொன்றந்நாட் பூத்தனள்பூத்தகாலை. (107)

ஐயனை யடித்தசாட்டி யடித்தழும் பதனிற் கண்டு
பையவிவ் வேலூ ரெய்திப் பாலனைக் கான்முன் னிட்டுச்
செய்யவேண் டுவவுஞ் செய்து சிறுவனோடகன்றார்சென்னை
யுய்யவே விருப்ப முள்ளா ருவனடித் தொண்ட ரானார்,(108)

ஊனுணா வொருவ னெய்தி யுவப்புடன் வணங்கி யைய
நானுணா வளிப்பே னென்றா னதனு மூனோ டாயி
னேனுணா திருப்பே னென்றா னிவன்மனையகத்துப்போகித்
தானுணாப் பொருளைக்கொண்டு சார்ந்தனன் சார்தலோடும்.

கல்லெடுத் தோச்சி யன்னாற் கடிந்தனன் கருணை வள்ள
வில்லெடுத் திரங்கி நின்றா ரெய்தினர் பல்லோ ரங்ஙன்
சொல்லெடுத் தகற்று தூசென் றுரைத்தனன் றூய மூர்த்தி
யில்லெடுத்தவன்கொணர்ந்த விறைச்சியைக் கண்டானில்லை.

விம்மித முற்றான் மாடே மேவிய தந்தச் செந்து
வெம்மிறைகருணை யீதென் றிறைஞ்சி யன்னவர்கள்போனார்
செம்மறி யளவோ வெங்க டேசிகன் செய்த சித்தி
அம்மவெத் தனையோ வாகு மறிந்தன வுரைத்தேனிந்நாள். ()

கொன்றையம் பொழிலார் குப்பக் குடிமகளொருத்திசிந்தில்
ஒன்றிய விதைபோகட்டவொண்குடத்தரவான் மாண்டாள்
அன்றவட்பயந்தோர் ஞானவண்ணலாந் தோபாமுன்னர்ச்
சென்றிசைத்துடலையிட்டுத் திருவடிபணிந்துநின்றார். (112)

நின்றவ ரழுதல்காணூஉ நேரிலா னருளாற் பார்த்தான்
ஒன்றிய விடவேகம்போ யுயிருட னெழுந்தாள் கன்னி
யன்றவ ணிதனைக் கண்டோ ரற்புத நீரரானார்
கன்றினோர் மகிழ்வுவிஞ்சிக் கான்மலர் வணங்கிப் போனார். ()

பூதர மென்ன யாண்டும் பொலிபல நெல்லின் குப்பை
கோதற விலங்கு மேன்மைக் கூலவாணிகனோர் லோபி
மாதவன் கொண்ட கண்டை மறித்துடன் பிடுங்க வன்னான்
ஏதமில் கடை யப்போதே யிடிந்தழிந் தொழிந்ததம்மா. ()

மற்றிதைக் கண்டோ ரெல்லா மனமிக நடுக்க முற்றார்
பிற்றைநா ளெண்ணெய் விற்போன் பெருங்கடை யகத்
[துச் சென்று
சற்றெனக் கெண்ணெய் தாரா யென்றனன் றரும மூர்த்தி
குற்றமி லவனு மெண்ணெய்கொண்டன ரயலோ ரென்றான்.

இம்மொழி கேட்ட வைய னில்லகத் தெய்தி யெண்ணெய்
விம்முறு குடங்க டம்மை வீழ்த்தினன் கவிழ்த்து மேனி
யம்ம மற்றதனி லுள்ள வழுகிய தயில மெல்லாந்
தம்முட் லதனி னின்றுந் தனிமலை யருவியென்ன. (116)

நீங்வடி காவிற் சென்ற நேயத்தைக் கண்டோ ரெல்லாஞ்
சீர்பெறு மறையி னோக்கச்செறிகுடத்தெண்ணெ யெல்லாம்
ஏர்பெற நிறைந்து விம்மி யிருந்திடக் கண்டே மையன்
பேர்பெறு சீர்த்தி கூறிப் பெய்மல ரடியில் வீழ்ந்தார். (117)

வள்ளியை முருகன் வேட்ட வளம்பெறு சிற்றூர் தன்னி
லுள்ளவன் வேமனப்பே ருறுவனை யுளத்துக் கொள்ளா
வள்ளலை யருளா யென்ன வரைக்குகை யிடத்தி னோர்நா
ளெள்ளலில் வேம னெய்தி யிவற் குபதேசஞ் செய்தான். ()

நற்றவ வேமன் சொல்லை நயந்தரி பத்தனாகி
யுற்றநற் றுறவ னாகி யுயர்வள வேலூ ரெய்திக்
குற்றமில் பசனைக் கூடங் குலவிட விவனை யாக்கி
யற்றமி லிசையாற் பற்ப லரிதிருக் கீதங் கூறி. (119)

நரசிங்க தாசனென்னு நல்வர கவியாய் நின்றான்
விரைசெறி கொன்றைமாலை விமலனை யடைய வெண்ணித்
தரையிடை யுயர்ந்த தோபா சாமியே சரணமென்ன
வுரையினி லடங்கா வீசற் குவமையாஞ் சீர்த்திதன்னை ()

இசையினிற் புகுத்திப்பாடி யிணையடித் தொண்டனாகு
நசையின னாகவந்த நல்லவன் றன்னைக் கூவி
யிசையுறு விகற்பமாகி யிருந்தரு ளிறைவன் றன்னைக்
குசையுறு மதியாற் கூடுங் குறிப்பினை விளக்க வன்னோன். ()

மாசிவ யோகியாகி மாதொரு பாகன்றன்னை
ஏசில்கை வல்யங் கூறு மியல்பினில் வணங்கி யோகில்
ஆசிலா துற்று வீட்டை யடைந்தன னரிதாள் போற்றுங்
காசிலாச் செயலா லிந்தக் காட்சி யன்னவன் பெற்றானால். ()

இறையுட னொன்றி யொன்றா திருந்திடு பெரியோர் தம்பா
னிறையுமெண் சித்தியென்ன நேரிழை பாகன் கொற்ற
மறைமொழிக் கிலக்காய் வேலை மாநகர் முன்னாட் செய்த
குறைவறு தவத்தி லங்கன் குலவின னெங்கள் தோபா. ()

பாலருன் மத்த ரோடு பகர்தரு பிசாச ரென்ன
நூலுணர் பெரியோர் சொல்வர் நுண்ணறி வுடனே யீசன்
காலிணை வணங்கி யன்னோன் கதிருரு வாகி நின்றோன்
ஏலுறு தோபாவேயென் றிசைத்திடத் தக்க வண்ணம். ()

இழிவுறு கரமு நாயு மிளைஞரு முறையிற்சூழ
வழிவுறு மில்லத் துள்ளு மணிமணி வீதியூடுங்
கழிவுறு முடலஞ் சாருங் காட்டிலு மாகி யாது
மொழிவுறு மியலுமின்றி மூகைபோற் சிலபோ துற்றும். ()

பிச்சரிற் கேட்பாரின்றிப் பெருமொழி பலவிசைத்தும்
இச்சையிற் சரித்துநாத னிவனென யாருங் கூறப்
பொச்சையோர் புறத்ததாகப் பொலிதரு சைதைதன்னில்
அச்சனில்லவனோ டொன்றி யமர்ந்தவ னுருவமானான்.(126)

மந்திர கழலுன்றன்னை மன்னினோன் விடத்தை நீக்கல்
எந்தவா றந்த வாறே யீசனொ டொன்று யோகி
சிந்தையு மனமும்வாக்கும் செயல்களு மிறையையன்றி
வந்திடா முறையிற் சித்தி வயங்கிட விருந்தான் மேலோன்.

இரவினிற் பல்லோரண்ண லெழிலுடற் பகுதி தன்னைக்
கரவறக் கண்டு போற்றுங் கருத்தினாற் றிரிவார்க்கெல்லாம்
பரவரு ளுடைய மூர்த்தி பற்பல துண்டமாக
வரவுருப்புரிவனத்தை வாங்குவன் விடியுமுன்னர். (128)

இன்னணம் பற்ப னூறு பிரமுள விவன்க ணின்று
முன்னவன் செய்த லீலை முற்றவார் மொழிய வல்லார்
பன்னிராண் டிந்த வாறு படர்ந்தது வேலூர் தன்னி
லன்னமுன் னறியா னாகி யமர்ந்தன னறிஞர் கோமான். (129)

ஆண்டறு பதனிற் சாதா ரணமென வறையு மத்திற்
பூண்டமீன் மதியில்வெண்மைபொருந்துபக்கத்துமுன்னாண்
மூண்டரே வதியி லையன்முன்னவ னுருவி லார்ந்து
மீண்டுறுநிலையனானன்மேதையோர்பணிந்துபோற்றி. (130)

இறைபுறை கோயி லாக விலங்கிய புற்க லத்தை
யறைமுறை விதியிற் கோயி லாக்கினர் பணிவா ரானோர்
மறைவிலுற் றவனும்வேண்டு மான்மிய மின்று மாக்கி
யிறைபுரு வாகிநின்றா னென்பதிச் சரிதை யாமால். (131)

ஊருளார்க் கெல்லா மிந்த வுறுவன்மே லுற்ற வன்பு
நீருளார் பரமர்மீது நின்றில தென்ன வையன்
பாருளா ருள்ளம் வேட்ட படியெலா மின்றுமீயுஞ்
சீருளா னாகி நின்றான் சிவனுரு வதனி லொன்றி. (132)

வேறு.

சீரிய சாலி பதினெழு நூற்றிற் செல்லெழுபத்திரண்டதனி
லாரியனீச னணியுருவாகி யமர்ந்தன னவன்புகழ்பல்லோர்
பாரினி லுரைத்துப் பயன்பெறு நின்றார் பாவியேன் றனக்
[குமிச் சிவத்தி
னேரியல் சரித மறைவழி யளித்த விறைவியைப் பணித
[லென் கடனால். (133)

வேறு.

எந்தைகாழி வந்தநாத னிணைச்சரண்கள் வாழியே
யந்தநாத னருளையுற்ற வண்ணல்தோபா வாழியே
அந்திவண்ண னோடவன்ற னடியர் வாழிவாழியே
ஐந்துவன்ன மோடுநீ றமர்ந்தகண்டி வாழியே.

தோபாசுவாமிகள் சரித்திரம்,

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

மகான்

# ஸ்ரீ தோபா சுவாமிகளின்

# அருட் பத்து

---

எந்தையே! யெனது இதயத்துள் இருந்து
இயக்கியே யென்னையும் ஆளுந்
தந்தையே! தாயே! தமரெனத் தழைத்த
தாணுவே! தமியனைத் தளைத்த
பந்தம்வே ரறுத்தோய்! பரமசற் குருவே!
பத்தியாய்ப் பணிந்திடு வார்க்குச்
சொந்தமே! தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (1)

சித்தனே! சிவனே! சிவனருட் செல்வ!
சிறியனைச் சிவபத மதனில்
வைத்தவா! வரனே! வானரும் வழங்கா
வாழ்வெனக் கருளிய வள்ளால்!
நித்தனே! நிதியே! நினைந்திடு நேயர்
நினைவுளே அருள்தரு நிமல!
சுத்தனே! தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (2)

அரியமா தவனே! அறிவினு ளறிவாய்
அறிவதை அறிவிக்கும் அறிவே!
உரியதோ ருணர்வை யுவந்தெனக் களித்து
உணர்வின்மை யொழித்தக மதனில்

பெரியசீ ரொளியாய்ப் பிறங்கருட் பிழம்பே!
பிறப்பது மிறப்பது மில்லாத்
துரியனே! தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (3)

கற்றநாற் கவியே! கவியினுட் கருத்தே!
கருத்தெழு கரையிலா வின்பே!
பெற்றபேர் பெறுமோர் பெருந்தனிப் பேறே!
பித்தனாய்ப் பிறங்கருட் பெரியோய்!
முற்றுமிவ் வுலக மோகத்தை முனிந்த
முதல்வனே! முடிபொரு ளொன்றைச்
சொற்றவா! தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (4)

வேண்டுவார் விழைவேண் டாமையை யீந்த
வித்தகா! ஞானநல் விரதம்
பூண்டவா! புநிதப் பொன்னடி போற்றும்
புண்ணியர்க் கருடரு புகலே!
நீண்டசீர் நிறைந்த நித்தசித் துருவே!
நினைத்தொழ நெஞ்சதை யென்றுந்
தூண்டுவாய் தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (5)

மதித்திடு மதியே! மருவுகண் மணியே!
மன்னிய மந்திர மதனாற்
பதித்தருள் பதமே! பதமெலாங் கடந்த
பரமனே! பழமறை பரிந்து

விதிப்பதின் விளைவே! விண்ணவர் நிலத்தர்
விரைமலி மலர்கொடு வேண்டித்
துதித்திடு தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (6)

ஓதிடா துணர்ந்த வொருசிறு மகவின்
உண்மையை யுணர்ந்தரு ளுலகச்
சாதிபே தத்தைத் தகைந்திடு தலைவ!
சமரிடு பற்பல சமய
வாதிமார் உணரா வத்துவே! அகத்தில்
வளர்ந்தெழு சின்மய வடிவச்
சோதியே! தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (7)

பழுதிலாப் பழமே! பழுத்தநற் பழத்தின்
பண்புறு பக்குவ ரசமே!
முழுதுமே துறந்தோய்! முனிவரை முனிந்த
முனிவரும் போற்றிடு முதல்வ!
அழுதியா னலறல் அன்னைநிற் கழகோ
அவனியி லார்துணை யன்பர்
தொழுதிடு தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (8)

மட்டிலா மாண்பு மருவிடு மணியே!
மனைபொருண் மங்கையர் மோகம்
விட்டிலேன் உனது விரைகழல் விழையேன்
வீணிலே விழலினுக்கு இறைத்துப்

பட்டிடாப் பாடு படுகின்றேன் பாரில்
பல்சம யங்களும் மறையுஞ்
சுட்டிடாத் தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (9)

மறலியை மாய்த்த மலைமகள் கணவன்
மலர்ப்பதம் மறந்துளேன் மற்றும்
பிறவியை நீத்துன் பிறப்பிலாப் பதத்தைப்
பிடிப்பதற் கொருநெறி சாரேன்
இறலதற் கஞ்சேன் இறக்குநா ளோரேன்
என்செய்வ திங்கியா னிருந்தே
துறவுறுந் தோபா சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (10)

கொண்டிலேன் நினது குரைகழல் தவிர்த்து
குறித்திலேன் நினதரு ளொழித்து
அண்டிலேன் பிறரை அருளுதி அடியேற்கு
அன்பிலார் அகத்தினி லென்றுங்
கண்டிடாப் பதமாங் கருதிடாக் கதியாங்
கவலைதீர் நின்திரு வடியின்
தொண்டதே வேண்டும் சுவாமிநின் னடியே
துணையெனக் கருள்தரு வாயே. (11)

தோபா சுவாமிகளின் அருட்பத்து
முற்றும்.

உ

சிவமயம்

வேலைமாநகர் சைதாப்பேட்டை

## ஸ்ரீ தோபா சுவாமிகள்

# ஞான நாயக மாலை

---

### விநாயகர் துதி

நேரிசை வெண்பா

சீரா ருறுப்பொன்று சேர்தலா னன்றியுமற்
றோரா ருலகனைத்து மேத்தலா—னோராங்
கதிக்கை யுடைய கணபதியை மேலோர்
துதிக்க யுடையனெனுஞ் சொல்.

### நூல்

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சீரணி யிமயச் சிலைதரு செல்வி
திருமுலைப் பாலருந் தியநல்
ஆரண மறையோர் தங்குல மணியாம்
ஆண்டகை கவுணியர் பெருமான்
பேரருள் பெற்ற நின்னருள் பெற்றுப்
பேதையே னுய்வதெந் நாளோ
தாரணி பரவுஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (1)

வலமுற விழியா லடியவ ருள்ள
வனசத்தை யலர்த்திமற் றிடனுர்
நலமுறு விழியாற் குளிர்வித்து நுதிலார்
நாட்டத்தால் வெம்பவங் கருக்கி

யலமர வின்றி யாண்டருள் முதனீ
யாமென வுணர்ந்தன னகன்பூ
தலமிசை யுயர்ந்த சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (2)

அருணிறை கடலே! கற்பகக் கனியே!
யளவிலா வின்பசா கரமே!
குருநிறை மணியே! தொளைபடா முத்தே!
கோதிலா நற்குண மணியே!
பொருண்மலி சைவ தீபமே யென்று
போந்தனன் விரைந்தருள் தெய்வத்
தருநிகர் பவர்சேர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (3)

நாயினுங் கடையே னின்றிருப் பாத
நளினமே தஞ்சமென் றடைந்து
மீயுயர் யோக நுகர்வில னாகி
மேதினி முழுவது மலைந்து
பேயினும் வலிய மனத்தரைப் பாடிப்
பெருந்துய ருழந்தன னன்பில்
தாயினு மினியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (4)

மலைதனைக் குழைத்து வான்கரத் திலக
வைத்தநின் றனக்கென் றுள்ளச்
சிலைதனைக் குழைத்துத் திருவடி வைத்துச்
சேர்க்குமத் திறல்சிறி திலையோ

அலைபயி லமுதே கலைமதிச் சடிலத்
தண்ணலை யம்புய மேலோன்
தலைதனைத் துமித்தோய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (5)

நன்மைசேர் நினது நாமமென் னெஞ்ச
நாடவு நாநின திசையைய்
பன்முறை விரித்துப் பாடவுங் கருணை
பாலிக்க வேண்டுமெந் நாளுந்
தொன்மறை யவர்சூழ் வேதமெய்ப் பொருளைச்
சுகமொடு பிகமுணர்ந் தோதுந்
தன்மைசேர் பொருளார் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (6)

பாடிய பாக்க ளெட்டிவேம் பிவற்றின்
பசியகா யவற்றினுஞ் சால
நீடிய கசப்பை யுடையவே யெனினு
நின்னடித் துணைமிசைக் கொண்டு
வாடிய தமியேன் தொடக்கெலா முடிய
வல்வினைத் தொடக்கெலா முடியச்
சாடியாண் டருள்க சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (7)

எத்தலத் துறினு மத்தல மேவி
யியற்றினோர் தங்களை நவியு
மொய்த்தலும் நினது திருவடித் தலத்தை
முன்னிவந் தடையினு நாடி

யத்தலத் தடைவ துண்டுகொ லெங்கள்
ஐயனே வையகம் பரவுஞ்
சத்துவ குணமே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (8)

கொன்னவில் வேற்கண் மகளிரைத் தொடர்ந்து
கோதிலாக் கன்னலே யமுதே
யன்னமே யென்ற ஞருயி ரேயென்
றல்லினு மெல்லினுந் திரிவேன்
என்னையு நினது திருப்புகழ் பாட
விற்றைநாட் புரிந்தநின் கருணை
தன்னையென் சொல்கேன் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (9)

மிக்கொளிர் நினது திருவரு ளிலையேன்
மேயவா ருயிர்களொஞ் ஞான்றுந்
தொக்கநன் ஞான மார்தலி லென்னச்
சொல்லவும் வேண்டுமோ வழலும்
புக்கவெம் பகலுந் திங்களு மிலையேற்
புணருமோ விழிகளுக் கொளியே
தக்கவர் பரவுஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (10)

இருவினைப் பயனும் புண்ணிய பாவத்
தியைதரு மின்பொடு துன்ப
மருவயான் மறிந்து மறிந்தும்பல் கால
மறுகுற்றே யம்மவோ வுதித்துக்

கருவயி னிலைத்தே னின்னுமா துயரக்
கடலிடை யாழ்கிலா தின்னே
தருகவான் கருணை சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (11)

சென்னியிற் புனலுந் திங்களுங் கரந்து
திருமிடற் றுங்கடுக் கரந்து
மன்னுமங் கையின்மான் மழுவினைக் கரந்து
மற்றவுங் கரந்துமா னிடமாய்த்
துன்னுமெய் யடியார் தங்களை யாண்ட
தோமிலாக் கருணைகொண் டெளியேன்
றன்னையா ளாயோ சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (12)

மாலவன் பிரம னேடியுங் காணு
வள்ளனீ பள்ளநீர் புடைசூழ்
ஞாலமீ தெவருங் காணமா னிடமாய்
நண்ணிய செயலினால் நினது
காலடிப் படரும் பூழியா கினுநற்
கதிபெறு மெளியன்மா னிடனைச்
சாலவு முதித்தென் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (13)

கண்ணகங் கோப்பத் தண்புன லுள்ளங்
கனியநின் சீரெடுத் தோதி
யண்ணலே யப்பா ஐயனே யென்ற
னாருயி ரேயென யிறைஞ்சும்

புண்ணிய மின்றிப் பொய்யுட லோம்பும்
புழுத்தநா யினுங்கடை யேற்குந்
தண்ணருள் புரிந்தாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே (14)

பெற்றதன் பாவை சூழலரி யன்பும்
பிள்ளையை யரியன்பும் விழியை
யுற்றிடந் தப்பு மன்பும்வண் கரத்தை
யுராய்ந்துசந் தாக்கநே ரன்பு
முற்றுநன் குணர்ந்த வுலகிலென் றனைத்தான்
மொய்த்தபே ரன்பினே னென்னச்
சற்றுநா வெழுமோ சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (15)

தேர்தரு நல்ல வினைகள்தீ யனவாய்த்
தீயன நல்லவாய்த் திறம்பி
யார்தரு மென்னி லவனியி லியற்ற
லாம்வினை மற்றுமொன் றுளதோ
சீர்தரு நினது திருவடித் தொழும்பே
செய்வினை யாக்கொள லன்றிச்
சார்தரு முதலே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (16)

பங்கயத் தமர்ந்த பண்ணவன் சுவைசேர்
பாற்கடற் றுயில்பரந் தாமன்
சங்கர னென்று மும்முத லான
தனிமுத னீயெனிற் றமியேன்

இங்கருந் துயர நீங்கியின் படைய
யாவரை யேத்துகேன் மிளிரும்
சங்கவார் குழையாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (17)

புயறனை நோக்குஞ் சாதகம் போலப்
புண்ணியா நின்னையா னோக்கி
யயர்வுறு மிடுக்க ணொழிதர நோக்கி
யாட்கொள லென்றுகொ லறியேன்
நயமேலி யடியா ருள்ளக மூறு
நளிர்சுவை முதிர்பசுந் தேனே
தயவின்சா கரமே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (18)

அறிந்தவன் நீயே அறிவித்தா லடியேன்
அறிகுவ னின்றன தியல்பை
யறிந்துநன் கேத்தித் துதிசெயாக் குறைநீ
அறிவியாக் குறையெனக் கொண்டு
மறிந்துவெம் பிறவிக் குழியிடை வீழ்த்தி
வருந்துபாழ் வினைக்கொடும் வேரைத்
தறிந்துநீ யருளாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (19)

தேவனே சரணம் சரணமென் றடைந்த
சிறியனே னியல்புநின் னியல்பு
மேவரு சகச மலத்தின தியல்பு
மேவுமம் மலமெனைப் பற்றற்

காவதோ ரியல்பும் விளங்கநன் குணர்த்தி
யருந்துய ரகற்றுதல் வேண்டும்
நாவில்பே ரருள்கூர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (20)

பேரரு ளின்பா லுண்டுமே தகுநற்
பேறெலா மளிக்கமற் றதனைச்
சாரவுள் ளன்பென் பாலிலன் செய்யத்
தக்கது வேறெனை நுவலாய்
நாரணன் பிரமன் றேடரும் பொருளே
நளிர்முடி மேனலுங் கொன்றைத்
தாரணி முதலே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (21)

அரும்பெறற் பொருளே யாரணத் தெளிவே
யண்ணலே யேத்திடே யடியேன்
வரும்பய னின்றி வருந்தினு நின்மேல்
வழுத்தலாங் குறையுமொன் றுளதோ
கரும்பினைக் கறித்துக் கசந்ததென் றுலக்
கரும்பினிற் குற்றம்யார் கரைவார்
தரும்புகழ் மணியே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (22)

எந்தநா ளினுமா னிடமதா யிருக்கு
இறையவ ஞகினை யெவரு
மிந்தநா ளொருமா னிடமென வருளா
லெய்தினை யாமெனல் என்னே

பந்தம் வேராறுத்து மெய்யடி யாரைப்
　　பரிவுடன் இன்பவீட் டுய்க்கும்
சந்தமார் பொழில்சூழ் சைதைவாழ் தோபாச்
　　சாமியே ஞானநா யகனே. (23)

கண்ணினு னின்றன் திருவுருக் கண்டார்
　　காதினு னின்புகழ் கேட்டார்
எண்ணினு னின்ற னுமஞ்சிந் தித்தா
　　ரிருகர முச்சிமேற் குவித்தார்
மண்ணின்மேற் புரிந்த வல்வினை யோட்டி
　　வான்கதி சேர்வரீ துண்மை
தண்ணிலா முடியோய் சைதைவாழ் தோபாச்
　　சாமியே ஞானநா யகனே. (24)

உள்ளமெய் வாக்கும் புடைபெயர் வுற்றே
　　யுலவுறு தசைவற நின்றும்
வள்ளலே நன்மை தீமைகள் பயக்கு
　　மன்னுயிர்க் கென்பதுண் டாமேற்
பள்ளநீர் வரைப்பிற் செய்வதென் னிந்தப்
　　பாலனேன் றண்ணருள் கூர்ந்து
தள்ளலா தருள்வாய் சைதைவாழ் தோபாச்
　　சாமியே ஞானநா யகனே. (25)

வஞ்சக மினிய சருக்கரை தீமை
　　மலிதரு களவுகற் கண்டு
கொஞ்சமுங் கனிவில் வாசகங் கோற்றேன்
　　குவலயத் தென்மனங் கரம்வாய்

அஞ்சலா துறக்கொண் டுழல்கொ டியவனே
யாயினும் அடிமைகொண் டருளாய்
தஞ்சம்வே றில்லை சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (26)

பற்றிய பசிநோய் காமநோய் மெய்யிற்
படர்தரு பற்பல நோய்க
ளுற்றழி பவநோய்க் கொருமருந் தாகி
யொளிருநின் றிருவருள் பெறுத
லெற்றைநா ளெனவே யுருகினே னவற்றை
யொழித்தெனை யாட்கொள நினையாய்
சற்றுநெஞ் சகத்துட் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (27)

மேவிய நினது திருவடி வேட்டு
வெம்பவம் வீட்டலா தந்தோ
பூவினை வேட்டும் பொருளினை வேட்டும்
பொன்னனை யார்சுகம் வேட்டும்
நாவினுக் கினிய வுணவினை வேட்டு
நாளெலாங் கழிக்கின்றே னந்தோ
தாவில்பே ரருள்கூர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே (28)

பூதல மிசைமே வியவினை முற்றிப்
போம்பொழு துறுதுணை யாகிக்
காதல்கூர் மனைவி மக்களொக் கலுமெய்க்
கதியிடைச் சேர்ப்பரோ நினது

பாதநற் றுணையே துணையெனக் கொண்டு
பத்திசெய் யாதவர் தமையே
காதலர் முடியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (29)

கண்டனை யன்றோ எள்ளும்எண் ணெயும்போற்
கலந்துபா ரனைத்திலு மிருப்போய்
மண்தல மிசையான் படுந்துய ரகற்றி
வாழ்வியா திருந்தனை யென்றோ
அண்டரின் னமுத மருந்தவெவ் விடமுன்
அருந்திய பேரருட் கடலே
தண்டடஞ் சூழுஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (30)

உணர்வினுக் குணர்வே யுயிரினுக் குயிரே
யுலப்பிலா வின்பவா ரிதியே
இணரின்மா மணமே யென்னுளத் தன்பே
யிமயவர்க் கறிவரும் பொருளே.
கணமுநின் பாதத் தொழும்பலால் வேறு
கருதலா வரந்தர வேண்டும்
தணவில்சீர் பரவு சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (31)

உன்னலாந் தோறு நெஞ்சினின் றுமை
முரைக்கலாந் தோறுநா வினிற்சீர்
கன்னலி னிரதந் தனைவடித் தெடுத்துக்
காய்ச்சிநற் பதத்தமை கட்டி

தன்னினு மினிக்கக் கண்டனன் வேறு
தான்பெறக் காண்பதொன் றிலையாற்
தன்னிகர் வரிய சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (32)

கருக்கிடெவம் பவநற் கதிதரல் வேண்டுங்
கனன்றுநெஞ் சகமொரு துருக்கன்
நறுக்கிமுன் விட்ட வூசிமீண் டவன்பா
னண்ணிட விட்டுவா னகமீ
தருக்கனு மிந்து முள்ளநா ளளவு
மரும்புகழ் நாட்டிய மதுரச்
சருக்கரை யேநற் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (33)

இம்பரி விராச ராசனும் பதவி
யெய்தவும் வேண்டிலே னன்றி
யும்பனு கவும்யான் வேண்டிலேன் மற்று
மொன்றும்யான் வேண்டிலே னினது
செம்பத மலரைப் பற்றுமோ ரன்பே
சிந்தையின் வேண்டினே னருள்வாய்
சம்புவே சிவமே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யனே. (34)

தக்கனே யயனே யிரவியே வலிய
சலந்தர னேமத வேளே
புக்கவெம் மனத்தி ராவண னேமுப்
புரங்களே மதகரி யேதென்

றிக்கவ னேயா னல்லனின் வனசத்
திருவடித் தொழும்பன்யா னருளாய்
தக்கவர் பரவு சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (35)

ஏனமாய்த் தேடி யுணர்வரு நின்ற
னெழிற்பத முடியுறப் பெறற்கு
ளானபூ மகளோ மாதவத் தானொன்
றறைகுத லின்றியென் கொல்லோ
மானுமில் லாம லதுபெறு வரியை
மாதவ னென்கின்றார் சில்லோர்
தானமா வுரியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (36)

எத்தனை கோடி கோடியா ருயிர்க
ளிறந்தன பிறந்தன வனைத்து
மித்தரை மீது வெள்ளிடை மலைபோ
லிருகணாற் கண்டுமென் கொல்லோ
சித்தநின் னடிக்கீழ் வைத்துயர் வாழ்வு
சேர்கிலா துலகவாழ் வுகந்தேன்
சத்தியப் பொருளே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (37)

புகவரு நினது திருவடிக் கமலப்
போதுள தாயினு மென்பா
லிகவரு நாமொன் றில்லையே தொடுப்ப
தெங்ஙன்மற் றதுவெனை மருவத்

தகவுடை நினது திருவருள் கூட்டத்
தானினி வேண்டுநீர் புடைசூழ்
சகமிசை யுயர்ந்த சைசைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (38)

பூவிலை யேனும் பச்சிலை யுண்டு
புகலுமப் பச்சிலை தானே
மேவிலை யேனுந் தண்புன லுண்டு
மிளிருமப் புனலிலை யேனு
மோவிலா தெற்குன் றிருவடி யுள்ள
வுள்ளக முண்டுகண் டாய்நற்
றூவிலா வளமார் சைசைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (39)

கொண்டலின் வரவாற் சாதகங் குவளை
குளிர்நிலா வரவினல் வனச
மெண்டரு பரிதி வரவினு லன்றி
யிசைகிலா மலர்ச்சிநின் வரவு
கொண்டலான் மலரா தெனதுளங் கருணை
கொடுத்தினி தருள்செய வேண்டுந்
தண்டலை புடைசூழ் சைசைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (40)

ஆடக மாக வணிமல ராக
வடல்கெழு செஞ்சிலை யாக
நாடிநின் னருளுக் கேற்றவா றியையு
நலத்தினைக் கண்டுசெல் லாமற்

கூடிய தென்ற னுள்ளமுங் கல்லாய்க்
குறிக்கொளு மன்பர்க ளுய்யத்
தாடலை புனைவாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (41)

எந்தநாட் களினு மிருண்மலச் சார்பா
லிருவினை யீட்டுமிவ் வுடலைத்
தந்தனை தமியேன் கொண்டுய வறியேன்
றவலரு மின்பவீ டுதவு
மந்தநூல் வழிநின் னருளினுற் காட்டி
யாட்கொள வேண்டும்விண் ணோர்கள்
சந்ததம் பரவு சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (42)

பிருந்தையைப் பெட்ட மாலக விகையைப்
பெட்டவிந் திரனெழிற் றுரை
யிருந்தனம் பெட்ட சந்திரன் முதலோர்க்
கேற்றமார் பதமுறப் பணித்தோய்
திருந்துவா னுதலார் கனதனம் பெட்ட
சிதடனென் றெனையகற் றுதியோ
தருந்திரு நலமே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (43)

வளமனை காணி யாதிய வேட்டு
வஞ்சக நெஞ்சினர்ப் பாடி
யளவில்பல் காலம் வீணிலே போகட்
டருந்துய ருழந்தன னின்று

முளபக லனைத்து மவ்வினை வயமா
யோடவிட் டொன்றுமெய் திலனுய்க்
களர்கிலா தருளாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (44)

நிலையிலா மாய வாழ்வினை யுகந்து
நித்தலு மித்தரை மீது
கொலைகள வாதி பாதகச் செயன்மேற்
கொண்டவ ராயினு மொருகாற்
கலைமதி தவழ்நின் னுலயஞ் சூழ்ந்தார்
கதிநிலை பெறுதல்சத் தியமே
தலைமைகூர் தருநற் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (45)

பவனிபோங் கானின் திருவுரு வியந்தும்
பணிமலர் முகவொளி வியந்து
நவமணி குயின்ற பணிகளை வியந்து
நவில்புறப் புறமதத் தினருஞ்
சிவசிவ வின்பந் துய்ப்பரே னினது
திருவடித் தொழும்பனேற் கென்னே
தவமலி பெரியோய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (46)

ஞாலமே னின்ற னன்பர்தாள் படிய
நற்கருங் கற்படி யாய்நின்
னுலய வாயிற் புறக்கடை கிடந்தே
னுயினு முய்வனு யடியேன்

கோலமா ரிந்த மானிட வுருவங்
கொண்டதா லென்பயன் கண்டேன்
சாலவும் வளமார் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (47)

சேரிட மறிந்து சேரென ஔவை
செப்பிய மொழிப்படி யடியேன்
யாரிட மறிந்து சேர்வனின் வனச
வடித்துணை சேர்வதல் லாது
பாரிடத் தவரும் பண்ணவர் பலரும்
பத்திசெய் கொத்தலர் கொன்றைத்
தாரவிர் முடியோய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (48)

மனமிசை யன்பாய் நாவினல் லிசையாய்
வயங்குகண் ணிடையொளிர் வடிவாய்த்
தினமுமுற் றெனது தீவினை யகற்றிச்
செம்பொரு ளுதவுதல் வேண்டும்
தினகரன் றிங்க ளழலுமுக் கண்ணாத்
திருந்திய செல்வமே வடபாற்
றனதனோர் பவர்வாழ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (49)

மலரும்பச் சிலையும் பெய்தடி தொழுதேன்
வளர்கர முச்சிமேற் குவித்தேன்
பலபல பாக்க ளின்புகழ் தொடுத்துப்
பாடினே னில்லையா னாலும்

நலமுத லிறைநீ யாமென வுணர்ந்து
நயந்தனன் றண்ணருள் புரியாய்
தலமிசை யுயர்ந்த சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (50)

பொய்கொலை களவா தியவினை கொண்டு
புந்திநற் செய்கையிற் றிறம்பி
வைதுநல் லடியார் தம்மையெந் நாளும்
வாழுமோர் குறும்பன்யான் மற்றுச்
செய்தவ முடையார் போலநின் னடியிற்
சேர்வது முண்டுகொ லருளாய்
சைவமா மணியே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (51)

ஈட்டிய விந்த வுடற்பொதிக் கடைக்கு
மின்சுவை யுணவுமற் றீட்டக்
காட்டினு மலைமீ துங்கட லகத்துங்
கடுநடை காட்டுவே னெஞ்சம்
பூட்டிய மெய்யன் பொருகண மேனும்
புறத்துறு தருள்கநின் கமலத்
தாட்டுணைக் கன்றிச் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (52)

நேர்படு பொருளை யாடியாற் காண
நேருவேன் விளக்கு நிருக்க
வூர்முழு தோடித் தீப்பெற முயல்வே
னுயர்திரு மாமறை யானுந்

தேர்வரு நின்னை யெங்ஙன முணர்வேன்
திருந்துமெய் யடியவ ருள்ளஞ்
சார்தரு மமுதே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (53)

கண்டவர் நகைக்கச் செய்தனை யேனுங்
காவலர் நாவலர் முதலா
மண்டல மதிக்கச் செய்தனை யேனு
மற்றுமென் செய்தனை யேனு
முண்டக நிகர்நின் னடித்துணை யல்லான்
முன்னுதல் வேறிலேன் கண்டாய்
சண்டனை முனிந்தோய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (54)

விண்பயில் வாழ்வும் விரிஞ்சனல் வாழ்வும்
வேலைபுக் குறங்குவோன் வாழ்வும்
மண்பயில் வாழ்வும் நின்றுணைப் பாத
மலர்பயில் வாழ்வினுக் கிணையோ
கண்பயில் மணியே கருணையங் கடலே
கற்றவர் கல்வியின் பயனே
தண்புனற் றடஞ்சூழ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (55)

உணர்ந்தவர்க் கென்று மரியவ னென்ன
வுரைக்குமே லுண்மைநூல் சிறிது
முணர்ந்திலார்க் குணர்தற் கெளிமையென் றுரைத்தற்
குண்டுகொல் சிறிதுநின் னியல்பை

யுணர்ந்திசைத் தோத லெங்ஙன முலகி
னுணர்விலாத் தமியனே னென்றுந்
தணந்திக வாது சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (56)

எப்பிற வியினு மானிடப் பிறவி
யெய்துத லரிதென நுவல
வப்பிற வியினு நின்னடித் துணைசே
ரரும்பெறற் பிறவியே யரிதா
லொப்பில்பே ரருளே யடியவ ருள்ளத்
துலப்பிலா தூறுதீந் தேனே
தப்பிலார் மேவு சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (57)

பொன்வண மென்ப மரகத வணமும்
பொருந்தினை யென்பவெண் ணீற்று
மின்வணந் தானும் விரவினை யென்ப
மேவுநான் மறைகளு நாடி
யென்வண மென்ன வியம்புதற் கரியை
யென்னவு நுவல்வரே லெனைநின்
றன்வண மெழில்கூர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (58)

கருவினி லுருவாய் வந்துமண் பாண்டங்
கைக்கொடு ஞானிகள் சூழத்
திருவிளை யாடல் புரியுநா ணினது
சேவடித் துணைபடு துகளாய்

மருவின னெனினும் வான்கதி யுண்டு
வாய்த்தவிம் மானுட மிக்காட்
டருநல னெனையே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (59)

உலகினிற் சிறந்தோர் சைவர்மற் றவருள்
ளூறநனி சிறந்தவர் கற்றோர்
இலகுமிக் கல்வி யறிஞரிற் சிறந்தோ
ரியம்புமவ் வழியொழு கியல்போர்
குலவுமற் றவருட் சிறந்தவர் நின்றாள்
குறிக்கொளு மன்பின ராமே
சலமதி வனைந்தோய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (60)

கனியினி லினிய தாரமு ததனிற்
கழறுநற் றமிழினி யதுவா
நனிபசுந் தமிழி லினியதா ரறிஞர்
நவிலுமின் னுமமற் றதனி
னினியதொன் றில்லை யதுவெனை மருவி
னினத்தியல் பாகுமோ குணமே
தனிமுழு முதலே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (61)

பொருபுனல் வரைப்பில் யாவுநீ படைத்த
பொருள்களைப் பொருள்களுள் யானு
மருவுமோர் பொருளா மன்றுகொ லுள்ள
மறந்தெனை விடுத்தனை ஐயா

பொருள்படைத் தவரே காப்பரல் லாது
போந்துமற் றொருவர்காப் பாரோ
தருமநல் வடிவே சைசைதவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (62)

வாக்கினைக் கடந்து மெய்யினைக் கடந்து
மனத்தினைக் கடந்துநின் றலும்
பூக்குமெய் யடியா ரன்பினிற் கடவாப்
புண்ணியா தண்ணளி கூர்ந்து
காக்கும தல்லாற் கைவிடே லெனைநீ
கதிரவ னகையற மேனாள்
தாக்கிய முதலே சைசைதவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (63)

நிலத்தியல் பாக நீர்திரிந் தாற்போல்
நீள்கடல் வரைப்பினிற் சேர்ந்தோர்
குலத்தியல் பாக மதிதிரிந் துழலுங்
கொடியனேன் றன்னையு மணங்கூர்
நலத்தரு கமலப் பதத்துணை சேர்த்து
நளியருள் வழங்குக வுயர்வான்
தவத்தவர் வத்தும் சைசைதவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (64)

கற்றவ ரினத்திற் சேர்கிலேன் செல்லாக்
காசுமேற் றடைந்தவர்க் கீகை
யுற்றதாக் கனவுங் கண்டறி யேனின்
ஒண்பதத் தாமரைத் துணையைப்

பற்றிவாழ் கில்லேன் பாவியேன் பிறந்தேன்
பாரமாப் பார்மக டனக்கே
சற்றருள் புரியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (65)

விரலவி ராழி செவிக்குழை யரைஞாண்
மிளிருங்கைக் கடகமற் றெழிலார்
அரவுரி யன்ன மெல்லுடை பட்டா
லமைத்துறுஞ் சுகங்களை மதிக்கு
முரணிலா தவரை நான்மதித் துழலா
வொருவர முதவுதல் வேண்டுந்
தரமிளிர் புனல்வாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (66)

மைவிழி மடந்தை மார்தனி யாரா
வாய்ப்பது சமயமேற் படுதல்
கைவிசே டம்பூங் கலைநெகிழ்த் திடுதல்
கலத்தலும் பெரிதென வெண்ணி
யுய்த்தியொன் றின்றி புணர்வுமற் றிலனா
யுள்ளநாள் கழிப்பதுந் தகுமோ
சைவமா தவனே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே (67)

அவரவர் புரிந்த வினைகளை நாடி
யதற்படு பொருள்களை நல்குந்
தவலரு நினது திருவருட் டிறத்தைச்
சற்றுமெண் ணுமலிச் சிறியேன்

அவமறுத் தாளா யென்றுநோ வதனா
லாவதென் னடிமல ரிறைஞ்சுந்
தவமிலே னாகிச் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (68)

தனமதிற் றனதா கருணையிற் றருமா
சாற்றரு கலைதனிற் சேடா
வனமதின் மதனா கொடைதனிற் கருணா
வலிதனில் வேலவா வெனக்கன்
மனமுடை யாரைப் புகழ்ந்துபாழ் வயிறு
வளர்க்கவே திரியுமெற் கருள்சற்
சனர்சிறந் தோங்கு சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (69)

காமனுக் குரவற் பிழைத்தவான் மதியும்
கடவுளர்ப் பிழைத்ததீ விடமு
நாமமா ரரவுங் கொண்டநீ புழுத்த
நாயினேன் றன்னையுங் கொண்டாற்
றேமல ரடியிற் றடுப்பவ ரில்லை
திருவருட் கிழுக்குமற் றில்லை
தாமரை யாள்சேர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (70)

பாழ்படு பிறவித் துயரற நினது
பதமல ரிறைஞ்சினே னில்லை
கேழ்கிளர் நினது தொண்டரைக் கூடிக்
கேட்டன னில்லைநின் புகழை

யூழ்வினை வயத்தான் மனஞ்செலச் செய்வ
தொன்றறி யாதுழல் கின்றேன்
தாழ்வினை யகற்றாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (71)

புண்ணிய மீது பாவமீ தென்னப்
போக்கற வுணர்கிலாத் தமியேன்
பண்ணிய வினைமற் றெவ்வினை யேனும்
பத்தனு மெனநின துளத்தி
லெண்ணியே யவற்றை யிரித்தருள் புரியா
யெவ்வுயி ரிடத்தும்வந் தொளிருந்
தண்ணிய மணியே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (72)

தெக்கணத் துறைவா னெக்கணத் துறுமோ
செப்புவ தவற்கெனை யென்ன
மிக்கவெந் துயரக் கடலிடை யாழ்ந்து
மெலிகின்றே னுள்ளக மந்தோ
விக்கணத் தஞ்ச லெனவிரைந் தெய்தி
யின்னருள் சுரந்துகாத் தருளாய்
தக்கவர் பரவுஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (73)

மங்கைய ருறவு மக்கணற் பேறு
மருவிய சுற்றத்தின் பெருக்கும்
பொங்குநன் னிதியுங் காணிதா னியம்வின்
புணருயர் மாடமுங் கொண்டே

யிங்கியல் வாழ்வி யாவுநின் னருளா
லெய்திய வாழ்வுக ளலவோ
தங்குபல் வளமார் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (74)

நாற்றிசை யினும்போய்ப் புல்லரைப் பாடி
நல்கிய பொருளைக்கொண் டோடிக்
கூற்றன கண்ணார்க் களித்துடன் கூடிக்
கொடியபா தகமெலாந் தேடி
யாற்றவும் வாடி யயர்கிலா தடியேற்
கருள்செயா யருமறை நாடிச்
சாற்றரும் பொருளே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (75)

அன்பர்க ளுரைத்த நின்புக ழேமீண்
டடியனேன் வழுத்திய தெனினும்
வன்பிலா வவருக் களித்தமெய்ப் பதமே
வழங்குக மற்றவர் தமைப்போ
லின்புவே றொன்று புதுவதாய் வழங்கு
மியலுரை தெரிகிலேன் புகழுந்
தன்புக ழாக்குஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (76)

என்னுயிர்க் குயிரே கண்ணின்மா மணியே
யிறைஞ்சுவா ரிதயதா மரையின்
மன்னிய மணமே கன்னலி னிரதம்
வடித்துநற் பதமுற வமைத்த

துன்னிய மதுரக் கட்டியே யென்றன்
துன்பவே ரறுத்தருள் புரியாய்
தன்னிக ரில்லாச் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (77)

நேயமா ரனைமுன் ருனையைப் பற்றி
நீர்விழ வழுதலாற் குழவி
மேயதன் கருத்தை முடித்திட லன்றி
வேறுமென் செய்யுமற் றதுபோ
லாயவென் கவலை யறநினைப் பற்றி
யழுமெனை யாதரித் தருளாய்
தாயென மிளிருஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (78)

உள்ளமொன் றுள்ளு முரைபிறி துரைக்கு
முறுசெய லாவது மனத்தே
கள்ளமிக் குடைய னுள்ளநா ளனைத்துங்
கமருகு பாலெனக் கழிப்பேன்
எள்ளள வேனு நின்றிரு நாமம்
எத்தல ஞயினும் பிடித்துத்
தள்ளலா தருளாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (79).

பூமலர் வனைந்து புனையும தன்றிப்
புத்தமு தினையசெந் தமிழாற்
காமரு மாலை புனைந்துநின் னடியிற்
கருத்தின்வெம் மாலையு மிரித்துச்

சேமவாழ் வடையுஞ் சிந்தனை யெனக்கே
செய்தருள் செம்மைநன் னெறியோர்
தாமரு வியசீர்ச் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (80)

அற்பகந் ததும்ப விருகணீ ருகுப்ப
வாடியும் பாடியும் நின்றன்
நற்பத மேத்தும் மெய்யடி யாருள்
நாயடி யேனையுங் கூட்டி
யுற்பவத் தினியுங் கருக்குழி மேவி
யுறுசனுற் றழல்கிலா தருளாய்
தற்பரப் பொருளே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (81)

கோடிபல் கோடி மக்களும் மக்கள்
கொண்டன சமயங்கள் கோடி
நாடியீண் டவர்க ளியற்றிய கோயில்
நண்ணுவ கோடிமேற் கோடி
கூடியே யனைத்துந் தண்ணருள் புரிவாய்
கோதுள வாகிய கூற்றைச்
சாடினோ யழகார் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (82)

ஒருவர்பா லடையி லுண்டிலை யென்ன
வுரைப்பதல் லாதுநின் பாத
மருமல ருற்றே யடையலாம் வாழ்க்கை
வழங்குத லுண்டுகொல் வலமா

ரருமைசேர் இருபா னெட்டென வுரைக்கு
மாகம முரைத்தந்தண் மறையோர்
தருதிரு வுடன்சேர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (83)

முன்னொரு பாந்த ளாலுயி ரொழிந்த
மொய்பொழிற் குப்பம்வா ழொருத்தி
தன்னுயி ரளித்த நின்னையல் லாது
தரளவெண் ணகைமட வாரா
லென்னுணர் வொழியா தாள்பவ ருளரே
யிருந்தடங் கருணையி னிகவாய்
தன்னிக ராத சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (84)

இலதுள தென்ன வியற்றுநின் றிறலை
யிருநில முன்னரோர் வணிகக்
குலமகன் றன்னுற் கண்டவா றுளவாய்க்
குறுகியென் றனைநலி வினைக
ளிலவெனக் காண வேண்டிவந் தடைந்தே
னேர்மலி பாலிவெண் ணீர்தான்
சலசல வெனக்கூஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (85)

வன்புகூர் கரும்பொற் றொடக்கினுற் பிணித்த
மதியிலி கண்முன ரஞ்ச
முன்புமே வியநின் றன்னையன் பென்னு
மொய்தளை யாற்பிணித் தகத்தா

னின்புறக் கண்டு மகிழுநா ளுளதோ
வெளியனேன் றடமலர்ச் சேக்கை
தண்புடை யனஞ்சேர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (86)

பெருமதி தருநீர் வனைந்துய வல்ல
பேறெனக் கருள்செய மினிரு
மொருமதி யிருநீர் வனைந்தநின் னல்லா
லொருவர்மற் றுளர்கொலோ வுரையாய்
கருமணிக் கதிருஞ் செம்மணிச் சுடருங்
கலந்தொளி பரப்புமே னியனே
தருமரு மருந்தே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (87)

காமனை முனிந்தாய் மாமறை யவனைக்
கனன்றவெங் கூற்றினை யெறிந்தாய்
மாமனை மகமுன் கெடச்சிரந் தடிந்தாய்
மாற்றலர் புரங்களைக் கடிந்தாய்
ஆமவற் றேறெட்ன் னருந்துய ரிந்தா
யாமெனச் செய்திதண் கொன்றைத்
தாமமார் முடியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (88)

வெண்மதி புனலு மிளிர்முடி காணும்
வெண்டிரு நீறுமெய் காணும்
மண்மிசை யின்னும் மாயவெம் பிறவி
வன்றொடர் பிணிப்புறு தென்று

முண்மகிழ் வுறலென் வெண்மதி தானு
முற்றுடன் காணுமோ நின்றன்
தண்மலர்ப் பாதஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (89)

வந்தவா றென்னை யுலகிடை யதனுன்
மருவுநற் பேறெனை யென்னச்
சிந்தனை சிறிதுஞ் செய்கிலா தழலுஞ்
சிதடனேன் கரும்பக டுந்தி
அந்தகன் கனன்று வருமொரு நாளில்
யாதவற் கெடுத்துரைத் திடுவேன்
சந்தமார் பொழில்சூழ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (90)

கற்றவன் போலப் பிதற்றவும் வல்ல
கவிஞன்போற் பாடவுஞ் செல்வ
முற்றவன் போற்பொய் வேடமேற் கொளவு
முண்மையா நன்கறி வேன்யான்
மற்றொரு செயலு மறிகிலே னுய்யும்
வழியெவ னீயரு ளாயேற்
சற்றெனக் குரையாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே (91)

பொய்படு மனத்துப் புன்மையேன் றனையும்
புண்ணியா நின்னடி யவருள்
வையக மனைத்து மொருவனு மென்னை
வழங்கிடப் பெற்றனன் மேனாள்

செய்தமா தவந்தான் யாதென வுணரேன்
சிந்தையி லினிக்குமா ரமுதே
சைவமா மணியே சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (92)

அயர்வறப் புரியென் பிழைகளை யோரா
தயலவர் பிழைகளை நாடி
நயமிலாப் பாழு நாவினு லென்று
நாயெனக் குரைத்துழல் கொடியேன்
பயமிலேன் பஞ்ச பாதக மியற்றப்
பாவியே னுய்யுமா றந்தோ
தயவுகூர்ந் தருளாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (93)

ஓதுமைம் பூத முடல்பொறி கரண
முரைக்குமா மாயைகொல் லுணர்வ
தேதென நாடி யினையுரு வண்ண
மெண்குணத் தாரருள் பழுத்த
மேதகு முதலே தாழ்கவென் சென்னி
மிளிர்நின தடித்துணை மலரிற்
றுதவிழ் முடியாய் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (94)

புகன்மனுப் பதமக் கரம்வதி புவனம்
பொருந்துதத் துவங்கலை தூய்மை
மிகவுறுத் தான மானிடச் சட்டை
மேவிமெய்க் குரவனுய் வந்த

அகனிலா வணிந்த வேணியாய் நின்ற
னருளுருக் காணவென் கண்கள்
தகவுமீக் கூருஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (95)

ஐந்தவித் தவர்த மாற்றலு மவியா
ராற்றலின் மையுமறிந் திடுதற்
கிந்திரன் சாலுங் கரியெனல் கேட்டா
மின்றுநீ புரிந்திடு மரிய
விந்தைகொள் செயலா லீகரி யாதல்
விழியுறக் கண்டன மதின்மேல்
சந்திரன் றவழுஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (96)

ஆருயி ரறிவு மிச்சையுஞ் செயலு
மாயமூன் றையுந்தடுத் துறையுங்
காரிருள் மலமு நோக்கொடு பரிசங்
கனிமொழி கொடுபெயர்த் தடைந்தோர்
பேரறி வாக வருளுநிற் கியலாப்
பெருஞ்செய லாவதொன் றுளதோ
சாரரு வளங்கொள் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (97)

குடமுனி கடல்க ளேழுமங் கையாற்
குடித்ததுஞ் சன்னுமா முனிவ
னிடமறப் பரந்த வெள்ளநீ ரதனை
யேற்றருந் தியதுமற் றவையுந்

திடமுற நீசெய் யருஞ்செயல் கண்டு
தெளிவுற லாகுமே மாந்தர்
தடமதில் புடைசூழ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (98)

பெரும்பொருள் விழைந்தோர்க் கம்பொனு மணியும்
பிணியகன் றிடவிழைந் தவர்கட்
கரும்பெறன் மருந்து மழிவின்மெய்ஞ் ஞான
மடைந்துவீ டடைந்திட விழைந்தோர்க்
கிரும்புவி புகழுங் குரவனு மாகி
யிருந்தருள் செய்வதென் னுரைக்கேன்
தரும்பெருங் குணத்தோர் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (99)

பூமிசை விளங்கு புலவரும் விண்ணிற்
புலவரு முனிவருங் குழுமி
நாமிசைத் தழும்பு வரவிசைத் திடினு
நவிலரு நின்புக ழதனைத்
தோமிசை நாயேன் புகல்வதென் வாழி
துடியிடை யவருமா டவருந்
தாமிசை வளர்க்குஞ் சைதைவாழ் தோபாச்
சாமியே ஞானநா யகனே. (100)

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

தோபா சுவாமிகள்
ஞான நாயக மாலை முற்றும்.

---

[illegible] மகந்து ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
வீரபத்திர பிள்ளையவர்கள் பாடியது.